ஸ்ரீ

மா. வைத்தியலிங்கருடையது.

1881 ஜனவரி

உ

சிவமயம்

நாற்கவிராசநம்பி

அகப்பொருள்விளக்கமூலமும்

அதன்பழையவுரைவாக்கியங்களுட் பலர்க்கும்பயன்படற்குரிய
வற்றைத்தழுவிவெளிப்படையாக்கி

யாழ்ப்பாணத்திலுள்ள

வல்லை

இயற்றமிழ்ப்போதகாசிரியராகிய

ச. வயித்தியலிங்கபிள்ளையவர்கள்

இயற்றிய உரையும்.

ஷெ. ஊர்

க. சபாபதிப்பிள்ளையவர்களால்

பிரசுரஞ்செய்யப்பட்டது.

Madras:

PRINTED AT THE VIYAVAHARATHARANGINEE PRESS.

1878.

உ

சிவமயம்.

சாத்துக்கவிகள்.

தஞ்சாவூர் - சதாவதானம்,

சுப்பிரமணிஐயரவர்கள்

இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பல்வளஞ்சால்வல்லைநகர்க்கதிர்காமன்றந்தசபாபதிமால்வேண்டச்
சொல்வளச்சங்கரநாதனளித்தவயித்தியலிங்கதுரைநாவல்லோன்
நல்வளநாற்கவிராசநம்பியகப்பொருள்விளக்கநயந்துவீறத்
தொல்வழியாவரும்வியப்பவுரைவகுத்துந்தொகுத்துமின்றுசொற்றான்
மன்னோ.

யாழ்ப்பாணம்-தெல்லிப்பழை,

சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள்

இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலடிவிருத்தம்.

மண்ணுலகுபுகழ்கதிர்காமன்றனயன்சபாபதிவேள்வல்லைநாடன்
நண்ணருநாற்கவிராசநம்பியகப்பொருள்விளக்கநூலத்தோங்கத்
தண்ணறுஞ்சொற்சுவைபெருகத்தருநவுரையெனவகுத்தான்றமிழ்
நூல்வல்ல
பண்ணவன்வைத்தியலிங்கபண்டிதன்சங்கரநாதன்பயந்தோனன்றே.

சுன்னாகம்

பூ. முருகேசபண்டிதர்அவர்கள்

இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

பத்திநெறிக்கொருதலைவன்கதிர்காமர்தரும்பாலன்பண்பினுயர்ந்தோர்
புத்தியினிற்சுவைக்குமெழிற்சபாபதிப்பேர்வள்ளலிதுபுரிவாயென்னச்
சுத்தவுரைப்படுத்தியகப்பொருள்விளக்கவுரைதந்தான்றுகடீர்வல்லை
வித்தகனும்வயித்தியலிங்கப்புலவன்கவிஞர்தொழுமேலோன்றானே.

வானர்

மதுரை-சொர்னநாதபுரம்,

செ. முத்தப்பசெட்டியார்குமாரர்

இராமநாதச் செட்டியார்

இயற்றிய

கழிநெடிலடிவிருத்தம்

மகத்தழ லாற்று வோர்வாழ் வல்லைநா டதனின் மேவுஞ்
சுகக்கதிர் காம வேணற் சுதன்சபா பதியாஞ் சொல்சேர்
நகப்பெருங் குணத்தான் சீர்சா னற்கவி ராச நம்பி
யகப்பொருள் விளக்க மேங்க லாழிசூழ் புவியி லோங்க. (௧)

தண்சுவை முதிர்ந்த சொல்லாற் றருகென வுரையைத் தந்தான்
விண்புக ழரன்றாட் போற்றும் விபுதசங் கரநா தன்மா
லெண்புலப் புதல்வ னைசை யெட்டினு மிசைசேர் கல்விப்
பண்புலாம் வைத்திய லிங்க பண்டிதன் புலவ ரேறே. (௨)

ஆவரங்கால்

சு. நமசிவாயபிள்ளையவர்கள்

இயற்றிய

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

துன்னியகலைக்கழகமுந்திருவிரும்புஞ்சுவைத்தவளமாடநிரையுஞ்
சோலையுமிருங்குளமுமாலயமுமாமடத்தொகையு நிறைவல்லைநகரா
ன் - மின்னியறருஞ்சடிலமுக்கட்டணிக்கடவுண்மெய்ச் சமயநற்பத்தி
யான், விதரணகுணச்சபாபதிவள்ளல் கதிர்காமவேண்முயறவத்துதி
த்தோன் - மன்னியவகப்பொருள்விளக்கமென் றுரைவாய்ந்தமாசகலு
நூலுக்குநீ, மாண்புபெறுமோருரையியற்றெனமுன்னுரைவழிவழா
ப்பஃறிறங்களுமமைத் - தின்னியலெனுந்தமிழ்ப்பாகுபாடாம்பனுவல்
யாவையும் வினையினிதினோர்ந், திசைமைபெற்றுளவயித்தியலிங்கநா
வலனியற்றினன் விளக்கமுறவே.

திருவாரூர்ச்
சிவசிதம்பரயோகிகள்
இயற்றிய
அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

புலவருளங்களி சிறப்பவெழிற் கதிர்காமப் பெரியோன்புதல்வனாகித்
தலமுவக்கவெழுமதிய மெனவுதித்த சபாபதிமால் சாற்றமேன்மை
நூலவியனாற்கவிராசநம்பியகப்பொருள்விளக்கக்கொள்கையாய்ந்தே
வலமிகுநல்லுரையியற்றிவயித்தியலிங்கப்புலவன் வழங்கினனால்.

புதுவை,
குமாரவேல் முதலியாரவர்கள்
இயற்றிய
நேரிசைவெண்பா.

நாற்கவிக்குநம்பி நவின்றவகப்பொருட்கீண்
டேற்பவுரைசெய்திசையுற்றான்—சாற்றுபுகழ்
வல்லைப்பதியான் வயித்தியலிங்கப்புலமை
நல்வித்தகனுண்ணயந்து.

𑌶𑍍𑌰𑍀𑌨𑍀𑌰𑌵𑌾𑌪𑍀𑌵𑌰𑌵𑌾𑌸𑌿𑌨𑌾 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤 [illegible] 𑌶𑌿𑌵 - 𑌶𑌙𑍍𑌕𑌰𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌸𑍍𑌯𑌸𑍂𑌨𑍁𑌨𑌾 𑌶𑌿𑌵𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑍇𑌨 𑌵𑌿𑌰𑌚𑌿𑌤𑌂.

𑌶𑌾𑌲𑌿𑌨𑍀𑌵𑍃𑌤𑍍𑌤𑌂.

𑌵𑍀𑌣𑌾𑌪𑌾𑌨𑍇 [illegible] 𑌜𑌾𑌤𑌃 𑌸𑍂𑌨𑍁𑌃𑌶𑌂-
[illegible] 𑌵𑌿𑌪𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 | [illegible]
𑌲𑌕𑍍𑌷𑌣𑌸𑍍𑌯 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌂𑌚𑌕𑍍𑌰𑍇 𑌶𑌿𑌷𑍍𑌯𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑍈 ||
[illegible] 𑌵𑌾𑌸𑌿𑌨𑌾
𑌕𑌾𑌰𑍍𑌤𑍍𑌤𑌿𑌕𑍇𑌯𑍇𑌨 𑌕𑍃𑌤𑌾 𑌟𑍀𑌕𑌾.

𑌵𑍀𑌣𑌾𑌪𑌾𑌨𑍇	யாழ்ப்பாணத்திலே
[illegible]	வல்லைப்பதியிலே
𑌜𑌾𑌤𑌃	பிறந்தவனும்

ஶம்போ:	சங்கராதருடைய
ஸூநு:	குமாரனும்
விபஶ்சித்	(இயற்றமிழ்வல்ல) புலவனும் (ஆகிய)
வைத்யலிங்க:	வைத்தியலிங்கன்என்னுமியற்பெயரையுடையோன்
இஹ	(செந்தமிழ்வழங்கும்நிலமாகிய) இவ்விடத்தே
ஶிஷ்யவிஜ்ஞாநவ்ருத்த்யை	(இயற்றமிழின் பாகுபாடாகிய எழுத்துஞ் சொல்லுமாராய்ந்துபொருணூலாராயப்புகுந்த மாணுக்கர்க்கு விஞ்ஞையறிவு (இனிது) சித்திக்கும்பொருட்டு
த்ராவிடே	செந்தமிழ்ப்பாடையிலே
ஏகஸ்ய-லக்ஷணஸ்ய	(தொல்காப்பியத்தின்வழிநேயம்பியென்பவராற் செய்யப்பட்ட அகபொருள் விளக்கமென்னும்பெரிய) ஒருஇலக்கணத்துக்கு
வ்யாக்யாம்	வியாக்கியானத்தை
வதத்த	(முன்னேருரையின் வழியே வேண்டும்விகற்பங்களோடுமுட்டறச்)செய்தனன்.

உ
சிவமயம்.

அகப்பொருள்விளக்கவுரை.

சுப்பிரமணியசுவாமிதொண்டராகிய
யாழ்பாணம்-உடுப்பிட்டி,

அ. சிவசம்புப்புலவரவர்களாற்செய்யப்பட்ட

உரைச்சிறப்புப்பாயிரம்.

நேரிசையாசிரியப்பா.

மணிதிகழ்நெடும்புனல்வையைசூழ்கிடந்த, வணிதிகழ்கூடலினரு்ந்தலைச்சங்கத், திறுமுதலிலாவிறைமுதலாயவெண், ணுறுதலையிட்டவைந்நூற்றுவரொடு, மேதகுமிடையவைவெள்ளூர்க்காப்பிய, னுதியெட்டடுத்தவைம்பஃதினரொடுஞ், சால்புறவமர்ந்துதண்டமிழாய்ந்த, மால்புறங்கடிந்தமாதவச்செல்வ, னியலிசைநாடகமெனுமுப்பகுப்பையு, நயனுறவடித்துநவின்றமெய்ப்பிண்டிதன், கடையுறுசங்கக்கவிஞனுங்கீர, னுடைவெளிறறவியலுளங்கொளக்கொளுத்திஞேன், குருகுபெயரியகுன்றமெறிந்தவேன், முருகனெம்பெருமான்முற்றருளடைந்தோண், றன்பாலின்றமிழ்தாவின்றுணர்ந்த, வொன்பானுடனுறூஉமொருமுப்பாலருட், டலைநிலத்துற்றதகைத்தொல்காப்பியன், மலைவறவியற்றமிழ்வழாஅதுரைத்த, மூன்றதிகாரமுறைகெழுபனுவலு, ளான்றுளபெரும்பொருளாழியைச்சுருக்கி, யேற்கவான்புலவர்களியல்புளிநாடி, நாற்கவிராசநம்பியென்றிவொ, னகப்பொருள்விளக்கமென்றுய்ந்துபெயர்நிறீஇ, மிகத்தெளிவாகவிளம்பினனதுதான், றுன்பறவெழுத்துஞ்சொல்லுமாராய்த, றன்பொருட்டெனப்படுதகையதொன்றேவதாஅன், றந்தியஞ்சடிலத்தாலவாயடிகண், முந்துறும்பெருமறைமுளைத்தவாக்கா, லன்பினைந்திணையென்றறுபதுசூத்திர, மின்புறவுரைத்தருளியல்பதூஉமாதலி, னின்றியமையாவிஃதியாங்கணுமோங்க, வொன்றியவுரைநீயொன்றியற்றுதியெனு, வெவ்வகைமதத்தினுமிரும்பெருஞ்சைவமே, தெய்வமெய்ம்மதமெனத்திரிபறநாடி, யைந்தக்கரமுமாறக்கரமும்வினை, சிந்துருத்திராக்கமுந்திருவெண்ணீறும், விழுத்தகுமுயிரென்மேவரக்கொண்டு, பழுதறவழுக்கிலாப்பத்திமைப்பாங்கிஞே, னருளுமடக்கமுமன்பும்பொறையுந், தெருளும்

வாய்மையுந்திருத்தகப்புனைந்தோன், செம்மனநிலைஇயதிருத்தொண்டு-
ணர்க்கு, நம்மனோருக்குநற்றுணையானோ, னடுத்தெவரிரப்பினுமவர்க்க
வைகொடுத்துக், கொடுத்ததுபுறஞ்சொலாக்கொள்கையிற்றலைவன்,
பிறர்செயுநன்றியைப்பெரிதினோம்பி, மறமுறுவினைத்திறமறந்திடும்பெ
ரியோ, னகத்தருள்புறத்திலூர்ந்தாங்குவாண்மதிப், முகத்தரும்பிடுமி
ளமுறுவற்சிறப்பினோ, னூனையுமுயிரையுமொருங்கினிதுருக்குந், தே
னைமாரிக்குறழ்தேமென்மொழியா, னல்லவெத்தனைபலவடையினுமு
ளமுடல், சொல்லிவைபகிர்வுறுத்தூயநன்னிலையோன், பாவலர்தொ
டையினைப்பைம்பொனந்தொடையினு, மாவலினணிந்திடுமணிப்புயவ
ரையோன், பீடுறுதமிழும்பிறபுலப்பாடையு, நீடுறக்கற்றுநிறைந்தநல்
லுணர்வினன், காண்டகுகுணக்கதிர்காமவேளுளுற்றிய, மாண்டகு
நோன்பொருவடிவெடுத்தனையான், போதபூரணவருட்பொருட்டிறச்
செந்தமிழ், வேதபாராயணவிரதநெறியோன், சேதிமமியற்றலுந்திரு
மடமியற்றலு, மாதகைவிழற்றநவழிகளில்வளர்த்தலுங், கூவலுந்தட
முங்குளமுநீர்ப்பந்தரு, மாவியனந்தனவனத்தொகையமைத்தலும்,
விருந்தினர்ப்புரத்தலும்வெம்பசியுழந்து, வருந்தினர்ப்புரத்தலும்வறி
ஞர்ப்புரத்தலு, மஞ்சினர்ப்புரத்தலுமநாதர்ப்புரத்தலு, நெஞ்சுறமருந்
துகணீர்மையினுதவலுங், கற்றவர்ப்புரத்தலுங்கழகம்புரத்தலும்,
பெற்றுளவாணிகப்பெருங்குடிக்குழுவினோன், றுங்கமாநிலமகள்சுந்த
ரமுகமாய், மங்கலவாழ்வியல்வல்லைமாநகரான், றக்கவர்நண்பமுச்ச
பாபதிவள்ளன், மிக்கவாதரவினின்வேண்டினனாகப், பழையவுரை
தழீஇப்பலப்பலசேர்த்தும்,விழுமிதின்விளக்கிடவேண்டுவவிளக்கியும்,
விரித்திடவேண்டுவவிரித்துமாங்காங்குத், திருத்திடற்பாலனதிருத்தியு
மியற்றினன், றெரிதருவளம்பலசிறந்திடுமுனையூர், மருவியசங்கர
வரோதயன்மைந்தன், மேற்படுபண்பொடுவினையப்பஃறிறத்த, நூற்ப
டுபயனுணர்நுணுகியமதியோன், றொழுதகுசைவத்தொன்னெறிநடா
அய்ப், பழுதறமுத்தபதரபத்தியோ, னலங்கிளருலகெலாநண்ணி, யி
லங்குசீர்வயித்தியலிங்கநாவலனே.

உ

சிவமயம்.

அகப்பொருள்விளக்கவுரை.

காப்பு.

புவிராசர் போற்றும் புலவர் கணூர்விற்
றவிரா சகற்றித் தமிழ்நாற் - கவிராச
நம்பி யகப்பொருள்வி ளக்கவுரை நாட்டமுக்கட்
டும்பி முகன்றா டுணை.

சிறப்புப்பாயிரம்.

பூமிசைநடந்தவாமனைவாழ்த்தி,வடமலைச்சென்னி, யீண்டிக்கடவுளர் வேண்டலிற்போந்து, குடங்கையினலைகடலடக்கியீண்டிய, தென்மலையிருந்த விருந்தவனியற்றமிழ், கெழீஇயவகப்பொரு டழீஇநோக்கி, வழிகொடுத்துநிறீஇ வகுத்துப்புலப்படுத்தாங், கிகப்பிலகப்பொருள் விளக்கம்பகர்ந்தெழுதினன், செந்தமிழ்நாட்டுமைந்தன்குரிசில், பாற்கடற்பல்புகழ்பரப்பிய, நாற்கவிராசநம்பியென்பவனே.

இதன்பதப்பொருள்.—பூமிசைநடந்த வாமனைவாழ்த்தி - (இந்திரஞனிருமிக்கப்பட்டதெய்வத்) தாமரையின்கணெழுந்தருளிய வருகக்கடவுளைவாழ்த்தி, வடமலைச்சென்னி யீண்டிக்கடவுளர் வேண்டலிற்போந்து - வடமலையினுச்சிக்கட்சென்று வானோர் வேண்டலிற்றெற்கின்கட்போந்து, அலைகடல் குடங்கையிலடக்கி - அலையெறிகின்ற கடன்முழுவதையுங் குடங்கையிலடக்கி, ஈண்டியதென்மலையிருந்த விருந்தவனியற்றமிழ்கெழீஇய வகப்பொருடழீஇ நோக்கி- (அத்தெற்கின்க) ணெருங்கியபொதியமலையின்கணிருந்த பெரியதவத்தினையுடையராகிய வகத்தியமுனிவர்செய்த வியற்றமிழைப்பொருந்திய வகப்பொருளைத் தழுவிநோக்கி, வழிகொடுத்துநிறீஇ வகுத்துப்புலப்படுத்து - (உலகத்தாரறியும்வகை) வழிநூலாக்கிமுறையினிறுத்திக் (கிளவிகளையடைவுபட) வகுத்துப்புலப்படுத்து, இகப்பிலகப்பொருள்விளக்கம்பகர்ந்தெழுதினன் - தளருதலில்லாத வகப்பொருள்விளக்கமென்

னு மிந்நூல்பகர்ந்தெழுதினன், செந்தமிழ்நாட்டு மைந்தன்குரிசில் பாற்கடற்பல்புகழ்பரப்பிய நாற்கவிராசநம்பியென்பவன் - செந்தமிழ் நாட்டாசான்மைந்தனுங் கலைக்குரிசிலுமாகிய பாற்கடல்போலப்பல வகைப்பட்டபுகழைவிளக்கிய நாற்கவிராசநம்பியென்னுமியற்பெயரையுடையோன். எ - று. இதனுளாக்கியோன்பெயர் முதலிய பதினொன்றுமமைந்தவாறுகாண்க.

பூமலிநாவன் மாமலைச்சென்னி, யீண்டியவிமையோர்வேண்டலிற் போந்து, குடங்கையில்விந்த நெடுங்கிரிமிசைதீர்த், தலைகடலடக்கிமலை யத்திருந்த, விருந்தவன்றன்பா லியற்றமிழுணர்ந்த, புலவர்பன்னிரு வருட்டலைவணங்கிய, தொல்காப்பியனரு ளொல்காப் பெரும்பொரு, ளகப்பொருளிலக்கண மகப்படத்தழீஇ, யிகப்பருஞ்சான்றோ ரிலக்கிய நோக்கித், தொகுத்துமுறைநிறீஇச்சூத்திரம்வகுத்தாங்,ககப்பொருள் விளக்கமென்றதற்கொருநாமம், புலப்படுத்திருளறப் பொருள்விரித் தெழுதினன், மாந்தருந்தேவரும் வாழ்த்தமுக்குடைக்கீ, ழேழெழி லரிமானேந்து பொன்னணைமிசை, மதிமூன்றுகவிப்ப வுதயமால்வரைக், கதிரோனிருந்தெனக்காண்டகவிருந்து, தத்துவம்பகர்ந்தோன் சரணம்பொருந்திய, வுத்தமன்புளிங்குடி யுய்யவந்தானெனு, முத்தமிழாசான் மைந்தனித்தலத், திருபெருங்கலைக்குமொரு பெருங்குரிசில், பாற்கடற்பல்புகழ் பரப்பிய, நாற்கவிராச நம்பியெனபவனே.

இச்சிறப்புப்பாயிரம் பிற்காலத்தது.

சிறப்புப்பாயிர முற்றிற்று.

முதலாவது அகத்திணையியல்.

மலர்தலையுலகத்துப்புலவோராய்ந்த, வருந்தமிழகப்பொருள் கைக்கிளையைந்திணை, பெருந்திணையெனவெழு பெற்றித்தாகும்.

இச்சூத்திரமென்னுதலிற்றோவெனின், அகப்பொருளெல்லாந்தொகுத்துணர்த்துதனுதலிற்று. மலர்தலையுலகத்து - பரந்தவிடத்தையுடைய தமிழ்நாட்டகத்து, புலவோராய்ந்த - சங்கப்புலவர்களாலாராயப்பட்ட, அருந்தமிழகப்பொருள்-அரியதமிழ்நூலினகப் பொருளிலக்கணம், கைக்கிளையைந்திணைபெருந்திணையெனவெழுபெற்றித்தாகும்- கைக்கிளையுமைந்திணையும் பெருந்திணையுமென வேழியல்பினையுடைத்தாகும். எ - று. என - எண்ணிடைச்சொல். (க)

அதுவே - புணர்ந்துரையுலகிய லெனுந்திறமிரண்டினுந், தொல்லியல்வழாமற் சொல்லப்படுமே.

இ - ன். மேற்சொல்லப்பட்ட வகப்பொருட்குரியவிதியுணர்- ற்று. அதுவே - அவ்வகப்பொருள், புணர்ந்துரையுலகியலெனுந் திறமிரண்டினும் - இல்லதுமுள்ளதுமாகிய விரண்டுகூறுபாட்டானும், தொல்லியல்வழாமற் சொல்லப்படும் - பழையநெறியினின்று பிறழாமற் சொல்லப்படும் .எ - று. (உ)

அவற்றுள் - கைக்கிளையுடைய தொருதலைக்காமம்.

இ - ன். நிறுத்தமுறையானே கைக்கிளைக்குரிய பொருளுணர்த்துத-ற்று. அவற்றுள் - மேற்சொல்லப்பட்ட அகப்பொருள்விகற்பமாகியவேழனுள், கைக்கிளையுடையது - கைக்கிளையென்பதனுடைய பொருள், ஒருதலைக்காமம் - ஒருதலைக்காமமாம். எ - று. அவற்றுளென்பதனை மேல்வருஞ்சூத்திர மிரண்டிற்குந்தந்துரைக்க. (ங)

ஐந்திணையுடைய தன்புடைக்காமம்.

இ - ன். ஐந்திணைக்குரியபொருளுணர்-ற்று. ஐந்திணையுடையது- ஐந்திணையென்பதனுடையபொருள், அன்புடைக்காமம் - அன்புடைக்காமமாம். எ - று. (ச)

பெருந்திணையென்பது பொருந்தாக்காமம்.

இ - ன். பெருந்திணைக்குரியபொருளுணர் - ற்று. பெருந்திணையென்பது - பெருந்திணையென்பதனுடையபொருள், பொருந்தாக்காமம் - பொருந்தாக்காமமாம். எ - று. இவற்றின்விரிவெல்லா மேலே காட்டப்படும். (ரு)

குறிஞ்சிபாலைமுல்லைமருத, நெய்தலெந்திணைக் கெய்திய பெயரே.

இ - ன். ஐந்திணைக்குரியபெயருணர் - ற்று. குறிஞ்சிபாலைமுல்லைமருதநெய்தல் - குறிஞ்சியும்பாலையு முல்லையுமருதமு நெய்தலுமாகியவிவை, ஐந்திணைக்கெய்தியபெயர் - ஐந்திணைக்குப்பொருந்தியபெயர்களாம். எ - று. (சு)

அவைதாம் - முதற்பொருள்கருப்பொரு ளுரிப்பொருளெனமுறை, நுதற்பொருண்மூன்றினு நுவலப்படுமே.

இ - ன். ஐந்திணைக்கும்பொதுவாகியபொருளுணர் - ற்று. அவைதாம் - மேற்சொல்லப்பட்ட குறிஞ்சிமுதலாகியவைந்திணைதாம், முதற்பொருள் கருப்பொருளுரிப்பொருளென - முதற்பொருளுங்கருப்பொருளுமுரிப்பொருளுமென, முறைநுதற்பொருண்மூன்றினும் - முறையானேகருதுதலையுடைய பொருண்மூன்றனும், நுவலப்படும் - சொல்லப்படும். எ - று. அவைதாம் நுவலப்படுமெனக்கூட்டுக. என - எண்ணிடைச்சொல். (எ)

நிலமும்பொழுதுமென முதலிருவகைத்தே.

இ-ன். நிறுத்தமுறையானே முதற்பொருளின்பாகுபாடுணர்-ற்று. முதல் - முதற்பொருளாவது, நிலமும்பொழுதுமென விருவகைத்து - நிலமும்பொழுதுமென விரண்டுவகையினையுடைத்தாம். எ-று. (அ)

வரையேசுரமே புறவேபழனந், திரையேயவையவைசேர் தருமிடனே, யெனவீரைவகைத்தணையியனிலமே.

இ - ன். முதற்பொருளின்பாகுபாடாகிய விரண்டனுள் ளுமுன்னதாகியநிலத்தின் வரையறையுணர்-ற்று. அணையியனிலம்- மேற்சொல்லப்பட்ட வியல்பினையுடைய நிலமென்னுமுதற்பொருள், வரையே---ஈரைவகைத்து - வரையும்வரைசார்ந்தவிடமுஞ்சுரமுஞ்சுரஞ்சார்ந்தவிடமும் புறவும் புறவுசார்ந்தவிடமும் பழனமும் பழனஞ்சார்ந்த

விடமுங் கடலுங்கடல்சார்ந்தவிடமுமெனப் பத்துவகையினையுடைத்து. எ - று. இவற்றையைந்திணைக்கு நிரனிறையாகக்கொள்க. புறவெனினுங் காடெனினுமொக்கும். அணையவியலெனற் பாலதணையியலென விகாரமாயிற்று. (கூ)

பெரும்பொழுதென்றுசிறுபொழுதென்று, விரண்டுகூற்றதியம்பியபொழுதே.

இ - ன். பொழுதென்னு முதற்பொருளின் பாகுபாடுணர் - ற்று. இயம்பியபொழுது - மேற்சொல்லப்பட்டபொழுதென்னு முதற்பொருள், பெரும்பொழுதென்று சிறுபொழுதென்று விரண்டுகூற்றது - பெரும்பொழுதென்றுஞ் சிறுபொழுதென்றுமிரண்டுபகுதியினையுடைத்து. எ - று. என்று - எண்ணிடைச்சொல். (கo)

காரேகூதிர்முன்பனிபின்பனி, சீரிளவேனில்வேனிலென்றாங், கிருமூன்றுதிறத்தது தெரிபெரும்பொழுதே.

இ - ன். மேற்கூறப்பட்ட விருவகைப்பொழுதுட் பெரும்பொழுதின்வகையுணர் - ற்று. காரே—வேனிலென்று - கார்காலங் கூதிர்கால முன்பனிக்காலம் பின்பனிக்கால மிளவேனிற்கால முதுவேனிற்காலமென்று, இருமூன்றுதிறத்தது தெரிபெரும்பொழுது - ஆறுபகுதியினையுடைத்தாம் (புலவரா) ஞராயப்பட்ட பெரும்பொழுது. எ - று. ஆங்கு, அசை. (கக)

மாலையாமம் வைகறையெற்படு, காலைவெங்கதிர்காயுநண்பகலெனக், கைவகைச்சிறுபொழுதைவகைத்தாகும்.

இ - ன். சிறுபொழுதின் வகையுணர்-ற்று. மாலை—பகலென - மாலையாமம்வைகறையெற்பாடுநண்பகலென,ஐவகைத்தாகும் - ஐந்துவகையினையுடைத்தாம், கைவகைச்சிறுபொழுது - அவ்வொழுக்கவகைக்குரியசிறுபொழுது. எ - று. மாலை, உச்சிக்குப்பின்னுமாதித்தன் படுவதற்குமுன்னுமுண்டாகிய காலம். யாமம், இடையிரவு. எற்படுகாலை, ஆதித்தன்படுகிறபொழுது-கை, ஒழுக்கம். (கஉ)

அவற்றுள் - கூதிர்யாம முன்பனி யென்றிவை, யோதிய குறிஞ்சிக்குரியவாகும்.

இ - ன். குறிஞ்சிக்குரியபெரும்பொழுதுஞ் சிறுபொழுதுமுணர்-ற்று. அவற்றுள், பெரும்பொழுதுஞ் சிறுபொழுதுமாகிய பதினொன்றுள்ளும், கூதிர்—வாகும் - கூதிரும் யாமமும் முன்பனியுமாகிய

மூன்றுமேற்சொல்லப்பட்ட குறிஞ்சிக்குரியவாகும். எ - று. இத னுட்பெரும்பொழுதாகிய முன்பனியைக்கூதிரோடுசேரக் கூறுதியாம மாகிய சிறுபொழுதின் பிற்கூறிய தென்னையெனின், அதுகூதிரின் ... ணைச்சிறப்புடைத்தன்றாகலினெனக்கொள்க. வருஞ்சூத்திரத்திற்கு மொக்கும். (கங)

வேனினண்பகல்பின்பனியென்றிவை, பாண்மையினுரிய பாலைதனக்கே.

இ - ன். பாலைக்குரியபெரும்பொழுதுஞ் சிறுபொழுதுமுணர்-ற்று. பாலைதனக்கு - பாலைக்கு, வேனினண்பகல் பின்பனியென்றிவைபாண் மையினுரிய - வேனிலுநண்பகலும் பின்பனியுமாகிய மூன்றும் விதி யானுரியவாம். எ- று. (கச)

மல்குகார்மாலைமுல்லைக்குரிய.

இ - ன். முல்லைக்குரிய பெரும்பொழுதுஞ் சிறுபொழுது முணர்-ற்று. மல்கு—குரிய - மிகாநின்றகார்காலமு மாலைக்காலமுமாகிய விரண்டுமுல்லைக்குரியன. எ - று. (கரு)

இருள்புலர்காலை மருதத்திற்குரித்தே.

இ - ன். மருதத்திற்குரிய சிறுபொழுதுணர்-ற்று. மருதத்திற்கி ருள்புலர்காலையுரித்து-மருதத்திற்குவிடியற்காலமுரித்து. எ-று. (கசு)

வெய்யோன்பாடு நெய்தற்குரித்தே.

இ - ன். நெய்தற்குரியசிறுபொழுதுணர் - ற்று. வெய்யோன்— குரித்து- ஆதித்தன் படுகின்றகாலநெய்தற்குரித்து. எ - று. (கஎ)

மருதநெய்தலென்றிவையிரண்டிற்கு, முரியபெரும்பொ ழுதிருமூன்றும்மே.

இ - ன். மருதத்திற்கு நெய்தற்குமுரிய பெரும்பொழுதுணர் - ற்று. மருதநெய்தலென்றிவையிரண்டிற்கும் - மருதமுநெய்தலு மென்னுமிரண்டிற்கும், பெரும்பொழுதிருமூன்றுமுரிய - பெரும்பொ ழுதாறுமுரியவாம். எ - று. (கஅ)

ஆரணங்குயர்ந்தோ ரல்லோர்புள்விலங், கூர்நீர்பூமரமு ணாப்பறையாழ்பண், டொழிலெனக்கருவி ரெழுவகைத் தாகும்.

இ - ன். நிறுத்தமுறையானேகருப்பொருளின்பாகுபாடுணர்-ற்று. ஆரணங்கு—டொழிலென - தெய்வமு முயர்ந்தோருந்தாழ்ந்தோரும் புள்ளும்விலங்கு மூருநீரும் பூவுமரமு முணவும் பறையும்யாழும் பண்ணுந்தொழிலுமென, ஈரெழுவகைத்தாகுங்கரு- பதினான்குவகையினையுடைத்தாகுங் கருப்பொருள். எ - று. (கக)

விறற்சேய்பொருப்பன்வெற்பன்சிலம்பன், குறத்திகொடிச்சி குறவர்கானவர், குறத்தியர்கிளிமயின் மறப்புலிகுடாவடி, கறையடிசியஞ்சிறுகுடியருவி, நறுஞ்சுனைவேங்கை குறிஞ்சிகாந்த, ளாரந்தேக்ககிலசோகநாகம், வேரலைவனந்தோரையேனல், கறங்கிசைத்தொண்டகங் குறிஞ்சியாழ்குறிஞ்சி, வெறிகோளைவனம் வித்தல்செறிகுரற், பைந்தினைகாத்தல் செந்தேனழித்தல், செழுங்கிழங்ககழ்கன் முழங்கிவீழருவியொடு, கொழுஞ்சுனையாடல்குறிஞ்சிக்கருப்பொருளே.

இ - ன். குறிஞ்சிக்கருப்பொருளுணர் - ற்று. விறற்சேய்—சுனையாடல் - சேய்முதற்சுனையாடலீறுகச்சொல்லப்பட்டனவெல்லாம், குறிஞ்சிக்கருப்பொருள்- குறிஞ்சிக்கருப்பொருளாம். எ- று. சேய், தெய்வம்; பொருப்பன்வெற்பன்சிலம்பன் குறத்திகொடிச்சி, உயர்ந்தோர்; குறவர் கானவர் குறத்தியர், தாழ்ந்தோர்; கிளி மயில்,புள்; புலி கரடி யானை சிங்கம், விலங்கு ; சிறுகுடி, ஊர்; அருவி சுனை, நீர்; வேங்கை குறிஞ்சி காந்தள், பூ ; சந்தனம் தேக்கு அகில் அசோகம் நாகம் மூங்கில், மரம்; மலைநெல் மூங்கிலரிசி தினை, உணு; தொண்டகம், பறை; குறிஞ்சியாழ், யாழ் ; குறிஞ்சி, பண் ; வெறியாடல் ஐவனம்வித்தல் தினைகாத்தல் தேனழித்தல் கிழங்ககழ்தல் அருவியாடல் சுனையாடல், தொழில். (உ0)

கன்னிவிடலைகாளைமீளி, யின்னகையெயிற்றி யெயினரெயிற்றியர், மறவர்மறத்தியர் புறவுபருந்தெருவை, கழுகுசெந்நாய்கல்கெழுகுறும்பு, குழிவறுங்கூவல்குராஅமராஅ, வழிஞைபாலையோமையிருப்பை, வழங்குகதிக்கொண்டன செழும்பதிக்கவர்ந்தன, பகைத்துடிபாலையாழ் பஞ்சுரம்வெஞ்சமம், பகற்சூறையாடல் பாலைக்கருபபொருளே.

இ - ன். பாலைக்குரியகருப் பொருளுணர் - ற்று. கன்னி—சூறையாடல்- கன்னிமுதலாகச் சூறையாடலீறுகச்சொலலப்பட்டனவெல்லாம், பாலைக்கருப்பொருள்- பாலைக்கருப்பொருளாம். எ-று. கன்னி,

தெய்வம்; விடலை காளை மீளி எயிற்றி, உயர்ந்தோர்; எயினர் எயிற்றியர் மறவர் மறத்தியர், தாழ்ந்தோர்; புறா பருந்து எருவை கழுகு, புள்; செந்நாய், விலங்கு; குறும்பு, ஊர்; குழி கூவல், நீர்; குரா மரா உழிஞை, பூ; பாலைஓமைஇருப்பை, மரம்; வழிப்பறித்தன பதியிற்கவர்ந்தன, உணவு; துடி, பறை; பாலையாழ், யாழ்; பஞ்சுரம், பண்; போர்புரிதல் சூறையாடல், தொழில். (௨௧)

நெடுமால்குறும்பொறை நாடன்றோன்றல், வடுவில்கற்பின் மனைவிகிழத்தி, யிடையரிடைச்சியராயராய்ச்சியர், கானவாரணமான்முயல்பாடி, குறுஞ்சுனைகான்யாறு குல்லைமுல்லை, நிறங்கிளர்தோன்றி பிறங்கலர்ப்பிடவங், கொன்றைகாயா மன்றலங்குருந்தந், தாற்றுக்கதிர்வர கொடுசாமைமுதிரை, யேற்றுப்பறைமுல்லையாழ்சாதாரி, சாமைமுதிரைதாமுடன் வித்த, லவைகளைகட்டலரிதல்கடாவிடல், செவிகவர்கொன்றைத்தீங்குழலூதன், மூவினமேய்த்தல் சேவினந்தழுவல், கழுமியகுரவையொடு கான்யாறென்றிவை, முழுதுடனுடன் முல்லைக்கருப்பொருளே.

இ - ன். முல்லைக்குரியகருப் பொருளுணர்-ற்று. நெடுமால்—கான்யாறென்றிவை- நெடுமான் முதலாகக்கான்யாறுட வீறாகச்சொல்லப் பட்டனவெல்லாம், முல்லைக் கருப்பொருள் - முல்லைக்கருப்பொருளாம். எ - று. நெடுமால், தெய்வம்; குறுமபொறைநாடன் தோன்றல் மனைவி கிழத்தி, உயர்ந்தோர்; இடையர் இடைச்சியர் ஆயர் ஆய்ச்சியர், தாழ்ந்தோர்; காட்டுக்கோழி, புள்; மான் முயல், விலங்கு; பாடி, ஊர்; குறுஞ்சுனை கான்யாறு, நீர்; குல்லை முல்லை தோன்றி பிடவம் கொன்றை காயா; பூ; குருந்து,மரம்; வரகு சாமை முதிரை, உணவு; ஏற்றுப்பறை, பறை; முல்லையாழ், யாழ்; சாதாரி, பண்; சாமைவரகு வித்தல் அவைகளைகட்டல் அவையரிதல் கடாவிடல் கொன்றைக்குழலூதல் மூவினமேய்த்தல் விடைதழுவல் குரவையாடல் கான்யாறுடல், தொழில். (௨௨)

இந்திரனூரன்பைந்தார்மகிழ்நன், கெழுதகுகற்பிற்கிழத்தி மனைவி, யுழவருழத்தியர்கடையர் கடைச்சியர், மழலைவண்டான மகன்றினாரை, யன்னம்போதாநன்னிறக்கம்புள், குருகுதாராவெருமைநீர்நாய், பெருகியசிறப்பிற் பேரூர்மூதூர், யாறுமனைக்கிணறிலஞ்சிதாமரை,நாறிதழ்க்கழுநீர் நறுமலர்க்

குவளை, காஞ்சிவஞ்சிபூஞ்சினைமருதஞ், செந்நெல்வெண்ணெலந்நெலரிகிணை, மன்றன்முழவ மருதயாழ்மருத, மன்றணிவிழாக்கோள் வயற்களைகட்ட, லரிதல்கடாவிடலகன்குளங்குடைதல், வருபுனலாடன் மருதக்கருப்பொருளே.

இ-ன். மருதநிலத்திற் குரியகருப்பொருளுணர்-ற்று. இந்திர—புனலாடல் - இந்திரன்முதலாகப்புனலாடலீறாகச் சொல்லப்பட்டனவெல்லாம், மருதக்கருப்பொருள்- மருதக்கருப்பொருளாம். எ-று. இந்திரன், தெய்வம்; ஊரன்மகிழ்நன்கிழத்திமனைவி, உயர்ந்தோர்; உழவர் உழத்தியர்கடையர்கடைச்சியர், தாழ்ந்தோர்; வண்டானம் அகன்றில் நாரை அன்னம் போதா கம்புள் குருகு தாரா, புள்; எருமை நீர்நாய், விலங்கு; பேரூர் மூதூர், ஊர்; யாறுகிணறுகுளம், நீர்; தாமரைகழுநீர் குவளைகாஞ்சிவஞ்சி, பூ; மருது, மரம்; செந்நெலரிசி வெண்ணெலரிசி, உணவு; கிணைமுழவு பறை; மருதயாழ், யாழ்; மருதம், பண்; விழாக்கொளல் வயற்களைகட்டல் அரிதல் கடாவிடல் குளங்குடைதல் புனலாடல், தொழில். (௨௫)

வருணன்சேர்ப்பன் விரிதிரைப்புலம்பன், பருமவல்குற் பாத்திநுளைச்சி, நுளையர்நுளைச்சியர்பரதர்பரத்திய, ரளவரளத்தியரலைகடற்காக்கை, சுறவம்பாக்கம்பெறலரும்பட்டின, மூவர்நீர்க்கேணிகவர் நீர்நெய்தல், கண்டகக்கைதைமுண்டகமடம்பு, கண்டல்புன்னைவண்டிமிர்ஞாழல், புலவுமீனுப்புவிலைகளிற்பெற்றன, களிமீன்கோட்பறைநாவாய்ப்பம்பை, விளரியாழ்செவ்வழிமீனுப்புப்படுத்த, லுணங்கவைவிற்றன் மீனுணக்கல்புள்ளோப்ப, னெடுங்கடலாடனெய்தற்கருப்பொருளே.

இ-ன். நெய்தற்குரியகருப்பொருளுணர்-ற்று. வருணன்—கடலாடல் - வருணன்முதலாகக்கடலாடலீறாகச்சொல்லப்பட்டனவெல்லாம், நெய்தற்கருப்பொருள் - நெய்தற்கருப்பொருளாம், எ-று. வருணன், தெய்வம்; சேர்ப்பன்புலம்பன் பரத்திநுளைச்சி, உடர்ந்தோர்; நுளையர் நுளைச்சியர் பரதர் பரத்தியர் அளவர்அளத்தியர், தாழ்ந்தோர்; காக்கை, புள்; சுரு, விலங்கு; பாக்கம்பட்டினம், ஊர்; உவர்நீர்க்கேணிகவர்நீர், நீர்; நெய்தல்கைதை முண்டகம் அடம்பு, பூ; கண்டல் புன்னை ஞாழல், மரம்; மீனைஉப்பைவிற்றலாற்பெற்றனவும்மீனும், உணவு; கோட்பறைநாவாய்ப்பம்பை, பறை; விளரியாழ், யாழ்; செவ்வழி, பண்; மீனுப்புப்படுத்தல் அவைவிற்றல் மீனுணக்கல புள்ளோப்பல் கடலாடல், தொழில். (௨௬)

புணர்தலும்பிரிதலுமிருத்தலுமூடலு, மிரங்கலுமிவற்றினி மித்தமுமெனவாங், கெய்தியவுரிப்பொருளையிருவகைத்தே.

இ - ன். நிறுத்தமுறையானே உரிப்பொருளின் பாகுபாடுணர்-ற்று. ஆங்கெய்தியவுரிப்பொருள் - மேலெய்தியவுரிப்பொருள், புணர்தலும்—னிமித்தமுமென - புணர்தலும் - புணர்தனிமித்தமும், பிரிதலும் - பிரிதனிமித்தமும், இருத்தலும் - இருத்தனிமித்தமும், ஊடலும் ஊடனிமித்தமும், இரங்கலும் - இரங்கனிமித்தமும்என, ஐயிருவகைத்து - பத்துவகையினையுடைத்து, எ - று. உதாரணம்.—குறிஞ்சிக்கு, இன்னிசையுருமொடு - நனிதுளிதலைஇ, மன்னுயிர்மடிந்தபாணாட் கங்குல் - என்னுஞ்செய்யுளானும், பாலைக்கு - அறியாய்வாழிதோழியிருளற, விசும்புடன்விளக்கும் - விரைசெலற்றிகிரிக், கடுங்கதிரெறிப்ப - என்னுஞ்செய்யுளானும், முல்லைக்கு - முல்லைவைந்நுதிதோன்ற என்னுஞ் செய்யுளானும், மருதத்திற்கு - நெடுங்கோடுநுடங்குநியமமூதூர், என்னுஞ் செய்யுளானும், நெய்தலுக்கு - கானன்மலர்ந்தகழிப்பூக்கூம்ப, என்னுஞ் - செய்யளானும், உணர்க. இச்செய்யுட்களில், முதல்கருஉரிஎன்னுமுப்பொருளும் வந்தவாறுகாண்க. இச்செய்யுட்களை யிவ்வகப்பொருள்விளக்கப்பழைய வுரையிற்காண்க. (௨௫)

அளவையிலின்பத் தைந்திணைமருங்கிற், களவுகற்பென விருகைகோள்வழங்கும்.

இ - ன். ஐந்திணைக்குரிய கைகோள்வரையறையுணர்- ற்று. அளவையி—வழங்கும்-எல்லையில்லாதவின்பத்தையுடையவைந்திணையிடத்துக்களவுங் கற்புமெனவிரண்டொழுக்கங்கழும். எ. று. களவுங் கற்புமெனவும்மை விரிக்க. கைகோள், ஒழுக்கம். (௨௬)

இயற்கைப்புணர்ச்சி யிடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம் பாங்கியிற் கூட்டமென், றுணர்த்தியகளவிற்புணர்ச்சிநால்வகைத்தே.

இ - ன். நிறுத்தமுறையானே களவென்னுங்கைகோளிற் புணர்ச்சிவகையுணர் - ற்று. உணர்த்தியகளவிற்புணர்ச்சி - மேற்சொல்லப்பட்ட களவென்னுங்கைகோளிற்புணர்ச்சி, இயற்கைப்—மென்று - இயற்கைப்புணர்ச்சி யிடந்தலைப்பாடு பாங்கற்கூட்டம் பாங்கியிற்கூட்டமென்று, நால்வகைத்து - நான்குவகையினை யுடைத்தாம். எ- று. (௨௭)

மெய்க்கிளை யாழோர்வேண்டும்புணர்ச்சிமுன், கைக்கிளை நிகழ்தல் கடனெனமொழிப.

இ - ன். கைக்கிளைநிகழுமிடமுணர்- ற்று. மெய்க்—மொழிப- மெய்ம்மையாகிய நரம்புசெறிந்தயாழினையுடைய காந்தருவர்விரும்புங் களவிற்புணர்ச்சி முன்கைக்கிளை நிகழ்தல் கடனென்று சொல்லுவர் புலவர். எ - று. (உஅ)

அதுவே-காமஞ்சான்றவிளைமையோள்வயிற், குறிப்பறிகாறுங்குறுகாதுநின்று, குறிப்படுநெஞ்சொடுகூறலாகும்.

இ - ன். கைக்கிளைக்குரியவிலக்கணமுணர்- ற்று. அதுவே-மேற்சொல்லப்பட்ட கைக்கிளையாவது, காமஞ்—காறும் - காமநுகர்தற்கமைந்தவிளைமையையுடைய தலைமகளிடத்துண்டாகிய குறிப்பினைத் தானறியுமளவும், குறுகாதுநின்று - (தலைமகனவளைச், சாராதுநின்று, குறிப்படுநெஞ்சொடுகூறலாகும், தன்வசமாயி நெஞ்சொடு சொல்லுதலாம். எ- று. (உகூ)

மறையோர்மன்னர் வணிகர்சூத்திரரெனு, மிறையோர்தத்தமக்கெய்து மற்றதுவே.

இ - ன். கைக்கிளைக்குரியதலைமக்களையுணர்- ற்று. அதுவே - மேற்சொல்லப்பட்டகைக்கிளை, மறையோர்—கெய்தும் - மறையோரு மன்னரும் வணிகருஞ் சூத்திரருமென்னு நால்வகைத்தலைமக்கட்குங் கூடுவதாம். எ -று. (௩0)

அதுவே - மொழிந்தோர்நால்வரு மொழிந்தைந்நிலத்துறை, யிழிந்தோர்தம்முளுயர்ந்தோருமெய்துப.

இ - ன். கைக்கிளைக்கெய்துவதோர் வேறுபாடுணர்-ற்று. அதுவே- மேற்சொல்லப்பட்டகைக்கிளையே, மொழிந்தோர்நால்வருமொழிந்து- முற்கூறப்பட்டநால்வகைத்தலைமக்களுமன்றி, ஐந்நிலத்—மெய்துப- ஐந்துநிலத்துமுறையுமக்களுட்டலைமக்களும்பெறுவர் எ- று. உம்மை யிழிவு சிறப்பாதலிற்சிறுபான்மைநோக்கிநின்றதெனக்கொள்க. (௩க)

தெய்வந்தன்னினெய்தவுங்கிழத்தியி, னெய்தவும்படூஉமியற்கைப்புணர்ச்சி.

இ - ன். இயற்கைப்புணர்ச்சியினிலக்கணமுணர்- ற்று. இயற்கைப்புணர்ச்சி— (மேலேசொல்லப்பட்ட நால்வகைப் புணர்ச்சியுள்ளு) மியற்கைப்புணர்ச்சியாவது, தெய்வந்தன்னினெய்தவும் (படூஉம்) கிழ

த்தியினெய்தவும் படூஉம் - தெய்வத்தாற்பெறவும்படுந் தலைமகளாற் பெறவும் படும். எ- று. படூஉமென்பதனை முன்னுங் கூட்டி யுரைக்க. (௩௨)

இயற்கைப்புணர்ச்சி தெய்வத்தினெய்துழி, முயற்சியின் றிமுடிவதாகும்.

இ - ன். இயற்கைப்புணர்ச்சிக்கெய்தியதன் மேற்சிறப்புவிதியுணர்-ற்று. இயற்கைப் — தாகும் - அவ்வியற்கைப்புணர்ச்சிதெய்வத்தாற்பெ றுங்காலத்து முயற்சியின்றித்தானே முடிவதாம். எ- று. எனவே யப் புணர்ச்சிதலைமகளாற்பெறுங்காலத்து முயற்சியானே முடிவதென்ப தாயிற்று. (௩௩)

உள்ளப்புணர்ச்சியுமெய்யுறுபுணர்ச்சியுங், கள்ளப்புணர்ச் சியுட்காதலற்குரிய.

இ - ன். களவிற் புணர்ச்சிக் கெய்தாததெய்து வித்தனுதலிற்று. உள்ளப் — குரிய - உள்ளத்தாற்புணரும் புணர்ச்சியு மெய்யுற்றுப்பு ணரும் புணர்ச்சியுமென்னுமிரண்டுங் களவிற்புணர்ச்சிக்கட்டலை மகற்குரியவாம். எ- று. (௩௪)

பொருவிறந்தோற்கும் பெருமையுமுரனு, நன்னுதற்கச் சமுநாணுமடனு, மன்னியகுணங்களாதலின்முன்ன,ருள்ள ப்புணர்ச்சியுரியதாகும்.

இ - ன். உள்ளப்புணர்ச்சி நிகழ்தற்கேதுவுணர்- ற்று. பொருவி றந்தோற்கு - தலைமகனுக்கு, பெருமையுமுரனும்-பெருமையுமறிவும், நன்னுதற்கு-தலைமகளுக்கு, அச்சமுநாணுமடனும் - அச்சமு நாணு மடமும், மன்னியகுணங்களாதலின் - நிலைபெற்றகுணங்களாதலால், முன்னருள்ளப்புணர்ச்சியுரியதாகும், (மேற்சொல்லப்பட்டவிரண்டுபு ணர்ச்சியுள்ளும்)முன்னேயுள்ளப்புணர்ச்சிநிகழ்தற்குரித்தாம். எ-று. பெருமை, பழியும்பாவமுமஞ்சுதல். அறிவு, தக்கவறிதல். அச்சம், கா ணுததொன்று கண்டாற்பெண்டிரிடத்துநிகழ்வது. நாண், பெண்டிர்க் கியல்பாகியகுணம். மடம், பேதைமை. (௩௫)

காட்சிமுதலாச் சாக்காடீறுக், காட்டியபத்துங் கைவரு மெனினே, மெய்யுறுபுணர்ச்சி யெய்துதற்குரித்தே.

இ - ன். மெய்யுறுபுணர்ச்சி நிகழுமிடமுணர்- ற்று. காட்சி — கை வருமெனின் - காட்சிமுதலாகச் சாக்காடீறாகப் (புலவரான் உணர்த்த ப்பட்ட பத்தவத்தையு மடைவேநிகழுமாயின், மெய்யுறுபுணர்ச்சியெ

ய்துதற்குரித்து - (தலைமகற்கு) மெய்யுறுபுணர்ச்சி கூடுதற்குரித்தாம். எ-று. பத்தவத்தை, காட்சியும் வேட்கையுமொருதலையுள்ளுதலு மெலிதலுமாக்கஞ்செப்பலு நாணுவரையிறத்தலுநோக்குவவெல்லாமவையே போறலு மறத்தலு மயக்கமுஞ் சாக்காடுமென்னுமிவை. (கசா)

பகற்குறியிரவுக் குறியெனும்பான்மைய, புகற்சியினமைந்தோர் புணர்ச்சிநிகழிடனே.

இ-ன். களவிற்புணர்ச்சி நிகழுங்குறியின் பாகுபாடுணர் - ற்று. புகற்சியினமைந்தோர்புணர்ச்சி நிகழிடன் - அன்பினானமைந்தோர் புணர்ச்சி நிகழுமிடம், பகற்—பான்மைய - பகற்குறியிரவுக்குறியென்னும் பகுதியினையுடையவாம். எ-று. (கஎ)

இல்வரையிகந்தது பகற்குறியிரவுக்குறி, யில்வரையிகவாவியல்பிற்றாகும்.

இ-ன். மேற்கூறப்பட்ட குறிகளினிலக்கணமுணர் - ற்று. பகற்குறியில்வரையிகந்தது - பகற்குறியில்லினெல்லையைக் கடந்ததாம், இரவுக்—றாகும் - இரவுக்குறியில்லினெல்லையைக் கடவாதவியல்பினையுடைத்தாம். எ - று. (கஅ)

ஒருவழித்தணத்தல் வரைவிடைவைத்துப், பொருள்வயிற்பிரிதலென்றிருவகைத்தாகு, நிறைதரு காதன்மறையினிற்பிரிவே.

இ-ன். களவிற்பிரிவுவகையுணர் - ற்று. ஒருவழித்—வகைத்தாகும் - ஒருவழித்தணத்தலும் வரைவிடைவைத்துப்பொருள்வயிற்பிரிதலுமென்றிரண்டுபகுதியினையுடைத்தாம், நிறை—பிரிவு-நிறைந்த காதலினையுடைய களவின்கட் பிரியும்பிரிவு. எ - று. (கக)

அவற்றுள்- ஒருவழித்தணத்தற்குப்பருவங்கூறார்.

இ-ன். ஒருவழித்தணத்தற் குரியதோரிலக்கணமுணர்-ற்று. அவற்றுள்- மேற்சொல்லப்பட்ட விரண்டனுள்ளும், ஒருவழி—கூறார்- ஒருவழித்தணத்தற்குக் (காட்டிடையிட்டுநாட்டிடையிட்டும் பிரியப்படாமையினாற்றாற்) பருவம் வரையறைசொல்லார் (சான்றோர்) எ - று. (உ0)

வரைவிடைவைத்துப் பொருள் வயிற்பிரிவோ, ரிருதுவி ன்கண்ணுடைத் தென்மனார்புலவர்.

இ - ன். வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிவுக்குரியதோரில க்கணமுணர்-ற்று. வரைவிடை—பிரிவு-வரைவிடைவைத்துக் (காட் டிடையிட்டுநாட்டிடையிட்டும்) பொருள்வயிற்பிரிதல், ஓரிருது— புலவர்- இரண்டு திங்களிகவாமையுடைத்தென்று சொல்லுவராசிரி யர். (சக)

களவுவெளிப்படா முன்னும் பின்னும், விளையுநெறித்தெ னவிளம்பினர்வரைவே.

இ - ன். வரைவுநிகழுமிடமுணர்- ற்று. களவுவெளிப்படா முன் னும்பின்னும்- களவுவெளிப்படாமுன்னும் (களவுவெளிப்பட்ட) பின் னும், விளையுநெறித்துவரைவெனவிளம்பினர் -விளையுநெறியினையு டைத்தாம்வரைவென்றுசொல்லுவர்புலவர். எ- று. களவுவெளிப்ப டாவென்றதனால் களவு வெளிப்பட்ட வெனத்தந்துரைக்கப் பட் டது. (சஉ)

நான்குவகைப்புணர்ப்பினுந் தான்றெருண்டுவரைதலும், பாங்கனிற்பாங்கியிற்றெருளுற்றுவரைதலுங்,களவுவெளிப்ப டாமுன்வரைதலாகும்.

இ - ன். களவுவெளிப்படாமுன்னிகழும் வரைவிலக்கணமுணர்- ற்று. நான்குவகைப்புணர்ப்பினும் - (மேற்சொல்லப்பட்ட இயற் கைப்புணர்ச்சிமுதலாகிய) நான்குபுணர்ச்சிக்கண்ணும், தான்றெரு ண்டுவரைதலும் - (தலைமகன்) தானேதெருண்டுவரைதலும், பாங்க னிற்—வரைதலும் - பாங்கனாலாதல் பாங்கியாலாதறெருட்டப்பட்டு வரைதலுமாகியவிவை, களவு—லாகும்-களவுவெளிப்படாமுன்வரை தலாம். எ- று. (சஈ)

உடன்போய்வரைதலு மீண்டுவரைதலு, முடன்போக்கி டையீ டுற்றுவரைதலுங், களவுவெளிப்பட்ட பின்வரைதலா கும்.

இ - ன். களவுவெளிப்பட்டபின்னிகழும் வரைவிலக்கணமுணர்- ற்று. உடன்போய்வரைதலும் - புணர்ந்துடன்போய்த்தலைமகன் (றன்னூரின்கண்ணே)வரைதலும், மீண்டுவரைதலும் - மீண்டுவந்து

(தம்மூரின்கண்ணே) வரைதலும், உடன்—வரைதலும் - உடன்போக்கிடையீடுபட்டுத் தலைமகன்றலைமகடமரைவழிபட்டு) வரைதலுமாகியவிவை, களவு—லாகும் - களவுவெளிப்பட்டபின்வரைதலாம்.

அவற்றுள் - உடன்போய்வரைத லொருவகைத்தாகும்.

இ - ன். உடன்போய்வரைதலின் வகையுணர் - ற்று. அவற்றுள் - மேற்சொல்லப்பட்டமூன்றனுள்ளும், உடன்—தாகும் - உடன்போய்த்தன்னூரின்கண்ணே வரைதலாகிய வஃதொருவகையினையுடைத்தாம். எ - று. (சரு)

அவண்மனைவரைதலுந் தன்மனைவரைதலு, மெனமீண்டு வரைத லிருவகைத்தாகும்.

இ - ன். மீண்டுவரைதலின்வகையுணர் - ற்று. அவண்—தாகும் - (தலைமகளை) யவண்மனையின்கண்ணேவரைதலுந் தன்மனையின்கண்ணேவரைதலுமெனமீண்டு (தம்மூரின்கண்ணே) வரைதலிருவகைத்தாம். எ - று. (சசு)

ஆற்றூறஞ்சினு மவன்வரைவுமறுப்பினும், வேற்றுவரைவுநேரினுங் காப்புக்கைம்மிகினு, மாற்றுறத்தோன்று மறத்தொடுநிலையே.

இ - ன். அறத்தொடுநிலை நிகழுமிடமுணர் - ற்று. ஆற்றூறஞ்சினும் - (தலைமகன்வரும்) வழியினேதத்தினையஞ்சியவிடத்தும், அவன்வரைவுமறுப்பினும் - (தமர்) தலைமகனதுவரைவையெதிர்கொள்ளாதவிடத்தும், வேற்றுவரைவுநேரினும் - பிறரதுவரைவுநேருமிடத்தும், காப்புக்கைம்மிகினும் - காவல்கைமிகுந்தவிடத்தும், ஆற்றுறத்தோன்றுமறத்தொடுநிலை-நெறிபடப்புலப்படுமறத்தொடுநிலை. எ - று.

தலைவிபாங்கிக் கறத்தொடு நிற்கும், பாங்கிசெவிலிக் கறத்தொடுநிற்குஞ், செவிலிநற்றாய்க் கறத்தொடுநிற்கு, நற்றாய் தந்தை தன்னையர்க்கறத்தொடு, நிற்குமென்பநெறியுணர்ந்தோரே.

இ - ன். அறத்தொடுநிற்றலினிலக்கணமுணா - ற்று. தலைவி—யுணர்ந்தோர் - தலைவிபாங்கிக்கறத்தொடுநிற்கும் பாங்கிசெவிலிக்கறத்தொடுநிற்குஞ் செவிலிநற்றாய்க்கறத்தொடுநிற்கு நற்றாய்தந்தைதன்னையர்க்கறத்தொடுநிற்குமென்றுசொல்லுவ ரகப்பொருளிலக்கணமுணர்ந்தோர். எ - று. தன்னை, மூத்தோன். (சஅ)

ஒருபுணர்வொழிந்தவற் றொருவழித்தணப்பவும், வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரியவு, மிறைவனைச்செவிலி குறிவயிற்காணவு, மனைவயிற்செறிப்பவும் வருத்தங்கூரின், வினவியகண்ணும் வினவாக்கண்ணு, மனநடைக்கிழத்தியற த்தொடுநிற்கும்.

இ-ன். தலைமகளறத்தொடுநிற்குமிடமுணர் - ற்று. ஒருபுணர்வொழிந்தவற்று - (பாங்கியிற்கூட்டமாகிய) ஒன்றுநீங்கினமூன்றுபுணர்ச்சிக்கண்ணும், ஒருவழித்—வருத்தங்கூரின்-(தலைமக) னொருவழித்தணத்தலானும்வரைவிடைவைத்துப்பொருள்வயிற்பிரிதலானுந் தலைவனைச்செவிலி குறிவயிற்காண்டலானு மிற்செறித்தலானுந் (தனக்கு) வருத்தமிகுமாயின், வினவிய—நிற்கும் - (தன்னையவள்) வினவியவிடத்தும் வினவாவிடத்துந்தலைவி (பாங்கிக்) கறத்தொடு நிற்கும். எ - று. பாங்கி, அதிகாரத்தான்வந்தது. (சக)

முன்னிலைப்புறமொழி முன்னிலைமொழிகளிற், சின்மொழிப்பாங்கி செவிலிக்குணர்த்தும்.

இ-ன். பாங்கியறத்தொடுநிற்குந்திறமுணர் - ற்று. முன்னிலைப்—குணர்த்தும் - முன்னிலைப்புறமொழியு முன்னிலைமொழியுமாகிய விரண்டினுனும் பாங்கிசெவிலிக்கறத்தொடுநிற்கும். எ-று. (ருo)

செவிலிநற்றாய்க்குக் கவலையின்றுணர்த்தும்.

இ - ன். செவிலியறத்தொடுநிற்குந்திறமுணர் - ற்று. செவிலி—றுணர்த்தும் - செவிலி (யறத்தொடுநிற்குங்காலத்து) நற்றாய்க்குவிளங்கவறிவிக்கும். எ - று. (ருக)

நற்றாயறத்தொடு நிற்குங்காலைக், குரவனுந்தன்னையுங் குறிப்பினுணர்ப.

இ - ன். நற்றாயறத்தொடுநிற்குந்திறமுணர் - ற்று. நற்றாயறத்தொடுநிற்குங்காலை - நற்றாயறத்தொடுநிற்குங்காலத்துச்சொல்லாடப்பெறுளாதலின், குரவனுந்தன்னையுங்குறிப்பினுணர்ப - (தலைமக) டந்தையுமுத்தோனு (மவள்)குறிப்பினானேயறிவர். எ - று. (ருஉ)

பாங்கிதலைவியை வினவுஞ்செவிலி, பாங்கியைவினவும் பாங்கிதன்னையு, நற்றாய்தானும் வினவுஞ்செவிலியிற், பொற்றொடிக்கிழத்தியை யுற்றுநோக்கின்.

இ - ன். அறத்தொடுநிற்குங்காலை வினுநிகழுமிடமுணர் - ற்-று. (தலைமகண்மாட்டு வேறுபாடுகண்டுழி) பாங்கிதலைவியைவினவும்- பாங்கிதலைவியைவினுவும், செவிலிபாங்கியைவினவும் - செவிலிபாங்கியைவினுவும், செவிலியிற்பொற்றொடிக்கிழத்தியை யுற்றுநோக்கின் நற்றாய்தானும் பாங்கிதன்னையும் வினவும் - செவிலியைப்போற்றலைமகளையுற்றுப்பார்த்தவிடத்து நற்றாயுஞ் (செவிலியைவினுதலன்றிப்) பாங்கியையும் வினுவும், எ - று. பாங்கிதன்னையு மென்றவெச்சவும்மையாற் செவிலியைவினுதலன்றியென வருவிக்கப்பட்டது. (ருந)

ஆங்குடன்போயுழி யறத்தொடுநிற்ப, பாங்கியுஞ்செவிலியும்பயந்ததாயும்.

இ - ன். புணர்ந்துடன்போயவிடத்தறத்தொடுநிற்றற்குரியாரையுணர்- ற்று. உடன்போயுழியறத்தொடுநிற்ப - புணர்ந்துடன்போயகாலத்தறத்தொடுநிற்பார், பாங்கியுஞ்—தாயும் - தோழியுஞ்செவிலியுநற்றாயும். எ - று. ஆங்கு, அசை. (ருச)

களவின்வழிவந்த கற்பும்பொற்பமை, களவின்வழிவாராக்கற்புமென்றாங்கு, முற்படக்கிளந்த கற்பிருவகைத்தே.

இ - ன். நிறுத்தமுறையானே கற்பின்பாகுபாடுணர் - ற்று. முற்படக்கிளந்தகற்பு - மேற்சொல்லப்பட்டகற்பு, களவின்—மென்று- களவிற்புணர்ச்சிவழியான் வந்தகற்புங் களவின்வழிவாராதகற்புமென, இருவகைத்து - இரண்டுபகுதியினையுடைத்தாம். எ - று. களவின்வழிவந்தகற்பை முற்கூறிய ததனதுசிறப்புநோக்கி யெனக்கொள்க. என்னை, கற்பெனப்படுவதுகளவின்வழித்தே - என்றாராகலின். (ருரு)

குரவரிற்புணர்ச்சி வாயிலிற்கூட்டமென், றிருவகைத்தாகுங் கற்பிற்புணர்ச்சி.

இ - ன். கற்பென்னுங்கைகோளிற்புணர்ச்சி வகையுணர் - ற்று. கற்பிற்புணர்ச்சி - கற்பென்னுங்கைகோளிற்புணர்ச்சி, குரவரிற்—தாகும் - குரவராற்புணரும்புணர்ச்சியும் வாயில்களாற் புணரும்புணர்ச்சியுமென்றிரண்டுபகுதியினையுடைத்தாம் - எ-று. இவற்றுட்குரவராற் புணரும்புணர்ச்சி, வதுவைகூடிப்புணரும்புணர்ச்சி; வாயிலாற்புணரும்புணர்ச்சி, புலவிதீர்த்துப் புணரும்புணர்ச்சி. (ருசு)

அவற்றுட் - களவின்வழிவந்த கற்பிற்புணர்ச்சி, கிளைஞரி னெய்தாக்கேண்மையுமுடைத்தே, யுடன்போய்வரைதலு முண்மையான.

இ - ன். களவின்வழிவந்த கற்பிற்புணர்ச்சிக்கெய்துவதோர்வேறுபாடுணர் - ற்று. அவற்றுள்-மேற்சொல்லப்பட்ட இருவகைக்கற்பினுள்ளும், களவின்—முடைத்து - களவின்வழிவந்த கற்பினுட்புணரும் புணர்ச்சி தலைமகள்குரவராற் பெறப்படாத கோட்பாட்டினையுமுடைத்தாம், உடன்—யான - புணர்ந்துடன்போய்த் தலைமகன் தன்னூரின்கண்ணே வரைந்துகோடலு முண்டாதலால், எ-று. (ருஎ)

மறைவிற்புணர்ச்சியு மன்றற்புணர்ச்சியு, மிறைவற்கெய் தலுண் டிருவகைக்கற்பினும்.

இ - ன். தலைமகற்குக் கற்புக்காலத்து நிகழுமொழுக்கவேறுபாடுணர் - ற்று. இருவகைக்கற்பினும் - மேற்சொல்லப்பட்ட விருவகைக்கற்பின்கண்ணும், இறைவற்குமறைவிற்புணர்ச்சியு மன்றற்புணர்ச்சியுமெய்தலுண்டு - தலைமகற்குக்களவுப்புணர்ச்சியும் வதுவைபபுணர்ச்சியும் பொருந்துதலுண்டு. எ - று. (ருஅ)

காதற்பரத்தையர் காமக்கிழத்தியர், பின்முறைவதுவைப்பெருங்குலக்கிழத்தியென், றன்னவருரிய ரவையிரண்டிற் கும்.

இ - ன். அவ்வொழுக்கமிரண்டிற்கு முரியமகளிரையுணர் - ற்று. காதற்—மிரண்டிற்கும் - காதற்பரத்தையர் காமக்கிழத்தியர் பின்முறைவதுவைப்பெருங்குலக்கிழத்தியாகிய மூவகையோருந்(தலைவ)னல் வகையொழுகுமொழுக்கமிரண்டிற்குமுரியர் எ - று. (ருகூ)

அவருட் - காதற்பரத்தையர் களவிற்குரியர்.

இ - ன். களவொழுக்கத்துக்குரிய மகளிரையுணர் - ற்று. அவருள் - மேற்சொல்லப்பட்டமூவகையோருள், காதற்—குரியர் - காதற்பரத்தையர் களவொழுக்கத்துக்குரியர். எ - று. (௬௦)

ஒழிந்தோர்மன்றற் புணர்ச்சிக்குரியர்.

இ-ன். வதுவைப்புணர்ச்சிக்குரிய மகளிரையுணர் - ற்று. ஒழிந்—குரியர் - காமக்கிழத்தியும் பின்முறைவதுவைப் பெருங்குலக்கிழத்தியுமாகிய விருதிறத்தோரும் வதுவைப்புணர்ச்சிக்குரியர். எ - று. (௬௧)

பரத்தையிற்பிரிந லோதற்குப்பட்ர்த, லிருட்டருகாவ லொடுதூதிற்ககற, லுதவிக்கேகனிநியிற்கிகத்தலென், றுரை பெறுகற்பிற் பிரிவறுவகைத்தே.

இ-ன். கற்பின்கட்பிரியும் பிரிவுவகையுணர் - ற்று. பரத்தை— பிரிவறுவகைத்து - பரத்தையிற்பிரிதலோதற்பிரிதல் காவற்பிரிதல் பகைதணிவினைப்பிரிதல் வேந்தற்குற்றுழிப்பிரிதல் பொருள்வயிற்பிரிதலென்று கற்பின்கட்பிரியும் பிரிவாறுவகையினையுடைத்தாம். எ-று. (சுஉ)

அயன்மனைப்பிரிவயற் சேரியினகற்சி, புறநகர்ப்போக்கி வை புரவலற்குரிய, பரத்தையிற்பிரியும் பருவத்தான.

இ-ன். தலைமகற்குரிய சிலதொழிலுணர் - ற்று. அயன்—பருவத்தான - அயன்மனைப்பிரிவுமயற்சேரிப்பிரிவும் புறநகர்ப்பிரிவுமாகிய விவைமூன்றுந் தலைமகற்குரியவாம் பரத்தையிற் பிரியுங்காலத்து எ-று. (சுங)

கெழீஇயகாமக் கிழத்தியர்பொருட்டாத், தழீஇயவயன் மனைத்தலைவன்பிரியும்.

இ-ன். நிறுத்தமுறையானே யயன்மனைப்பிரிவிற்கேதுவுணர் - ற்று. கெழீஇயகாமக்கிழத்தியர்பொருட்டா - பொருந்தியகாமக்கிழத்தியர்காரணமாக, தலைவன்தழீஇயவயன்மனைப்பிரியும் - தலைமகன்றொடர்ந்தவயன் மனைக்கண்ணேபிரியும். எ-று. (சுச)

பின்னர்வரைந்த பெதும்பையும்பரத்தையு, மின்னியல் விழவுமேதுவாக, வவனயற்சேரியி னகலுமென்ப.

இ-ன். நிறுத்தமுறையானேயயற்சேரிப்பிரிவுக்கேதுவுணர்-ற்று. பின்னர்—மேதுவாக - இரண்டாவது வரைந்துகொள்ளப்பட்ட பெதும்பைப் பருவக்கிழத்தியுங் காதற்பரத்தையும் விழவுங்காரணமாக, அவனயற்சேரியினகலுமென்ப - தலைமகனயற்சேரியின்கண்ணேபிரியுமென்றுசொல்லுவர் புலவர். எ-று. (சுரு)

விருந்தியற்பரத்தையைப் பெருந்தேர்மிசைக்கொண், டிளமரக்காவின் விளையாடற்கும், புனலாடற்கும் புறநகர்க் கேகும்.

இ - ன். நிறுத்தமுறையானே புறநகர்ப்போதற்கேது வுணர் - ற்று. இளமரக்காவின்விளையாடற்கும் புனலாடற்கும் - இளமரக் காவின்கண்ணே விளையாடுதல் காரணமாகவும் புனலாடுதல்காரண மாகவும், விருந்தியற்பரத்தையைப் பெருந்தேர் மிசைக்கொண்டு புற நகர்க்கேகும் - தலைவன் புதியாளாகியபரத்தையைத்தேர்மேலேற்றிக் கொண்டு நகர்ப்புறத்திலேபோம். எ - று. (சுசு)

ஊடலவ்வழிக் கூடுங்கிழத்திக்கு.

இ - ன். தலைமகட்கூடனிகழுமிட முணர் - ற்று. அவ்வழிகிழத் திக்கு ஊடல்கூடும்-அம்மூன்றுபிரிவின்கண்ணுந்தலைமகட்கூடல்பொ ருந்தும். எ - று. (சஎ)

கொளைவல்பாணன் பாடினிகூத்த, ரிளைஞர்கண்டோரிரு வகைப்பாங்கர், பாகன்பாங்கி செவிலி யறிவர், காமக்கிழத்தி காதற்புதல்வன், விருந்தாற்றுமையென்றிவையூடன், மருந் தாய்த்தீர்க்கும்வாயில்களாகும்.

இ - ன். மேற்சொல்லப்பட்ட வாயில்களாவன விவையென்பது ணர் - ற்று. கொளைவல்பாணன் — தாற்றுமையென்றிவை - பாணன் விறலிகூத்தரிளையோர்கண்டோர் பார்ப்பனப்பாங்கன் சூத்திரப்பாங் கன் பாகன்பாங்கிசெவிலியறிவோர் காமக்கிழத்திபுதல்வன்விருந்தா ற்றுமையென்றுசொல்லப்பட்ட விவையனைத்தும், ஊடன்மருந்தா ய்த்தீர்க்கும் வாயில்களாகும் - தலைமகளூடலைமருந்தாய்த்தீர்க்கும் வாயில்களாம். எ - று. இதனுள் உயர்திணையுமஃறிணையும் விரவி யெண்ணி இவையென அஃறிணையாற்றொகைகொடுத்தது. பலவயி னானுமெண்ணுந்திணைவிரவுப்பெயர, ஃறிணைமுடிபினசெய்யுளுள்ளே. எ, வின். (சுஅ)

ஓதற்றொழிலுரித்துயர்மூவர்கரும்.

இ- ன். ஓதற்றொழிற்குரியாரையுணர் - ற்று. ஓதற்றொழிலு யர்மூவர்க்குமுரித்து - ஓதலென்னுந்தொழிலந்தணரரசர் வணிகரெ ன்னுமூவர்க்குமுரித்து. எ - று. ஓதல், வேதமோதல். (சுகூ)

அல்லாக்கல்வியெல்லார்க்குமுரித்தே.

இ-ன். வேதமல்லாதகல்விக்குரியாரையுணர்- ற்று. அல்லாக்— முரித்து - வேதமல்லாதகல்வியாவர்க்கு முரித்து. எ - று. (எ0)

படைக்கலம் பயிறலும் பகடுபிறவூர்தலு, முடைத்தொழிலவர்க்கெனவுரைத்திசினோரே.

இ - ன். நாவினற்கற்குந் தொழிலல்லாத கல்வித்தொழிலுரிமையுணர் - ற்று. படைக்கலம்பயிறலும்பகடுபிறவூர்தலும் - படைக்கலத்தொழில்களைக்கற்றலும் யானையையும் பிறவற்றையுமூர்தலும், அவர்க்கு உடைத்தொழிலெனவுரைத்திசினோர் - அம்மூவர்க்கு முடைமையாகிய தொழிலெனச்சொன்னார்புலவர். எ - று. பிறவென்றதனாற்றேருங்குதிரையு முதலாயினகொள்ளப்படும். பகடுபிற, உம்மைத்தொகை. (எக)

அறப்புறங்காவ னாடுகாவலெனச், சிறப்புறுகாவற் றிறமிருவகைத்தே.

இ - ன். காவற்றொழிலின் பாகுபாடுணர் - ற்று. அறப்புறங்காவனாடு காவலென விருவகைத்து - அறப்புறங்காவலுநாடுகாவலுமென விருகூற்றதாம், சிறப்புறுகாவற்றிறம் - மேம்பாடுற்ற காவற்றொழிலின்பாகுபாடு. (எஉ)

அவற்றுள் - அறப்புறங்காவலனைவர்க் குமுரித்தே.

இ - ன். நிறுத்தமுறையானே அறப்புறங்காவற்றொழிலுரிமையுணர் - ற்று. அவற்றுள் - மேற்சொல்லப்பட்ட விரண்டனுள்ளும், அறப்—முரித்து-அறப்புறங்காவனால்வர்க்குமுரித்து. எ - று. (எங)

மற்றைக்காவல் கொற்றவர்க்குரித்தே.

இ - ன். நாடுகாவற் றொழிலுரிமையுணர் - ற்று. மற்றை—குரித்து - நாடுகாவற் றொழிலரசர்க் குரித்து. எ - று. (எச)

வேதமாந்தர் வேந்தரென்றிருவர்க்குந், தூதுபோதற் றொழிலுரித்தாகும்.

இ - ன். தூதுபோதற்றொழிலுரிமையுணர் - ற்று. வேதமாந்தர்—லுரித்தாகும் - பார்ப்பாரும் வேந்தருமென்னுமிருவர்க்கு முரித்தாந் தூதுபோதற்றொழில். எ - று. உ - ம். பாரதத்திலே, உலூகன் றூதுபெருமாள் தூதுகளாற்காண்க. (எரு)

சிறப்புப்பெயர்பெறிற் செப்பியவிரண்டு, முறற்குரிமரபின வொழிந் தோரிருவர்க்கும்.

இ - ன். நாடுகாவற்றொழிலுரிமைக்குந் தூதுபோதற்றொழிலுரிமைக்கு முரியதோர்வேறுபாடுணர் - ற்று. சிறப்புப்பெயர்பெறின்- அரசனாற்சிறப்புப்பெயர் பெற்றாராயின், ஒழிந்தோரிருவர்க்கும்-வணிகருஞ்சூத்திருமென்னு மிருவர்க்கும், செப்பியவிரண்டு முறற்குரிமரபின - முற்கூறியவிரண்டு தொழிலும்பொருந்துதற் குரியமரபினவாம். எ - று. உரிமரபு, தொகுத்தல்விகாரம். (எசு)

உதவியந்தண ரொழிந்தோர்க்குரித்தே.

இ - ன். உதவித்தொழிலுரிமையுணர் - ற்று. உதவி - வேந்தர்க்குற்றுழியாகியதொழில், அந்தணரொழிந்தோர்க்குரித்து - அந்தணரொழிந்தமூவர்க்கு முரித்து. எ - று. (எஎ)

பரத்தையிற் பிரிவும்பொருள்வயிற்பிரிவு, முரைத்தநால்வர்க்குமுரியவாகும்.

இ - ன். நால்வர்க்கும் பொதுவாகிய தொழிலிவையென்பதுணர்- ற் - று. பரத்தை—வாகும் - பரத்தையிற்பிரிவும் பொருள்வயிற்பிரிவுமாகியவிரண்டு மேற்சொல்லப்பட்டநால்வர்க்குமுரியவாம். எ-று.

இழிந்தோர்தமக்கு மிவற்றுண்மேம்பட்டவை, யொழிந்தனவாமென மொழிந்தனர்புலவர்.

இ - ன். நிலமக்களுட்டலைமக்களுக்குரிய தொழிலுணர் - ற்று. இவற்றுண்மேம்பட்டவையொழிந்தன - இவ்வகைத்தொழில்களுண் மேம்பட்டனவாகிய வோதலுநாடுகாவலுந்தூதுபோதலுமாகிய மூன்றுதொழிலுமொழித்தல்லாதனவெல்லாம், இழிந்தோர்தமக்கும் ஆமெனமொழிந்தனர் புலவர் - இழிந்தோராகிய நிலமக்களுட்டலைமக்கட்கு முரியவாமெனச்சொன்னாரறிவோர். எ - று. (எகூ)

கல்விமுதலாவெல்லாவினைக்குஞ், சொல்லியகறலுஞ்சொல்லாதகறலு, முரியன்கிழவோன்பெருமனைக்கிழத்திக்கு.

இ - ன். பிரியுந்தலைமகற்குரியதோரிலக்கணமுணர் - ற்று. கல்விமுதலாவெல்லாவினைக்கும் - கல்விமுதலாகியவைந்துதொழிலுக்கும், பெருமனைக்கிழத்திக்குச் சொல்லியகறலுஞ்சொல்லாதகறலுமுரியன்கிழவோன் - தலைமகட்குச்சொல்லிப் பிரிதலுஞ்சொல்லாதுபிரிதலு முரியன் றலைமகன். எ - று. (அ0)

சொல்லாதகலினுஞ்சொல்லும்பாங்கிக்கு,

இ - ன். இதுவுமது. சொல்லாதகலினும் - (தலைமகன்றலைமகட்குச்) சொல்லாதுபிரியுமாயினும், பாங்கிக்குச்சொல்லும் - தோழிக்குச்சொல்லியேபிரியும். எ - று. (அக)

குறிப்பினுணர்த்தும் பெறற்கருங்கிழத்திக்கு.

இ - ன். இதுவுமது. குறிப்பி—கிழத்திக்கு - (தலைவன்சொல்லாதுபிரியுமாயினும்) குறிப்பினுணர்த்துந்தலைவிக்கு. எ - று. (அஉ)

காலிற்சேறலுங்கலத்திற்சேறலு, மூர்தியிற்சேறலு நீதியாகும்.

இ - ன். பிரியுங்காலத்துப்பொதுவாகியதொழிலுணர் - ற்று. காலிற்சே—யாகும் - காலிற்செல்லலுங்கலத்திற்செல்லலுமூர்தியிற்செல்லலுமாகிய மூன்று (மெல்லாப்பிரிவின்கண்ணு) மியல்பாம். எ - று.

புலத்திற்சிறந்தபுரிநூன்முதல்வர்க்குக், கலத்திற்சேறல் கடனன்றென்ப.

இ - ன். அந்தணர்க்காகாததொழிலுணர் - ற்று. கலத்திற்சேறல் - (காலிற்சேறன்முதலாகிய மூன்றினுள்ளுங்) கலத்திற்சேறலாகியதொழில், புலத்திற்சிறந்தபுரிநூன்முதல்வர்க்குக்கடனன்றென்ப - கல்வியினுன்மிக்கவந்தணர்க்கு முறையன்றென்றுசொல்லுவர் புலவர். எ - று. (அச)

வலனுயர்சிறப்பின்மற்றைமூவர்க்குங், குலமடமாதரொடு கலமிசைச்சேறலும்,பாசறைச்சேறலும்பழுதெனமொழிப.

இ - ன். அரசர்முதலாகியமூவர்க்குமாகாததொழிலுணர் - ற்று. குலமடமாதரொடுகலமிசைச்சேறலும் பாசறைச்சேறலும் - குலமடமாதரொடு கூடக்கலமிசைச்சேறலும் பாசறைச்சேறலும், வலனுயர்சிறப்பின் மற்றைமூவர்க்கும்பழுதெனமொழிப - வெற்றியுயர்ந்தசிறப்பினையுடைய மற்றைமூவர்க்குங் குற்றமென்றுசொல்லுவர் கற்றுவல்லோர். எ - று. குலமடமாதரொடுசெல்லாரெனவே பரத்தையரோடுசெல்வாரெனவறிக. துயிலின்றியாநீத்ததொழுவையும்புனலாடி, மயிலியலார்மருவுண்டு மறந்தமைகுவான்மன்னோ என்பதனாற்பரத்தையரோடு பாசறைக்கட்சென்றவாறறிக. ஏனையதுவந்துழிக்காண்க. (அரு)

ஓதன்முதலாவோதியவைந்தினும்,பிரிவோனழுங்கற்குமு ரியனாகும்.

இ - ன். தலைமகற்குப்பிரிவிடத்துரியதோர் வேறுபாடுணர்- ற்று. ஓதன்—ஞகும் - ஓதன்முதலாகச்சொல்லப்பட்ட வைந்தின்கண்ணும் - பிரியுந்தலைமகன்போதற்கேயன்றிப் போகாதழுங்கற்குமுரியன். எ-று.

இல்லத்தழுங்கலுமிடைச்சுரத்தழுங்கலு, மொல்லுமவ ற்கெனவுரைத்திசினேரே.

இ - ன். இதுவுமது. இல்லத்—வுரைத்திசினோர் - இல்லின்கண் ணே செலவழுங்குதலு மிடைச்சுரத்தின்கண்ணே செலவழுங்குத லும் (பிரிடக்கருதிய) வத்தலைமகனுக்குப்பொருந்துமெனக்கூறிஞர்பு லவர். எ - று. உ - ம். புணரிற்புணராதுபொருளேபொருள்வயிற், பிரியிற்புணராதுபுணர்வேயாயிடைச், செல்லினுஞ்செல்லாயாயினு, நல்லதற்குரியைவாழியநெஞ்சே, எனவும் பிறவும், வரும். (அஎ)

தலைவிதன்னையுந்தன்மனந்தன்னையு, மலமரலொழித்தற் கழுங்குவதல்லது, செல்வத்தோன்றல் செல்லானல்லன்.

இ - ன். தலைமகன்செலவழுங்குதற் கேதுவுமிலக்கணமு முணர்- ற்று. தலைவி—னல்லன் - (இல்லகத்துத்) தலைமகளையுந் தன்னெஞ்சி னையுந்தேற்றுதல்காரணமாகவு (மிடைச்சுரத்திற்) றன்னெஞ்சைத் தேற்றுதல்காரணமாகவு மழுங்குமாத்திரமல்லது தலைமகன்போகா னல்லன். எ - று. (அஅ)

அவற்றுள் - ஓதற்பிரிவுடைத்தொருமூன்றியாண்டே.

இ - ன். ஓதற்பிரிதற்கியாண்டுவரையறை யுணர் - ற்று. அவற் றுள்—மேற்சொல்லப்பட்ட பிரிவுகளுள்,ஓதற்பிரிவு ஒருமூன்றியாண் டுடைத்து - ஓதற்குப்பிரியும்பிரிவு மூன்றியாண்டெல்லையினையுடைத்து எ - று. (அகூ)

தூதிற்பிரிவுந் துணைவயிற்பிரிவும், பொருள்வயிற்பிரிவு மோரியாண்டுடைய.

இ - ன். தூதிற்பிரிவுமுதலாய மூன்றுபிரிவுக்கும் யாண்டுவரைய றையுணர்-ற்று. தூதிற்—டைய - தூதுகாரணமாகப்பிரியும்பிரிவுந் துணைகாரணமாகப்பிரியும்பிரிவும் பொருள்காரணமாகப்பிரியும்பிரிவு மோரியாண்டெல்லையினையுடைய. எ - று. காட்டிடையிட்டு நா ட்டிடையிட்டும் பிரியப்படாமையின் பரத்தையிற்பிரிவுக்குங் காவற் பிரிவுக்கும் யாண்டுவரையறுத்திலரெனக்கொளக. (கூ0)

பூத்தகாலைப்புனையிழைமனைவியை, நீராடியபின்னீராறு நாளுங், கருவயிற்றுறூஉங்காலமாதலிற், பிரியப்பெறாஅன் பரத்தையிற்பிரிவோன்.

இ - ன், பரத்தையிற் பிரிந்ததலைமகற்குரியதோ ரிலக்கணமுணர்-ற்று. நீராடிய—மாதலிற் - நீராடியபின் பன்னிருநாளுங்கருப்படுங் காலமாதலின், பரத்தையிற்பிரிவோன்புனையிழைமனைவியைப்பூத்தகாலைப்பிரியப்பெறான்-பரத்தையிற் பிரிந்ததலைமகன்றலைமகளைப்பூப்புநிகழ்ந்த காலத்துப் பிரியப்பெறான். (கக)

ஓதற்ககன்றோனொழிந்திடை-மீண்டு, போதற்கியையவும் புலம்பவும்பெறாஅன்.

இ - ன். ஓதற்குப்பிரிந்த தலைமகற்காவதோரிலக்கணமுணர் - ற்று. ஓதற் — பெறான் - ஓதற்குப்பிரிந்ததலைமகனவ்வோதலையொழிந்திடையிலேமீண்டுவருதற்குடம்படவுமவ்விடத்துத்தலைமகளை நினைந்துபுலம்பவும்பெறான். எ - று. (கஉ)

தூதுந்துணையுமேதுவாகச், சென்றோனவ்வினை நின்றுநீட்டித்துழிப், புலந்துபாசறைப்புலம்பவும்பெறுமே.

இ - ன். தூதுந்துணையுங் காரணமாகப்பிரிந்த தலைமகற்கெய்துவதோரிலக்கணமுணர் - ற்று. தூதுந்துணையு மேதுவாகச்சென்றோன்-தூதுகாரணமாகவுந்துணைகாரணமாகவும் பிரிந்ததலைமகன், அவ்வினை நின்று நீட்டித்துழி -அத்தொழில்களினின்றவைகடமக்குரியவோரியாண்டின்கண் முடியாது கால நீட்டித்தவிடத்து, புலந்து—பெறும் - பாசறைக்கண்ணேயிருந்து தலைமகளை நினைந்து வெறுத்துப் புலம்பவும்பெறும். எ - று. உம்மையாற்புலம்பலொருதலையன்றெனக் கொள்க. (கந)

பூக்தமைசேடியிற் புரவலற்குணர்த்தலு, நீத்தமைபொருஅதுநின்றுகிழவோனைப், பழிக்குங்காமக்கிழத்தியைக்கழறலுங், கிழவோற்கழறலும் வழிமுறைமனைவியைக், கொழுநனொடுவந்தெதிர் கோடலுமவனொடு, பாங்கொடுபரத்தையைப்பழித்தலுநீங்கிப், புறங்கர்க்கணவனொடு போகிச்செறிமலர்ச், சோலையுங்காவு மாலையுங்கழனியு, மாலைவெள்ளருவியுமலையுங்கானமுங், கண்டுவிளையாடலுங் கடும்புனலியாறும், வண்டிமிர்கமலவாவியுங்குளனு, மாடிவிளையாடலுங் கூடுங்கிழத்திக்கு.

இ - ன். தலைமகட்குக் கற்புக்காலத்துக்குரிய வொழுகலாறெல்லாந்தொகுத்துணர் - ற்று. பூத்தமை—மாடிவிளையாடலும் - பூத்தமைசேடியிற்புரவலற்குரைத்தன்முதலாகக் குளனாடலீறாகச்சொல்லப்பட்டன வெல்லாம்,கிழத்திக்கு கூடும்-தலைமகட்குக் (கற்புக்காலத்துப்) பொருந்தும். எ - று. கற்பு, அதிகாரத்தான்வந்தது. (௬௪)

வாயில்வேண்டலும்வாயினேர்வித்தலுஞ், சேயிழையூடறீர்த்தலும்போயுழி, யவணலந்தொலைவுகண் டழுங்கலுமவன்வயிற், செல்லவிரும்பலுஞ் சென்றவற்குணர்த்தலுஞ், சொல்லியகூற்றெனச் சொல்லுங்கிழவோன்,வரவுமீண்டுவந்தரிவைக்குணர்த்தலு, மணிநலம்பெற்றமை யறியான்போன்றவட், பணிவொடுவினாதலும் பாணற்குரிய.

இ - ன். வாயில்களுட்பாணற்குரியனவெல்லாந் தொகுத்துணர் - ற்று. வாயில்வேண்—பாணற்குரிய - வாயில்வேண்டன்முதலாகச் சொல்லப்பட்டனவெல்லாம் பாணற்குரியனவாம். எ - று. (௬௫)

செலவிற்றேற்றலும் புலவியிற்றணித்தலும், வாயில்வேண்டலும் வாயினேர்வித்தலுந், தெரியிழைவிறலிக்குரியவாகும்.

இ - ன். விறலிக்குரியனவெல்லாந் தொகுத்துணர் - ற்று. செலவிற்—வாகும் - செலவிற்றேற்றன் முதலாகச்சொல்லப்பட்டன வெல்லாம் விறலிக்குரியனவாம். எ - று. (௬௬)

செல்வம்வாழ்த்தலு நல்லறிவுகொளுத்தலுங், கலனணிபுணர்த்தலுங்காமநுகர்புணர்த்தலும்,புலவிமுதிர்காலைப் புலன்கொளவேதுவிற்,றேற்றலுஞ்சேய்மைசெப்பலும்பாசறை, மேற்சென்றுரைத்தலு மீண்டுவரவுரைத்தலுங், கூற்றருமாபிற்கூத்தற்குரிய.

இ - ன். கூத்தற்குரியனவெல்லாந் தொகுத்துணர் - ற்று. செல்வம்—குரிய - செல்வம்வாழ்த்தன் முதலாகச் சொல்லப்பட்டனவெல்லாங் கூத்தற்குரியனவாம். எ - று. (௬௭)

மடந்தையைவாயில் வேண்டலும்வாயி, லுடன்படுத்தலு நவளூடறீர்த்தலுங், கொற்றவற்குணர்த்தலுங் குற்றேவல்செய்தலுஞ், சென்றுமுன்வரவு செப்பலுமவன்பிற, மொன்

றிநின்றுரைத்தலும் வினைமுடிபுணர்த்தலும், வழியியல்புகூறலும் வழியிடைக்கண்டன, மொழிதலுமிளையோர் தொழிலெனற்குரிய.

இ-ன். இளையோர்க்குரியனவெல்லாந் தொகுத்துணர் - ற்று. மடந்தையை—குரிய - மடந்தையைவாயில்வேண்டன் முதலாகச் சொல்லப்பட்டனவெல்லா மிளையோர்க்குரியனவாம். எ-று. (கூஅ)

தீதுடைப்புலவி தீர்த்தலுமவன்வரல், காதலிக்குணர்த்தலுங் கண்டோர்க்குரிய.

இ-ன். கண்டோர்க்குரியனவெல்லாந் தொகுத்துணர் - ற்-று. தீதுடைப்—குரிய - தீதுடைப்புலவிதீர்த்தன்முதலாகச்சொல்லப்பட்டனவெல்லாங் கண்டோர்க்குரியனவாம். எ-று. (கூகூ)

இளமையும்யாக்கையும் வளமையுமேனவு, நிலையாத்தன்மை நிலையெடுத்துரைத்தலுஞ், செலவழுங்குவித்தலுஞ் செலவுடன்படுத்தலும், பிறவுமெல்லாமறையோர்க்குரிய.

இ-ன். இருவகைப்பாங்கரிற் பார்ப்பனப்பாங்கற்குரியனவெல்லாந்தொகுத்துணர் - ற்று. இளமையும்—குரிய - இளமைநிலையாமையுரைத்தன்முதலாகச்சொல்லப்பட்டனவெல்லாம் பார்ப்பனப்பாங்கற்குரியனவாம். எ-று. பிறவுமென்றதனால் வாயில்வேண்டன் முதலாயினவுங்கொள்க. (கoo)

நன்மையினிறுத்தலுந் தீமையினகற்றலுஞ், சொன்னவை பிறவுஞ் சூத்திரற்குரிய.

இ-ன். சூத்திரப்பாங்கற்குரியனவெல்லாந் தொகுத்துணர்-ற்று. நன்மை—குரிய - நன்மையினிறுத்தன்முதலாகச் சொல்லப்பட்டனவெல்லாஞ்சூத்திரப்பாங்கற்குரியனவாம். எ-று. சொன்னவையும் பிறவுமெனக்கூறுக. பிறவுமென்றதனால் வாயில்வேண்டன் முதலாயினவுங்கொள்க. (கoக)

சேயிழைக்கிழத்தியை வாயில்வேண்டலும், வாயினேர்வித்தலும் வயங்குதுனிதீர்த்தலும், வினைமுடித்ததற்பின் வியன்பதிசேய்த்தென, வினைவோற்றேற்றலும் பாகற்கியல்பே.

இ - ன். பாகற்குரியனவெல்லாந் தொகுத்துணர் - ற்று. சேயி ழைக்—இயல்பு - தலைமகளைவாயில்வேண்டன் முதலாகச்சொல்லப்ப ட்டனவெல்லாம் பாகற்கியல்பாம். எ - று. (க0உ)

பிரிவுழிவிலக்கலும் பிரிவுடன்படுத்தலும், பிரிந்துழித்தே ற்றலு மிருந்துடனிரங்கலும், பிறவுமுரிய விறைவளைப்பாங் கிக்கு.

இ - ன். பாங்கிக்குரியனவெல்லாந் தொகுத்துணர் - ற்று. பிரிவு ழி—பாங்கிக்கு - பிரிவுழிவிலக்கன் முதலாகச்சொல்லப்பட்டனவெல் லாம் பாங்கிக்குரியனவாம். எ - று. பிறவுமென்றதனால் வாயில் வேண்டன் முதலாயினவுங்கொள்க. (க0ந)

முன்வரைநீதியுமுலகியன் முறைமையும், பின்வரும்பெ ற்றியும் பிறவுமெல்லாந், தெற்றெனக்கூறல் செவிலித்தாய்க் கு, முற்றவறிவர்க்குமுரியவாகும்.

இ - ன். செவிலிக்குமறிவர்க்கு முரியனவெல்லாந்தொகுத்துண ர் - ற்று. முன்வரை—வாகும் - முன்வரைநீதிமுதலாகச்சொல்லப் பட்டனவும் பிறவுமெல்லாந்தெளியச்சொல்லுதல் செவிலித்தாய்க்கும் பொருந்திய வறிவர்க்குமுரியனவாம். எ - று. பிற, வாயில்வேண் டன்முதலாயின. (க0ச)

குடிப்பிறந்தோரை வடுப்படுத்துரைத்தலு, மனைவியைப் பழித்தலும் வாட்டாஞூட்லுட்,டலைவற்குகழறலு மனைவிக்கமை ந்த, வொழுக்கமுங் காமக்கிழத்தியர்க்குரிய.

இ - ன். காமக்கிழத்தியர்க்குரியன வெல்லாந்தொகுத்துணர் - ற்று. குடிப்பிறந்—குரிய - குடிப்பிறந்தோரைவடுப்படுத்துரைத்த ன் முதலாகச்சொல்லப்பட்டனவெல்லாங் காமக்கிழத்தியர்க்குரியன வாம். எ - று. (க0ரு)

கிழவோன்றன்னையுங் கிழத்திதன்னையு, மிகழ்தலுந்தம் மைப் புகழ்தலுமிகழ்பொருள், காத்தலும்பரத்தையர் கட னெனமொழிப.

இ - ன். பரத்தையர்க்குரியனவெல்லாந் தொகுத்துணர் - ற்று. கிழவோன்—மொழிப - தலைமகனையுந்தலைமகளையு மிகழ்தன்முதலா கச்சொல்லப்பட்டனவெல்லாம் பரத்தையர்க்கு முறைமையாமென்று சொல்லுவர் புலவர். எ - று. (க0௬)

பரத்தையர்காதற் பரத்தையைப்புகழ்தலுந், தம்மையிகழ் தலுந் தம்முளுங்கூறுப.

இ - ன். பரத்தையர்க்குரியதோர் வேறுபாடுணர் - ற்று. பரத்தையர்—கூறுப - அப்பரத்தையர் காதற்பரத்தையைப் புகழ்தலுந் தங்களையிகழ்தலுமாகிய விவற்றைத் தம்முளேயுங் கூறுவர். எ-று.

இளையர்கிழவோற் கிரவும்பகலுங், களைதலில்லாக் கவசம்போல்வார்.

இ - ன். இளையோரிலக்கணமுணர் - ற்று. இளையர்—போல்வார் - இளையராவார் தலைமகற்கிரவும்பகலு நீங்காக்கவசம்போல்வார். எ - று. (௧0அ)

இருவகைப்பாங்கரு மொருபெருங்குரிசிற், கின்னுயிர்த் துணையா விருபெருங்குரவருந், தன்னையளித்த தகைமை யோரே.

இ - ன். பாங்கரிலக்கணமுணர் - ற்று. இருவகைப்பாங்கரும் - பார்ப்பனப்பாங்கனுஞ்சூத்திரப்பாங்கனு மென்னுமிருவரும், ஒருபெருங்குரிசிற்கின்னுயிர்த்துணையா - தலைமகற்குரிய வுயிர்த்துணையாக, இருபெருங்குரவருந்தன்னையளித்ததகைமையோர்-அவன்றாயுந்தந்தையுமவனையடைக்கலமாகக்கொடுக்கப்பட்டதன்மையர். எ - று. (௧0௯)

தோழிசெவிலி மகளாய்ச்சூழலோ, டுசாத்துணையாகி யசாத்தணிவித்தற், குரியகாதன் மருவியதுணையே.

இ - ன். தோழியிலக்கணமுணர் - ற்று. தோழிசெவிலிமகளாய் - தோழியென்பவள் செவிலிக்குமகளாய், சூழலோடுசாத்துணையாகி - (நன்மையுந்தீமையு) மாராய்தலுடனே தலைமகளுக்குசாத்துணையாய், அசாத்தணிவித்தற்குரிய காதன்மருவியதுணை - அவளது வருத்தந்தீர்த்தற்குரிய வன்புபொருந்தியதுணையாம். எ - று. (௧௧0)

செவிலிநற்றாய் தோழியாகி, யவலநீக்கி யறிவுமாசாரமுங், கொளுத்தித்தலைவியை வளர்த்ததாயே.

இ - ன். செவிலியிலக்கணமுணர் - ற்று. செவிலிநற்றாய்தோழியாகி - செவிலியென்பாடலைமகளுடைய நற்றாய்தோழியாகி, அவலநீக்கி - (தலைமகட்குவருந்) துக்கங்களைந்து, அறிவுமாசாரமுங்கொளுத்தித்தலைவியை வளர்த்ததாய் - நல்லறிவுமாசாரமுங்கொளுத்தி யத்தலைமகளைவளர்த்ததாயாம். எ - று. (௧௧௧)

அறிவர்கிழவோன் கிழத்தியென்றிருவர்க்கு, முறுதிமொழிந்த வுயர்பெருங்குரவர்.

இ-ன். அறிவோரிலக்கணமுணர் - ற்று. அறிவர்—குரவர்-அறிவராவார்தலைமகற்குந் தலைமகட்கு முறுதியைப் பயப்பிக்குமுபதேசங்களைச்சொல்லு மேம்பட்டகுருக்கள். எ - று. (கக௨)

ஒருவன்றனக்கே யுரிமைபூண்டு, வருகுலப்பரத்தையர் மகளிராகிக், காமக்குவரைந்தவர் காமக்கிழத்தியர்.

இ-ன். காமக்கிழத்தியரிலக்கணமுணர் - ற்று. காமக்கிழத்தியர்-காமக்கிழத்தியரென்பார், ஒருவன்—வரைந்தவர்-(சேரிப்பரத்தையர் போலப்பலர்க்குமுரியரன்றி) ஒருவற்கேயுரிமைபூண்டு வருங்குலப்பரத்தையருடைய மகளிராய்க்காமங்காரணமாகத் தலைமகனால் வரைந்துகொள்ளப்பட்டார். எ - று. (கக௩)

யாரையுநயவா வியல்பிற்சிறந்த, சேரிப்பரத்தையர் மகளிராகிக், காதலிற்புணர்வோர் காதற்பரத்தையர்.

இ-ன். காதற்பரத்தையரிலக்கணமுணர் - ற்று. காதற்பரத்தையர் - காதற்பரத்தையரென்போர், யாரையு—புணர்வோர் - யாரையும்விரும்பாதவியல்பினான் மிக்கசேரிப்பரத்தையர் மகளிராகித்தம்மன்பிற் றலைமகனோடுங்கூடுவார். (கக௪)

அவருளும் வரைதற்குரியோருளரே.

இ-ன். காதற்பரத்தையர்க்குரியதோர் சிறப்புவிதியுணர் - ற்று. அவருளுமுளர்வரைதற்குரியோர் - அக்காதற்பரத்தையருள்ளுந் தலைமகனால் வரைந்துகோடற்குரியருளர். எ - று. (கக௫)

மக்களொடுமகிழ்ந்து மனையறங்காத்து, மிக்ககாமத்துவேட்கை தீர்ந்துழித், தலைவனுந்தலைவியுந் தம்பதிநீங்கித், தொலைவில்சுற்றமொடு துறவறங்காப்ப.

இ-ன். தலைமகனுந்தலைமகளுந் துறவறங்காக்குமிடமுணர்-ற்று. மக்களொடு—காப்ப - மக்களொடுகூடிமகிழ்ந்தில்லறத்தினைக் காத்துத்தமக்குப் பெருகியகாமவேட்கையெல்லாந் தீர்ந்தவிடத்துத் தலைமகனுந்தலைமகளுந் தம்மூர்நீங்கி (வனத்தின்கட்சென்) றெல்லையில்லாச்சுற்றத்தாரோடுந் துறவறங்காப்பர். எ - று. (கக௬)

முதலாவது அகத்திணையியல் முற்றிற்று.

இரண்டாவது களவியல்.

உளமலிகாதற் களவெனப்படுவ, தொருநான்குவேதத்திருநான்குமன்றலுள், யாழோர்கூட்டத் தியல்பினதென்ப.

இவ்வோத்தென்னபெயர்த்தோவெனிற் களவுணர்த்தலிற் களவியலென்னும் பெயர்த்து. இவ்வோத்தினுளிச்சூத்திரமென்னுதலிற்றோவெனிற்களவுகற்பென்னுங் கைகோளிரண்டினுள்ளுங் களவென்னுங்கைகோளதிலக்கணமுணர் - ற்று. உளமலிகாதற்களவெனப்படுவது - உள்ளமலிதற்குக்காரணமாகிய வன்பினையுடைய களவென்று சொல்லப்படுவது, ஒருநான்குவேதத்திருநான்குமன்றலுள் - நான்காகியவேதத்தினுட் சொல்லப்பட்ட வெட்டாகியமணத்தினுள், யாழோர்கூட்டத்தியல்பினதென்ப - காந்தருவமணத்தோடொத்த வியல்பினையுடையதென்று சொல்லுவர்புலவர். எ - று. வேதநான்காவன, இருக்கு முதலாயின. மன்றலெட்டாவன, பிரம முதலாயின. இவற்றுட், பிரமமாவது, பிரமசாரியாய்த் தக்கானுமாயிருப்பானுக்குக் கன்னியையலங்கரித்துத் தீமுன்னர்க்கொடுத்தல். பிரசாபத்தியமாவது, குரவர்வேண்டக் குரவர்மருதேயுடன்பட்டுக் கன்னியையலங்கரித்துத் தீமுன்னர்க்கொடுத்தல். ஆரிடமாவது, ஒன்றேனு மிரண்டேனு மாவு மாவேறும்வாங்கிக்கொண்டு கன்னியையலங்கரித்துத் தீமுன்னர்க்கொடுத்தல். தெய்வமாவது, வேள்வியாசாரியனுக்குக் கன்னியையலங்கரித்துத் தீமுன்னர்க்கொடுத்தல். காந்தருவமாவது, கொடுப்போருங்கேட்போருமின்றித் தலைமகளுந்தலைமகனுந்தனியிடத்தெதிர்ப்பட்டுத்தாமேகூடுதல். ஆசுரமாவது, தலைமகட்குப்பொன்பூட்டிச்சுற்றத்தார்க்கும் பொன்வேண்டுவனகொடுத்துக்கொள்வது. இராக்கதமாவது, தலைமகடன்னினுந்தமரினும் பெறாது வலிதிற்கொள்வது. பைசாசமாவது, துயின்றோண்மாட்டுங் களித்தோண்மாட்டுஞ்சென்றுசேர்வது. இவற்றுள் - ஆசுரமுதலாகிய மூன்றுங் கைக்கிளைக்குரியவாம். பிரமமுதலாகியநான்கும் பெருந்திணைக்குரியவாம். (௧)

காட்சியையந் துணிவுகுறிப்பறிவென, மாட்சிநான்குவகைத்தே கைக்கிளை.

இ - ன். மேற்சொல்லப்பட்ட எழுதிணையினுள்ளுங்கைக்கிளைத் திணையின்பாகுபாடுணர் - ற்று. கைக்கிளை - கைக்கிளையாவது, காட்சி—வகைத்து - காட்சியையந்துணிவுகுறிப்பறிதலெனநான்குவகையினையுடைத்தாம். எ - று. (௨)

புணர்ப்பதும்பிரிப்பது மாகியபால்களுட், புணர்க்கும்பாலிற் பொருவிறந்தொத்த, கறைவேற்காளையுங் கன்னியுங்காண்ப, விறையோனுயரினுங் குறைவின்றென்மனார்.

இ - ன். நிறுத்தமுறையானே காட்சியாமாறுணர் - ற்று. புணர்ப்பதும்பிரிப்பதுமாகிய பால்களுள் - (முற்பிறப்பினுங்காமநுகர்ந்தாரிருவரையுமறுபிறப்பினும்) கூட்டுவதும் பிரிப்பதுமாகியநல்வினையுந் தீவினையுமென்னுமிரண்டினுள், புணர்க்கும்பாலுள் - நல்வினையீட்டத்தாலே, பொருவிறந்தொத்த கறைவேற்காளையுங்கன்னியும்-(குலத்தானுஞ்செல்வத்தானுமறிவானும் பிறவாற்றானுந்) தம்மோடொத்தாரு மிக்காருமின்றித்தம்மிற்றாமேயொத்த தலைமகனுந்தலைமகளும், காண்ப - (தனியிடத்) தெதிர்ப்படுவர், இறையோனுயரினுங்குறைவின்றென்மனார் - (அவருட்) டலைமகனவற்றா னுயர்ந்தானாயினுங் குற்றமின்றென்று சொல்லுவர்புலவர். எ - று. எனவேதலைமகளுயர்தல் குற்றமென்பதாம். ஈண்டுக்காளையென்பது, பருவங்குறித்து வந்ததோராகுபெயர். உ - ம். வாணன்கோவையிற்காட்சிக்குரிய, புயலேசுமந்தென்னுஞ்செய்யுளைக்காண்க. (௩)

மடமானோக்கி வடிவுங்கண்ட, விடமுஞ்சிறந்துழி யெய்துவதையம்.

இ - ன். நிறுத்தமுறையானே யையநிகழுமிடமுணர் - ற்று. மடமா—சிறந்துழி - தலைமகள்வடிவு மவளைத்தான்கண்டவிடமுஞ்சிறந்தகாலத்து, ஐயமெய்துவது - தலைமகன்பாலையநிகழும். எ - று. எனவே யவைசிறப்புடைய வல்லாதகாலத்தையநிகழாதென்பதாம். உ - ம். ஷை கோவையிலையத்துக்குரிய, பாரணங்கோவென்னுஞ்செய்யுளைக்காண்க. (௪)

எழுதியவல்லியுந்தொழில் புனைகலனும், வாடியமலருங் கூடியவண்டு, நடையிலடியும்புடைபெயர்கண்ணு, மச்சமும்பிறவு மவன்பாணிகழுங், கச்சமிலையங் கடிவனவாகும்.

இ - ன். நிறுத்தமுறையானே துணிவுநிகழ்தற்கேதுவாவன விவையென்பதுணர் - ற்று. எழுதிய—வாகும் - எழுதியவல்லியுந்தொழில்புனைந்த பூணும் வாடியபூவுங் கூடியவண்டு நடைபயிலுமடியும் புடைபெயருங்கண்ணு மச்சமுமிவைபோல்வன பிறவுமத்தலைமகன் - மாட்டுநிகழாநின்ற வெண்ணில்லாவையங்களைப் போக்குவனவாம். எ- று. பிற, நிழலீடும்வியர்த்தலுங் கூறைமாசுணலு முதலாயின. உ - ம். ஷை கோவையில் - துணிவுக்குரிய, மையார்குவளையென்னுஞ் செய்யுளைக்காண்க. (௫)

அரிவைநாட்டமகத்துநிகழ்வேட்கை, தெரியவுணர்த்துங் குறிசிற்கென்ப.

இ - ன். நிறுத்தமுறையானே குறிப்பறிதற்கேதுவுணர் - ற்று. அரிவையகத்துநிகழ்வேட்கை - தலைமகளுள்ளத்து நிகழாநின்றவேட்கையை, குரிசிற்குத்தெரிவுணர்த்தும் - தலைமகற்குவிளங்கவறிவிக்கும், நாட்டமென்ப - (அவள்) கண்ணென்று சொல்லுவர் புலவர் எ - று. உ - ம். ஷை கோவையில் - குறிப்பறிதற்குரிய, மண்ணிற்சிறந்த வென்னுஞ்செய்யுளைக்காண்க. (௬)

இயற்கைப்புணர்ச்சிவன்புறைதெளிவே,பிரிவுழிமகிழ்ச்சி பிரிவுழிக்கலங்க,லிடந்தலைப்பாடு பாங்கற்கூட்டம்,பாங்கிமதியுடன்பாடு பாங்கியிற்கூட்டம், பாங்கமைபகற்குறி பகற்குறியிடையீ, டிரவுக்குறியே யிரவுக்குறியிடையீடு, வரைவுவேட்கை வரைவுகடாத, லொருவழித்தணத்தல் வரைவிடைவைத்துப், பொருள்வயிற்பிரிதலென் றெருபதினேழுங், களவிற்குரிய கிளவித்தொகையே.

இ - ன். களவிற்குரிய கிளவித்தொகையுணர் - ற்று. இயற்கைப்புணர்ச்சி—கிளவித்தொகை - இயற்கைப்புணர்ச்சிமுதலாக வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரித லீறாகச்சொல்லப்பட்ட பதினேழுங் களவித்தொகைகோளிற்குரிய கிளவியின்றொகையாம். எ - று. (எ)

தெய்வம்புணர்ப்பச் சிந்தைவேறாகி, யெய்துங்கிழத்தியை யிறையோனென்ப.

இ - ன். நிறுத்தமுறையானே தெய்வத்தாற்புணரும்புணர்ச்சியுந் தலைமகளாற்புணரும்புணர்ச்சியுமாகிய விருவகையியற்கைப்புணர்ச்சியுண் முன்னதாகிய தெய்வப்புணர்ச்சியினிலக்கணமுணர் - ற்று.

தெய்வம்புணர்ப்பச்சிந்தைவேறாகி - தெய்வங்கூட்டத்தன்னறிவுதிரிந்து, கிழத்தியையிறையோனெய்துமென்ப - தலைமகளைத் தலைமகன் கூடுமென்றுசொல்லுவர் புலவர். எ - று. (அ)

கலந்துழிமகிழ்தலு நலம்பாராட்டலு, மேற்புறவணிதலு மென்னுமிம்மூன்றும், போற்றியதெயவப்புணர்ச்சியின்விரியே.

இ - ன். அத்தெய்வப்புணர்ச்சியின் விரியுணர் - ற்று. கலந்துழி—விரி - கலந்துழிமகிழ்தலு நலம்பாராட்டலு மேற்புறவணிதலு மென்னுமிம்மூன்றுகிளவியுமத்தெய்வப்புணர்ச்சியின் விரியாம். எ-று. உ - ம். இம்மூன்றுகிளவிகட்குமுறையேயுரிய சொற்பால, உணர்ந்தார்க்கு, தூசுங்கலையுமென்னுஞ்செய்யுட்களைக்காண்க. (கூ)

வேட்கையுணர்த்தன் மறுத்தலுடன்படல், கூட்டமென்றிறைவியிற் கூட்டநால்வகைத்தே.

இ - ன். தலைமகளாற்புணரும் புணர்ச்சியின்வகையுணர் - ற்று. வேட்கை—கூட்டமென்று - வேட்கையுணர்த்தன் மறுத்தலுடம்படல்கூட்டமென்று, நால்வகைத்து இறைவியிற்கூட்டம் - நான்குவகையினையுடைத்தாந் தலைமகளாற்புணரும்புணர்ச்சி. எ - று. (௧0)

இரந்துபின்னிற்றற் கெண்ணலுமிரந்து, பின்னிலைநிற்றலு முன்னிலையாக்கலு, மெய்தொட்டுப்பயிறலும் பொய்பாராட்டலு, மிடம்பெற்றுத்தழாலும் வழிபாடுமறுத்தலு, மிடையூறுகிளத்தலு நீடுநினைந்திரங்கலு, மறுத்தெதிர்கோடலும் வறிதுநகைதோற்றலு, முறுவற்குறிப்புணர்தலு முயங்குதலுறுத்தலும், புணர்ச்சியின்மகிழ்தலும் புகழ்தலும்பிறவு, முணர்த்தியதலைவியிற் புணர்ச்சியின்விரியே,

இ - ன். தலைமகளாற்புணரும் புணர்ச்சியின் விரியுணர் - ற்று. இரந்து—விரி - இரந்துபின்னிற்றற்கெண்ணன் முதலாகப்புகழ்தலீறாகச்சொல்லப்பட்ட பதினைந்தும் பிறவுந் தலைமகளாற்புணரும்புணர்ச்சியின் விரியாம். எ - று. உ - ம். வாணன்கோவையில் - இயற்கைப்புணர்ச்சிக்குரிய பதினைந்துசெய்யுளையு முறையேகாண்க. இரந்துபின்னிற்றற்கெண்ணன் முதலாக நீடுநினைந்திரங்கலீறாகச் சொல்லப்பட்டவொன்பதுள்ளும் வழிபாடுமறுத்தலொன்றுமொழித்த

ல்லாதவெட்டும் வேட்கையுணர்த்தற்குரியவாம். வழிபாடுமறுத்த லொன்றும், மறுத்தற்குரியதாம். மறுத்தெதிர்கோடலும் வறிதுநகைதோற்றலுந், தலைமகளுடம்பாட்டிற்குரியவாம். முறுவற்குறிப் புணர்தலு முயங்குதலுறுத்தலும், தலைமகனுடம்பாட்டிற்குரியவாம். புணர்ச்சியின்மகிழ்தலும்புகழ்தலும், கூட்டத்திற்குரியவாம். பிறவுமென்றதனான்மருங்கணைதலு மேற்புறவணிதலுங் கொள்ளப்படும். இவற்றிற்குதாரணமுறையே கோலத்தனிக்கொம்பரென்னுஞ் செய்யுளையுந் தூசங்கலையுமென்னுஞ்செய்யுளையுங்காண்க. முன்னையது முன்னிலையாக்கலின்பின்னரும் பின்னையது புகழ்தற்குப்பின்னரும் வரும். (௧௧)

ஐயந்தீர்த்தல் பிரிவறிவுறுத்தலென், றெய்தியவன்புறை யிருவகைத்தாகும்.

இ - ள். நிறுத்தமுறையானே வன்புறையின்வகையுணர் - ற்று. எய்தியவன்புறை - மேலேசொல்லப்பட்ட வன்புறை, ஐயந்தீர்த்தல் பிரிவறிவுறுத்தலென்றிருவகைத்தாகும், ஐயந்தீர்த்தலும்பிரிவறிவுறுத்தலுமென விரண்டுகூற்றினையுடைத்தாய். எ - று. (௧௨)

அணிந்துழிநாணியதுணர்ந்து தெளிவித்தலும், பெருநயப்புரைத்தலுந் தெய்வத்திறம்பேசலும், பிரியேனென்றலும் பிரிந்துவருகென்றலு, மிட்டணிதென்றலு மென்றிவையாறு, மடனறத்தெரிந்த வன்புறைவிரியே.

இ - ள். வன்புறையின் விரியின்பாகுபாடுணர் - ற்று. அணிந்துழி—வன்புறைவிரி - அணிந்துழிநாணியதுணர்ந்து தெளிவித்தன் முதலாகச்சொல்லப்பட்ட ஆறும் (தலைமகன்றலைமகள்) ளறிவின்மை நீங்கவாராய்ந்து சொன்னவன்புறைவிரியாம். எ - று. வன்புறுத்தலான்வன்புறையென்றுபெயராயிற்று. உ - ம். ஷ கோவையில் வன்புறையுள்ள ஆறுசெய்யுளையுமுறையேகாண்க. அவற்றுண் - முன்னையமூன்றுமையந்தீர்த்தற்குரிய. பின்னையமூன்றும் பிரிவறிவுறுத்தற்குரியவாம். (௧௩)

தலைவன்மாற்றந் தலைவிதேற்றந்தெளிவாமென்ப தெளிந்திசினோரே.

இ - ள். நிறுத்தமுறையானே தெளிவாமாறுணர் - ற்று. தலைவன்—தெளிந்திசினோர் - தலைமகன்சொல்லத் தலைமகள் டெளிதலைத் தெளிதலென்றுசொல்லுவர் புலவர். உ - ம். ஷ கோவையில் தெளிதற்குரிய, எத்துந்தமதுரையென்னுஞ்செய்யுளைக்காண்க. (௧௪)

செல்லுங்கிழத்தி செலவுகண்டுளத்தொடு, சொல்லும்பாகனொடு சொல்லுமிரண்டும், பிரிவுழிமகிழ்ச்சியின்விரியெனக்கொளலே.

இ - ன். நிறுத்தமுறையானே பிரிவுழிமகிழ்ச்சியின் விரியுணர் - ற்று. செல்லுங்—கொளல்-(அவ்விடத்துநின்றுநீங்கித்தலைமகடன்னைக்காணாமற்றானவளைக்காண்பதோரணிமைக்கணின்ற தலைமகன்புணர்ச்சிக்களத்து நின்று) போகாநின்ற தலைமகளது செலவுகண்டு தன்னெஞ்சொடுகூறலும் பாகனொடுகூறலுமாகியவிரண்டும் பிரிவின்கண் மகிழ்ச்சியின்விரியாம். எ - று. இக்கிளவிபன்மையின் மையின் வகையின்றாயிற்று. உ - ம். ௸ கோவையிற் பிரிவுழிமகிழ்ச்சிக்குரிய விரண்டுசெய்யுளையுமுறையேகாண்க. (௧௫)

மருளுற்றுரைத்தறெருளுற் றுரைத்தலென், றிருவகைத் தாகும் பிரிவுழிக்கலங்கல்.

இ - ன். நிறுத்தமுறையானே பிரிவுழிக்கலங்கலின்வகையுணர் - ற்று. மருளுற்—கலங்கல் - மருளுற்றுரைத்தலுந் தெருளுற்றுரைத்தலுமென விரண்டுவகையினையுடைத்தாம் பிரிவுழிக்கலங்கல். எ - று.

ஆயவெள்ளம் வழிபடக்கண்டு, மாயமோவென்றலும் வாயில்பெற்றுய்தலும், பண்புபாராட்டலும் பயந்தோர்ப்பழிச்சலுங், கண்படைபெறாது கங்குனோதலுமெனு, மைந்தும்பிரிவுழிக் கலங்கல்விரியாகும்.

இ - ன். பிரிவுழிக்கலங்கலின் விரியுணர் - ற்று. ஆயவெள்—யாகும் - ஆயவெள்ளம்வழிபடக்கண்டிது மாயமோவென்றன்முதலாகச் சொல்லப்பட்டனவைந்தும் பிரிவுழிக்கலங்கலின்விரியாம். எ - று. உ - ம்: ௸ கோவையிற்பிரிவுழிக்கலங்கற்குரிய வைந்துசெய்யுளையுமுறையேகாண்க. அவற்றுண் - முன்னையதொன்று மருளுற்றுரைத்தற்குரித்தாம், ஏனையநான்குந் தெருளுற்றுரைத்தற்குரிய. (௧௭)

தெய்வந்தெளிதல் கூடல்விடுத்தலென், றிவ்வோர்மூவகைத்திடந் தலைப்பாடே.

இ - ன். நிறுத்தமுறையானே யிடந்தலைப்பாட்டின்வகையுணர் - ற்று. தெய்வந்—தலைப்பாடு - இடந்தலைப்பாடு தெய்வந்தெளிதலுங் கூடலும் விடுத்தலுமென்றிம்மூன்றுவகையினையுடைத்து. எ - று.

தந்ததெய்வந் தருமெனச்சேறலு, முந்துறக்காண்டலு முயங்கலும் புகழ்தலு, முடன்புணராயத் துய்த்தலுமென வைந், திடந்தலைப்பாட்டி னிலக்கணவிரியே.

இ - ன். இடந்தலைப்பாட்டின் விரியுணர் - ற்று. தந்ததெய்வ ந் — விரி - தந்ததெய்வந்தருமெனச்சேறன்முதலாகச் சொல்லப்பட்ட வைந்து மிடந்தலைப்பாட்டின் விரியாம். எ - று. உ - ம். ஷை கோவையிலிடந்தலைப்பாட்டிற்குரிய வைந்துசெய்யுளையுமுறையேகா ண்க. அவற்றுண் முன்னையதொன்றுந் தெய்வந்தெளிதற்கும் பின்னையதொன்றும் விடுத்தற்கு நடுநின்றமூன்றுங் கூடற்கு முரியன. (௧௯)

சார்தல்கேட்டல் சாற்றலெதிர்மறை, நேர்தல்கூடல் பாங்கிற்கூட்டமென், றங்கெழுவகைத்தே பாங்கற்கூட்டம்.

இ - ன். நிறுத்தமுறையானே பாங்கற்கூட்டத்தின் வகையுணர் - ற்று. சார்தல் — கூட்டம் சார்தன்முதலாகச்சொல்லப்பட்ட வே ழுவகையினையுடைத்தாம் பாங்கற்கூட்டம். எ - று. (௨௦)

தலைவன்பாங்கனைச் சார்தலும்பாங்கன், றலைவனையுற்றது வினாதலுந்தலைவ, னுற்றதுரைத்தலுங் கற்றறிபாங்கன், கழற லுங்கிழவோன் கழற்றெதிர்மறுத்தலுங், கிழவோற்பழித்த லுங் கிழவோன்வேட்கை, தாங்கற்கருமை சாற்றலும்பாங் கன், றன்மனத்தழுங்கலுந் தலைவனோடழுங்கலு, மெவ்விடத் தெவ்வியற் றென்றலுமவனவை, யிவ்விடத்திவ்வியற்றென்றலு ம்பாங்க, னிறைவனைத்தேற்றலுங் குறிவழிச்சேறலு, மிறை வியைக்காண்டலு மிகழ்ந்ததற்கிரங்கலுந், தலைவனைவியத்த லுந் தலைவியைவியத்தலுந், தலைவன்றனக்குத் தலைவிநிலைகூ றலுந், தலைவன்சேறலுந் தலைவியைக்காண்டலுங், கலவியின் மகிழ்தலும்புகழ்தலுந்தலைவியைப், பாங்கியொடுவருகெனப் பகர்தலும்பாங்கிற், கூட்டலுமென்றீங், கிட்டுநாலாறுங், கா ட்டியபாங்கற் கூட்டத்துவிரியே.

இ - ன். பாங்கற்கூட்டத்துவிரியுணர் - ற்று. தலைவன் — விரி - தலைவன்பாங்கனைச்சார்தன் முதலாகப் பாங்கிற்கூட்டலீறுகச்சொல் லப்பட்ட விருபத்துநான்கும் பாங்கற்கூட்டத்துவிரியாம். எ - று. உ - ம். ஷைகோவையிற் பாங்கற்கூட்டத்துக்குரிய விருபத்துநான்

குசெய்யுளையுமுறையேகாண்க. அவற்றுண் முன்னையமுன்றுஞ்சார்தல் கேட்டல் சாற்றலென்னுமூன்றற்குமுரியவாம். பாங்கன் கழறன் முதலாகக் கிழவோன்வேட்கைதாங்கற்கருமைசாற்ற லீருகச்சொல்லப்பட்ட நான்குமெதிர்மறைக்குரிய. பாங்கன்றன்மனத்தழுங்கன்முதற் றலைவன்றனக்குத்தலைவிநிலைகூறலீருகக்கூறியபதினொன்றுநேர்தற்குரிய. தலைவன் சேறன் முதலாகத் தலைவியையப்புகழ்த லீருகச்சொல்லப்பட்ட நான்குங்கூடற்குரிய. தலைவியைப்பாங்கியொடுவருகெனப்பசர்தலும் பாங்கிற்கூட்டலுமாகியவிரண்டும் பாங்கிற்கூட்டற்குரியவாம். (உக)

முன்னுறவுணர்தல் குறையுறவுணர்த,லிருவருமுளவழிய வன்வரவுணர்தலென், றொருமூன்றுவகைத்தே பாங்கிமதியுடம்பாடு.

இ - ன். நிறுத்தமுறையானே பாங்கிமதியுடம்பாட்டின் வகையுணர் - ற்று. முன்னுற—யுடம்பாடு - முன்னுறவுணர்தலுங் குறையுறவுணர்தலு மிருவருமுளவழியவன்வரவுணர்தலு மென மூன்றுவகையினையுடைத்தாம் பாங்கிமதியுடம்பாடு. எ - று. முன்னுறவுணர்தலாவது, பாங்கி தலைமகளது வேறுபாடுகண்டதனானே கூட்டமுண்மையறிதல். குறையுறவுணர்தலாவது, தலைமகன்றழையுங்கண்ணியுங்கொண்டு தன் பாங்கிற் குறையுற்று நிற்பக்கண்டதனானே கூட்டமுண்மையறிதல். இருவருமுளவழியவன்வரவுணர்தலாவது, தலைமகளுந்தானு மொருங்கிருந்துழித் தலைமகனவ்வாறுவரக்கண்டதனானே கூட்டமுண்மையறிதல். (உஉ)

நாற்றமுந்தோற்றமு மொழுக்கமுமுண்டியுஞ், செய்வினைமறைப்புஞ் செலவும்பயில்வுமென், றிவ்வகையேழினுமையமுற்றோர்தலு, மவ்வகைதம்மா லையந்தீர்தலு, மெய்யினும்பொய்யினும்வழிநிலைபிழையாது, பல்வேறுகவர்பொருட்சொல்லிநாடலுமென, முன்னுறவுணர்தன் மூன்றாகும்மே.

இ - ன். மேற்சொல்லப்பட்ட பாங்கிமதியுடம்பாட்டின்வகைமூன்றனுண் முன்னுறவுணர்தலின்பாகுபாடுணர் - ற்று. நாற்றமுந்—முற்றோர்தலும் - நாற்றமுதலாகப்பயிலவீருகச்சொல்லப்பட்டவேழினும்பாங்கியையமுற்றோர்தலும், அவ்வகை—தீர்தலும் - அவற்று

னையையந்தீர்தலும், மெய்யினும்—நாடலுமென - மெய்யினும்பொய்யினுங் குற்றேவறப்பாமற்பலவாய்வேறுப்பட்ட விருபொருட் சொற்களானாராய்தலுமென, முன்னுறவுணர்தன்மூன்றாகும் — முன்னுறவுணர்தன்மூன்றாகும். எ-று. நாற்றம், தான்றலைவியிற்பண்டுபெயின்றறியாததோர்நாற்றம். தோற்றம், கூட்டத்தாற்பெற்றதோரழகு. ஒழுக்கம், தெய்வந்தொழாமைமுதலாயின. உண்டி, பண்டையிற்குறைந்தவுண்டி. செய்வினைமறைத்தல், தலைமகடலைவன்பாற்பட்ட தன்னினைவுந்தொழிலும் பிறர்க்குப் புலனாகாமை மறைத்தல். செலவு, ஆயத்தைநீங்கித்தனியேபெயர்தல், பயிலல், எப்போதுமோரிடத்தே நிற்றல். உ-ம். ஷை கோவையிற்பாங்கியவற்றாலையமுற்றோர்தற்கு, வண்டலையாயத்துடனயர்ந்தோ, வென்னுஞ்செய்யுளையும், ஐயந்தீர்த்தற்குத்- திளைக்குந்திரை, யென்னுஞ்செய்யுளையும், மெய்யினும்பொய்யினும் வழிநிலைபிழையாது பல்வேறுகவர்பொருட்சொல்லிநாடற்குச், சுனைநயப்புரைத்தன்முதலாக நடுங்கநாட்டமீறாகிய நான்குகிளவிகட்குமுரியநான்குசெய்யுளையுங்காண்க. (உ௩)

பெட்டவாயில்பெற்றிரவு வலியுறுத்தோன்; கண்ணியுந் தழையு மேந்திநண்ணி, யூர்பெயர்கெடுதியோ டொழிந்தவும்வினவுழி, யாரேயிவர்மனத் தெண்ணம்யாதெனத், தேர்தலுமெண்ணந் தெளிதலுமெனவாங், கோரிரண்டாகுங் குறையுறவுணர்தல்.

இ-ன். மேற்சொல்லப்பட்ட குறையுறவுணர்தலின்பாகுபாடுணர்-ற்று. பெட்ட—யுறுத்தோன் - (இயற்கைப்புணர்ச்சிக்குப்பின்னேதலைமகளாற்) பேணப்பட்டவாயிலைப் பெற்றுப்பின்னிரந்துகுறையுறுதலைவலியுறுத்ததலைமகன், கண்ணி—நண்ணி - கண்ணியுந்தழையுமேந்திச்சார்ந்து நின்று, ஊர்—தேர்தலும் - ஊரும்பேருங் கெடுதியுமொழிந்தவும் வினவவிடத்திவர்யாரென்வு மனத்தின் கணுள்ளதாகிய வெண்ணம் யாதெனவும் (பாங்கி) யாராய்தலும், எண்ணந்—வுணர்தல் - அவனகத்தெண்ணத்தினைத்தெளிதலுமெனவிரண்டாகுங் குறையுறவுணர்தல். எ-று. ஆங்கு, அசை. உ-ம். ஷை கோவையிற் பெட்டவாயில்பெற்றிரவுவலியுறுத்தன் முதலாக வெண்ணந்தெளிதலீறாகச்சொல்லப்பட்ட வேழுகிளவிகட்குமுரிய வேழுசெய்யுளையுங்காண்க. (உ௪)

**கையுறையேந்திவந் தவ்வகைவினவுழி, யெதிர்மொழி
கொடுத்தலு மிறைவனை நகுதலு, மதியினவரவர் மனக்கருத்
துணர்வுமென், றிருவருமுளவழி யவன்வரவுணர்த, லொரு
மூன்றாகுந் தெரியுங்காலே.**

இ - ன். மேற்சொல்லப்பட்ட விருவருமுளவழி யவன்வரவுணர்
தலின்பாகுபாடுணர் - ற்று. இருவருமுளவழியவன்வரவுணர்தல் -
இருவருமுளவழி யவன்வரவுணர்தல், கையுறை—துணர்வுமென்று -
(தலைமகன்) கண்ணியுந்தழையுமேந்தியவ்வாறாம்பேர்முதலாயினவினை
யவி—த்துத் (தோழியதற்) கெதிர்மொழிகொடுத்தலுமிறைவனைநகுத
லு மதியினவரவர்மனக்கருத்துணர்தலுமென, ஒரு மூன்றாகுந்தெரி
யுங்கால் - ஒருமூன்றாகுமாராயுங்காலத்து. எ - று. உ - ம். திரு
க்கோவையிற்றலைவன் கையுறையேந்திவருதன்முதலாகப்பாங்கிமதியி
னவரவர்மனக்கருத்துணர்த லீறாகச்சொல்லப்பட்ட வைந்துகிளவிக
ட்குரிய வைந்துசெய்யுளைங்காண்க. (௨௫)

**ஈங்ஙனமியம்பிய விருநான்குகிளவியும், பாங்கிமதியுடம்
பாட்டதுவிரியே.**

இ - ன். பாங்கிமதியுடம்பாட்டின்விரியிவையென்பதுணர் - ற்று.
ஈங்ஙன—விரி - மேன்மூன்று சூத்திரத்துளையமுற்றோர்தன்முதலா
கமதியினவரவர்மனக்கருத்துணர்த லீறாகச்சொல்லப்பட்டவெட்டும்
பாங்கிமதியுடம்பாட்டின் விரியாம், எ - று. (௨௬)

**இரந்துபின்னிற்றல் சேட்படைமடற்கூற்று, மடல்விலக்
குடன்படன் மடற்கூற்றொழிதல், குறைநயப்பித்தனயத்த
ல்கூட்டல், கூடலாயங் கூட்டல்வேட்டலென், றீராறுவகை
த்தே யிகுளையிற்கூட்டம்.**

இ - ன். நிறுத்தமுறையானே பாங்கியிற்கூட்டத்துவகையுணர் -
ற்று. இரந்து—கூட்டம் - இரந்து பின்னிற்றன்முதலாகவேட்ட
லீறாகச்சொல்லப்பட்டபன்னிரண்டுவகையினையுடைத்தாம்பாங்கியிற்
கூட்டம். எ - று. (௨௭)

**தலைவனுட்கோள் சாற்றலும்பாங்கி, குலமுறைகிளத்த
லுந் தலைவன்றலைவி, தன்னைப்புகழ்த்தலுநன்னுதற்பாங்கி, யவ
யாள்போன்று விலைதலுமிறையோ, னிறைவிதன்னைமையியம்
பலும்பாங்கி, தலைவியருமைசாற்றலுந்தலைவ, னின்றியமை**

யாமை யியம்பலும்பாங்கி, நின்குறைநீயேசென்றுரையென்றலும், பாங்கியைத்தலைவன் பழித்தலும்பாங்கி, பேதைமையூட்டலுங்காதலன்றலைவி, மூதறிவுடைமை மொழிதலும்பாங்கி, முன்னுறுபுணர்ச்சி முறையுறக்கூறலுந், தன்னிலைதலைவன்சாற்றலும்பாங்கி,புலவிய துரைத்தலுந் தலைமகன்மறுத்தலும், பாங்கியஞ்சியச் சுறுத்தலுமாங்கவன், கையுறைபுகழ்தலுந் தையன்மறுத்தலு, மாற்றுநெஞ்சினோடவன்புலத்தலுமவ, ளாற்றுவித்தகற்றலுமெனுநாலைந்து, மிரந்துபின்னிற்றற்குஞ் சேட்படுத்தற்கும், பொருந்துவவென்மனர் தெரிந்திசினோரே.

இ - ன். மேற்கூறப்பட்ட பாங்கியிற்கூட்டத்துவகையு ளிரந்து பின்னிற்றற்குஞ்சேட்படுத்தற்குமுரியகிளவிகளையுணர் - ற்று. தலைவனுட்—தெரிந்திசினோர் - தலைவனுட்கோள்சாற்றன்முதலாகப்பாங்கியாற்றுவித்தகற்ற லீறாகச்சொல்லப்பட்டவிருபது மிரந்துபின்னிற்றற்குஞ்சேட்படுத்தற்கும் பொருந்துங்கிளவியென்று சொல்லுவராய்ந்தோர். எ - று. உ - ம். ஷகோவையிற் றலைவனுட்கோள்சாற்றன்முதற்பாங்கியாற்றுவித்தகற்றலீறாகிய விருபதுகிளவிக்குமுரியவிருபதுசெய்யுளையுமுறையேகாண்க. அவற்றுட் டலைவன்கூற்றாயினவெல்லா மிரந்துபின்னிற்றற்கும் பாங்கிகூற்றாயினவெல்லாஞ்சேட்படுத்தற்குமுரியவெனக்கொள்க. (உஅ)

இரந்துகுறைபெறாது வருந்தியகிழவோன், மடலேபொருளென மதித்தலும்பாங்கிக், குலகின்மேல்வைத்துரைத்தலுமதனைத், தன்மேல்வைத்துச் சாற்றலும்பாங்கி, தலைமகளவயவத் தருமைசாற்றலுந், தலைமகன்றன்னைத் தானேபுகழ்தலு, மலர்முலைப்பாங்கி யருளியல்கிளத்தலுங், கொண்டுநிலைகூறலு மென்றிவையேழு, மடற்கூற்றிற்கு மடல்விலக்கிற்குங், கடவவென்மனர் கற்றறிந்தோரே.

இ - ன். மடற்கூற்றிற்கு மடல்விலக்கிற்குமுரியகிளவிகளையுணர் - ற்று. இரந்துகுறை—கற்றறிந்தோர் - இரந்துகுறைபெறாதுவருந்தியகிழவோன் மடலேபொருளெனமதித்தன் முதலாகப்பாங்கிகொண்டுநிலைகூறலீறாகச் சொல்லப்பட்ட வேழுந்தலைமகன்மடற்கூற்றிற்கும்பாங்கிமடல்விலக்கற்குமுரியகிளவியென்று சொல்லுவர்கற்றறிந்தோர். எ - று. உ ம். ஷகோவையிலிரந்துகுறைபெறாதுவரு

ந்தியகிழவோன்மடலேபொருளெனமதித்தன் முதற் கொண்டுநிலை கூறலீருகிய வேழுகிளவிகட்குமுரியவேழுசெய்யுளையுங்காண்க. அவ ற்றுட்டலைமகன்கூற்ருயினவெல்லா மடற்கூற்றிற்கும் பாங்கிகூற்ரு யினவெல்லா மடல்விலக்கற்குமுரியவாம் (உகூ)

தலைவியிளைமைத் தன்மைபாங்கி, தலைவற்குணர்த்தலுந் தலைவன்றலைவி, வருத்தியவன்னமுரைத்தலும் பாங்கி, செ வ்வியருமை செப்பலுந்தலைவன், செவ்வியெளிமை செப்ப லும் பாங்கி, யென்னைமறைத்தபி னெளிதெனநகுதலு, மந்ந கைபொருஅதவன்புலம்பலுமவ, டேற்றலுங்கையுறை யேற் றலுங்கிழவோ, னற்றலுமென்னு மவ்வொன்பானுங், குறை நேர்தற்கு மடற்கூற்றொழிதற்கு, முறைமையினுரிய மூன்னு ங்காலே.

இ - ன். குறைநேர்தற்குமடற்கூற்றொழிதற்குமுரியகிளவிகளை யுணர் - ற்று. தலைவியிளைமைத்—மூன்னுங்கால் - தலைவியிளைமை த்தன்மைபாங்கிதலைவற்குணர்த்தன்முதலாகக்கிழவோனுற்ற லீருகச் சொல்லப்பட்ட வொன்பதும்பாங்கிகுறைநேர்தற்குந்தலைமகன்மடற் கூற்றொழிதற்குமுறையானே யுரியவாமாராயுங்காலத்து. எ - று. உ- ம். கோவையிற்றலைவியிளைமைத்தன்மைபாங்கிதலைவற்குணர்த் தன்முதலாகக்கிழவோனுற்றலீருகக்கூறப்பட்டவொனபதுகிளவிக்கு ரியவொன்பது செய்யுளையுங்காண்க. அவற்றுட் - பாங்கிகூற்ருயின வெல்லாங் குறைநேர்தற்குந் தலைவன்கூற்ருயினவெல்லா மடற்கூற் றொழிதற்குமுரியவெனக்கொள்க. (௩0)

இறைவன்றனக்குக் குறைநேர்பாங்கி, யிறைவிக்கவன்கு றை யுணர்த்தலுமிறைவி, யறியாள்போன்று குறியாள்கூற லும், பாங்கியிறையோற் கண்டமைபகர்தலும், பாங்கியை த்தலைவிமறைத்தலும்பாங்கி, யென்னைமறைப்பதென்னென த்தழாலுங், கையுறைபுகழ்வுமென் றிவ்விருமூன்று, மெலி தாகச்சொல்லிக் குறைநயப்பித்தற்கும், வலிதாகச்சொல்லி நயத்தற்குமுரிய.

இ - ன். குறைநயப்பித்தற்கு நயத்தற்குமுரியகிளவிகளையுணர் ற்று. இறைவன்—முரிய - இறைவன்றனக்குக்குறைநேர்பாங்கியி றைவிக்கவன்குறையுணர்த்தன்முதலாகப் பாங்கிகையுறைபுகழ்தலீரு

கச்சொல்லப்பட்ட வாறும்பாங்கிமெலிதாகச்சொல்லிக் குறைநயப்பித்தற்கும் வலிதாகச்சொல்லிநயத்தற்குமுரிய கிளவிகளாம் எ - று. உ - ம், ௸கோவையிலிறைவன்றனக்குக்குறைநேர்பாங்கியிறைவிக்கவன்குறையுணர்த் தன்முதற்பாங்கிகையுறைபுகழ்தலீறாகிய வாறு கிளவிகட்குமுரிய வாறுசெய்யுளையுங்காண்க. (௫௧)

தோழிகிழவோன்றுயர் நிலைகிளத்தலு, மறுத்தற்கருமை மாட்டலுந் தலைவன், குறிப்புவேறாக நெறிப்படக்கூறலுந், தலைவியைமுனிதலுந் தலைவிபாங்கி, தன்னைமுனிதலுந் தன் கைக்கையுறை,யேற்றலுமெனமுறைசாற்றியவாறும், வலிதாகச்சொல்லிக் குறைநயப்பித்தற்கு, மெலிதாகச்சொல்லிமேவற்குமுரிய.

இ - ன். இதுவுமது, தோழி—முரிய - தோழிதலைவன்றுயர்நிலைகிளத்தன்முதலாகக்கையுறையேற்றலீறாகச்சொல்லப்பட்டவாறும்வலிதாகச்சொல்லிக்குறைநயப்பித்தற்கு மெலிதாகச்சொல்லிநயத்தற்குமுரியகிளவிகளாம். எ - று. உ - ம். ௸கோவையிற் றோழிகிழவோன்றுயர்நிலைகிளத்தன முதற் றலைவிகையுறையேற்ற லீறாகிய வாறுகிளவிகட்குமுரிய வாறுசெய்யுளையுங்காண்க. இவ்விரண்டுசூத்திரங்கட்குரியவுதாரணங்களுட் பாங்கிகூற்றாயினவெல்லாங்குறைநயப்பித்தற்குந்தலைவிகூற்றாயினவெல்லா நயத்தற்குமுரியவாம். (௫௨)

இறைவிகையுறை யேற்றமைபாங்கி, யிறைவற்குணர்த்தலுங் குறியிடங்கூறலுங், குறியிடத்திறைவியைக் கொண்டுசேறலுங், குறியிடத்துய்த்து நீங்கலுமிறையோ, னிடத்தெதிர்ப்படுதலுமியைதலும்புகழ்தலும் விடுத்தலும்பாங்கிமெல்லியற்சார்ந்து,கையுறைகாட்டலுமையுறைகண்ணியைப்,பாங்கிற்கூட்டலுநீங்கித்தலைவற், கோம்படைசாற்றலுமுலகியன்மேம்பட, விருந்துவிலக்கலும் பெருந்தகைவிருந்திறை, விரும்பலுமென்னத் தெரிந்தபன்மூன்றுங், கூட்டன்முதலா வேட்டலீறாப், பாங்கிக்குவகுத்த நான்கிற்குமுரிய.

இ - ன். கூட்டல் கூடல் பாங்கிற்கூட்டல் வேட்டலென்னுநான்கிற்குமுரியகிளவிகளையுணர்- ற்று. இறைவி—முரிய - இறைவிகையுறையேற்றமை பாங்கியிறைவற்குணர்த்தன் முதலாகத்தலைவன் விருந்திறைவிரும்பலீறாகவாராய்ந்தபதின்மூன்றுங்கூட்டலுங்கூடலு

ம்பாங்கிற் கூட்டலும்வேட்டலுமென்னு நான்கிற்கு முரியவாம். உ - ம். ஷைகோவையிலிறைவிசையுறையேற்றமைபாங்கியிறை வற்குணர்த்தன் முதலாகவிருந்திறைவிரும்பலீறாகக்கூறப்பட்ட பதின்மூன்றுகிளவிகட்குமுரிய பதின்மூன்றுசெய்யுளையுங்காண்க. அவற்றுட்பாங்கிகூற்றாயினவெல்லாங்கூட்டற்குந் தலைவியைப் பாங்கிற் கூட்டலொன்றும்பாங்கிற்கூட்டலுக்குந் தலைவன்கூற்றாயினவெல்லாங் கூடற்கும்வேட்டற்குமுரியவெனக்கொள்க. (௬௩)

அற்றமில்சிறப்பினிவ் வறுபத்தொன்றுங், குற்றமில்பாங்கியிற் கூட்டத்துவிரியே.

இ - ன். பாங்கியிற்கூட்டத்துவிரியிவையென்பதுணர் - ற்று. அற்றமில—விரி - மேலாறுசூத்திரத்துந்தலைமகனுட்கோள்சாற்றன் முசற்றலைமகன்விருந்திறைவிரும்பலீறாகச்சொல்லப்பட்ட விவ்வறுபத்தொருகிளவியும்பாங்கியிற்கூட்டத்துவிரியாம். எ - று. (௬௪)

கூட்டல்கூடல் பாங்கிற்கூட்டல், வேட்டலென்றாறு நால் வகைத்தேபகற்குறி.

இ - ன். நிறுத்தமுறையானேபகற்குறியின்வகையுணர் - ற்று. கூட்டல்—பகற்குறி - கூட்டன்முதலாகவேட்டலீறாக நான்குவகையினையுடைத்துப்பகற்குறி. எ - று. (௬௫)

குறியிடங்கூறன் முதலாப்பெறலரும், விருந்திறைவிரும் பலீறாப்பொருந்தப், பகர்ந்தபன்னிரண்டும்பகற்குறிவிரியே.

இ - ன். பகற்குறியின்விரியுணர் - ற்று. குறியிடங்—விரி - குறியிடங்கூறன்முதலாகவிருந்திறைவிரும்பலீறாக (மேற்பாங்கியிற்கூட்டத்து) ளோதப்பட்டபன்னிருகிளவியும்பகற்குறிவிரியாம் - எ - று உ - ம். மேற்காட்டப்பட்டன. (௬௬)

இரங்கல்வன்புறையிற்செறிப்புணர்த்தலென், றாருங் குமூவகைத் தொருசார்பகற்குறி.

இ - ன். ஒருசார்பகற்குறியின்வகையுணர் - ற்று. இரங்கல்—குறி - இரங்கலும் வன்புறையு மிற்செறிப்புணர்த்தலுமென மூன்றுவகையினையுடைத்தொருசார்பகற்குறி. எ - று. (௬௭)

கிழவோன்பிரிந்துழிக்கிழத்திமாலையம், பொழுதுகண்டிரங்கலும் பாங்கிபுலம்பலுந், தலைவனீடத் தலைவிவருந்தலுந், தலைவியைப்பாங்கி கழறலுந்தலைவி, முன்னிலைப்புறமொழி மொழிதலுமின்னுயிர்ப், பாங்கியொடுபகர்தலும் பாங்கியச்சுறுத்தலு, நீங்கற்கருமை தலைவிநினைந்திரங்கலுந், தலைவிக்கவன்வரல் பாங்கிசாற்றலுஞ், சிறைப்புறமாகச்செறிப்பறிவுறுத்தலு, முன்னிலைப்புறமொழி மொழிந்தறிவுறுத்தலு, முன்னின்றுணர்த்தலு முன்னின்றுணர்த்தி, யோம்படைசாற்றலு மேம்படுகிழவோன், றஞ்சம்பெறாது நெஞ்சொடுகிளத்தலு, மென்றவீரேழு மெல்லுக்குறிவிரியே.

இ - ள். ஒருசார்பகற்குறியின்விரிபுணர் - ற்று. கிழவோன்—விரி - கிழவோன்பிரிந்துழிக் கிழத்திமாலையம்பொழுதுகண்டிரங்கன்முதலாகக்கிழவோன்றஞ்சம்பெறாதுநெஞ்சொடுகிளத்தலீறாகச்சொல்லப்பட்ட பதினான்குமொருசார்பகற்குறியின்விரியாம் - எ - று. ஒருசார், எ - து. அதிகாரத்தால் வருவிக்கப்பட்டது. உ - ம். இக்கோவையிலொருசார்பகற்குறியிலுள்ளபதினான்குசெய்யுளையு முறையேகாண்க. அவற்றுட் கிழவோன்பிரிந்துழிக்கிழத்திமாலையம்பொழுதுகண்டிரங்கலும்பாங்கிபுலம்பலுந்தலைவனீடத் தலைவிவருந்தலும் முன்னிலைப்புறமொழிமொழிதலும் பாங்கியொடுபகர்தலும் நீங்கற்கருமைதலைவிநினைந்திரங்கலுந்தலைவன்றஞ்சம்பெறாதுநெஞ்சொடுகிளத்தலுமாகியவேழுமிரங்கற்குரிய. இவற்றுட் கிழவோன்றஞ்சம்பெறாதுநெஞ்சொடுகிளத்தலொன்றொழித்தேனையவாறும்வரைதல்வேட்கைக்கும்பொருந்தும். தலைவியைப்பாங்கிகழறலும்தலைவியைப்பாங்கியச்சுறுத்தலும் தலைவிக்கவன்வரல்பாங்கிசாற்றலுமாகிய மூன்றும் வன்புறைக்குரிய. சிறைப்புறமாகச்செறிப்பறிவுறுத்தலு முன்னிலைப்புறமொழிமொழிந்தறிவுறுத்தலு முன்னின்றுணர்த்தலு முன்னின்றுணர்த்தியோம்படைசாற்றலுமாகிய நான்கு மிற்செறிப்புணர்த்தற்குரிய. இவைநான்கும்வரைவுகடாதற்கும்பொருந்தும். (௩௮)

விலக்கல்சேறல் கலக்கமென்றாங், கிகப்பின்மூவகைத்தே பகற்குறியிடையீடு.

இ - ள். நிறுத்தமுறையானேபகற்குறியிடையீட்டின்வகையுணர்ற்று. விலக்கல்—யிடையீடு - விலக்கலுஞ்சேறலுங்கலக்கமுமெனமூன்றுவகையினையுடைத்தாம் பகற்குறியிடையீடு, எ - று. (௩௯)

இறைவனைப்பாங்கி குறிவரல்விலக்கலு, மிறைவியைக் குறிவரல் விலக்கலு மிறைமக, ளாடிடநோக்கி யழிதலும்பாங்கி, யாடிடம்விடுத்துக்கொண்ட கறலும்பின்ற, னெடுந்தகை குறிவயி னீடுசென்றிரங்கலும், வறுங்களநாடி மறுகலுங்குறுந்தொடி வாயுமூர்நோக்கி மதிமயங்கலுமெனு, மேழும் பகற்குறி யிடையீட்டுவிரியே.

இ - ள். பகற்குறியிடையீட்டின்விரியுணர் - ற்று. இறைவனைப்—விரி -இறைவனைப்பாங்கிகுறிவரல்விலக்கன்முதலாகக்குறுந்தொடிவாழுமூர்நோக்கிமதிமயங்க லீறாகக்கூறப்பட்ட வேழும்பகற்குறியிடையீட்டுவிரியாம் எ - று. உ - ம். ஷகோவையிற்பகற்குறியிடையீட்டுக்குரியவேழுசெய்யுளையுங்காண்க. அவற்றுண்முன்னையவிரண்டும் விலக்கற்குரிய. பாங்கியாடிடம்விடுத்துக்கொண்டகறலாகியவொன்றுஞ்சேறற்குரித்து. ஏனையநான்குங் கலக்கத்திற்குரிய. (சO)

வேண்டன்மறுத்தலுடன்படல் கூட்டல், கூட்டல்பாராட்டல்பாங்கிறகூட்ட, லுயங்கனீங்கலென் றொன்பதுவகைத்தே, யியம்பிப்போந்த விரவுக்குறிதானே.

இ - ன். நிறுத்தமுறையானே இரவுக்குறியின்வகையுணர்- ற்று. வேண்டல்—குறி - வேண்டன்முதலாகநீங்கலீறாக வொன்பதுவகைத்துமேற்சொல்லிபபோந்தவிரவுக்குறி. எ - று. (சக)

இறையோனிரட்குறி வேண்டலும்பாங்கி, நெறியினதருமை கூறலுமிறையோ, னெறியினதெளிமை கூறலும்பாங்கி, யவனாட்டணியியல் வினதலுங்கிழவோ, னவனாட்டணியியல்வினதலுமவற்குத், தன்னாட்டணியியல்பாங்கிசாற்றலு, மிறைவிக்கிறையோன் குறையறிவுறுத்தலு, நேராதிறைவி நெஞ்சொடுகிளத்தலு, நேர்ழைபாங்கியொடுநேர்ந்துரைத்தலு, நேர்ந்தமைபாங்கி நெடுந்தகைக்குரைத்தலுங், குறியிடைநிறீஇத்தாய்துயிலறிதலு,மிறைவிக்கிறைவன்வரவறிவுறுத்தலு, மவட்கொண்டுசேறலுங் குறியுய்த்தகறலும், வண்டுறைதாரோன் வந்தெதிர்ப்படுதலும், பெருமகளாற்றினதருமைநினைந்திரங்கலும்,புரவலன்றேற்றலும்புணர்தலும்புகழ்தலு, மிறைமகளிறைவனைக் குறிவிலக்கலுமவ, னிறைவியையில்வயின்விடுத்தலுமிறைவியை, யெய்திப்பாங்கிகையுறைகா

ட்டலு, மிற்கொண்டேகலும்பிற்சென்றிறைவனை, வரவுவில க்கலும் பெருமகன்மயங்கலுந், தோழிதலைமக டுயர்கிளந்து விடுத்தலுந், திருமகட்புணர்ந்தவன் சேறலுமென்றுந்,இருப த்தேழு மிரவுக்குறிவிரியே.

இ - ன். இரவுக்குறியின்விரியுணர் - ற்று. இறையோ—விரி - இறையோனிருட்குறிவேண்டன்முதலாகத்திருமகட்புணர்ந்தவன்சே றலீறுகக்கூறப்பட்டவிருபத்தேழுமிரவுக்குறிவிரியாம் எ - று. உ - ம். ஷ கோவையிலிரவுக்குறிககுரிய விருபத்தேழுசெய்யுளையுமு றையேகாண்க. அவற்றுளிறையோ னிருட்குறிவேண்டலுநெறியி னதெளிமைகூறலுந் தலைமகனவணுட்டணியியல்வினுதலும் பாங்கி யிறைவிக்கிறையோன்குறையறிவுறுத்தலுமாகிய நான்கும்வேண்டற் குரிய. பாங்கிநெறியினதருமைகூறலு மிறைமகளிறைவனைக்குறி விலக்கலும் பாங்கியிறைவனை வரவுவிலக்கலுமாகியமூன்றுமறுத்த ற்குரிய. பாங்கியவணுட்டணியியல்வினுதலு மவனுக்குத்தன்னுட்ட ணியியல்சாற்றலுந் தலைமகணேர்ந்துபாங்கியொடு சாற்றலுமாகியமூ ன்றுமுடன்படற்குரிய. தலைமகணேர்ந்தமை பாங்கிதலைவற்குணர்த் தலுங் குறியிடைநிறீஇத்தாய்துயிலறிதலு மிறைவிக்கிறைவன்வர வறிவுறுத்தலு மவட்கொண்டுசேறலுமாகிய நானகுங்கூட்டற்குரிய. தலைமகளையெதிர்ப்படுதலுந் தேற்றலும் புணர்தலுமாகிய மூன்றுங்கூ டற்குரிய. புகழ்தலுங்கையுறைகாட்டலுமாகிய விரண்டும்பாராட்ட ற்குரிய.தலைமகனிறைவியையில்வயின்விடுத்தலும்பாங்கிதலைமகளையி ற்கொண்டேகலுமாகிய விரண்டும்பாங்கிற் கூட்டற்குரிய. நேராதி றைவி நெஞ்சொடுகிளத்தலுந் தலைமகளாற்றினதருமை நினைந்திரங் கலும் பெருமகன்மயங்கலுந் தோழிதலைமகடுயர்கிளந்துவிடுத்தலுமா கியநான்கு முயங்கற்குரிய. பாங்கிகுறியுய்த்தகறலுந்திருமகட்புணர் ந்தவன்சேறலுமாகிய விரண்டு நீங்கற்குரிய. இவற்று ணேராதி றைவி நெஞ்சொடுகிளத்தலும் பெருமகளாற்றினதருமைநினைந்தி ரங்கலு மிறைமகளிறைவனைக் குறிவிலக்கலுமாகிய மூன்றும்வரை தல் வேட்கைக்கும் பொருந்தும். பாங்கிநெறியினதருமைகூறலுமி றைவனைவரவுவிலக்கலுந் தலைமகடுயர்கிலை கிளந்துவிடுத்தலுமாகிய மூன்றும்வரைவுகடாதற்கும் பொருந்தும். (சஉ)

அல்லகுறிவருந்தொழிற் கருமையென்றுங், கெல்லிக்கு றையிடையீ டிருவகைத்தாகும்.

இ - ன். நிறுத்தமுறையானே இரவுக்குறியிடையீட்டின்வகையு ணர் - ற்று. அல்லகுறி—தாகும் - அல்லகுறியும் வருந்தொழிற்கரு

மையுமென விரவுக்குறியிடையீடிரண்டுவகையினையுடைத்தாகும். - எ-று. அல்லகுறி, குறியல்ல. அதுமுன்றிலென்பதுபோலக்கொள்க. அல்லகுறிபாவது, தலைமகனானிகழ்த்தப்படுவனவாகியபுள்ளெழுப்பன் முதலாயினபிறிதொன்றானிகழ்தல். வருந்தொழிற்கருமை, தலைமகன் வருகிறதொழிற்கருமை. என்று, எண்ணிடைச்சொல். ஆங்க, அசை. (ச௩)

இறைவிக்கிறையோ யிறைவரவுணர்த்துழித், தான்குறிமருண்டமை தலைவியவட்குணர்த்தலும், பாங்கிதலைவன் றீங்கெடுத்தியம்பலும், புலந்தவன்போதலும் புலர்ந்தபின்வருங்கலும், தலைவிகண்டிரங்கலும் தன்றுணைக்குரைத்தலும், தலைமகளவலம் பாங்கிதணித்தலு, மிறைவன்மேற்பாங்கிகுறிபிழைப்பேற்றலு, மிறைவிமேலிறைவன் குறிபிழைப்பேற்றலு, மவள்குறிமருண்டமையவளவட்கியம்பலு, மவன்மொழிக்கொடுமைசென் றவளவட்கியம்பலு, மென்பிழைப்பன்றென் றிறைவிநேர்தலுமென, வொன்றுபன்னொன்று மல்லகுறிக்குரிய.

இ-ன். மேற்சொல்லப்பட்ட விரவுக்குறியிடையீட்டின்வகையிரண்டிலல்லகுறியின்பாகுபாடுணர் - ற்று. இறைவிக்—குரிய - இறைவிக்கிறையோனிறைவரவுணர்த்துழித்தான்குறிமருண்டமை தலைவியவட்குணர்த்தன் முதலாகவென்பிழைப்பன்றெனறிறைவிநேர்தலீறாகச்சொல்லப்பட்டபதினொன்றுமல்லகுறிக்குரியவாம். எ-று. உ-ம். இக்கோவையிலிரவுக்குறியிடையீட்டுக்குரிய முதற்பன்னிரண்டு செய்யுளையுமுறையேகாண்க. (சச)

தாயுநாயுமூருந்துஞ்சாமை, காவலர்கடுகுதனிலவுவெளிப்படுதல், கூகைகுழறுதல் கோழிகுரற்காட்டுதலாகியவேழுமல்லுக்குற்றதலைவன், வருந்தொழிற்கருமை பொருந்துதற்குரிய.

இ-ன். வருந்தொழிற் கருமைபொருந்துதலின் பாகுபாடுணர்-ற்று. தாயுநாயு—குரிய - தாய்துயிலாமைமுதலாகக்கோழிகுரற்காட்டலீறாகச்சொல்லப்பட்டவேழும் இரவுக்குறிக்கட்டலைமகன்வருந்தொழிற்கருமைபொருந்துதற்குரியவாம். எ-று. உ-ம். இக்கோவையிலிரவுக்குறியிடையீட்டிற் பின்னேழுசெய்யுளையுங்காண்க. இவ்வேழும்வரைவுகடாதற்கும்பொருந்தும். (சரு)

திரட்டியிவ்வாறு செப்பியவொன்பதிற், றிரட்டுமிரவுக் குறியிடையீட்டுவிரியே.

இ - ன். இரவுக்குறியிடையீட்டுவிரியிவையென்பதுணர் - ற்று. திரட்டி—விரி- (மேலிரண்டுசூத்திரத்துங்) கூட்டி யிப்படிச்சொல்லப் பட்டபதினெட்டுமிரவுக்குறியிடையீட்டுவிரியாம். எ - று. (சகு)

அச்சமுவர்த்த லாற்றாமையென, மெச்சியவரைதல்வே ட்கை மூவகைத்தே.

இ - ன். நிறுத்தமுறையானேவரைதல் வேட்கையின் வகையுண ர் - ற்று அச்சமுவர்த்தலாற்றாமையென மூவகைத்துமெச்சியவரை தல் வேட்கை - அச்சமு முவர்த்தலு மாற்றாமையுமென மூன்றுவகை யினையுடைத்தாம் விதிக்கப்பட்டவரைதல்வேட்கை. எ - று. (சஎ)

பருவரல்வினவிய பாங்கிக்கிறைவி, யருமறைசெவிலிய றிந்தமைகூறலுந், தலைமகன்வருந்தொழிற் கருமைசாற்றலு ந், தலைமகனூர்க்குச் செலவொருப்படுதலும், பாங்கியிறை வனைப் பழித்தலும்பூங்கொடி, யிறையோன்றன்னைநேர்ந் தி யற்படமொழிதலுங், கனவுநலிபுரைத்தலுங் கவினழிபுரைத் தலுந், தன்றுயர்தலைவற் குணர்த்தல்வேண்டலுந், துன்புறு பாங்கி சொல்லெனச்சொல்லலு,மலர்பார்த்துற்றவச்சக்கிள வியு, மாறுபார்த்துற்ற வச்சக்கிளவியுங்,காமமிக்ககழிபடர் கிளவியுந், தன்னுட்கையா றெய்திடுகிளவியு, நெறிவிலக்குவி த்தலுங் குறிவிலக்குவித்தலும், வெறிவிலக்குவித்தலும் பி றவிலக்குவித்தலுங், குரவரைவரைவெதிர் கொள்ளுவித்த லுமென, வுரைபெறவகுத்த வொன்பதிற்றிரட்டியும், வரை தல்வேட்கை விரியெனப்படுமே.

இ - ன். வரைதல்வேட்கையின்விரியுணர் - ற்று. பருவரல்— விரியெனப்படும் - பருவரல்வினவியபாங்கிக்கிறைவியருமறைசெவிலி யறிந்தமைகூறன்முதலாகக் குரவரைவரைவெதிர்கொள்ளுவித்தலீறா கச்சொற்பெறவகுத்தபதினெட்டும் வரைதல்வேட்கையின்விரியாம். எ- று. அனுவாதமுகத்தாற் பாங்கிதலைமகளைப்பருவரல் வினவலுங் கொள்க. உ - ம். ஷ கோவையில் வரைதல்வேட்கைக்குரியபத் தொன்பதுசெய்யுளையுங்காண்க. இவற்றுட் பருவரல்வினவியபாங் கிக்கிறைவியருமறைசெவிலியறிந்தமைகூறலுந் தலைமகன்வருந்தொ ழிற்கருமை சாற்றலு மலர்பார்த்துற்றவச்சக்கிளவியு மாறுபார்த்

துற்றவச்சக்கிளவியு மிந்நான்கோடு நெறிவிலக்குவித்தன்முதலிய நான்குமாகிய வெட்டுமச்சத்திற்குரிய. பாங்கியிறைவனைப்பழித்தலுந் துன்புறு பாங்கி சொல்லெனச்சொல்லலுமாகிய விரண்டுமுவர்த்தற்குரிய. ஏனையவெட்டுமாற்றுமைக்குரிய. இவ்வாறன்றிக்குரவரைவரை வெதிர்கொள்ளுவித்தலை யச்சத்தின்பாலுந், தலைமகனூர்க்குச்செல வொருப்படுதலும் பூங்கொடியிறையோன் றன்னைநேர்ந்தியற்படமொழிதலுங்கவினழிபுரைத்தலுமாகிய மூன்றனையு முவர்த்தலின்பாலுந், தலைமகன்வருந்தொழிற் கருமைசாற்றலையாற்றுமையின்பாலும்வைத்துவிரிகூறுவாருமுளர். (சஅ)

பொய்த்தன்மறுத்தல் கழறன்மெய்த்தலென், றொருநால் வகைத்தே வரைவுகடாதல்.

இ - ன். நிறுத்தமுறையானே வரைவுகடாதலின்வகையுணர்-ற்று. பொய்த்தன்—கடாதல் - பொய்த்தன்முதலாகமெய்த்தலீறாக நான்குவகையினையுடைத்துவரைவுகடாதல். எ - று. (சகூ)

வினவியசெவிலிக்கு மறைத்தமைவிளம்பலு, மலரறிவுறுத்தலுந் தாயறிவுணர்த்தலும், வெறியச்சுறுத்தலும் பிறர்வரைவுணர்த்தலும், வரைவெதிர்வுணர்த்தலும் வரையுநாளுணர்த்தலு, மறிவறிவுறுத்தலுங் குறிபெயர்த்திடுதலும், பகல்வருவானை யிரவுவருகென்றலு, மிரவுவருவானைப் பகல்வருகென்றலும், பகலினுமிரவினும் பயின்றுவருகென்றலும், பகலினுமிரவினு மகலிவணென்றலு, முரவோனூடு மூருங்குலனு, மரபும்புகழும் வாய்மையுங்கூறலு, மாறுபார்த்துற்றவச்சங்கூறலு, மாற்றாத்தன்மையாற்றக்கூறலுங், காவன்மிகவுரைத்தலுங் காமமிகவுரைத்தலுங், கனவுநலிபுரைத்தலுங் கவினழிபுரைத்தலு, மௌமுறைநாடி யியம்பியவிருபதும், வரைவுகடாதல் விரியெனப்படுமே.

இ - ன். வரைவுகடாதலின்விரியுணர் - ற்று. வினவிய—யெனப்படும் - வினவியசெவிலிக்குமறைத்தமைவிளம்பன்முதலாகக்கவினழிபுரைத்தலீறாகக்கூறப்பட்ட விருபதும்வரைவுகடாதல் விரியெனப்படும். எ - று. ஷிகோவையில்வரைவுகடாதற்குரியவிருபதுசெய்யுளையுமுறையேகாண்க. இவற்றுள் - வினவியசெவிலிக்குமறைத்தமைவிளம்பன்முதலாகப்பிறர்வரைவுணர்த்த லீறாகச்சொல்லப்பட்டவைந்தும்பொய்த்தற்குரிய. குறிபெயர்த்திடுதன்முதலாகப்பகலினுமிரவினுமகலிவணென்றலீறாகக்கூறப்பட்டவைந்து மறுத்தற்குரிய. உரவோனூடு மூருங்குலனுமரபும்புகழும் வாய்மையுங்கூறலொன்றுங்கழறற்குரித்து. ஏனையவொன்பது மெய்த்தற்குரிய. (௫0)

செலவறிவுறுத்தல் செலவுடன்படாமை, செலவுடன்ப டுத்தல் செலவுடன்படுதல், சென்றுழிக்கலங்க றேற்றியாற் றுவித்தல், வந்துழிநொந்துரை யென்றெழுவகைத்தே, யொன்றக்கூறிய வொருவழித்தணத்தல்.

இ-ன் நிறுத்தமுறையானே ஒருவழித்தணத்தலின்வகையுணர்-ற்று. செலவறி—தணத்தல் - செலவறிவுறுத்தன்முதலாக வந்துழி நோதலீறுகவேழுவகையினையுடைத்துப்பொருந்தக்கூறியவொருவழித்தணத்தல். எ-று. (ருக)

தன்பதிக்ககற்சிதலைவன்சாற்றலு,மென்சொற்பாங்கிவில க்கலுந்தலைவ, னீங்கல்வேண்டலும்பாங்கிவிடுத்தலுந், தலை விக்கவன்செலவுணர்த்தலுந்தலைவி, நெஞ்சொடுபுலத்தலுஞ் சென்றோனீடலிற், காமமிக்ககழிபடர்கிளவியுங், கோற்றொ டிப்பாங்கி யாற்றுவித்தலுமவன், வந்தமையுணர்த்தலும்வந் தோன்றன்னொடு, நொந்துவினாதலும் வெந்திறல்வேலோன், பாங்கியொடுநொந்துவினாதலும்பாங்கி, யிறைவியையாற்றுவி த்திருந்தவருமை, கூறலுமென்னுமாறிருகிளவியு, மொருவ ழித்தணத்தலின் விரியெனப்படுமே.

இ-ன். ஒருவழித்தணத்தலின் விரியுணர்-ற்று. தன்பதிக்—விரியெ னப்படும் - தன்பதிக்ககற்சி தலைவன்சாற்றன்முதலாகத் தலைவியைப் பாங்கியாற்றுவித்திருந்த வருமைகூறலீறுகச்சொல்லப்பட்ட பன்னி ரண்டுகிளவியுமொருவழித்தணத்தல்விரியென்றுகூறுவர்புலவர். எ-று. உ-ம். ஷெகோவையில் ஒருவழித்தணத்தற்குரிய பன்னிரண் டுசெய்யுளையுமுறையேகாண்க. இவற்றுட்டன்பதிக்ககற்சிதலைவன் சாற்றலும் பாங்கிதலைவிக்கவன்செலவுணர்த்தலும் செலவறிவுறுத்த ற்குரியன. தலைமகனைப் பாங்கிவிலக்கலொன்றுஞ் செலவுடன்படா மைக்குரித்து. தலைவனீங்கல் வேண்டல் செலவுடன்படுத்தற்குரித்து. பாங்கிவிடுத்தல் செலவுடன்படுதற்குரித்து. தலைமகணெஞ்சொடுபுல த்தலும் காமமிக்கழிபடர்கிளவியுமாகியவிரண்டுஞ்சென்றுழிக்கலங் கற்குரியன. தலைமகளையாற்றுவித்தலும் தலைமகன்வந்தமை தலைமகட் குணர்த்தலுமாகிய விரண்டுந்தேற்றியாற்றுவித்தற்குரியன. பாங்கி வந்தோன்றன்னொடு நொந்துவினாதன்முதலாகிய மூன்றும் வந்துழி நொந்துரைக்குரியன. (ருஉ)

பிரிவறிவுறுத்தல்பிரிவுடன்படாமை, பிரிவுடன்படுத்தல் பிரிவுடன்படுதல், பிரிவுழிக்கலங்கல் வன்புறைவன்பொறை

வருவழிக்கலங்கல் வந்துழிமகிழ்ச்சியென், றீருமையிற் கூறியவொன்பதுவகைத்தே, வரைவிடைவைத்துப்பொருள்வயிற்பிரிவே.

இ-ன். நிறுத்தமுறையானே வரைவிடைவைத்துப்பொருள்வயிற்பிரிதலின்வகையுணர்-ற்று. பிரிவறி—பிரிவு- பிரிவறிவுறுத்தன் முதலாகவந்துழிமகிழ்ச்சியீறாக வொன்பதுவகையினையுடைத்தாம்வரைவிடைவைத்துப்பொருள் வயிற்பிரிவு. எ-று. (௫௩)

என்பொருட்பிரிவுணர்த்தேந்திழைக்கென்றலு, நின்பொருட்பிரிவுரைநீயவட்கென்றலு, நீடேனென்றவனிங்கலும் பாங்கி, யோடரிக்கண்ணிக்கவன்செலவுணர்த்தலும், பூங்குழையிரங்கலும்பாங்கிகொடுஞ்சொற், சொல்லலுந்தலைவி கொடுஞ்சொற்சொல்லலும், வருகுவர்மீண்டெனப்பாங்கி வலித்தலும், பருவங்கண்டுபெருமகள்புலம்பலு, மிகுளைவம்பென்றலுமிறைமகண்மறுத்தலு, மவர்தூதாகிவந் தடைந்ததிப்பொழுதெனத், துணைவிசாற்றலும் பிணைவிழியாற்றலு, மவனவட்புலம்பலு மவன்வருகாலைப், பாகன்றன்னொடுமேகந்தன்னொடுஞ், சோகங்கொண்டவன் சொல்லலும் பாங்கி, வலம்புரிகேட்டவன் வரவறிவுறுத்தலும், வலம்புரிகிழத்திவாழ்த்தலும்வந்துழி, நினைத்தமைவினவலு நினைத்தமைசெப்பலு, மனைத்தகையவளை யாற்றுவித்திருந்தமை, பாங்கிகூறலுமெனு மாங்கெழுமூன்றும், வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிவின், விரியெனமொழிந்தனர்தெரிமொழிப்புலவர்.

இ-ன். வரைவிடைவைத்துப்பொருள்வயிற்பிரிவின்விரியுணர்—ற்று. என்பொருட்—புலவர் - என்பொருட்பிரிவுணர்த்தேந்திழைக்கென்றன்முதலாகத்தலைமகளையாற்றுவித்திருந்தமைபாங்கிகூறலீறாகச்சொல்லப்பட்ட விருபத்தொன்றும் வரைவிடைவைத்துப்பொருள்வயிற்பிரிதலின்விரியெனமொழிந்தனராய்ந்தறிவுடையோர். எ-று. உ-ம். ஷிகோவையில் வரைவிடைவைத்துப்பொருள்வயிற்பிரிதற்குரிய விருபத்தொருசெய்யுளையுமுறையேகாண்க. இவற்றுள்- என்பொருட்பிரிவுணர்த்தேந்திழைக்கென்றலாகியவொன்றும் பிரிவறிவுறுத்தற்குரித்து. பாங்கிநின்பொருட் பிரிவுரைநீயவட்கென்றலாகிய வொன்றும் பிரிவுடன்படாமைக்குரித்து. தலைமகனீடேனென்றலா

கியவொன்றும் பிரிவுடன்படுத்தற்குரித்து. பாங்கிதலைவிக்கவன் செல வுணர்த்தலாகிய வொன்றும் பிரிவுடன்படுதற்குரித்து. தலைமகளிரங்க லுங்கொடுஞ்சொற்சொல்லலும் பருவங்கண்டு பெருமகள் புலம்பலும றுத்தலுமாகிய நான்கும் பிரிவுழிக்கலங்கற்குரிய. பாங்கிகொடுஞ்சொ ற்சொல்லலும் வருகுவர்மீண்டெனப்பாங்கிவலித்தலும்பருவமன்று வம்பென்றலுமவர் தூதாகிவந்தடைந்ததிப்பொழுதென்றலுமாகிய நா ன்கும் வன்புறைக்குரிய. தலைமகளாற்றலாகியவொன்றும் வன்பொ றைக்குரித்து. தலைமகன்மீண்டுவருகாலை யவளைவட்புலம்பலும் பாக னொடுசொல்லலு மேகமொடுசொல்லலுமாகிய மூன்றும் வருவழிக்க லங்கற்குரிய. பாங்கிவலம்புரிகேட்டவன்வரவறிவுறுத்தன்முதலாகிய வைந்தும் வந்துழிமகிழ்ச்சிக்குரிய. (ருச)

இரண்டாவதுகளவியன் முற்றிற்று.

மூன்றாவது வரைவியல்.

வரைவெனப்படுவதுரவோன்கிழத்தியைக், குரவர்முத லோர்கொடுப்பவுங்கொடாமையுங், காரணமொடுபுணரக்கடி யயர்ந்துகொளலே.

இவ்வோத்தென்னபெயர்த்தோவெனின் வரைதலுணர்த்தினமையி ன்வரைவியலென்னும்பெயர்த்து. இவ்வோத்தினு ளிச்சூத்திரமென் னுதலிற்றோவெனின் வரைதலாவதிது வென்பதுணர் - ற்று. வரை வெனப்—கொளல்- வரைவென்றுசொல்லப்படுவதுதலைமகன்றலைமக ளைக்குரவர்முதலாயினோர் கொடுப்பவுங்கொடாதொழியவும்வதுவை ச்சடங்கொடுபொருந்த மணஞ்செய்துகொள்ளல். எ - று. (க)

வரைவுமலிவேயறத்தொடுநிலையென், றுரையமையிரண் டும்வரைவிற்குரிய, கிளவித்தொகையெனக் கிளத்தினர்பு லவர்.

இ - ன். வரைவிற்குரிய கிளவித்தொகையுணர் - ற்று. வரைவும லிவே—புலவர் - வரைவுமலிவு மறத்தொடுநிலையுமென்று (நூல்க ளுட்) கூறுதல்பொருந்துமவையிரண்டும் வரைவிற்குரியகிளவித்தொ கையெனச்சொன்னார்புலவர். - எ - று. (உ)

வரைவுமுயல்வுணர்த்தல் வரைவெதிர்வுணர்த்தல்,வரை வறிந்துமகிழ்தல் பராவல்கண்டுவத்தலென், றொருநால்வ கைத்தேவரைவுமலிதல்.

இ - ன். நிறுத்தமுறையானேவரைவு மலிதலின்வகையுணர்-ற்று. வரைவு—மலிதல் - வரைவுமுயல்வுணர்த்தன் முதலாகப்பராவல்கண் டுவத்தலீறாகச் சொல்லப்பட்ட நான்குவகையினையுடைத்தாம் வரை வுமலிதல். எ - று. (ங)

காதலன்முலைவிலைவிடுத்தமைபாங்கி, காதலிக்குணர்த்த லுங்காதலிநற்றா, யுள்ளமகிழ்ச்சியுள்ளலும்பாங்கி, தமர்வ ரைவெதிர்ந்தமை தலைவிக்குணர்த்தலு,மவளுவகையாற்றாது ளத்தொடுகிளத்தலுந், தலைவனைப்பாங்கிவாழ்த்தலுந்தலைவி, மணம்பொருட்டாக வணங்கைப்பராநிலை, காட்டலுங்கண் டோன்மகிழ்வுமென்றீட்டிய, விருமூன்றுமொன்றும்வரைவு மலிதற்காம், விரியெனவிளம்பினர்மெய்யுணர்ந்தோரே.

இ - ன். வரைவுமலிதலின் விரியுணர் - ற்று. காதலன்—மெய்யுணர்ந்தோர்-காதலன்முலைவிலைவிடுத்தமைபாங்கிகாதலிக்குணர்த்தன் முதலாகத் தலைமகளணங்கைப் பராநிலைகாட்டக் கண்டோன்மகிழ்த லீருகச் சொல்லப்பட்டவேழும் வரைவுமலிதற்காம் விரியென்று சொன்னுருண்மையறிந்தோர். எ - று. உ - ம். ஷைகோவையில்வரைவுமலிவுக்குரியவேழுசெய்யுளையு முறையேகாண்க. இவற்றுட்-காதலன்முலைவிலைவிடுத்தமைபாங்கிகாதலிக் குணர்த்தலுந்தலைவிமணம்பொருட்டாக வணங்கைப்பராநிலை பாங்கிதலைமகற்குக் காட்டலுமாகியவிரண்டும் வரைவுமுயல்வுணர்த்தற்குரிய. பாங்கிதமர்வரைவெதிர்ந்தமைதலைமகட்குணர்த் தல்வரைவெதிர்வுணர்த்தற்குரித்து. தலைவிநற்ருயுள்ளமகிழ்ச்சியுள்ளலு முவகையாற்று துளத்தொடுகிளத்தலுந்தலைவனைப்பாங்கி வாழ்த்தலு மாகிய மூன்றும் வரைவறிந்து மகிழ்தற்குரிய. தலைமகளணங்கைப்பராநிலைகண்ட தலைமகன் மகிழ்தலாகியவொன்றும் பராவல்கண்டுவத்தற்குரித்து. (சு)

முன்னிலைமுன்னிலைப் புறமொழியென்ருங், கன்னவிருவகைத்தறத்தொடுநிலையே.

இ - ன். அறத்தொடுநிலையின் வகையுணர்—ற்று. முன்னிலை—நிலை - முன்னிலைமொழியு முன்னிலைப்புறமொழியு மெனவிரு வகைத்தாகுமறத்தொடுநிலை. எ - று. மொழியென்பதனை முன்னுங்கூட்டப்பட்டது. (ரு)

கையறுதோழிகண்ணீர்துடைத்துழிக், கலுழ்தற்காரணங்கூறலுந்தலைவன், றெய்வங்காட்டித் தெளிப்பத்தெளிந்தமை, யெய்தக்கூறலு மிகந்தமையியம்பலு, மியற்பழித்துழி யியற்படமொழிதலுந், தெய்வம் பொறைகொளச் செல்குவமென்றலு, மில்வயிற்செறித்தமை சொல்லலுஞ் செவிலி, கனையிருளவன்வரக் கண்டமை கூறலு, மெனமுறையியம்பிய வேழும்புனையிழைத், தலைவியறத்தொடு நிலைதனக்குரிய.

இ - ன். தலைவியறத் தொடு நிற்றற்குரிய கிளவிகளையுணர்-ற்று. கையறு—குரிய-கையறுதோழி கண்ணீர் துடைத்துழிக்கலுழ்தற்குக்காரணங் கூறன்முதலாகச் செவிலி கனையிருளவன்வரக்கண்டமைகூறலீருகச் சொல்லப்பட்ட வேழுந்தலைமகளறத்தொடு நிலைதனக்குரிய கிளவிகளாம். எ - று. அனுவாதமுகத்தாற் கையறுதோ

ழி கண்ணீர்துடைத்தலும் பாங்கியியற்பழித்துரைத்தலுங் கொள்க. உ-ம். ஷிகோவையிலறத்தொடு நிற்றலின் முன்னுன்பது செய்யுளையு முறையேகாண்க. இவற்றுட் - கலுழ்தற்குக்காரணங் கூறலாகியவொன்றுமொழித் தேனையவெல்லாம் பாங்கிவினவாதொழியவுந் தலைமகளறத்தொடு நிற்றற்குரிய. (௬)

எறிவளைவேற்றுமைக் கேதுவினவினும்,வெறிவிலக்கியவழிவினவினும் பாங்கி,பூவேபுனலே களிறேயென்றிவை,யேதுவாகத்தலைப்பாடியம்பும்.

இ-ன். பாங்கியறத்தொடு நிற்றற்குரிய கிளவிகளையுணர்-ற்று- எறிவளை—டியம்பும் - செவிலிதலைமகள் வேற்றுமைக்குக் காரணங் கேட்பினும் வெறிவிலக்கிய விடத்துக்காரணங் கேட்பினும்பாங்கிபூவும் புனலுங்களிறுமாகிய விவைகாரண மாகப்புணர்ச்சி யினையவட்கறிவிக்கும். எ-று. அனுவாதமுகத்தானெறிவளைவேற்றுமைக் கேதுவினவலுப் வெறிவிலக்கலும் வெறிவிலக்கியவழிவினுதலு மீண்டுவரப்பெறுமெனக்கொள்க. உ-ம். ஷி கோவையிலறத்தொடு நிற்றலிலெறிவளை வேற்றுமைக்கேதுவி னுதன்முதலாகக் களிறுதருபுணர்ச்சியாலறத்தொடு நிற்றலீறுகக்கூறப்பட்ட வாறுசெய்யுளையுமுறையேகாண்க. பூவும்புனலுங் களிறுமாகியவிவற்று ளொன்றானறத்தொடுநிற்கவமையுமெனக. (௭)

மின்னிடைவேற்றுமை கண்டுநாய்வினவுழி, முன்னிலைமொழியான் மொழியுஞ்செவிலி.

இ-ன். செவிலியறத்தொடு நிற்றற்குரிய கிளவிகளையுணர்ற்று. மின்னிடை—செவிலி- தலைமகள்வேற்றுமை கண்டுநற்றாய்(செவிலியை) வினவியவிடத்து முன்னிலைமொழியானேசொல்லுஞ் செவிலி. எ-று. அனுவாதமுகத்தாற் றலைமகள்வேற்றுமைகண்டு நற்றாய் செவிலியைவினுதலகொள்க. உ-ம். ஷிகோவையிலறத்தொடுநிற்றலிற் பினனிரண்டுசெய்யுளையுங்காண்க. நற்றாய் குறிப்பினன்றி யறத்தொடுநிற்கப்பெறுளாதலிற் செய்யுளில்லை. (௮)

என்றுட்ணியம்பியவெல்லாங்களவிய,ணின்றுழியறத்தொடு நிற்றலின்விரியே.

இ-ன். அறத்தொடு நிற்றலின்விரியிவை யென்பதுணர் - ற்று. என்றுட—விரி - முன்மூன்றுசூத்திரத்துங் கூறப்பட்ட கிளவிகளெல்லாங் களவினதொழுக்கம் வெளிப்படாது நின்றவிடத்தறத்தொ

டுநிற்றலின் விரியாம் எ - று. இவற்றுட்டலைவிபறத் தொடுநிற்ற லுஞ்செவிலியறத்தொடுநிற்றலும்பாங்கி பூத்தருபுணர்ச்சிமுதன்மூ ன்றுலறத்தொடு நிற்றலு முன்னிலை மொழிக்குரிய. வெறிவிலக்க லொன்று முன்னிலைப்புற மொழிக்குரித்து. (௯)

போக்கேகற்பொடுபுணர்ந்த கௌவை, மீட்சியென்றுங் குவிளம்பியமூன்றும், வெளிப்படைக் கிளவியின் வழிப்படு தொகையே.

இ - ள். களவுவெளிப்பாட்டிற் குரியகிளவித் தொகையுணர் - ற்று. போக்கே—தொகை - உடன்போக்குங் கற்பொடுபுணர்ந்த கௌவையுமீட்சி யுமென்று சொல்லப்பட்ட மூன்றுங்(களவு) வெளிப்பாட்டுக்குரிய கிளவித்தொகையாம். எ - று. வரைவுமலிவேயறத் தொடுநிலையென், றுரையமை யிரண்டும் வரைவிற்குரிய,கிளவித்தொகை யெனக்கிளத்தினர் புலவர்-எனமுன்வரை யறுத்தமையா லிவ் வெளிப்பாடிவ்வியலுக்குப் பொருந்துவ தன் றெனிற்பொருந்தும். எங்ஙனமெனிலிவ்வெளிப் பாட்டிலு மறத்தொடுநிற் றலுளவாகலிற் பொருந்துமென்றுணர்க. ஆயினிவ்வெளிப் பாட்டுக்குரிய கிளவித் தொகையையவ்வரைவிற்குரியகிளவித் தொகை யோடுசேர்த்துக் கூறுததென்னை யெனினத்துணைச்சிறப்பின்மை யானென்றுணர்க. பின்னே யுடன்போக்கிடை யீட்டையும் வேறு கூறினதித்துணைச் சிறப்பி ன்மையா னென்றுணர்க. (௧௦)

போக்கறிவுறுத்தல் போக்குடன்பட்ர்மை, போக்குடன் படுத்தல்போக்குடன்படுதல்,போக்கல்விலக்கல் புகழ்தறேற் றலென், றியாப்பமையுடன்போக் கிருநான்குவகைத்தே.

இ - ள். நிறுத்தமுறையானேயுடன் போக்கின் வகையுணர்-ற்று- போக்கறி—வகைத்து-போக்கறி வுறுத்தன் முதலாகத்தேற்றலீறுக வெட்டுவகையினையுடைத்தாமன்பமைந்தவுடன் போக்கு. எ-று (௧௧)

பாங்கிதலைவற் குடன்போக்குணர்த்தலு,மாங்கவன்மறுத்தலுமவளுடன்படுத்தலுந், தலைவன்போக்குடன்படுதலும் பாங்கி, தலைவிக்குடன்போக்குணர்த்தலுந்தலைவி, நாணழிவிரங்கலுங்கற்புமேம்பாடு, பூண்முலைப்பாங்கிபுகறலுந்தலைவி, யொருப்பட்டெழுதலும் விருப்புடைப்பாங்கி, சுரத்தியல்புரைத்துழிச்சொல்லலும்பாங்கி,கையடைகொடுத்தலும்வைகிருள்விடுத்தலு, மவன்சுரத்துய்த்தலு மசைவறிந்திருத்தலு,

முவந்தலர்சூட்டியுண்மகிழ்ந்துரைத்தலுங், கண்டோரயிர்த்தலுங் காதலின்விலக்கலும், தன்பதியணிமைசாற்றலுந்தலைவன், றன்பதியடைந்தமை தலைவிக்குணர்த்தலு மென்றிவை யொன்பதிற் றிருவகைக்கிளவியு, மொன்றியவன்பினுடன் போக்குவிரியே.

இ - ன். உடன்போக்கின்விரியுணர். ற்று. பாங்கி—விரி-பாங்கிதலைவற்குடன்போக்குணர்த்தன் முதலாகத்தலைவன்றன் பதியடைந்தமைதலைவிக்குணர்த்த லீறாகச்சொல்லப்பட்டபதினெட்டும்பொருந்திய வன்பினையுடையவுடன்போக்குவிரியாம். எ - று. உ - ம். ஷை கோவையிலுடன்போக்கிற்குரிய பதினெட்டுச்செய்யுளையுமுறையே காண்க. இவற்றுட். பாங்கிதலைமகற்குடன்போக்குணர்த்தலுந்தலைவிக்குடன்போக்குணர்த்தலுமாகிய விரண்டும் போக்கறிவுறுத்தற்குரிய. தலைமகன்மறுத்தலுந் தலைவிநாணழிவிரங்கலுமாகியவிரண்டும் போக்குடன்படாமைக்குரிய பாங்கிதலைவனையுடன்படுத்தலுங் கற்புமேம்பாடுகூறலுமாகிய விரண்டும்போக்குடன்படுத்தற்குரிய. தலைவன்போக்குடன்படுதலுந் தலைவியொருப்பட்டெழுதலும் பாங்கிசுரத்தியல்புரைத்துழிச்சொல்லலுமாகிய மூன்றும்போக்குடன் படுதற்குரிய. பாங்கிகையடைகொடுத்தலும்வைகிருள்விடுத்தலுந் தலைமகன்றலைமகளைச்சுரத்துய்த்தலுமாகிய மூன்றும்போக்கற்குரிய. தலைமகன்றலைவியசைவறிந்திருத்தலுங் கண்டோர்காதலின்விலக்கலுமாகிய விரண்டும்விலக்கற்குரிய. தலைவன்றலைவியையுவந்தலர் சூட்டியுண்மகிழ்ந்துரைத்தலுங்கண்டோரயிர்த்தலுமாகிய விரண்டும்புகழ்தற்குரிய. கண்டோர் தன்பதியணிமைசாற்றலுந் தலைவன்றன்பதியடைந்தமை தலைவிக்குணர்த்தலுமாகிய விரண்டுந்தேற்றற்குரிய. (௧௨)

செவிலிபுலம்ப னற்றாய்புலம்பல், கவர்மனைமருட்சிகண் டோரிரக்கஞ், செவிலிபின்றேடிச் சேறலென்றாங்குக், கற் பொடுபுணர்ந்த கௌவையைவகைத்தே.

இ - ன். நிறுத்தமுறையானே கற்பொடுபுணர்ந்தகௌவையின்வகையுணர். ற்று. செவிலிபுலம்— வகைத்து - செவிலிபுலம்பன்முதலாகச்செவிலிபின்றேடிச் சேறலீறாகக் கற்பொடுபுணர்ந்தகௌவையைந்துவகையினையுடைத்தாம். எ - று. மனையெனினு நற்றாயெனினுமொக்கும். (௧௩)

வினவியபாங்கியினுணர்ந்தகாலை, யினையலென்போர்க் கெதிரழிந்துமொழிதலுந், தன்னறிவின்மை தன்னைநொந்து

ரைத்தலுந், தெய்வம்வாழ்த்தலு மிவ்வொருமூன்று, மிலங்கிழைச்செவிலிபுலம்புதற்குரிய.

இ-ன். செவிலிபுலம்புதற்குரிய கிளவிகளையுணர்-ற்று. வினவியபாங்கி—குரிய - வினவியபாங்கியினுணர்ந்தகாலை யினையலென்போர்க்கெதிரழிந்து மொழிதன்முதலாகத் தெய்வம்வாழ்த்தலீறுகச் சொல்லப்பட்ட மூன்றுந்தலைமகள் செவிலித்தாய்புலம்பற்குரியவாம். எ-று. அனுவாத முகத்தாலீண்டுச்செவிலி பாங்கியை வினுதலும்பாங்கிசெவிலிக்குணர்த்தலு, மேல்வருஞ் சூத்திரத்திற் செவிலிநற்றாய்க்கறத்தொடுநிற்றலுங்கொள்க. இவ்வாறுண்டாண்டு வருவனவனைத்துங்கொள்க. உ-ம். ஷ கோவையிற்கற்பொடுபுணர்ந்த கௌவையின் முன்னைந்து செய்யுளையு முறையேகாண்க. (கச)

செவிலியறத்தொடுநிற்றலிற்கவலையில், பாங்கிதன்னொடும்பாங்கியர்தம்மொடு, மயலார்தம்மொடும் பயிலிடந்தம்மொடுந், தாங்கலளாகிச்சாற்றியவெல்லாம், பூங்கொடிநற்றாய்புலம்பற்குரிய.

இ-ன். நற்றாய்புலம்புதற்குரியகிளவிகளையுணர்-ற்று. செவிலி—குரிய - செவிலியறத்தொடு நிற்றலிற்கவலையிற் பாங்கிதன்னொடுபுலம்பன் முதலாகச்சொல்லப்பட்ட வெல்லாந்தலைமகணற்றாய்புலம்பற்குரியவாம். எ-று. உ-ம். ஷ கோவையிற்கற்பொடுபுணர்ந்தகௌவையிற்செவிலிநற்றாய்க்கறத் தொடுநிற்றன்முதலாகநற்றாய்தலைமகட்பயிலிடந்தன்னொடு புலம்பலீறுகக்கூறப்பட்ட வாறுசெய்யுளையுமுறையேகாண்க. (கரு)

நிமித்தம்போற்றலுஞ் சுரந்தணிவித்தலுந், தன்மகண்மென்மைத் தன்மைக்கிரங்கலு, மிளமைத்தன்மைக்குளமெலிந்திரங்கலு, மச்சத்தன்மைக் கச்சமுற்றிரங்கலு, மெனவிவையைந்துமனைமருட்சிக்குரிய.

இ-ன். மனைமருட்சிக்குரியகிளவிகளையுணர்-ற்று. நிமித்தம்—குரிய- நிமித்தம்போற்றன்முதலாகவச்சத்தன்மைக் கச்சமுற்றிரங்கலீறுகச்சொல்லப்பட்ட வைந்துநற்றாய்மருட்சிக்குரியவாம். எ-று. உ-ம் ஷ கோவையிற்கற்பொடுபுணர்ந்த கௌவையினிமித்தம்போற்றன் முதலாக வச்சத்தன்மைக் கச்சமுற்றிரங்கலீறுகக் கூறப்பட்ட வைந்துகிளவிக்குரிய வைந்துசெய்யுளையு முறையேகாண்க, (கசு)

ஆயமுந்தாயு மழுங்கக்கண்டோர், காதலினிரங்கல் கண்டோரிரக்கம்.

இ - ன். கண்டோரிரக்கத்திற்குரிய கிளவியையுணர் - ற்று. ஆய முந்—ரிரக்கம் - தலைமகளாயத்தாருந்தாயு மிரங்கக்கண்டோர்காதலி னுலிரங்குதல் கண்டோரிரக்கம். எ - று. உ - ம். ஷை கோவையிற் கண்டோரிரங்குதற்குரிய செய்யுளைக்காண்க. (கஎ)

ஆற்றுத்தாயைத்தேற்றலுமாற்றிடை, முக்கோற்பகவரை வினுதலுமிக்கோ, ரேதுக்காட்டலு மெயிற்றியொடுபுலம்ப லுங், குரவொடுபுலம்பலுஞ்சுவடுகண்டிரங்கலுங், கலந்துட ன்வருவோர்க் கண்டுகேட்டலுமவர், புலம்பதேற்றலும் புதல்வியைக்காணுது, கவலைகூர்தலுமெனு மிவையொன்பானுஞ், செவிலிபின்றேடிச்சேறற்குரிய.

இ - ன். செவிலிபின்றேடிச் சேறற்குரிய கிளவிகளையுணர் - ற்று. ஆற்றுத்—குரிய - ஆற்றுத்தாயைத்தேற்ற லீறுகப்புதல்வியைக்காணு துகவலைகூர்தலீறுக்கூறப்பட்ட வொன்பதுஞ்செவிலிபின்றேடிச்சே றற்குரியவாம். எ - று. உ - ம். ஷைகோவையிற் கற்பொடுபுணர்ந் தகௌவையிற் பின்னென்பது செய்யுளையு முறையேகாண்க. (கஅ)

முற்படமொழிந்த முறையெழுமூன்றுங், கற்பொடுபுணர்ந்த கௌவையின்விரியே.

இ - ன். கற்பொடுபுணர்ந்த கௌவையின்விரியுணர் - ற்று. முற்பட—விரி-முன்னைந்து சூத்திரத்துஞ் செவிலி தேற்றுவார்க்கெதிரழிந் துமொழிதன் முதலாகச்செவிலி புதல்வியைக் காணுதுகவலை கூர்தலீறுகக்கூறப்பட்ட விருபத்தொருகிளவியுங் கற்பொடு புணர்ந்த கௌவையின்விரியாம். எ - று. (கக)

தெளித்தன்மகிழ்ச்சி வினுதல்செப்பலென, வெளிப்பட வுரைத்த மீட்சிநால் வகைத்தே.

இ - ன். நிறுத்தமுறையானே மீட்சியின்வகையுணர் - ற்று. தெளித்தன்—வகைத்து - தெளித்தன் முதலாகச் செப்பலீறுகமீட்சிநான் குவகையினையுடைத்தாம். எ-று. (உ0)

தலைவிசேணகன்றமை செவிலிதாய்க்குணர்த்தலுந், தலைவன்றம்மூர் சார்ந்தமை சாற்றலுந், தலைவிமுன்செல்வோர்த ம்மொடுதன்வரல், பாங்கியர்க்குணர்த்தி விடுத்தலுமாங்கவர், பாங்கியர்க்குணர்த்தலு மாங்கவர்கேட்டு, நற்றுய்க்குணர்த்த லுநற்றுய்கேட்டவ, னுளங்கோள்வேலனை வினுதலுமெனவு டன், விளம்பிருமூன்று மீட்சியின்விரியே.

இ - ன். மீட்சியின் விரியுணர் - ற்று. தலைவி—விரி - தலைவிசே ணகன்றமை செவலிதாய்க்குணர்த்தன் முதலாக நற்றாய் தலைமகனு ளங்கோள்வேலனை வினுத லீறாகக் கூறப்பட்ட வாறு மீட்சியின் விரியாம். எ - று. உ - ம். ஷை கோவையின் மீட்சிக்குரிய வாறுசெய்யு ளையுமுறையேகாண்க. இவற்றுட்டலைவிசேணகன்றமை செவிலி தாய்க்குணர்த்தலுந் தலைவன் றம்மூர்சார்ந்தமைசாற்றலுமாகிய விர ண்டுந் தெளித்தற்குரிய. தலைவி முன்செல்வோர்தம்மொடு தன்வரல் பாங்கியர்க்குணர்த்தி விடுத்தலும் பாங்கியர்நற்றாய்க் குணர்த்தலுமா கியவிரண்டு மகிழ்ச்சிக்குரிய. நற்றாய்தலைமகனுளங்கோள் வேலனை வினுதலாகிய வொன்றும் வினுதற்குரித்து. முன்செல்வோர்பாங்கியர்க் குணர்த்தலாகிய வொன்றுஞ் செப்பற்குரித்து. (உக)

மடந்தையையுடன்போய் வரைந்துமீடற்கு,மவண்மனைவ ரைதற்குந் தன்மனைவரைதற்கு, மிவையைந்துமுரிய செவிலி கூற்றொழித்தே.

இ - ன். மேற்கூறப்பட்ட மீட்சிக்குரிய கிளவிகளிற் றலைமகன்ற லைமகளைப் புணர்ந்துடன்போய்த் தன்னூரின்கண்ணே வரைந்துமீட ற்குஞ் சுரம்போய்மீண்டுவந் தவண்மனைவரைதற்குந் தன்மனைவ ரைதற்கு முரியகிளவிகளிவையென்பதுணர். ற்று - மடந்தையை— றொழித்து - மடந்தையையுடன்போய் வரைந்துமீடற்கும் வரையாம ன்மீண்டவளதுமனையின் கண்ணேயாத றன்மனையின்கண்ணேயா தல் வரைந்துகோடற்கு மிலக்கணத்தினுரியவாஞ் செவிலிகூற்றாய வொன்றையுமொழித் தல்லாத வைந்தும். எ - று. (உஉ)

வினுதல்செப்பன் மேவலென்றிறைவன், றனுதில்வரைத ருன்மூவகைத்தே.

இ - ன். தலைமகன்றலைமகளை யவண்மனைவரைதற்கு மேலேகூற ப்பட்டவைந்துகிளவிகளுமேயன்றிப்பிறகிளவிகள் வேண்டுவனவல்ல வாதலினதனையொழித்துத் தன்மனைவரைதற்கு முடன்போய் வரைந் துமீடற்கு மவற்றோடு மின்னும்வேண்டுவன பிறவிற்குமுரிய கிளவிக ளையுணர்த்துவான்றொடங்கி முதற் றன்மனைவரைதலின் வகையுணர். ற்று. வினுதல்—மூவகைத்து - வினுதலுஞ் செப்பலு மேவலுமென த்தலைவன் றன்மனைக்கண்ணே வரைந்துமீடன் மூன்றுவகையினை யுடைத்தாம்,எ - று. (உ௩)

பணிமொழிநற்றாய் மணனயர்வேட்கையிற், செவிலியை வினாதலுஞ்செவிலிக்கிகுளை,வரைந்தமையுணர்த்தலும் வரைந்தமைசெவிலி, நற்றாய்க்குணர்ததலு முற்றாங்கிருவருந,தலைவியிலவந்துழிததலைவனபாங்கிக, கியான்வரைந்தமைநுமர்க்கியமபு சென்றென்றலுந,தானதுமுன்னே சாற்றியதுரைத்தலு,மென்னுமிவ்வைந்து மின்னிலைவேலோன், மன்னியதன்மனைவரைதலின்விரியே.

இ - ன்.தன்மனைவரைதலின்விரியுணர். ற்று. பணிமொழி—விரி- பணிமொழிநற்றாய் மணனயர்வேட்கையிற்செவிலியைவினாதன் முதலாகப் பாங்கி தானதுமுன்னேசாற்றிய துரைத்தலீறாகச்சொல்லப்பட்டவைந்து மீண்டதலைமகன் றலைமகளைத்தன்மனையின்கண்ணேவரைந்து கோடலின்விரியாம். எ - று. உ - ம். ஷ கோவையிற்றன்மனைவரைதற்குரியவைந்துசெய்யுளையு முறையேகாண்க. இவற்றுணற்றாய் மணனயர்வேட்கையிற் செவிலியை வினாதலாகியவொன்றும் வினாதற்குரித்து. வரைந்தமைபாங்கி செவிலிக்குணர்த்தலும் வரைந்தமைசெவிலிநற்றாய்க்குணர்த்தலும் பாங்கி தானதுமுன்னே சாற்றியதுரைத்தலுமாகிய மூன்றுஞ்செப்பற்குரிய.தலைமகன்வரைந்தமைநுமர்க்கியம்பு சென்றென்றலாகிய வொன்றுமேவற்குரித்து. (௨௪)

ஆதியொன்றொழித்தல்லனநான்கு, மாதினையுடன்போய்வரைந்துமீடற்கு, நீதியினுரிய நினையுங்காலை.

இ - ன். புணர்ந்துடன்போய்த் தன்னூரின்கண்ணே வரைந்துமீடற் கின்னும்வேண்டுவனகிளவிகளையுணர் - ற்று. ஆதி—காலை-முற்சூத்திரத்திற் கூறப்பட்ட கிளவிகளுணற்றாய் மணனயர்வேட்கையிற்செவிலியைவினாதலொன்று மொழித் தேனையநான்குந்தலைமகன் புணர்ந்துடன்போய்த் தலைமகளைத்தன்னூரில் வரைந்துமீளுதற்குரியவாமாராயுங்காலத்து. எ - று. (௨௫)

இருவரில்லிற்று மியைந்திடிபத்து, மொருவகைமீண்டு வரைதலின்விரியே.

இ - ன். புணர்ந்துடன்போய் மீண்டுவரைதலின்விரியிவையென்பதுணர்-ற்று. இருவ—விரி—(தலைமகன் றன்னூர்சார்ந்தமையுணர்த்தன்முதலாகப் பாங்கிதானதுமுன்னேசாற்றிய துரைத்தலீறாக) வவண்மனை வரைதற்குந் தன்மனைவரைதற்குமுரிய கிளவிபத்துமொருப

டியாக வுடன்போய் வரைந்துகோடலின் விரியாம். எ - று. ஒருப டியென்றதுமேற்கூ திரங்களுட் கூற்சி நீக்குதற் கெனக்கொள்க. அவண்மனைவரை லுந் தன்மனைவரைதலு மீண்டுவரைதலின் பாகு பாடாதலி னிரண்டுவரைவையுமொருவிரியின்பாற்படுத்த தென்றுணர்க. உடன்போய்வரைதற்கு நற்றாய்மணனயர்வேட்கையிற்செவிலியை வினாதலொன்று மொழித் தேனையகிளவிகளேயன்றிப் பிற கிளவிகளில்லையா லி னதன்விரியு மிதனுளருத்தாபத்தியாற் கொள்ளக்கிடக்கின்மையின் வேறுசூத்திரஞ் செய்திலரென்றுணர்க. அவண்மனைவரை தல் தனமனைவரைத லுடன்போய்த் தன்னூரின்கண்ணேவரைந்து மீடலாகிய விவற்று ளொன்றற் குரிய கிளவிகளேனையவற்றிற்குமாகுமாலென்னையெனி னிவற்றுளொன்று நிகழினேனையநிகழாவாதலினென்றுணர்க (உ௫)

போக்கறிவுறுத்தல் வரவறிவுறுத்த, னீக்கமிரக்கமொடு மீட்சியென்றாங், குடன்போக்கிடையீ டொருநால்வகைத்தே.

இ - ன். உடன்போக்கிடையீட்டின்வகையுணர் - ற்று. போக்கறி— வகைத்து - போக்கறிவுறுத்தன் முதலாகமீட்சியீறாகவுடன்போக்கிடையீடுநான்கு வகையினையுடைத்தாம். எ - று. (உ௭)

நீங்குங்கிழத்திபாங்கியர்தமக்குத், தன்செலவுணர்த்திவிடுத்தலுந்தலைமகடன்செலவீன்றாட் குணர்த்திவிடுத்தலு, மீன்றாட்கந்தணர்மொழிதலுமீன்றா, ளறத்தொடுநிற்றலிற்றமர்பின்சேறலைத், தலைவிகண்டுதலைவற்குணர்த்தலுந், தலைமகட்டன்னைத்தலைமகன்விடுத்தலுந், தமருடன்செல்பவளவன்புறநோக்கிக், கவன்றுரைத்தலுமென நுவன்றவையாறு, முடன்போக்கிடையீட்டுவிரியாகும்மே.

இ - ன். உடன்போக்கிடையீட்டின் விரியுணர் - ற்று. நீங்கும்— விரி - நீங்குங் கிழத்தி பாங்கியர்தமக்குத்தன்செலவுணர்த்திவிடுத்தன் முதலாகத் தமருடன் செல்பவ ளவன்புறநோக்கிக் கவன் றுரைத்தலீறாகச்சொல்லப்பட்ட வாறு முடன் போக்கிடையீட்டுவிரியாம். எ - று. உ - ம். ஷ் கோவையிலுடன்போக்கிடையீட்டுக்குரிய வாறுசெய்யுளையுமுறையேகாண்க. இவற்றுள். முன்னையமூன்றும் போக்கறிவுறுத்தற்குரிய. பின்னையமூன்றும்வரவறிவுறுத்தன் முதலாகியமூன்றற்குந் தனித்தனியுரிய. (உ௮

தன்னூர்வரைதலுந் தன்மனைவரைதலு, மென்னுமிவ்விரண்டொழிக்கெவற்றினுங் கிழவோ, னந்தணர்சான்றோர் முன்னிட்டருங்கலந், தந்துவரைதறகுதியென்ப.

இ-ள். முற்கூறப்பட்ட வரைவுகளுட் பொருந்துவதோர்வேறுபாடுணர்-ற்று. தன்னூர்—யென்ப- உடன்போய்த்தன்னூரின்கண்ணேவரைதலு மீண்டுவந்து தன்மனைக்கண்ணே வரைதலுமாகிய விரண்டுமொழித் தல்லாதவெல்லாவரைவின்கண்ணுந் தலைமகனந்தணரையுஞ் சான்றோரையுமுன்னிட் டருங்கலங் கொடுத்துவரைதலுலகத்தியற்கையெனச் சொல்லுவர் புலவர். எ-று. இவ்வாறுவரைந்துகொண்டுழிக் கண்டோர்மகிழ்ந்து கூறியதற்கு. உ-ம். ஷிகோவையில் வரைதற்குரிய செய்யுளைக்காண்க. (௨௬)

மூன்றாவது வரைவியன்முற்றிற்று.

நான்காவது கற்பியல்.

பொற்பமைசிறப்பிற்கற்பெனப்படுவது, மகிழ்வுமூடலு மூடலுணர்த்தலும்,பிரிவும்பிறவு மருவியதாகும்.

இவ்வோத்துக்கற்புணர்த்தினமையிற் கற்பிய லென்னும் பெயர்த்து. இவ்வோத்தினு ளிச்சூத்திர மென்னுதலிற்றோவெனின் கற்பெ ன்னுங் கைகோளதிலக்கணமுணர் - ற்று. பொற்பமை—தாகும் பொலிவமைந்த சிறப்பினையுடைய கற்பென்று சொல்லப்படுவ துள்ளமகிழ்ச்சியு மூடலு மூடலுணர்த்தலும் பிரிவும் பிறவும்பொருந்தியதாகும். எ-று. பிறவென்றதனால் பிரிந்துழிவரும் விகற்ப மெல்லாங் கொள்க. (க)

இல்வாழ்க்கையே பரத்தையிற்பிரிவே, யோதற்பிரிவே காவற் பிரிவே,தூதிற்பிரிவே துணைவயிற்பிரிவே,பொருள்வயிற்பிரிவெனப் பொருந்தியவேழும், வளமலிகற்பிற் கிளவித் தொகையே

இ - ன்.கற்புக்குரியகிளவித்தொகையுணர்- ற்று·இல்வாழக்கை—தொகை- இல்வாழ்க்கைமுதலாகப் பொருள்வயிற்பிரிதலீறாகச் சொல்லப்பட்ட வேழுங் கற்பின்கிளவித்தொகையாம். எ - று. (உ)

கிழவோன்மகிழ்ச்சி கிழத்திமகிழ்ச்சி, பாங்கிமகிழ்ச்சிசெவிலிமகிழ்ச்சியென், றீங்குநால்வகைத்தில்வாழ்க்கையே.

இ - ன். நிறுத்தமுறை யானே இல்வாழ்க்கையின்வகையுணர்ற்று. கிழவோன்—வாழ்க்கை- கிழவோன் மகிழ்ச்சிமுதலாகச்செவிலிமகிழ்ச்சி யீறாகச்சொல்லப்பட்ட நாலுவகையினையுடைத்தாமில் வாழ்க்கை. எ - று. (ங)

தலைவன்றலைவிமுன் பாங்கியைப்புகழ்தலுந்,தலைவனைப்பாங்கிவாழ்த்தலுந்தலைவியை,வரையுநாளளவும் வருந்தாதிருந்தமை,புரையாயென்றலும் பெருமகளுரைத்தலுந், தலைவனைப் பாங்கிவரையுநாளளவு, நிலைபெறவாற்றிய நிலைமைவினாதலு, மன்றன்மனைவருசெவிலிக்கிகுளை, யன்புறவுணர்த்தலும் வா

ழ்க்கை நன்றறைதலு, மணமனைச்சென்று வந்த செவிலி, பொற்றொடிகற்பினற்றாய்க் குணர்த்தலு, நன்மனைவாழ்க்கைத்தன்மையுணர்த்தலு, மன்னவர்காதலறிவித்தலுமெனு, மின்னவை பத்துமில்வாழ்க்கைவிரியே.

இ-ன், இல்வாழ்க்கையின் விரியுணர்-ற்று. தலைவன் — விரி- தலைவன்றலைவிமுன் பாங்கியைப் புகழ்தன் முதலாக வன்னவர்காதலறிவித்தலீறாகச் சொல்லப்பட்டபத்து மில்வாழ்க்கை விரியாம். எ-று. உ-ம். ஷை கோவையிலில்வாழ்க்கைக்குரியபத்துச்செய்யுளையுமுறையேகாண்க. இவற்றுட் டலைவன் றலைவிமுன்பாங்கியைப் புகழ்தலாகிய வொன்றுங் கிழவோன்மகிழ்ச்சிக்குரித்து. தலைவனைப்பாங்கி வாழ்த்தன்முதலாகச் செவிலிக்கு வாழ்க்கைநன் றென்றலீறாகச் சொல்லப்பட்டவாறனுட் பெருமகளுரைத்தலாகியவொன்றுங் கிழத்திமகிழ்ச்சிக்குரித்து. அல்லாதவைந்தும் பாங்கி மகிழ்ச்சிக்குரிய. செவிலிநற்றாய்க்குத் தலைமகள் கற்பியலுணர்த்தன் முதலாகிய மூன்றுஞ் செவிலி மகிழ்ச்சிக்குரிய. (௪)

வாயில்வேண்டல் வாயின்மறுத்தல், வாயினேர்வித்தல் வாயினேர்தலென், றாயபரத்தையி னகற்சிநால்வகைத்தே.

இ-ன். நிறுத்தமுறையானே பரத்தையிற் பிரிவின்வகையுணர்ற்று. வாயில் — வகைத்து - வாயில்வேண்டன் முதலாக வாயினேர்தலீறாகப் பரத்தையிற்பிரிவு நான்குவகையினையுடைத்தாம். எ-று. (௫)

காதலன் பிரிவுழிக் கண்டோர்புலவிக், கேதுவிதாமவ்விறைவிக்கென்றலுங், தனித்துழியிறைவி துனித்தழுதிரங்கலு, மீங்கிதுவென்னெனப் பாங்கிவினாதலு, மிறைமகன் புறத்தொழுக் கிறைமகளுணர்த்தலுந், தலைவியைப்பாங்கி கழறலுந்தலைவி, செவ்வணியணிந்து சேடியைவிடுப்புழி, யவ்வணியுழையர்கண் டழுங்கிக்கூறலும, பரத்தையர்கண்டு பழித்தலும்பரத்தைய, ருலகியனோக்கிவிடுத்தலிற்றலைவன், வரவுகண்டுவந்து வாயில்கண்மொழிதலும், வரவுணர்பாங்கி யரிவைக்குணர்த்தலு, முதிராவிளமுலை யெதிர்கொண்டுபணிதலும், புணர்ச்சியின்மகிழ்வுமென் றுணர்த்துபன்னொன்று, முணர்த்தவுணருமூடற்குரிய.

இ - ள். பரத்தையிற்பிரிவின்கிளவியை யுணர்த்துவான்றொடங்கி யவற்று ளுணர்த்தவுணருமூடலு முணரா தவுணராவூடலுமென் னுமூடற்பாகுபாட்டையுமுணர்த்த வேண்டி யுணர்த்தவுணருமூடற் குரிய கிளவிகளையுணர்- ற்று. காதலன் — குரிய- காதலன் பிரிவுழிக் கண்டோர் புலவிக்கேது வித்தமவ்விறைவிக் ககன்றன் முதலாகப் புணர்ச்சியின் மகிழ்ச்சியீறாகச் சொல்லப்பட்ட பதினொன்று முணர்த்த வுணருமூடற்குரியவாம். எ- று. உ- ம். திருக் கோவையிற் பரத்தையிற்பிரிவின்முன்னருள்ள பதினொரு செய்யுளையு முறையேகாண்க. (சு)

வெள்ளணியணிந்து விடுத்துழிப்புள்ளணி, மாலைவேலண் ணலவாயில்வேண்டலுந், தலைவிமெய்யாடிய திருவினைசாற்ற லுந், தலைவன்றன்மனத்துவகைகூர்தலுந், தலைவிக்கவன்வரல் பாங்கியுணர்த்தலுந், தலைவியுணர்ந்து தலைவனொடுபுலத்தலு ம், பாணன் முதலாப்பாங்கியீறாப், பகரியவாயில்கள்பெரி யோன்விடுத்துழி, மறுத்தலும்விருந்தொடுவந்துழிப்பொறு த்தல்கண், டிறையோன்மகிழ்தலு மிறைமகள்விருந்துகண், டொளித்தவூடல் வெளிப்படநோக்கிச், சீறேலென்றவள் சீ றடிதொழலுமிஃ, தெங்கையர்காணி னன்றன்றென்றலு,மங் கவர்யாரையுமறியேனென்றலுங், காமக்கிழத்தியைக்கண்ட மைபகர்தலுந்,தாமக்குழலியைப்பாங்கி கணித்தலுந்,தணியா ளாகத்தலைமகனூடலு,மணிவளைப்பாங்கி யன்பிலைகொடியை யென், றிணர்த்தார்மார்பனையிகழ்தலும்பிறவு, முணர்த்தவு ணராவூடற்குரிய.

இ - ள். உணர்த்தவுணராவூடற்குரிய கிளவிகளையுணர்- ற்று. வெள்ளணி—குரிய - வெள்ளணியணிந்து விடுத்துழித்தலைவன்வாயி ல்வேண்டன்முதலாகப் பாங்கிதலைவனையன்பிலைகொடியையென்றிகழ் தலீறாகச் சொல்லப்பட்டனவும் பிறவு முணர்த்தவுணராவூடற்குரிய வாம். எ - று. உ - ம். திருக் கோவையிற் பரத்தையிற்பிரிவில்வெள் ளணியணிந்துவிடுத்துழித்தலைவன் வாயில்வேண்டன் முதலாகப்பதி னாறு கிளவிகட்குரியபதினாறு செய்யுளையு முறையேகாண்க. அநுவா தமுகத்தால் வெள்ளணியணிந்து விடுத்தலும் வரப்பெறும். அதற்கு தாரணந், துனைதருஞ்சுரும்பறைமல்லிகை யென்னுஞ்செய்யுளைக்கா ண்க. பிறவுமன்ன. (எ)

ஆயிழைமைந்தனுமாற்றாமையுமே, வாயில்களாகவரவெ திர்கோடலு, மணந்தவன்போயபின் வந்தபாங்கியோ, டிண

ங்கியமைந்தனை யினிதிற்புகழ்தலுந், தலைவனைப்புகழ்தலுஞ் சிலைநுதற்பாங்கி, மனைவியைப்புகழ்தலு மினையவைபிறவு, மனைவகைமொழிந்தவதன்பாற்படுமே.

இ - ள். இதுவுமது. ஆயிழை — படும் - ஆயிழைமைந்தனுமாற்றுமையும்வாயிலாகத் தலைமகன்வந்துழித் தலைமகளெதிர்கோடன்முதலாகப் பாங்கிமனைவியைப்புகழ்தலீறுகச்சொல்லப்பட்டனவும் பிறவு மத்தன்மைத்தாகி யுணர்த்தவுணரா வூடற்குரியவாம் - எ - று. இவைவேறுகூறிய தூடற்சிறுபான்மை நோக்கி யென்றுணர்க. உ - ம். ஷைகோவையிற் பரத்தையிற் பிரிவிறுதியிலுள்ள நாலு செய்யுளையு முறையேகாண்க. பிறவுமன்ன. (௮)

மூன்றுசூத்திரத்துமொழிந்தவையெல்லா, மான்றபரத்தையினகற்சியின்விரியே.

இ - ள். பரத்தையிற் பிரிவின்விரி யிவையென்பதுணர் - ற்று. மூன்று — விரி - முன்மூன்றுசூத்திரத்துங் காதலன்பிரிவுழிக்கண்டோர்புலவிக் கேதுவிதாமவ்விறைவிக்கென்றன் முதலாகப் பாங்கிமனைவியைப்புகழ்த லீறுகச்சொல்லப்பட்ட வெல்லாம்பரத்தையிற்பிரிவின்விரியாம். எ - று. இவை வாயில்வேண்டன் முதலானநான்குவகைக்குமாமாறறிந்துகொள்க. (௯)

பிரிவறிவுறுத்தல் பிரிவுடன்படாமை, பிரிவுடன்படுத்தல் பிரிவுடன்படுதல், பிரிவுழிக்கலங்கல் வன்புறைவன்பொறை, வருவழிக்கலங்கல வந்துழிமகிழ்ச்சியென், றொருமையிற்கூறியவொன்பதுவகைய, கல்விமுதலாவெல்லாப்பிரிவும்

இ - ள். நிறுத்தமுறையானே ஓதற்பிரிவுமுதலியவைவகைப்பிரிவுகளின் வகையுணர் - ற்று. பிரிவறி — பிரிவும் - பிரிவறிவுறுத்தன்முதலாக வந்துழிமகிழ்ச்சி யீறுகச்சொல்லப்பட்ட வொன்பதுவகையினையுடையவாமோதற்பிரிவு முதலாகியவைந்து பிரிவும். எ - று. உ - ம். ஷைகோவையிலோதற்பிரிவுமுதலாகியவைந்துபிரிவுகட்குரியசெய்யுட்களைக்காண்க. (௧௦)

நான்காவதுகற்பியன்முற்றிற்று.

ஐந்தாவது ஒழிபியல்.

ஒழிபெனப்படுவதகப்பாட்டுறுப்பும், வழுவமைதியுந்தழுவியதாகும்.

இவ்வோத்தென்னபெயர்த்தோவெனின் முன்னான்கியலினுள்ளுங் கூறுதொழிந்தவற்றைக் கூறினமையி னொழிபியலென்னும் பெயர்த்து. இவ்வோத்தினு ளிச்சூத்திர மென்னுதலிற்றோவெனி னிவ்வொழிபாவதிதுவென்பதுணர்-ற்று. ஒழிபெனப்—தாகும் - ஒழிபென்றுசொல்லப்படுவதகப்பாட்டுக்குரிய வுறுப்புக்களையு மதற்பொருட்கு வேண்டியவற்றுண் முன்கூறப்படாது தவறியவற்றையும் வழுவாயின்வற்றினமைதியையுந்தழுவியதாகும். எ - று. (க)

திணையேகைகோள் கூற்றேகேட்போ, ரிடனேகாலம் பயனேமுன்ன, மெய்ப்பாடெச்சம் பொருள்வகைதுறையென், றப்பாலாறிரண்டகப்பாட்டுறுப்பே.

இ - ன். அகப்பாட்டுறுப்பின்பாகுபாடுணர் - ற்று. அகப்பாட்டுறுப்பு - அகப்பாட்டுறுப்பாவன, திணையே—துறையென்று - திணை கைகோள் கூற்று கேட்போ ரிடங் காலம் பயன் முன்ன மெய்ப்பாடு எச்சம் பொருள்வகை துறையென்று, அவ்வாறிரண்டுபால்-பன்னிருபகுதிப் பட்டனவாம். எ - று. (உ)

அவற்றுள் - முன்னவையிரண்டுஞ்சொன்னவையாகும்.

இ - ன். நிறுத்தமுறையானே திணையுங் கைகோளுமிவையென்பதுணர் - ற்று. அவற்றுள்—யாகும்- அப்பன்னிரண்டுள்ளு முற்பட்டதிணையுங் கைகோளுமாகிய விரண்டு முன்னகத்திணையியலிற்சொல்லப்பட்டனவாம். எ - று. (௩)

தலைவன்றலைவிபார்ப்பான்பாகன், பாங்கிசெவிலியென்றீங்கிவ்வறுவருஞ், சாற்றியகளவிற்கூற்றிற்குரியர்.

இ - ன். நிறுத்தமுறையானே கூற்றென்னு முறுப்பையுணர்த்துவான்றொடங்கிக் களவினகத்துக் கூற்றிற்குரியாரையுணர் - ற்று. தலைவன் றலைவி—குரியர்- தலைவன்முதலாகச் சொல்லப்பட்ட வறுவருமேற்சொல்லப்பட்ட களவென்னுங்கைகோளிற் கூற்றிற்குரியராவர், எ - று. (௪)

நற்றாய்கண்டோர்பாணன்கூத்தர், விறலிபரத்தைபரறிவ
ரொன்றெழுவரு, மறுவகையவருமாகியவனைவருங், குறைவ
றுகற்பிற்கூற்றிற்குரியர்.

இ - ள். கற்பினகத்துக் கூற்றிற்குரியாரையுணர் - ற்று. நற்று
ய்— குரியர்- நற்றாய்முதலிய வெழுவரு மேற்சொல்லப்பட்ட தலை
வன் முதலாகியவறுவருமான பதின்மூவருங் குற்றமற்ற கற்பினகத்
துக் கூற்றிற்குரியராவர். எ - று. (௫)

பயந்தோன்றன்னையுயங்குபோயறிவோ, ருரவரயலோர்
சேரியோரொன்றிவர், முகத்துரைநிகழாவகப்பொருளகத்தே.

இ - ள். முகத்துநிகழுங் கூற்றிற்குரியரல்லாரை யுணர் - ற்று. ப
யந்தோன்—பொருளகத்து -பயந்தோன் முதலாகச் சொல்லப்பட்ட
வர் முகத்துச் சொன்னிகழா வகப்பொருளகத்து - எ-று. எனவேய
வர் கூற்றுபபிறராலெடுத்துக் கூறப்படுமெனக் கொள்க. இவருமொ
ருவாறு கூற்றிற்குரியராதல் பற்றி இங்ஙனங் கூறப்பட்ட தெனக்
கொள்க. (௬)

தமர்வரினிடைச்சுரந்தன்னிற்கிழத்தியோ, டமர்தருகிழ
வோனுணையுங்கூறும்.

இ - ள். தலைவன்கூற்றுள்வனாவியலி னொழிபுணர் - ற்று. தம
ர்— கூறும் - (புணர்ந்துடன் போகாநின்ற காலத்துத்தலைமகள்) தமர்
பின்னர்ச்சென்று லிடைச்சுரத்திலே தலைமகளோடு தலைமகனுணையுங்
கூறும். எ - று. ஆணைவட மொழிச்சிதைவு. இராக்கதம்போலா
காதிருத்தற்கு நூல்வழக்கா லவ்விடத்தாணை கூறல் வேண்டியதாயி
ற்று. இடைச்சுரமருங்கிற்கிழவன் கிழத்தியொடு வழக்கியலாணையி
ற்கிளத்தற்குமுரிய னென்றார்பிறரும். (௭)

உடன்போய்மீண்டகொடுங்குழைமடந்தை, பிரிவுழித்த
லைவனொடுசுரத்தியல்புகலலும், பிரிந்துழிநெஞ்சொடும்பிற
ரொடும்வருந்திச், சொல்லலுமுரியள் சொல்லுங்காலை.

இ - ள். தலைவி கூற்றுள்வனாவியலினொழிபுணர் - ற்று. உடன்
போய்—காலை புணர்ந்துடன்போய் மீண்டதலைமகள் பிரியுங் காலந்
தலைவனொடுசுரத்தியல்புகூறலு மவன்பிரிந்தகாலத்து வருந்திநெஞ்
சொடும் பிறரொடுஞ் (சுரத்தியல்பு) சொல்லலு முரியளாராய்ந்து
சொல்லுமிடத்து எ - று. இவ்விரண்டு சூத்திரத்துங்கூறப்பட்டவற்
றிற்குதாரண மிவ்விலக்கணப் பழையவுரையிற்காண்க. (௮)

தலைவன்றலைவியொடுநற்றாய்கூறாள்.

இ - ன். நற்றாய்கூற்றுக்கெய்தியதொருசார்விலக்கனுதலிற்று- தலைவன்—கூறாள் - தலைவனோடுந் தலைவியோடு நற்றாய்கூறப்பெறாள் எ - று. (கூ)

புணர்ந்துடன்போயது ணர்ந்தபின்ன, ரந்தணர்தெய்வமயலோரறிஞர்,சிந்தைநோயறிவோர்செவிலிபாங்கியொடு, கண்டோர்க்குரைக்கும்பண்புடைநற்றாய்.

இ - ன். நற்றாய்கூற்றுக்கெய்தியதன்மேற் சிறப்புவிதியுணர்-ற்று, அந்தணர்—கண்டோர்க்கு-அந்தணர்முதலாகச் சொல்லப்பட்டவனைவரோடும்,புணர்ந்துடன்போய துணர்ந்தபின்னர் - (தலைமகள்) புணர்ந்துடன் போனவாறு தானறிந்தபின், பண்புடைநற்றாயுரைக்கும்-நற்றாய்கூறும். எ - று. (கo)

தாயொடும்பாங்கிதான்முதலாரொடுஞ், சேயிழைச்செவிலியுஞ்செப்புமாங்கே.

இ - ன். செவிலிகூற்றுக்கெய்தியதன்மேற் சிறப்புவிதியுணர்-ற்று. தாயொடும்—மாங்கு - நற்றாயோடும்பாங்கிமுதலானவரோடுந் தலைமகள்செவிலித்தாயுஞ் சொல்லு முன்புணர்ந்துடன்போனமைதானறிந்தபின். எ - று. இவ்விருவர் கூற்றிற்கு முதாரண முடன்போக்கினுட் காணப்பட்டன. (கக)

தாயர்பாங்கியர் தலைவன் றலைவியோ, டேயுமென்ப கண்டோர்கூற்றே,

இ - ன். கண்டோர்கூற்றிற்கெய்தியதன்மேற் சிறப்புவிதியுணர் - ற்-று. தாயர்பாங்கியர் தலைவன்றலைவியோடு ஏயுங்கண்டோர்கூற்றென்ப- தாயர்முதலானவரோடுநிகழுங்கண்டோர்கூற்றென்று சொல்லுவர் புலவர். உ - ம். உடன்போக்கி னுள்ளுங்கற்பியலுள்ளுங்கண்டுகொள்க. (கஉ)

சாற்றுமெழுவருந்தலைவன்றலைவியோ, டேற்றனகூறுபவிடங்தொறுமிடங்தொறும்.

இ - ன். மேற்சொல்லப்படாதவர்கள் கூற்றுக்கெய்தியதன்மேற் சிறப்புவிதியுணர் - ற்று. சாற்று—தொறும்- மேற்சொல்லப்படாதபார்ப்பானும் பாகனும்பாணனுங்கூத்தரும்விறலியும் பரத்தையரு மறி

வருமென்கிறவெழுவருந்தலைமகனோடுந் தலைமகளோடும்- பொருந்திய வற்றைக் கூறுவ ரிடந்தோறுமிடந்தோறும். எ - று. தலைவன்றலை விபாங்கியாகியவிம்மூவர்கூற்றுமேயகப்பாட்டுண் மிகுதியாய்வருவன வாதலின் விதந்திலரென்றுணர்க. (கங)

நெஞ்சுநாணுநிறைசேரறிவுஞ், செஞ்சுடர்ப்பரிதியுந்திங் களுமாலையும், புளளுமாவும்புணரியுங்கானலு, முள்ளுறுத்தி யன்றவுமொழிந்தனபிறவும், தன்சொற்கேட்குநபோலவுந்த னக்கவை,யின்சொற்சொல்லுந போலவுமேவல், செய்குந போலவுந்தேற்றுநபோலவு, மொய்குழற்கிழத்தி மொழிந் தாங்கமையும்.

இ - ன் . தலைவிகூற்றுக்கெய்துவதோர்வேறுபாடுணர் - ற்று. நெ ஞ்சு— பிறவும்-நெஞ்சுமுதலாககானலீறுகச் சொல்லப்பட்டனவும ல்லாதபிறவும், தன்சொற்—தேற்றுநபோலவும்- தன்சொற்கேட்கின் றனபோலவுந் தனக்கவை யின்சொற்சொல்லுகின்றன போலவுமவை யேவல்செய்கின்றன போலவுந் தன்னைத்தேற்றுகின்றன போலவும், மொழிந்தாங்கமையு மொய்குழற்கிழத்தி- சொல்லியாற்றுந் தலைமகள். எ - று • பிற, கழி நெய்தன் மரமுதலானவை - உ - ம். மேற்காட்டி யவற்றுள்ளும்பிறவற்றுள்ளுங்காண்க. (கச)

இம்முறையோருமியாரொடுமின்றித்,தம்மொடுதாமேசா ற்றியுமமைப.

இ - ன் . எல்லார்கூற்றுக்குமெய்துவதோர்வேறுபாடுணர் - ற்று. இம்முறையோரும்-மேற்சொல்லப்பட்ட தலைவன்முதலானவரும்,யா ரொடு—மமைப-யாவரோடுங் கூறுதுதம்மொடுதாமேகூறியுமமைவர் எ - று . உ - ம் . மேற்காட்டியவற்றுள்ளும்பிறவற்றுள்ளுங்கா ண்க. (கரு)

கிழவோன்கூற்றுங்கிழத்திகூற்றும், பழமறையோன்முத ற்பதின்மருங்கேட்ப

இ - ன் . நிறுத்தமுறையானேகேட்போரென்னு முறுப்பையிதுமு தலிரண்டுசூத்திரங்களா னுணர்த்துவான் றொடங்கித் தலைவன்கூற்று ந்தலைவிகூற்றுணர் - ற்று. கிழவோன்—கேட்ப - தலைவன் கூற் றையுந்தலைவிகூற்றையு (முன்கூற்றிற்குரியராகச் சொல்லப்பட்டா ருட்) பார்ப்பான்முதலாகியபதின்மருங்கேட்பர் - எ - று. தலைவன்

றலைவியொடுநேற்றாய்கூறுளெனவே நற்றாயோடவ்விருவருங் கூறுரெ ன்பதுபோதருதலான் மறையோன் முதலிய பதினொருவரு ணற்றா யையொழித்துப் பதின்மரொன்றாரெனவறிக. பரத்தையரோடு தலைவி கூறுவாளோவெனிற் காமக்கிழத்தியோடு கூறுவாளென்க, குலப்ப ரத்தையுடைய மகளாதலி னிங்ஙனங் கூறப்பட்டது. (கசு)

மறையோன்கூற்றுமறிஞர்கூற்று,மிறையோன்முதலாவெ னைவருங்கேட்ப.

இ - ன் . மறையோன்கூற்று மறிஞர்கூற்றுமுணர் - ற்று. மறை —கேட்ப- பார்ப்பான்கூற்றையுமறிஞர்கூற்றையுந்தலைவன்முதலாகி யவெல்லாருங்கேட்பர். எ - று. இவ்விரண்டுசூத்திரத்துங்கூறப்பட் ட நால்வர்கூற்றுங்கேட்போரன்றி யேனையோர்கூற்றுக்களைக்கேட் போர்யாரொனின் முன்கூற்றுறப்புக்கூறியமுகத்தே யிவரோடிவர்கூ ற்றுநிகழுமெனக் கூறப்பட்டிருத்தலான்விளங்குமென்க. உழையி ற்கோடலென்னுமுத்தியாற்பாங்கிகூற்றைக்கேட்போர் தலைவன்றலை விசெவிலிநற்றாயென்றுணர்க. (கள)

நெறிப்படுகருமநிகழ்வுழியிடமே.

இ - ன். நிறுத்தமுறையானே யிடமென்னு முறுப்பையுணர்-ற்று. நெறி—யிடம் - நெறிப்பட்டகாரிய நிகழுநில மிடமாம். எ - று. வினைசெய்யிடநிலமாம். இடமெனினுங் களமெனினுமொக்கும். நெ றிப்படு கரும மாவன, களவுங்கற்பும். (கஅ)

சென்றது நிகழ்வ துமெதிர்வதுமெனமுறை, நின்றுபொ ருளுணரநிகழ்வதுகாலம்.

இ - ன். நிறுத்தமுறையானே காலமென்னுமுறுப்புணர் - ற்று. சென்றது—காலம்—இறந்தகாலமு நிகழ்காலமு மெதிர்காலமுமெ ன்றடைவே நின்றுலகத்துள்ளபொருள்களை யறியும்படியாக நடப் பதுகாலமாம். எ - று. (கக)

இப்பொருள்பயக்குமிஃ தென்பதுபயனே.

இ - ன். நிறுத்தமுறையானே பயனென்னுமுறுப்புணர் - ற்று. இப்பொருள்—பயன் - இப்பொருளை யிதுபயக்குமென்று சொல்லுவ துபயனும். எ - று. (உ0)

இன்னார்க்கின்னுழி யின்னதுபயக்குமெனு, முன்னந்தரு வதுமுன்னமாகும்.

இ - ன். நிறுத்தமுறையானே முன்னமென்னுமுறுப்புணர்- ற்று. இன்னார்க்—மாகும் - இத்தன்மையார்கிவ்விடத்தின்னது தருமென்னுங்குறிப்பினைவெளிப்படுக்குமது முன்னமாகும்.எ - று (உக)

நகைமுதலாவிருநான்குமெய்ப்பாடு, நிகழ்பொருண்மெய்ப்படநிற்பமெய்ப்பாடே.

இ - ன். நிறுத்தமுறையானே மெய்ப்பாடென்னு முறுப்புணர்- ற்று. நகை—பாடு-நகையு மழுகையு மிழிவரலு மருட்கையு மச்சமும் பெருமிதமு முவகையும் வெகுளியுமென்னு மெண்வகைமெய்ப்பாடுமெவ்விடத்தினிகழும் பொருளைக்கேட்டோர் மெய்யின்கண்ணே வெளிப்படநிற்பதுமெய்ப்பாடாகும் - எ - று. மெய்ப்பாடும் வெளிப்படவெனக்கூட்டுக. (உஉ)

சொல்லேயாயினுங் குறிப்பேயாயினுஞ், சொல்லிமுடித்தல்வேண்டுவதெச்சம்.

இ - ன். நிறுத்தமுறையானே யெச்சமென்னு முறுப்புணர்-ற்று. சொல்லே—தெச்சம் - ஒருசொல்லேயாயினு மொருகுறிப்பேயாயினுங்கூட்டிப்பொருண்முடித்தல்வேண்டிநிற்றலெச்சமாகும். எ-று. உங)

ஒருதிணைக்குரிமை பூணுநிலைமை, பொருள்வகையென்மனார்புலமையோரே.

இ- ன். நிறுத்தமுறையானே பொருள்வகையென்னுமுறுப்புணர்- ற்று. ஒருதிணைக்—புலமையோர் - இத்திணைக்கேயிப்பொருளுரித்தாவதென்னுமெல்லாத்திணைக்கும் பொதுவாய்நிற்கு நிலைமை பொருள்வகையென்று சொல்லுவரறிவுடையோர். எ - று. (உச)

சொல்லியவல்லவொன்றினுமவற்றினோ, டொல்லும்வகைதேர்ந்துணர்த்தியல்வழாம, லுரைப்போர்கேட்போருண்மையின்றி, யுரைக்குங்கவியேயுரைப்பது துறையே.

இ - ன். நிறுத்தமுறையானே துறையென்னு முறுப்புணர்-ற்று. சொல்லிய—துறை - மேற்சொல்லபபட்ட மக்களுமாவு முதலாயினவன்றிப் பிறதோன்றினவாயினு மவற்றை முன்சொல்லியவற்றோடு

பொருந்தும்வண்ணமாராய்ந்திலக்கணம்வழுவாமற்றன்னையன்றியுரை ப்போருங்கேட் போருமின்றிக் கவிசொல்லும்புலவனுனேகூறுவது துறையாகும். எ - று. இத்துறையென்னுமுறுப்பகப்பாட்டுக்களிற் சிலவற்றிற்குமாத்திரமுரித்தன்றி யெல்லாவற்றிற்கு முரித்தன்றென் றுணர்க. அகப்பாட்டுறுப்புக்குதாரணம், உழையும்வெங் காளமும் போலுங்கண் ணுளொரு காலமுளளங், குழையுநம்பாலென்று கொ ண்டநெஞ் சேகலிக் கோடை மண்மேன்,மழையுமந்தாரமும் வந்தண வாணன்றென் மாறையின்மாந், தழையுநம்போலிங்ஙனே கவின் வாடத் தவஞ்செய்ததே. இப்பாட்டிற்குத் திணை, குறிஞ்சி; கை கோள், களவு; கூற்று, தலைவன்கூற்று; கேட்போர், நெஞ்சம்;இடம், தனியிடம்; காலம், இறந்தகாலம்; பயன், குறைநேர்தல்; முன்னம், நங்கோணிறைவேறுமெனபது; மெய்ப்பாடு, மருட்கை; எச்சம், இனி யென்செய்வோமென்னுஞ்சொல்; பொருள்வகை, குறிஞ்சிப்பாட்டி னுள்வந்ததாயினுங்கருபபொருளுட் பாலைமுல்லைமருதநெய்தற்குரிய னவிரவியொருதிணைக்குச்சிறபபாகாதுதிணையைநதிற்கும் பொதுவா குநிலைமை. (உ௫)

அவற்றுள் - எச்சமின்றியு மியலுமென்ப.

இ - ன். அகபாட்டுக் கெய்தியதொருசார்விலக்குதனுத - ற்று. அவற்றுள்—மென்ப - மேற்சொல்லப்பட்ட வுறுபபுகளு ளெச்சமெ ன்னு முறுப்புத்தொடராமலும்வரு (மகப்பாட்) டென்றுசொல்லு வர்புலவர். எ - று. உ - ம். சேலார்புனல்வையை சூழ்தஞ்சைவா ணன்றென் மாறையினம்,வேலானெனப்பிறர் வேட்டவர்யார்மணம் வெண்டுகிலின், பாலாரமளியும் பாற்கடலானது பங்கயக்கண், மாலா யினனிவனுந் திருவாயினள் மாதருமே. இதற்குத் திணை,முல்லை; கை கோள், கற்பு; கூற்று, கண்டோர்கூற்று; கேட்போர், தம்மிற்றும்; இடம், வதுவைமனை; காலம், நிகழ்காலம்; பயன், காட்சி; முன் னம், மாதர்திருவாதறகு மென்பது; மெய்ப்பாடு, உவகை; பொருள் வகை, முல்லைத்திணைப்பாட்டினுட் பிறதிணைப்பொருள்விரவியநிலை மை. எச்சமில்லாமைகாண்க. (உ௬)

உவமப்பொருளு மிறைச்சிப்பொருளு, மெனவிருபொ ருளுமெய்தும்பாட்டினுள்.

இ - ன். அகப்பாட்டுள்வரும்பொருள்களிவையென்பதுணர்-ற்று. உவமப்—பாட்டினுள் - உவமப்பொருளுமிறைச்சிப்பொருளுமென்று கூறப்பட்டவிரண்டுவகைப்பொருளும்வருமகப்பாட்டிடத்து. எ - று.

உள்ளுறையுவமம் வெளிப்படையுவமமென, வுள்ளுறை யுவமமிருவகையுடைத்தே.

இ - ன். மேற்கூறப்பட்ட விருபொருளி லுவமப்பொருளின்பா குபாடுணர் - ற்று. உள்ளுறை—மென - உள்ளுறையுவமும் வெளிப் படையுவமமுமென, இருவகையுடைத்து—உள்ளுறையுவமம் - இர ண்டுகூற்றினையுடைத்தாமகப்பாட்டினுட் கிடக்குமுவமப்பொருள். எ - று. (உஅ.)

அவற்றுள்- உள்ளுறையுவம முய்த்துணர்வகைத்தாய்ப், புள்ளொடும் விலங்கொடும்பிறவொடும்புலப்படும்.

இ - ன். மேற்கூறப்பட்ட விருவகையுவமத்து ளுள்ளுறையுவ மவிலக்கணமுணர் - ற்று. அவற்றுள்—படும - அவ்விரண்டுவமத்து ள்ளுமுள்ளுறையுவமமாவ தாராய்ந்தறியும் பகுதியினையுடைத்தாய்ப் புள்ளொடும் விலங்கொடும் பிறவொடுந்தோன்றும். எ - று. உ. ம். வாணன்கோவை-இழைவிளையாடு மிளமுலைசாயற் கிடைந்தமஞ்ஞை, கழைவிளையாடுங் கடிபுனங்காத்துங் கலையகலா, துழைவிளையாடுமு யர்சிலம்பாவின்னு முன்பொருட்டான்,மழைவிளையாடு மதிற்றஞ்சை வாணன்மலயத்திலே. இதனுண்மானைப்பிரியாது கலைவிளையாடுமென வே யதுபோல நீயுந் தலைவியைப் பிரியாதுவிளையாடுகவென வுள்ளு றையுவமம் விலங்கொடுதோன்றியவாறுகாண்க; பிறவுமன்ன. (உகூ)

வெளிப்படையுவமம் வினைபயன்மெய்யுரு, வெளிப்பட நின்றுவிளங்குவதாகும்.

இ - ன். வெளிப்படையுவம விலக்கணமுணர்- ற்று. வெளி—தா கும்- வெளிப்படையுவமமாவது தொழிலும் பயனும் வடிவு நிறமும் புலப்படுமாறு நின்றுவிளங்குவதாம். எ - று. (௩0)

கருப்பொருட் பிறக்கு மிறைச்சிப்பொருளே.

இ - ன். இறைச்சிப்பொருளி னிலக்கணமுணர் - ற்று, இறைச் சிப்பொருள் கருப்பொருட்பிறக்கும்- இறைச்சிப்பொருளாவது தெய் வமுதலாகிய கருப்பொருளின்கண்ணே பிறக்கும், எ - று. உ - ம், வாணன்கோவையில், முத்தணிநீல மணித்தகடெங்கு மொய்கொள வே,வைத்தணிசேர வகுத்ததுபோற்றஞ்சை வாணன்வையைப், பைத்

தணிவார்திரை தோய் கருந்தாட்புன்னைப் பாசிலைவெண்,டொத் தணிபூந்துறைவா வருவாயிருநேங்கிரவே. என்னுஞ்செய்யுளிற்றலைவியை வரைந்துகொள்ளுதலே நினக்குத்தக்க வழக்காகுமென்னு மிறைச்சி தோன்றியவாறுகாண்க. இறைச்சிதானே பொருட்புறத்ததுவேஇறைச்சியிற் பிறக்கும்பொருளு மாருளவே திறத்தியன் மருங்கிற் றெரியுமோர்க்கே. யெனப்பிறர் கூறியவிரண்டையு மிவ்வாசிரியரொற்றுமைநயம்பற்றியொன்றாகக்கூறின ரென்றுணர்க. (௬க)

காமஞ்சாலாவிளைமையோள்வயிற், குறிப்பறிவுறாது குறுகியாங்கவளோ, டிறப்பக்கூறுவதகப்புறக்கைக்கிளை.

இ-ன். வழுவமைதிகளையுணர்த்து வான்றொடங்கி முதலகப்புறக்கைக்கிளையுணர்-ற்று. காமஞ்—கைக்கிளை - காமஞ்சாலாவிளைமைத்தன்மையுடையவள்பக்கத் தொருவன் குறிப்பினையறியாதுசென்று சார்ந்தவளோடுமேன்மேலுங்கூறுவதகப்புறக்கைக்கிளையாம். எ-று. உ-ம். ஊர்க்காணிவந்தபொதும்பரு ளென்னுங்குறிஞ்சிக்கலியுள்ளும் பிறவற்றுள்ளுங்கண்டுகொள்க. (௬உ)

அதுவே - இறைமையில்லோர்க்கு மிழிகுலத்தோர்க்கு; முறைமையினுரித்தே முன்னுங்காலை.

இ-ன். அகப்புறக்கைக் கிளைக்குரியாரையுணர்-ற்று. அதுவே-மேற்சொல்லப்பட்ட கைக்கிளைதான்,'இறைமை—காலே-தலைமைப்பாடில்லாதார்க்கு மிழிகுலத்தார்க்கு முறைமையானுரித்தாமாராயுங்காலத்து. எ-று. முன்னுங்காலையென்றதனு லிதுபயின்றுவாராதெனக்கொள்க· உ-ம். ஏஎஇஃதொத்தேனென்னுங் குறிஞ்சிக் கலியுள்ளும், என்னேற்றனைகொல்லோ வென்னுமருதக்கலியுள்ளுங்காண்க. (௬௩)

அகன்றுழிக்கலங்கலும் புகன்றமடற்கூற்றுங்,குறியிடையீடுந் தெளிவிடைவிலக்கலும், வெறிகோள்வகையும் விழைந்துடன்போக்கும், பூப்பியலுரைத்தலும் பொய்ச்சூளுரையுந், தீர்ப்பிலூடலும் போக்கழுங்கியல்பும், பாசறைப்புலம்பலும் பருவமாறுபடுதலும், வன்புறையெதிர்ந்து மொழிதலுமன்புறு, மனைவியுந்தானும் வனமடைந்துநோற்றலும், பிறவுமகப்பொருட்பெருந்திணைக்குரிய.

இ - ன். அகப்பொருட் பெருந்திணைக்குரியவை யிவையென்பதுணர் - ற்று. அகன்றுழி—குரிய - அகன்றுழிக்கலங்கன்முதலாகத் தலைவியுந்தானும் வன்மடந்துநோற்ற லீறுகச்சொல்லப்பட்டனவும் பிறவுமகப்பொருட் பெருந்திணைக்குரியவாம். எ - று. (௯௪)

மடலேறுதலொடு விடைதழாலென்று, குற்றிசைதன்னொடு குறுங்கலியென்று, சுரநடைதன்னொடு முதுபாலையென்று, தாபதநிலையொடுதபுதாரநிலையெனப், புகன்றவையியற்பெயர் பொருந்தாவாயி, னகன்றவகப்புறப்பெருந்திணைக்காகும்.

இ - ன். அகப்புறப்பெருந்திணைக்குரியவையிவையென்பதுணர்-ற்று. மட—காகும் - மடலேறலொடு தபுதாரநிலையீறுகச்சொல்லப்பட்டவை யியற்பெயர்கூடாவாயினகப் புறப்பெருந்திணைக்காம். எ- று. மடலேறற்குதாரண நெய்தற்கலியிலும், விடைதழாலுக்குதாரண முல்லைக்கலியிலுஞ் சுரநடைமுதலாகிய நான்கிற்குமுதாரணம் புறநானூற்றிலுமேனையவந்துழிவந்துழியுங்காண்க. (௯௫)

பாட்டுடைத்தலைவன் கிளவித்தலைவனெனப், பாட்டினுட்பாடப்படுவோரிருவர்.

இ - ன். முன்னியல்களிற்கூறப்படாதவற்றையுணர்த்தக் கருதியகப்பாட்டினுட் பாடப்படுந்தலை மக்களின்பாகுபாடுணர்- ற்று. பாட்டினுட்பாடப்படுவோர்பாட்டுடைத்தலைவன் கிளவித்தலைவனென இருவர்- அகப்பாட்டினுட்பாடப்படு வோர்பாட்டுடைத்தலைமகனுங் கிளவித்தலைமகனுமெனவிருவர். எ - று (௯௬)

அவருள்- உயர்ந்தோன்பாட்டுடை யுரவோனகும்.

இ - ன். மேற்சொல்லப்பட்டவருளுயர்ந்தோனையுணர் - ற்று. அவருள்- அவ்விருவருள்ளும், உயர்—கும்- உயர்ந்தோன்பாட்டுடைத்தலைவனுகும். எ - று. உ - ம். வேளாளர்பார்ப்பாரென்னு நெடுந்தொகைப்பாட்டினுளூரவுச்சினவேந்தன் பாசறையோமேயென்பதனுற்பாட்டுடைத் தலைவனுயர்ந்தானென்னவறிக. (௯எ)

நிலப்பெயர்வினைப்பெயர் பண்புகொள்பெயரொடு, குலப்பெயரியற்பெயர் கூறுபவவர்க்கே.

இ - ள். தலைமக்கட்குக் கூறப்படும்பெயர்களிவையென்பதுணர்ற்று. நிலப்பெயர்—வவர்க்கு - நிலப்பெயர்முதலாகிய வைந்துபெயருங்கூறுவர் மேற்சொலலப்பட்ட தலைமக்களிருவர்க்கும். எ - று. நிலப்பெயராவன, மலைநாடனென்பதுபோல்வனவும் சிலம்பனென்பதுபோல்வனவும்; வினைப்பெயராவன, கடம்பெறிந்தானென்பதுபோல்வனவும் கோவலனென்பதுபோல்வனவும்; பண்புப்பெயராவன, நெடுஞ்சொலாதரனென்பதுபோல்வனவும் தோன்றலென்பதுபோல்வனவும்; குலப்பெயராவன, பாண்டியனென்பதுபோல்வனவும் ஆயனென்பதுபோல்வனவுமாம். இயற்பெயராவன, குரவராற்பெற்ற பெயர். (௩அ)

அற்றுள் - இயற்பெயர்கிளவித்தலைவற்கிசையார்.

இ - ன். கிளவித்தலைமகனுக்குக் கூறுப்பெயரிஃதென்பதுணர்ற்று. அவற்றுள்—யார் - மேற்சொல்லப்பட்ட பெயருட்குரவராற்பெற்றபெயரினைக்கிளவித்தலைமகற்குச்சொல்லார்புலவர். எ - று. (௩௯)

இருவருமொருங்கேவருதலுந்தனித்தனி, வருதலுமிருவரும்வாராதொழிதலு, முரியவென்மனருணர்ந்திசினோரே.

இ - ன். அகப்பாட்டினுட் டலைமக்கள்வரும்வகையும்வாராவகையுமுணர் - ற்று. இருவரு—திசினோர் - மேற்சொல்லப்பட்ட தலைமக்களிருவருங்கூடி வருதலும் பாட்டுடைத்தலைமகனேவருசலுமவ்விருவரும் வாராதொழிதலுமுரியவா மகப்பாட்டினுளென்று சொன்னாரறிந்தோர். எ - று. (௪0)

அகப்புறப்பாட்டு மிகப்பிலவவையே.

இ - ன். மேற்கூறப்பட்ட வகப்பாட்டினிலக்கணமகப்புறப்பாட்டுக்கும் பொருந்துமென்பதுணர் - ற்று. அவையிகப்பிலவகப்புறப்பாட்டு - அகப்பாட்டிற்குச்சொன்ன வவ்விலக்கணங்களைக் கடவாதசப்புறப்பாட்டு. எ - று. உ - ம். வெண்பாமாலையுள்ளும் பிறவற்றுள்ளுங்காண்க. (௪க)

முத்திறப்பொருளுந் தத்தந்திணையொடு, மரபின்வாராது மயங்கலுமுரிய.

இ - ன். ஐந்திணைக்கு முரியபொருளின் வழுவமைதியுணர்- ற்று. மூத்திறப்—முரிய - முதல்கரு வுரியென்னுமூன்று கூற்றவாகியபொருளுந் தத்தமக்குரியதிணைக்கண்முறைமையோடு வாராதுபிறதிணைக்கண்மயங்கிவருதலு முரியவாம். எ - று. உ - ம். இவ்விலக்கணப்பழையவுரையிற்காண்க. (௪௨)

கூறியவல்ல வேறுபிறதோன்றினுங்,கூறியவற்றொடு கூட்டிக்குறிக்கொளக்,கூறியுணர்த்தல் குணத்தோர்க்கியல்பே.

இ - ன். இந்நூலுக்காவதோர் புறனடையுணர்- ற்று. கூறியவல்ல—இயல்பு- இந்நூலிற்கூறப்பட்ட பொருள்களல்லாமல் வேறுபிறபொருள்கள் சான்றோர்செய்யுட்களிற் றோன்றினவாயினு (மவற்றையிந்நூலிற்) கூறப்பட்டபொருள்களோடுஞ் சேர்த்துக்குறிக்கொளச்சொல்லிப (பிறர்க்) குணர்த்துதல் குணமுடையோர்க்கியல்பாம். எ - று. (௪௩)

ஐந்தாவது ஒழிபியன்முற்றிற்று.

அகப்பொருள்விளக்கமூலமும் உரையும்

முற்றுப்பெற்றது.

உ

கணபதிதுணை.

நாற்கவிராசநம்பி

அகப்பொருளிலக்கணத்திற்கு

இலக்கியமாகப்

பொய்யாமொழிப்புலவர்

இயற்றிய

தஞ்சைவாணன்கோவை.

கைக்கிளை.

காட்சி.

புயலேசுமந்து பிறையேயணிந்துபொருவிலுடன்
கயலேமணந்தகமலமலர்ந்தொருகற்பகத்தி
னயலேபசும்பொற்கொடிநின்றதால்வெள்ளையன்னஞ்செந்நெல்
வயலேதடம்பொய்கைசூழ்தஞ்சைவாணன்மலயத்திலே. (௧)

ஐயம்.

பாரணங்கோதிருப்பாற்கடலீன்றபங்கேருகத்தி
னோரணங்கோவற்புறையணங்கோவுயர்பாவலர்க்கு
வாரணங்கோடிதருந்தஞ்சைவாணன்றென்மாறைவையை
நீரணங்கோநெஞ்சமேதனியேயிங்குநின்றவரே. (௨)

துணிவு.

மையார்குவளைவயற்றஞ்சைவாணனைவாழ்த்தலர்போ
லையாதொழிமதிநெஞ்சமேயினிநம்மினுந்தன்
னெய்யார்கருங்குழற்செம[illegible]வாடினநீலவுண்கண்
கையாலழைப்பனபோலிமையாநிற்குங்காரிகைக்கே (௩)

குறிப்பறிதல்.

மண்ணிற்சிறந்தபுகழ்த்தஞ்சைவாணன்மலயவெற்பிற்
பெண்ணிற்சிறந்தவிப்பேதைதன்பார்வைபெருவினையே
னெண்ணிற்சிறந்தவிருந்துயர்நோய்தனக்கின்மருந்தாய்க்
கண்ணிற்சிறந்தவுறுப்பில்லையாவதுங்காட்டியதே. (௪)

கைக்கிளைமுற்றிற்று.

இயற்கைப்புணர்ச்சி.

இரந்துபின்னிற்றற்கெண்ணல்.

" தேங்கியகாதரவாதரஞ்செப்பித்தண்செப்பிணைபோல்
வீங்கியமாமுலைமேவுதும்யாம்விசயக்கொடிமேல்
வாங்கியசாபமுயர்த்தவன்போர்வென்றவாணன்வையந்
தாங்கியமாலனையான்றஞ்சைசூழ்வரைத்தாழ்குழற்கே. (ரு)

இரந்துபின்னிலைநிற்றல்.

செறிவேழவெஞ்சிலைவேடஞ்சைவாணன்றிருந்தலர்மே
லெறிவேலைவென்றகண்ணென்னுயிர்க்கேவியிருண்டஅல்போ
னெறிவேயலங்கன்முடித்தலைசாய்த்திங்ஙனிற்பதுதா
னறிவேயறிந்தவுனக்கலர்மாளிகையாரணங்கே. (சா)

முன்னிலையாக்கல்.

வழுதியர்நாமம்வளர்க்கின்றவாணன்றென்மாறைவண்டு
கொழுதியலார்செய்குழன்மடவீநுங்குற்றேவல்செய்து
தொழுதியலாயத்தொகுதியொடாடிச்சுனைகுடையா
தெழுதியபாவையைப்போனின்றவாறென்னியம்புமினே. (எ)

மெய்தொட்டுப்பயிறல்.

நல்லார்விழிபோலிருந்துமளியெனுநாமம்பெற்று
மல்லார்குழலிலமர்ந்திருந்தாலமராரைவெல்ல
வல்லான்வரோதயன்வாணன்றென்மாறைமதுகரங்கா
ணில்லாதிடையுமக்கேபழிசாலநிலைநிற்குமே (அ)

பொய்பாராட்டல்.

பருந்தொன்றுகூரிலைவேற்படைவாணன்பரிமளப்பூஞ்
செருந்தொன்றுசோலைத்தென்மாறையன்னீர்செழுந்திங்களுங்கண்
முருந்தொன்றுகோபமுகங்கண்டுநாணிமுயன்மறுத்தீர்
மருந்தொன்றுநாடியன்றேவடமேருவலஞ்செய்வதே. (கூ)

இடம்பெற்றுத்தழால்.

படம்பட்டவாளர[illegible]லைவேலைபட்டநெஞ்சம்
விடம்ப[illegible]வாள்பட்டவேதனைதீரவிண்டோய்பொழிலுங்
[illegible]டம்பட்டவாவியுஞ்சூழ்தஞ்சைவாணன்றமிழ்க்கிரிநா
மிடம்பட்டவாமுலைத்தடந்தோய்தற்கிடமிதுவே. (ய)

வழிபாடுமறுத்தல்.

தேறுததெவ்வென்றவாணன்றென்மாறைச்செந்தேனருவி
யூறுதகாலத்துமுறுதண்சாரலொதுக்கிடந்தந்

தாருதசோகமுமாற்றுதல்வேண்டுமசோகமெய்தி
மாருததண்ணளிகூர்மலர்வாண்முகமாதவியே (௰க)

இடையூறுகிளத்தல்.

சிதையாமுளரித் திருமாளிகையிற்சிறந்ததென்றென்
னிதயாரவிந்தத்தினிதிருப்பீரிருகோட்டொருகை
மதயானைவாணன்வருந்தஞ்சைசூழ்வையைநாட்டுறைவோர்
புதையார்தனமென்பதோமதர்வேற்கட்புதைத்ததுவே (௰உ)

நீடுநினைந்திரங்கல்.

தமிழ்தங்கியதஞ்சைசாவலன்வாணன்றடஞ்சிலம்பிற்
குமிழ்தங்கியமதிக்கொம்பரன்னீர்குளிர்வெண்ணிலவூ
டுமிழ்தண்டரளப்பவளச்செங்கேழ்வள்ளத்துள்ளிருக்கு
மமிழ்தந்தருவதென்றேபெருவேட்கையென்னருயிர்க்கே (௰ங)

மறுத்தெதிர்கோடல்.

கறையாரிலங்கிலைவேலன்பர்காமக்கடற்கெதிர்ந்த
நிறையாம்வரம்பினினிற்பதன்றினிறைநீருலகை
மறையாமல்வன்கலிமாற்றியவாணன்றென்மாறையினும்
பொறையார்தவஞ்செய்திலேனெஞ்சமேயென்புகல்வதுவே (௰ச)

வறிதுநகைதோற்றல்.

எறிதேனலம்புஞ்சிலம்பினெப்போதுமிரந்திவள்பின்
வெறிதேதிரிந்துமெலிந்தனநாமுள்ளமெல்லியற்குப்
பிறிதேதுமுலென்னும்பெருந்தகைதேறப்பெரிதுயிர்த்து
வறிதேமுறுவல்செய்தாடஞ்சைவாணன்வரையணங்கே (௰ரு)

முறுவற்குறிப்புணர்தல்.

வின்மலைவேலன்னநன்னுதல்வாட்கண்ணிவேட்கையெண்ணு
ளென்மலைவேனென்னுமென்னுயிர்தாங்குமெதிர்ந்தவொன்னார்
மன்மலைவேழந்திறைகொண்டசெய்தஞ்சைவாணன்மஞ்சார்
தென்மலைவேய்நிகரும்பெருந்தோளிசிறுநகையே (௰சு)

முயங்குதலுறுத்தல்.

வானக்கதிரவன்மண்ணகமாதைமணந்ததன்றே
நாணக்குழலியைநாணின்றுபெற்றதுநாவலர்க்குத்
தானக்களிறுதரும்புயல்வாணன்றமிழ்த்தஞ்சைசூழ்
கானக்கடிவரைவாய்வினைநாண்மலர்க்காவகத்தே (௰எ)

புணர்ச்சியின்மகிழ்தல்,

மலைநாடுகொண்டவழுதிகண்போல்பவன்வாணனெண்ணெண்
கலைநாடுதஞ்சையர்காவலன்மால்வரைக்கன்னிபொன்னுண்
முலைநாமுயன்றுமுயங்கினமான்முயன்றுலினியைந்
தலைநாகநன்மணியும்பெறலாமித்தரணியிலே (மஅ)

புகழ்தல்.

திரண்மாமரகதச்செய்குன்றுகாளென்றுஞ்செவ்வனநீர்
முரண்மாதவங்கண்முயன்றுசெய்தாலுமுளரிமங்கை
சரண்மாறைவாணன்றமிழ்த்தஞ்சைநாட்டென்றனியுயிர்க்கோ
ரரண்மானனையகண்ணாள்கொங்கைபோறலரிதுமக்கே (மகூ)

இயற்கைப்புணர்ச்சிமுற்றிற்று.

வன்புறை

அணிந்துழிநாணியதுணர்ந்துதெளிவித்தல்.

நாவியுங்காரகிலாவியுந்தோய்குழனணியஞ்சேல்
வாவியுஞ்சோலையுஞ்சூழ்தஞ்சைவாணன்றென்மாறைவயற்
காவியுஞ்சேலுங்கமலமுங்காட்டுநின்கண்மலரு
மாவியும்போலினியாரணியாகவணிந்தனனே (உம)

பெருநயப்புரைத்தல்.

மன்னுவுலகத்துமன்னியசீர்த்தஞ்சைவாணன்வெற்பி
லென்னுவியன்னவிவளிடைமேலிணைகொண்டெழுந்த
பொன்னுணணிகொங்கைபோலவண்டுருங்கள்பொய்கையுண்டோ
நன்னுளரும்பொருதாளிரண்டனுநளினங்களே (உக)

தெய்வத்திறம்பேசல்.

மன்னியபார்புகழ்வாணன்றென்மாறையின்மாந்தளிர்போன்
மின்னியமாமைவிளர்ப்பதென்னேவிதிகூட்டகம்மிற்
பின்னியகாதற்பிரிப்பவர்யாரினிப்பேரருவி
யின்னியமாகவிளமயிலாடுமிரும்பொழிற்கே (உஉ)

பிரியேனென்றல்.

வண்கொடியேய்மதின்மாறைவரோதயன்வாணனென்னு
மொண்கொடியேனெய்தவவ்வண்ணநீயிரங்கேலிரங்கே
னுண்கொடியேரிடைவண்டிமிர்பூங்குழனூபுரததாட்
பெண்கொடியேபிரியேன்றரியேனிற்பிரியினுமே (உந)

பிரிந்துவருகென்றல்.

சென்றேபகை[illegible]டைவாணன்செழுந்தஞ்சைசூழ்
நன்றேதருவைபநா[illegible]யநமதாருயிர்போ

லொன்றேயெனதுரையூங்குயர்சோலையினூடொளித்து
நின்றேவருவலிங்கேவிளையாடுகநீசிறிதே (உச)

இடமணித்தென்றல்

மணிபொன்சொரியுங்கைவாணன்றென்மாறைமருவினர்போற்
றணிபொன்சொரியுந்தடமுலையாயுயர்சந்தமுந்தி
யணிபொன்சொரியுமருவியெஞ்சாரலகத்தலர்தேங்
கணிபொன்சொரியுநின்சாரன்மென்காந்தளங்கையகத்தே (உரு)

வன்புறைமுற்றிற்று.

தெளிவு.

எத்துந்தமதுனாதேறிநின்றேனையிங்கேதனியே
வைத்தங்கன்றுமறந்துறையார்வறியோர்சவர
முத்துந்துகிருமிரங்குந்தரங்கமுகந்தெறிந்து
தத்துங்கனாவைவைசூழ்தஞ்சைவாணன்றமிழ்வெற்பரே (உசு)

தெளிவுமுற்றிற்று.

பிரிவுழிமகிழ்ச்சி.

செல்லுங்கிழத்திசெலவுகண்டுளத்தொடுசொல்லல்

அகிலேந்துகூந்தலொருவகயிலேந்தியவைசந்தொருகை
துகிலேந்தியேந்துந்துணைச்சிலம்பார்ப்பத்துளிகலந்த
முகிலேந்துபூம்பொழில்சூழ்தஞ்சைவாணன்முந்நீர்த்துறைவாய்
நகிலேந்துபூங்கொடிபோற்செல்லுமானெஞ்சநம்முயிரே (உஎ)

பாகனொடுசொல்லல்

தென்பாற்றிலகமன்னன்றஞ்சைவாணன்றென்மாறைமுந்நீர்
வன்பாற்றிரண்முத்தவண்டலின்மேல்வருமேதமஞ்சி
முன்பார்த்தென்னெஞ்சம்வரும்வழிபார்த்துமுறைமுறையே
பின்பார்த்தொதுங்குதல்காண்வலவாவொருபெண்ணணங்கே (உஅ)

பிரிவுழிமகிழ்ச்சிமுற்றிற்று.

பிரிவுழிக்கலங்கல்.

ஆயவெள்ளம்வழிபடக்கண்டிதுமாயமோவென்றல்.

சீயங்கொலோவெனத்தெவ்வென்றவாணன்றென்மாறைவையைத்
தோயங்கொலோவெனுநேயமபால்வைத்துச்சோலையஞ்ஞை
யாயங்கொலோவெனுமாயத்துள்ளாளிவ்வரிவையன்ன
மாயங்கொலோநெஞ்சமேமணம்போலிங்குவந்துற்றதே (உகூ

வாயில்பெற்றுய்தல்.

பெருமான்மருந்தொன்றுபெற்றனம்யாநெஞ்சம்பேதுறல்பார்
மருமான்வரோதயன்வாணன்றென்மாறைமணங்கமழ்பூந்
திருமான்முகமலர்ச்சேயரிபாய்கயல்சென்றுசென்றவ்
வொருமானனைகமுகமாமலரோடையுலாவருமே (௫0)

பண்புபாராட்டல்.

மயலார்களிற்றண்ணல்வாணன்றென்மாறையில்வாய்த்தவர்கண்
கயலாமெனிற்கயல்கள்ளங்கொள்ளாகருந்தாழளகம்
புயலாமெனிற்புயல்போதுகொள்ளாவிபபுனையிழையா
ரியலாமனைத்தையும்வேறென்னபேரிட்டியம்புவதே (௫௧)

பயந்தோர்ப்பழிச்சல்.

அணியுஞ்சுடர்விரிசங்குபங்கேருகமாடகமு
மணியுந்தரமன்னிவாழியரோதஞ்சைவாணன்வெற்பிற்
றணியுந்தொழிலொழித்தின்பமுந்துன்பமுந்தன்பதமே
பணியும்பணியெனக்குப்பயந்தாளைப்பயந்தவரோ (௫௨)

கண்படைபெறாதுகங்குனோதல்.

வாமக்கலையல்குல்வாணுதலார்தஞ்சைவாணன்வெற்பி
னாமக்கலவிநலங்கவர்போதுநமக்களித்த
காமக்கனலவர்கையகல்காலைக்கடும்பனிகூர்
யாமக்கடலகத்துந்தணியாதினியென்செய்துமே (௫௩)

பிரிவுழிக்கலங்கன்முற்றிற்று.

இடந்தலைப்பாடு.

தந்ததெய்வந்தருமெனச்சேறல்.

மன்றும்பொதியினுமார்மயில்சேர்தஞ்சைவாணன்வெற்பிற்
றுன்றும்பசிளஞ்சோலையின்வாய்ச்சுறவுக்குழையைச்
சென்றுந்துசேல்விழிமின்னைமுன்னாட்டந்ததெய்வநமக்
கின்றுந்தருநெஞ்சமேயெழுவாழியிங்கென்னுடனே (௫௪)

முந்துறக்காண்டல்.

மருவாயநாப்பண்மயிலுருவாய்நென்னல்வாணன்றஞ்சைத்
தருவாய்த்தழைகொய்துதண்புனங்காத்துத்தடங்குடைந்து
திருவாய்மலர்ந்துசிலம்பெதிர்கூயின்றோர்தெய்வதப்பெ
ணுருவாயொருதனியேநின்றதாலென்னுயிர்க்குயிரே (௫௫)

முயங்கல்.

மானுகரன்றஞ்சைவாணன்வரோதயன்மாறையன்னு
டானுவிநின்றலர்தாமரையேயத்தடமலர்வா
யானுதொழுதுசெங்தேனல்லிமேவுமரசவன்னம்
யானுகிடைப்பதுவேயென்னபாண்மையிருவர்க்குமே (௩௬)

புகழ்தல்.

அரும்பாமளவிற்றனத்தொடொவ்வாயலராமளவிற்
கரும்பாமொழிவதனத்தொடொவ்வாய்களியானைசெம்பொன்
றரும்பாரிவாணன்றமிழ்த்தஞ்சையான்றரியாரின்முன்செய்
பெரும்பாவமல்லதுநீர்நின்றபேறல்லிபெற்றிலையே (௩௭)

ஆயத்துய்த்தல்.

மேவிக்கலைக்கடலென்புலன்மீனுண்டுமீண்டுவந்தென்
னாவிக்கமலத்தமரன்னமேநின்னயில்விழிபோல்
வாவிக்கயலுகளுந்தஞ்சைவாணன்வரையினுடன்
கூவிக்கயங்குடைநின்குயிலாயங்குறுகுகவே (௩௮)

இடந்தலைப்பாடுமுற்றிற்று.

பாங்கற்கூட்டம்.

தலைவன்பாங்கனைச்சார்தல்

புனையாழியங்கைப்புயல்வளர்பாற்கடற்பூங்கொடிவாழ்
மனையாகியதஞ்சைவாணனென்றுரெனமற்றிங்ஙனே
யினையாதெழுமதிநன்னெஞ்சமேநமக்கின்னுயிரே
யனையானருட்புனலாலனங்கானலமாற்றுதற்கே (௩௯)

பாங்கன்றலைவனையுற்றதுவினுதல்.

வலம்புரிபோற்கொடைவாணன்றென்மாறைமழைவளர்பூஞ்
சிலம்புறைசூர்வந்துதீண்டினபோலொளிதேம்பியிவ்வா
றுலம்புனைதோளுநின்னுள்ளமும்வாடியுருகிநின்று
புலம்புவதென்னைகொல்லோசொல்லவேண்டும்புரவலனே (௪௰)

தலைவனுற்றதுரைத்தல்.

மலைமுழுதுங்கொற்றம்வைக்கின்றவாணன்றென்மாறைநண்பா
சிலைமுழுதுஞ்சுற்றுமுற்றுமெய்யாநிற்பச்சென்னிறத்தே
கொலைமுழுதுங்கற்றகூரியவாளிகுளிப்பவின்றென்
கலைமுழுதும்பட்டதாலொருமான்முடிக்கண்ணியிலே (௪௧)

கற்றறிபாங்கன்கழறல்.

தருகற்பகமன்னசந்திரவாணன்றடஞ்சிலம்பின்
முருகக்கடவுளனையவெற்பாமுகிலும்பிறையுஞ்
செருகக்கிளர்வரைவந்தவொர்பேதைக்குன்சிந்தையெல்லா
முருகக்கலங்கினைநீதகுமோமற்றுனக்கிதுவே (சஉ)

கிழவோன்கழற்றெதிர்மறுத்தல்.

மாலாய்மதம்பொழிமாதங்கவாணன்றென்மாறையன்னோர்
சேலார்கருங்கண்ணுஞ்செங்கனிவாயுஞ்சிறியநுண்ணேர்
நூலார்மருங்கும்பெருந்தனபாரமுநும்மையன்றி
மேலானவருங்கண்டாலுரையாரிந்தவீரங்களே (சங)

கிழவோற்பழித்தல்

சூரார்சிலம்பிற்சிலம்பிமென்னூல்கொண்டுசுற்றவெற்றிப்
போரார்களிறுபுலம்பிநைந்தாங்கொருபூவைகொங்கை
வாராலணைப்பவருந்தினைநீதஞ்சைவாணன்வெற்பா
வோராழிசூழுலகத்தெவரோநின்னையொப்பவரே (சச)

கிழவோன்வேட்கைதாங்கற்கருமைசாற்றல்.

பொறைகொண்டதாமரைப்போதன்னகொங்கையும்பொருகரிசோ
கறைகொண்டவாளன்னகண்களுங்கொண்டொருகன்னிதெய்வத
திறைகொண்டவாணனசெழுந்தஞ்சைசூழுஞ்சிலம்பிலின்றென்
னிறைகொண்டவாறறியாதிகழாநிற்றிநீயுநின்றே (சரு)

பாங்கன்றன்மனத்தழுங்கல்.

சீதளவாரங்கமழ்தஞ்சைவாணன்றென்மாறையன்னாள்
காதளவாவெங்கடுவளவாவொளிர்காவியந்தண்
பேர்தளவாவிழியென்னுமென்னுசைப்புறத்தளவா
கூதளவாமுலையென்னுமென்னுமினிச்சொல்லுவதே (சசு)

தலைவனோடழுங்கல்.

என்மேலறைவதியானின்றுநின்செவிக்கென்சொலெல்லாம்
வன்மேலடர்கொங்கைகாரணமாத்தஞ்சைவாணன்வெற்பா
கன்மேலறைகின்றமென்முளைபோலுங்கடல்வெதும்பிற்
றன்மேல்விளாவவுண்டோதரைமேலொருதண்புனலே (சஎ)

எவ்விடத்தெவ்வியற்றென்றல்.

முகத்திற்பகழியிரண்டுடையார்க்கிடமூரிமுந்நீ
ரகத்திற்பிறந்தவரவிந்தமோவடையார்தமக்கு

மகத்திற்சனியன்னசந்திரவாணன்றென்மாறைவெற்போ
நகத்திற்பகலையாய்த்தன்மையேதுநுவலெனக்கே (௪௮)

அவனஃதிவ்விடத்திவ்வியற்றென்றல்.

கனைக்குழல்செங்கயலேவிழிமொழிகார்க்குயிலே
துணைமேமுகையென்றனிநெஞ்சமேயிடைதன்பகைக்கு
வணைமேயருளியவாணன்றென்மாறைமணிவரைசூழ்
புனமேயிடமிங்ஙனேயென்னைவாட்டியபூங்கொடிக்கே (௪௯)

பாங்கனிறைவனைத்தேற்றல்.

மழைவளர்மாளிகைமாறைவரோதயன்வாணன்வெற்பி
னிழைவளர்வார்முலையேரிளங்கோதையையிக்கணம்போய்க்
கழைவளர்சாரலிற்கண்டுனையான்வந்துகாண்பளவுந்
தழைவளர்தாரண்ணலேதணிவாய்நின்றகவின்மையே (௫0)

குறிவழிச்சேறல்.

பாரித்ததிண்மையெம்மண்ணலுண்ணீரைப்பருகிநின்று
பூரித்தசெவ்விளநீர்களுந்தாங்கியபூங்கொடிதான்
வாரித்தலம்புகழ்வாணன்றென்மாறைவரைப்புனஞ்சூழ்
வேரித்தடம்பொழில்வாய்விளையாடுங்கொன்மேவிநின்றே (௫௧)

இறைவியைக்காண்டல்.

கானேயளகங்கரும்புயலேயியல்கார்மயிலே
மானேவிழிமுகமாமதியேதஞ்சைவாணன்வெற்பிற்
றேனேய்தொடையலச்சேயனையான்சொன்னசேயிழையா
ளானேயிவளிதுவேயிடமாகியதண்புனமே (௫௨)

இகழ்ந்ததற்கிரங்கல்.

கொலைகாலயிற்படைநேரியர்கோனகங்கோடவங்கைச்
சிலைகால்வளைத்துத்திருத்தியவாணன்றென்மாறைவெற்பின்
முலைகால்கொளக்கண்டிளைத்தநுண்ணூலிடைமுற்றிழைகண்
வலைகால்பிணிப்பவந்தார்வருந்தாரல்லர்மாலுழந்தே (௫௩)

தலைவனைவியத்தல்.

தலங்காவலன்றஞ்சைவாணன்முந்நீர்பொருந்தண்பொருநத்
திலங்கார்வலவடக்கொங்கைவெற்பாலிணைநீலவுண்கட்
பொலங்காமவல்லிகடைந்தவப்போதுபுடைபெயர்ந்து
கலங்காதிருந்ததெவ்வாறெம்பிரான்றன்கலைக்கடலே (௫௪)

தலைவியைவியத்தல்.

வெங்கோன்மழைபொழிவானவர்போர்வென்றமீனவர்தஞ்
செங்கோன்முறைமைசெலுத்தியவாணன்றென்மாறைவெற்பி
னங்கோன்மெலியநலிகின்றகாமவெந்நஞ்சினையிப்
பைங்கோன்மணிவளையார்தணியாரல்லர்பார்வைகொண்டே (ருரு)

தலைவன்றனக்குத்தலைவிநிலைகூறல்.

வளங்கனிமாறைவரோதயன்வாணன்மலயவெற்பா
வுளங்கனிகாதலுடனின்றதானின்னுடலமெல்லாங்
களங்கனிபோலக்கருகிவெண்கோட்டுக்களிறுண்டதோர்
விளங்கனிபோல்வறிதாகிறைவாங்கியமென்கொடியே (ருசு)

தலைவன்சேறல்.

புறங்கூரிருட்கங்குல்போன்றகணபகல்போன்றபொங்கர்
நிறங்கூர்படைக்கண்ணிநின்றனளேநிழலைச்சுளிர்ந்து
மறங்கூர்களிற்றண்ணல்வாணன்றெனமாறையில்வாணுதலா
ளறங்கூர்மனத்தருளானின்றதாமெனதாருயிரே (ருஎ)

தலைவியைக்காண்டல்.

பாகையுந்தேனையும்போன்மொழியார்தமிழ்ப்பைந்தொடையும்
வாகையுஞ்சூடியவாணன்றென்மாறைவளமுமவ
னீகையும்போலுமெழிலியைநோக்கியிரங்குபுள்ளுந்
தோகையும்போனினறவாதனியேயிந்தசோலையிலே (ருஅ)

கலவியின்மகிழ்தல்.

யாரும்பர்தம்பதமென்பேரலவெய்தினரிம்பரம்பொன்
வாருந்துறைவையைசூழ்தஞ்சைவாணனமலயவெற்பிற்
றேருந்தொறுமினிதாந்தமிழ்போன்றிவள்செங்கனிவா
யாருந்தொறுமினிதாயமிழ்தாமெனதாருயிர்க்கே (ருகூ)

புகழ்தல்.

தழல்கண்டதன்னகலிவெம்மையாறத்தன்றண்ணளியா
னிழல்கண்டசந்திரவாணன்றென்மாறைநிழல்பொலியுங்
கழல்கண்டதன்னகதிர்முத்தமாலிகைக்காரிகைநின்
குழல்கண்டபின்னல்லவோவறனீருட்குளித்ததுவே (கூ0)

பாங்கியொடுவருகெனப்பகர்தல்.

வன்காதலினென்றியம்புகின்றேனிங்கினிவருங்கா
னின்காதலியொடுநீவரல்வேண்டுநிலமடந்தை

தன்காதலன்றஞ்சைவாணன்றென்மாறைநத்தண்டாமரைவாழ்
பொன்காதல்கொண்டுதொழுஞ்சிலம்பாரடிப்பூங்குயிலே (சுக)

பாங்கிற்கூட்டல்.

என்னூடுநின்றவிளங்கொடியேசங்கமேழ்ந்துகுழாந்
தன்னூடுசெல்லுஞ்சலஞ்சலம்பாற்றஞ்சைவாணன்வெற்பிற்
பொன்னூடுசெல்லும்புகழ்மணிபோனின்புடையகலா
மின்னூடுநுண்ணிடையாருடனீசென்றுமேவுகவே (சுஉ)

பாங்கற்கூட்டமுற்றிற்று.

பாங்கிமதியுடன்பாடு.

தோற்றத்தாலாராய்தல்.

வண்டலையாயத்துடனயந்தோவன்றி வண்டிமிர்பூந்
தண்டலையாரத்தழைகள்கொய்தோதஞ்சைவாணன்வெற்பிற்
புண்டலைவேலினுங்கண்சிவப்பாரப்பொலஞ்சுனைத்தேன்
கொண்டலைநீர்குடைந்தோவிவண்மேனிகுழைந்ததுவே (சுங)

ஒழுக்கத்தாலையந்தீர்தல்.

திளைக்குந்திரைமேலுனக்கு முன்றோன்றலிற்செம்பொன்வெற்பை
வளைக்கம்பிரான்முடிவைகுதலாற்றஞ்சைவாணன்மண்மேல்
விளைக்கும்புகழ்போல்விளங்குதலாற்செக்கர்விண்பிறைகார்
தளைக்குங்குழற்றிருவேதொழவேதகுந்தன்மையதே (சுச)

சுனைநயப்புரைத்தல்

பூட்டியவார்சிலைவீரனைவென்றெப்பொருப்பினுஞ்சீர்
தீட்டியவாணன்றென்மாறையன்னீரிதழ்ச்செம்மையுமை
யூட்டியவாளின்கருமையுந்தான்கொண்டுமெக்கிங்ஙனே
சூட்டியவாறுநன்றான்முல்லைமாலைசுனைப்புனலே (சுரு)

சுனைவியந்துரைத்தல்

மறலையெதிர்ந்தமறமன்னர்வேழமலையெறிவேற்
றிறலார்முருகன்செழுந்தஞ்சைவாணன்றென்மாறைநவையை
யறலார்குழலாய்நுதற்குறவேர்வுமழகுநின்போற்
பெறலாமெனிற்குடைவேனடியேனும்பெருஞ்சுனையே (சுசு)

தகையணங்குறுத்தல்.

குவளைசிவத்துக்குமுதம் வெளுத்தகுறையல்லவே
லவளைமனத்துன்னைக்காட்டலுமாமலர்த்தேன்குதிக்கத்

தவளைகுதிக்கந்தடம்பொய்கைசூழ்தஞ்சைவாணன்வெற்பி
லிவளைவரக்கண்டுநீயணங்கேபின்னெழுந்தருளே (௬௭)

நடுங்கநாட்டம்

பால்போன்மொழிவஞ்சியஞ்சின்றேனிந்தப்பார்முழுது
மால்போற்புரந்தவன்மாறைவிநோதயன்வாணன்வென்றி
வேல்போற்சிவந்துநெறிமுறைகோடியவேந்தன்வெய்ய
கோல்போற்கொடியனவாங்கொலையானையின்கோடுகண்டே (௬௮)

பெட்டவாயில்பெற்றிரவுவலியுறுத்தல்

பொருமணிவெண்டிரைப்பைங்கடல்வங்கம்பொருந்திமுன்பு
தருமணிபின்பெற்றணிபவர்போற்சென்றசார்ந்திரந்து
பருமணிநன்கலப்பாங்கியைநீங்கியப்பாவையைநா
மருமணிவண்டுறைதார்வாணன்மாறைமருவுதுமே (௬௯)

ஊர்வினுதல்

புதியேன்மிகவிப்புனத்திற்கியான்றனிப்போந்தனனும்
பதியேதுசெல்லும்படிசொல்லுவீர்படிமேற்படிந்த
மதியேய்சுதைமதில்சூழ்தஞ்சைவாணன்றென்மாறைவையை
நதியேய்சுழிநிகரும்பழிதீருந்திநல்லவரே (௭௦)

பெயர்வினுதல்

கரைத்தாவியுந்தியகார்விரிவகியகாலத்தினுந்
தரைத்தாருவன்னசெந்தண்ணளிவாணன்றமிழ்த்தஞ்சைசூழ்
வரைத்தாழ்சிலம்பினும்வாழ்பதியீதென்றுவஞ்சியன்னீ
ருரைத்தாலிழிவதுண்டேற்பெயரேனுமுரைமின்களோ (௭௧)

கெடுதிவினுதல்

தண்பட்டமேவும்வயற்றஞ்சைவாணன்றமிழ்ச்சிலம்பிற்
பண்பட்டதேமொழிப்பாவையன்னீர்பனைபட்டகையு
மண்பட்டகோடுமதம்பட்டவாயும்வடிக்கணைதோய்
புண்பட்டமேனியுமாய்வந்ததோவொருபோர்க்களிறே (௭௨)

ஒழிந்ததுவினுதல்

வனமார்குடிஞைப்பணைக்குரலாமெனவாணன்றஞ்சைப்
புனமார்குளிரிப்புடைப்பொலியாற்கிளிபோயினமீண்
டினமாமெனவந்திவ்வேனலெல்லாம்வவ்வுமென்பதற்கோ
கனமார்நறுங்குழலீர்மொழியாதொழிகாரணமே (௭௩)

யாரேயிவர்மனத்தெண்ணமியாதெனத்தேர்தல்

மாயாரவண்புகழ்ச்சேக்கிழவாணன்றமிழ்த்தஞ்சைசூழ்
வளையாதுநும்பதியாதுநும்பேரென்பர்வார்துளிக்கார்
புளையானையம்பொருபோந்ததுண்டோவென்பர்பூங்கொடியீ
ருளையாததென்னென்பராலென்கொலோவிவருட்கொண்டதே (௭௪)

எண்ணந்தெளிதல்

யாரேயிவரென்றறிகின்றிலேனெதிர்தாரைவென்று
வாரேய்கழற்புனைவாணன்றென்மாறைவளையுறைவீ
ருரோதனமுன்னறிவிப்பினவேறொன்றுரைப்பதெல்லா
நேரேயிவர்பொருட்டாலென்றுதோன்றுமென்னெஞ்சினுக்கே (௭௫)

தலைவன்கையுறையேந்திவருதல்

தண்டாமரைமலர்ப்பொன்னையும்பார்மங்கைதன்னையும்போல்
வண்டார்குழன்மடவார்மணந்தாரென்றுவாணன்றஞ்சை
நுண்டாதணிபொங்கர்நீழலின்கீழ்நுடங்கிடையார்க்
கண்டாதரவையெல்லாஞ்சொல்லவேநல்லகாலமிதே (௭௬)

தலைவனவ்வகைவினாதல்

வல்லாரிளங்கொங்கைவஞ்சியனீர் தஞ்சைவாணனைக்கண்
டொல்லார்களத்திறுடைந்ததுபோலவொருகலையோர்
வில்லார்கணைதைப்பமெய்சோர்ந்தினம்விட்டுவெய்துயிர்த்துப்
புல்லார்வதுமின்றியோர்ந்தேநும்புனத்தயலே (௭௭)

எதிர்மொழிகொடுத்தல்

வாக்குந்திறனுமதனையொப்பீர்தஞ்சைவாணன்மஞ்சு
தேக்குங்குடுமிச்சிறுமலைக்கேதிரிகோட்டிரலை
நோக்குஞ்சரமுஞ்சருகிபுஞ்சோரக்கொடிச்சியரோங்
காக்கும்புனமருங்கேதனியேவரக்கண்டிலமே (௭௮)

இறைவனைநகுதல்

மைவாளிலங்குகண்மங்கைநல்லாய்தஞ்சைவாணன்வெற்பி
லிவ்வாளிமொய்ம்பினிறைப்பதமெய்ம்மானினிமோர்ந்தளரின்
செவ்வாளியுங்கொண்டுசேட்சென்றதாலன்றுசீதைகொண்கன்
கைவாளியுங்கொண்டுபோனதொய்ம்மானினுங்கள்ளத்தே (௭௯)

பாங்கிமதியினவரவர்மனக்கருத்துணர்தல்

புனங்காவலன்றிவள்பூண்டதுமாண்டகைபோந்ததுமா
னினைநாவலின்றலையெய்யவன்றுலிகலாழிவிந்தை

தனங்காவலன் றஞ்சைவாணனன்னுட்டிவர்தங்களிற்ரு
மனங்காவல்கொண்டதெல்லாங்கண்களேசொல்லும்வாய்திறந்தே அ0

பாங்கிமதியுடன்பாடு - முற்றிற்று

பாங்கியிற்கூட்டம்.

தலைவனுட்கோள்சாற்றல்.

வாவுங்கலைவிந்தைசாவலன்வாணனறென்மாறையின்னி
ரோவுந்தொழிலெனக்கேதியலாததிங்கேநுமக்கோர்
மேவுஞ்செய்குன்றமுஞ்சோலையுமாகப்பொன்வெற்பும்விண்ணோர்
சாவுந்தரவும்வல்லேனெனையாளுங்கடைக்கண்வைத்தே (அ௧)

பாங்கிகுலமுறைகிளத்தல்

நீவேறுரைக்கின்றதென்குறமாதெங்கணேரிழைபோர்
மாவேழவன்படைவாணன்றென்மாறைமணியையன்றித்
தாவேதுமில்லாத்தமனியமீதுதலம்புகுக்குங்
கோவேயழுத்துவரோவறியோருங்குருவிந்தமே (அ௨)

தலைவன்றலைவிதன்னையுயர்த்தல்

மிக்காருளரல்லர்மெல்லியன்மாதரின்மேதினிமேற்
றக்கார்புகழ்தஞ்சைவாணர்பிரான்றமிழ்நாடனையாய்
மைக்கார்நிகர்குழல்வள்ளிசெவ்வேளுக்குவல்லவையா
மிக்காரணமுணராதென்கொலோநின்றியப்புவதே (அ௩)

பாங்கியறியாள்போன்றுவினுதல்

பொன்னியலூசலும்பொயதலுமாடியெப்போதுநன்னீர்
மன்னியனீலமுநித்திலமுங்குற்றுவாணன்றஞ்சை
யின்னியலாருமிளமரக்காவினிடம்பிரியாக்
கன்னியர்தாம்பலர்யார்நின்னைவாட்டியகாரிகையே (அச)

இறையோனிறைவிதன்மையியம்பல்

தாளிணைமாந்தளிரல்குல்பொற்றேரிடைசங்கைகொங்கை
சோளிணைகோலக்குரும்பைகைகாந்தள்கொடிக்கரும்பார்
தோளிணைவேய்முகந்திங்கள்செவ்வாயிதழ்தொண்டையுண்கண்
வாளிணைவார்குழலாய்வாணன்மாறையெம்மன்னுயிர்க்கே (அரு)

பாங்கிதலைவியருமைசாற்றல்

புகழார்வரையெம்புரவலன்காதற்புதல்வியைநீ
நிகழாவெளியளென்றெண்ணப்பெறீரொமக்கென்றும்வண்மை

திசபூராபரணன்செழுந்தஞ்சைவாணன்சிலம்பினுள்ளீர்
ரசழார்கலியுலகிற்புலனுனவணங்கவள்ளே (௮௬)

தலைவனின்றியமையாமையியம்பல்

உனைந்தாலனகொங்கைமாதருவாய்த்தஞ்சைவாணன்வெற்பிற்
புனைந்தாலனையபுனத்தயல்வாய்வடிபோதகத்தே
ணனைந்தாலனையவென்னல்வினைநான்வந்துநண்ணிற்றென்று
நினைந்தாலணங்கனையாய்தமியேனுயிர்நிற்கின்றதே (௮௭)

பாங்கிநின்குறைநீயேசென்றுரையென்றல்

மருப்பாவியதொங்கல்வாணன்றென்மாறைவனசமலர்த்
திருப்பாவையன்னவென்சேயிழையாட்குன்றிருவுளத்து
விருப்பாகுங்குறையுள்ளதெல்லாஞ்சொல்லிவேண்டுகநீ
பொருப்பாமொழியப்பெறுமொம்மனோரிவைபோல்வனவே (௮௮)

பாங்கியைத்தலைவன்பழித்தல்

வில்லார்நுதல்வெய்யவேலார்விழிக்கென்மெலிவுசொல்ல
வல்லாரிலைசொல்லவல்லையென்றியான்றஞ்சைவாணன்றெவ்வி
னெல்லாதிதுநுமக்கென்றுணரேனின்றணங்கியிந்நா
ளெல்லாமிரந்ததுநின்குறையல்லவென்குறையே (௮௯)

பாங்கிபேதைமையூட்டல்

தேனுஞ்சுரும்புஞ்செறிதொங்கல்வாணன்றென்மாறைவெற்பா
மானுங்கலையும்வடிக்கணையாலெய்துமன்னுயிரு
மூனுங்கவர்கின்றதன்னையர்போலயிலொத்தகண்ணு
டானும்பிறருள்ளநோயறியாத்தகைமையளே (௯0)

காதலன்றலைவிமூதறிவுடைமைமொழிதல்

வருநீர்வளமுலைமங்கைநல்லாய்செங்கைவாணன்வையை
தருநீர்மலிவயற்றஞ்சையன்னாளன்றுதஞ்சமிலே
னருநீர்நவையுறக்கண்மலர்நீர்தெளித்தாற்றினளா
லிருநீர்நிலங்கொள்ளுமோவறியாளென்னுமிவ்வுரையே (௯௧)

பாங்கிமுன்னுறுபுணர்ச்சிமுறையுறக்கூறல்

செறிவளர்காவிவயற்றஞ்சைவாணன்சிறுமலைமே
னெறிவளர்வார்குழனேரிழையாளன்னநீர்மையளேற்
குறிவளர்காவின்முன்கூடியவாறின்னுங்கூடுகநீ
கறிவளர்சாரல்வெற்பாபிறராலென்னகாரியமே (௯௨)

தன்னிலைதலைவன்சாற்றல்

உரைத்தென்பிறவந்தப்பைந்தொடியாளைமுருகுவிடிற்செவ்வண்
டிரைத்தெழுங்கடன்முத்துந்தென்மலைச்சந்துஞ்செழும்பனிநீ
ரரைத்தென்புருகமெய்யப்பினும்வெப்பமறாதினிநின்
வரைத்தென்சுரும்பெல்லாந்தஞ்சைவாணன்வரையணங்கே ௯௩

பாங்கியுலகியலுரைத்தல்

விளையகநாண்மலர்மெல்லியன்மாதைவிரும்பினையேல்
வளையகநாடவளைந்துகொணீதஞ்சைவாணன்முந்நீர்
தளையகநாண்மலர்க்கேள்வியர்வேள்வியர்சான்றவர்தந்
முளையகநாடிமுன்னிட்டனதாமுலகியலே (௯௪)

தலைமகன்மறுத்தல்

வெண்டாமரைமங்கைகாதலனாகியவேதியன்பா
லுண்டாகியதொல்லுலகியலாலுங்களாரணங்கை
வண்டார்குழலிவளைந்துகொள்வேன்றஞ்சைவாணன்வண்மை
கண்டாலருளுள்ளநீயெனதாருயிர்காத்தபின்னே (௯௫)

பாங்கியஞ்சியச்சுறுத்தல்

மல்லார்புயன்றஞ்சைவாணன்வெற்பாவெமர்வந்தினியிக்
கல்லார்வியன்புனங்காவல்விடாரவர்காணின்மிகப்
பொல்லாதிதுண்டதுபோதுமற்றியாங்களும்போதுமிங்கு
நில்லாதெழுந்தருணீயுமிப்போதுநெடுந்தகையே (௯௬)

தலைவன்கையுறைபுகழ்தல்

சிமையார்மலயத்தமிழ்த்தஞ்சைவாணன்சிறுமலைமே
லமையாகியதடந்தோளன்னமேயணியத்தகுமா
லுமையாளிறைவன்பயில்கயிலாயத்துமும்பர்தங்கு
மிமையாசலத்துமெல்லாமில்லையானிகரித்தழைக்கே (௯௭)

பாங்கிகையுறைமறுத்தல்

மற்குற்றதண்புனல்சூழ்தஞ்சைவாணன்மலயவெற்பா
நற்குறவர்வயிந்தநாட்டுள்ளன்மையினன்னுதலா
ளல்குற்றடத்தெமர்கண்டாலயிர்ப்பரதுவுமன்றிப்
பல்குற்றமும்வருமால்யாங்கள்வாங்கேம்பசுந்தழையே (௯௮)

ஆற்றுநெஞ்சினோடவன்புலத்தல்.

உழையும்வெங்காளமும்போலுங்கண்ணாளொருகாலமுள்ளங்
குழையுமெய்பாலென்றுகொண்டநெஞ்சேகலிக்கோடைபண்டயன்

மலையுமந்தாரமும் வந்தனவாணன்றென்மாறையின்மாந்
தழையுநம்போலிங்ஙனேகன்வாடத்தவஞ்செய்ததே (௯௯)

பாங்கியாற்றுவித்தகற்றல்.

சோலையில்வாழிளந்தோகையன்னாளைத்தொழுதிரந்திம்
மாலையில்வாழிவரங்கொள்வல்யான்றஞ்சைவாணன்வெற்பா
வேலையில்வார்துகிரன்னவெய்யோன்வெயில்வெற்பின்மல்குங்
காலையில்வாபின்னையென்கையதாகுநின்கையுறையே (௧00)

இரந்துகுறைபெறாதுவருந்தியகிழவோன்மடலே பொருளெனமதித்தல்

திருந்தார்தொழுங்கழற்சேயன்னவாணன்றென்மாறைவெற்பி
னருந்தாவமுதன்னவஞ்சொனல்லாரழகார்குழைதோய்
பெருந்தாரைவேல்விழிதந்தவெங்காமப்பிணிதனக்கு
மருந்தாவதுநெஞ்சமேயில்லைவேறுமடலன்றியே (௧0௧)

பாங்கிக்குலகின்மேல்வைத்துரைத்தல்

விரையூர்குழலியர்தந்தசிந்தாகுலவெள்ளநிரைக்
கரையூர்பொழுதிளங்காளையர்தாங்கிழிகைப்பிடித்துத்
தரையூர்தொறும்பெண்ணைமாமடலூர்வர்தவிர்ந்துபின்னும்
வரையூர்வர்தஞ்சையர்கோன்வாணன்மாறையில்வாணுதலே (௧0௨)

அதனைத்தன்மேல்வைத்துச்சாற்றல்

வன்பணிபோனிலந்தாங்கியவாணன்றென்மாறைவெற்பின்
மின்பணிபூண்முலைமெல்லியலீர்குறைவேண்டியுங்கண்
முன்பணிவேனின்றுநாளைவெண்பூளைமுகிழெருக்கோ
டென்பணிவேன்மடன்மேல்வருவேனிலைவையென்பணியே (௧0௩)

பாங்கிதலைமகளவயவத்தருமைசாற்றல்

தொடையேயெருக்கென்புநீயணிந்தாலென்னைசூல்வளையூர்
மடையேய்வயற்றஞ்சைவாணன்வெற்பாமலரோன்வகுத்த
படையேநயனம்படைத்தபொற்பாவைபடியெடுக்க
விடையேதெனத்தெரியாதுரையாணியிடவரிதே (௧0௪)

தலைமகன்றன்னைத்தானேபுகழ்தல்

நறையலராவிரைப்போதிசையாதிசைநான்முகத்து
மறையலராவந்தமான்மகன்யான்றஞ்சைவாணன்வையத்
துறையலராவியங்காவிடங்கண்ணிதுணிந்துசொல்லுங்
குறையலரார்குழலாட்கினித்தீரக்குறையில்லையே (௧0௫)

பாங்கியருளியல்கிளத்தல்

செயலார்குடம்பையிற்செந்தலையன்றிற்சினையுளபைங்
கயலார்வனவெண்குருகின்வண்பார்ப்புளகைக்கடங்கா
மயலார்களிற்றண்ணல்வாணன்றென்மாறைவையத்துறைவா
வியலாதருளுடையார்க்கென்றுமாமடலேறுவதே (௧0௬)

கொண்டுநிலைகூறல்

வெண்டோடணிமுகப்பைங்குரும்பைக்கொங்கைவெய்யவுண்கட்
கண்டோர்விரும்புங்கரும்பனையாளைக்கடற்றுறைவா
கொண்டோர்குறைமுடிகொம்பனையாணின்குறைமறத்தால்
வண்டோலிடுந்தொங்கலான்வாணன்மாறைவளநகர்க்கே (௧0௭)

தலைவியிளமைத்தன்மைபாங்கிதலைவற்குணர்த்தல்

களவரும்பாகருநீலங்கள்காமக்கடவுளுமால்
கொளவரும்பாபைங்குரும்பைக்குலஞ்செங்குமுதத்துவண்
டளவரும்பாநண்பனேதஞ்சைவாணன்றமிழ்வையைநாட்
டிளவரும்பாமிவண்மாட்டென்கொலோநின்றிரப்பதுவே (௧0௮)

தலைவன்றலைவிவருத்தியவண்ணமுரைத்தல்

சிலைபயில்வாணுதன்மின்னேபிறந்தவச்செவ்வியிலே
கொலைபயிலுகக்குருளையைப்போற்குறியோனிருந்த
மலைபயில்வார்தமிழ்வாணன்றென்மாறைமயிலனையா
ளலைபயிலால்விழியாலெனதாவியணங்கினளே (௧0௯)

பாங்கிசெவ்வியருமைசெப்பல்.

ஏடாரலங்கல்லங்கிலைவேல்வெற்பவேழுலகும்
வாடாமல்வந்தருள்வாணன்றென்மாறையில்வல்லியன்னாள்
சூடாள்குவளையுமுல்லையஞ்சூட்டுஞ்சுனையும்பந்து
மாடாடனக்கென்கொலோவடியேன்சென்றறிவிப்பதே (௧௧0)

தலைவன்செவ்வியெளிமைசெப்பல்.

தேன்வந்தவாயிதழ்ச்சேயிழையாயிளஞ்செவ்விநவ்வி
மான்வந்தவாள்விழிவஞ்சிக்குநீதஞ்சைவாணன்வெற்பில்
யான்வந்தவாசென்றியம்புதியேலவர்யாவொன்று
டான்வந்தவாவுடனேநின்னையாரத்தழீஇக்கொள்ளுமே (௧௧௧)

பாங்கியென்னைமறைத்தபினெளிதெனநகுதல்

மண்ணும்பயில்வித்துமொன்றினுஞ்சந்திரவாணன்வெற்பா
நண்ணும்புனலின்றியங்குரியாதுங்கணல்வினையாற்

கண்ணுங்கருந்துங்கலந்தனவ யினுங்கண்ணினும்மு
மண்ணணுங்குறையென்னைநீர் மறைத்தாலிங்கியல்வதன்றே (கக௨)

அங்ஙைகபொருஅதவன்புலம்பல்

வெவ்வேலெறிந்த விழுப்புண்ணின் மீட்டும்வெய துப்பியதோர்
செவ்வேனுழைப்பவர்சிலமன்றேதிருவேமருவார்
வைவேலமர்வென்றவாணன்றென்மாறைமயில்பொருட்டா
னேவேணடஞ்சலென்றுதின்னவாறுநகைக்கினறதே (ககங)

பாங்கிதலைவனைத்தேற்றல்.

தன்கண்ணனையதன்பாங்கியருள்ளுந்தனக்குயிரா
மென்கண்ணருள்பெரிதெம்பெருமாட்டிக்கிதன்மலைந்தார்
வன்கண்ணமர்வென்றவாணன்றென்மாறையில்வந்தவளாற்
புன்கண்ணடையலைநீயினிவாடல்புரவலனே (ககச)

பாங்கிகையுறையேற்றல்

ஒலிதெண்கடல்புடைசூழுலகேழினுமூழ்வினைதான்
வலிதென்பதனைவயக்கியதாற்றஞ்சைவாணன்வெற்பா
கலிதெங்குமாவுங்கமுகும்பலாவுங்கதலிகளும்
பொலிதென்பொதியிலின்மேற்சந்தனுடவிப்பூந்தழையே (ககரு)

கிழவோனுற்றல்

மைப்போதணிதொங்கல்வாணனென்றொனவல்வினையேற்
கப்போதடைந்தவருந்துயர்நீங்கியரும்பியபொற்
செப்போதிளமுலையாணைகவாண்முகத்திங்களைக்கண்
டிப்போதிளகியதாலிந்துகாந்தங்கொலென்னெஞ்சமே (ககசு)

இறைவன்றனக்குககுறைநேர்பாங்கியிறை விக்கவன்குறையுணர்த்தல்

இருவர்கண்டால்வருமேதமென்றெண்ணியெனக்கெதிரோ
வருவர்வந்தாலுந்தம்வாய்திறவார்தஞ்சைவாணன்வெற்பி
னொருவர்நஞ்சாரலுழையகலார்தழையுள்ளதெல்லாந்
தருவர்வம்பார்முலையாயென்கொலோசெயத்தக்கதுவே (ககஎ)

இறைவியறியாள்போன்றுகுறியாள்கூறல்.

கலைதொடக்கிண்டகருவிபந்தேன்பலதால்கொடிமா
மலைதொடுத்தூர்ந்துவருகின்றதாற்றஞ்சைவாணன்வென்றிச்
சிலைதொடுத்தாங்கெழில்சேர்நுதலாய்பயில்செம்பழுக்காய்க்
குலைதொடுத்தோங்குபைங்கேழ்ப்பூகநாகக்குழாங்கவர்ந்தே (ககஅ)

பாங்கியிறையோற்கண்டமைபகர்தல்

திவாகரனேயன்னபேரொளிவாணன்றென்மாறைநன்னாட்
டுவாமதிபோலுமொளிர்முகத்தாயென்னொளிப்பதுண்மே
லவாவினனாகியொர்மானைவினவிவந்தானையின்றிக்
கவானுயர்சோலையின்வாய்வண்டலாருமழைக்கண்டனமே (௧௧௯)

பாங்கிமைத்தலைவிமறைத்தல்

செவ்வண்ணவேல்விழியாய்தஞ்சைவாணன்றென்மாறைநன்னாட்
டிவ்வண்ணநீசொல்வதேற்பதன்றாலின்னிடையெனத்தா
மெய்வண்ணம்வாடிவெறிமேதவருந்திவிருந்தினராய்க்
கைவண்ணமார்தழைகொண்டுசென்றார்தமைக்கண்டிலமே (௧௨0)

பாங்கியென்னைமறைப்பதென்னெனத்தழால்

பரக்கின்றசெவ்விதழ்ப்பங்கயப்பாதம்பணிந்துநின்னை
யிரக்கின்றதொன்றையுமெண்ணலையாலெழுபார்முழுதும்
புரக்கின்றகோன்றஞ்சைவாணன்பொதியிற்பொய்த்தென்னைநீ
கரக்கின்றதென்னைகொலென்னுயிராகியகாரிகையே (௧௨௧)

பாங்கிகையுறைபுகழ்தல்.

சூடத்தகுவனவல்லவெல்லாம்படிசொல்லினுந்தாம்
வாடத்தகுவனவல்லநல்லாய்தஞ்சைவாணன்வெற்பர்
தேடத்தகுவனவல்லதல்லாதசிலம்பினுள்ளார்
காடத்தகுவனவல்லகல்லாரநறுந்தழையே (௧௨௨

தோழிகிழவோன்றுயர்நிலைகிளத்தல்

வனையுங்குழல்வஞ்சிவாணன்றென்மாறைவரைக்களிறு
தினையுந்தழையும்பிடியொடுமேய்ந்துதெளிந்தவின்னீர்
சுனையுண்டசோகநிழற்சோகநீங்கித்துயில்வதுகண்
டெனையுங்கடைக்கணியாவினையாநிற்பரேதிலரோ (௧௨௩)

மறுத்தற்கருமைமாட்டல்.

கையுந்தழையுமுன்காண்டொறுங்காண்டொறுங்கட்டுரைத்த
பொய்யுந்தொலைந்தனபூந்தழைபோலரிபோர்த்துநஞ்சு
மையுங்கலந்துண்டவாள்விழியாய்தஞ்சைவாணன்வெற்பர்
மெய்யுந்துவண்டதென்னுன்முடியாதுவெளிநிற்கவே (௧௨௪)

தலைவன்குறிப்புவேறாகநெறிப்படக்கூறல்

விடையானின்மிசைவருமேருவில்லானெடுமேழிவெள்ளிப்
படையானொடும்வெம்பகைகொள்வதோபகல்போலுமெய்ம்மை

யுடையானுயர்தஞ்சைவாணனென்னுரெனவொல்கியநுண்
ணிடையாய்பிறிதுகொலோவறியேன்வெற்பனெண்ணுவதே (கஉரு)

தோழிதலைவியைமுனிதல்

தூற்றுதலனாமறைப்பவர்க்கேகுறைசொல்லுகுற்ற
மேற்றுதொழியெனையெம்பெருமாட்டிசென்றேற்றவற்கு
மாற்றுதருள்செங்கைவாணன்றென்மாறையில்வந்துநெஞ்சம்
போற்றுதுநின்றயலேன்சொன்னதீங்குபொறுத்தருளே (கஉசு)

தலைவிபாங்கியைமுனிதல்

மற்றேதவர்நினைவார்தஞ்சைவாணன்வரையின்முந்நாட்
பொற்றேரின்வந்துபுணர்ந்துசென்றார்தம்பொருட்டுநம்மைக்
குற்றேவன்மங்கைகுறையிரந்தாளெனுங்குற்றமிந்நா
ளெற்றேதவறுநம்பாலில்லையாகவுமெய்தியதே (கஉஎ)

தலைவிகையுறையேற்றல்

ஆற்றுந்தலைவரருந்துயராற்றினுமாற்றலனுண்
மாற்றும்புனையின்மயிலனையாய்தஞ்சைவாணன்றெவ்விற்
போற்றுங்கொடுவினையேன்புனையாவிடிற்போந்தலரே
தூற்றுந்தழையென்றிதொன்றென்றனேவந்துதோன்றியதே (கஉஅ)

இறைவிகையுறையேற்றமைபாங்கியிறைவற்குணர்த்தல்

போயாளளித்தலுங்கைகுவித்தேற்றபின்போற்றியன்பாற்
சாயாதகொங்கையின்மேலணைத்தாடஞ்சைவாணன்வெற்பா
காயாமலரன்னமேனிமெய்யாகநின்கையுறையே
யூநீர்கவல்லதுமார்தழையாகநினைந்திலளே (கஉகூ)

பாங்கிதலைமகற்குக்குறியிடங்கூறல்

அணிமாமலர்மயிலைப்புயத்தூணங்கொளாகமெனு
மணிமாளிகைவைத்தவாணன்வண்காவலன்மாறைவெற்பா
துணிமாமரகதப்பாசறைவேலைச்சுடரவன்போற்
பணிமாமணிதிகழும்பகல்யாங்கள்பயிலிடமே (கஙo)

பாங்கிகுறியிடத்திறைவியைக்கொண்டுசேறல்

நாமாவிமூழ்கிநறுமலர்குற்றுநந்தாவனத்துத்
தேமாவிடாந்தளிர்செவ்வண்ணங்கொய்துசிலம்பெதிர்கூய்
வாமானெடுங்கண்மடந்தைநல்லாய்தஞ்சைவாணன்வெற்பிற்
பூமாதவிப்பந்தர்வாய்விளையாடுகம்போதுகவே (கஙக)

பாங்கிதலைமகளைக்குறியிடத்துய்த்துநீங்கல்

கண்சாயல்கையுருக்கொண்டுதன்வேன்மயில்காந்தள்வள்ளி
யெண்சாயவென்றனையென்றுசெவ்வேளிவரும்பவளம்
வண்சாயொசிக்கும்வயற்றஞ்சைவாணன்மலயமராத்
தண்சாயைநின்றணங்குந்தையனீநிற்கசாரலிலே (௧௩௨)

இறைவியிறையோனிடத்தெதிர்ப்படுதல்

முயங்கியநூபுரப்பங்கயத்தாளுமுலைசுமந்து
தயங்கியநூலிடைதானுமென்போலத்தளர்வுறுமிங்
கியங்கியவாறென்மனத்திருணீக்கவென்றேதுணிந்தோ
வயங்கியசீருடையான்வாணன்மாறைமணிவிளக்கே (௧௩௩)

புணர்ச்சியின்மகிழ்தல்

தருந்தாருவஞ்சுங்கொடையுடையான்றஞ்சைவாணனின்சொற்
செருந்தார்பசுந்தமிழ்த்தென்வரைமேற்செம்பொன்மேருவெற்பாற்
கருந்தாரைநஞ்சுமிழ்வாசுகியால்வெண்கடல்கடைந்து
வருந்தாவமுதளித்தாள்வல்லளாமிம்மடக்கொடியே (௧௩௪)

புகழ்தல்

மயனார்விதித்தன்னமாமதில்சூழ்தஞ்சைவாணன்வெற்பிற்
பயனார்பயோதரப்பாவையன்னீர்பசும்பொற்குழைதோய்
நயனாரவிந்தத்துநஞ்சுநும்வாயிதழ்நல்லமுத
மயனார்படைத்திலரேலடங்காதவ்வரனுக்குமே (௧௩௫)

தலைமகளைத்தலைமகன்விடுத்தல்

நேயம்புகலிடமின்றிநின்பால்வந்துநின்றதுபோ
லாயம்புகலவடைந்தருணீயடையாதமன்னர்
வாயம்புகவில்வணக்கியவாணன்றென்மாறைநன்னீர்த்
தோயம்புகரிணைவேல்விழியாய்நின்றுணையுடனே (௧௩௬)

பாங்கிதலைவியைச்சார்ந்துகையுறைகாட்டல்

பொய்போலிடைநின்விழிபோற்குவளையம்போதிவைநின்
மெய்போலசோகமிளிர்பூந்தழையிவைமெல்லியனின்
கைபோற்கவின்கொள்செங்காந்தளம்போதிவைகண்டருள்யான்
மைபோற்குழலிதந்தேன்றஞ்சைவாணன்வரையினின்றே (௧௩௭)

தலைவியைப்பாங்கிற்கூட்டல்

குனிநாண்மதிநுதற்கோகிலமேநின்குழலிலெல்லாப்
பனிநாண்மலரும்பறித்தணிந்தேனிந்தப்பார்மடந்தை

தனிநாயகன் றஞ்சைவாணன் றஞ்சாரற்றனித்துநில்லா
தினிநாமகன்றிளையார் விளையாடிடமெய்துதுமே (க௫அ)

நீங்கித்தலைவற்கோம்படைசாற்றல்.

சின்னுண்மலர்க்குழல்காரணமாச்செவ்விபார்த்துழன்று
பன்னுளாத்தபணிமொழிநோக்கிப்பழிநமக்கீ
தென்னுதிடைப்பட்டவென்னிலைநீமறவேலிறைவா
தன்னுகமெய்ப்புகழான் றஞ்சைவாணன் றமிழ்வெற்பிலே (க௫௯)

உலகியன்மேம்படவிருந்துவிலக்கல்.

வலைப்பெய்தமான்றசைதேன்றோய்த்தருந்திமனைமுலைப்பா
லுலைப்பெய்தவார்தினைமூரலுமுண்டுளங்கூர்வகை
தலைப்பெய்தநாளனையான் றஞ்சைவாணன் சயிலத்தெம்மூ
ரிலைப்பெய்ததாழ்குரம்பைத்தங்கினுலுமக்கென்வருமே (க௬0)

விருந்திறைவிரும்பல்

மஞ்சூட்டியன்னசுதைமதில்சூழ்தஞ்சைவாணன் வெற்பிற்
பஞ்சூட்டியமென்பதயுகத்தீருங்கள்பாவையின்மான்
வெஞ்சூட்டிழுதன்னவூனும்பைந்தேனும் விருந்தினர்க்குச்
செஞ்சூட்டிளகுபொன்போற்றினைமூரலுந்தெள்ளமுதே (க௬க)

பாங்கியிற்கூட்டமுற்றிற்று

ஒருசார்பகற்குறி.

கிழவோன்பிரிந்துழிக்கிழத்திமாலையம்பொழுது கண்டிரங்கல்

ஆழ்ந்தார்தமக்கருளாதவர்போலிவ்வளவிலன்பு
சூழ்ந்தார்செலத்தொங்கல்சூழ்குழலாய்சொற்பொருள்படைத்து
வாழ்ந்தார்புகழ்தஞ்சைவாணனைப்பேணலர்மானமெய்யோன்
வீழ்ந்தார்கலிக்கரந்தான் பனிமாலைவெளிப்படவே (க௬௨)

பாங்கிபுலம்பல்.

காலையம்போருகவாண்முகத்தாளன் பர்கையகல
மாலையம்போதுவருவித்தநீர்தஞ்சைவாணன்றெவ்வ
ராலையம்போலுங்களாதவன்கோயிலழல்கொளுந்த
வேலையம்போடுழல்வீர்பரிகாளென்றும்வெய்துயிர்த்தே (க௬௩)

தலைவனீடத்தலைவிவருந்தல்

ஆராவின்பவிடந்தொறநீங்கியவாயமென்பால்
வாராதமுன்னம்வருகிலராற்றஞ்சைவாணன்வெற்பிற்
கூராரநல்கிவல்வினைப்பனலங்கொள்ளைகொண்டு
தேராதவனுடனே யென்னன்மாலையிற்சென்றவரோ (க௬௪)

தலைவியைப்பாங்கிகழறல்

சிறந்தார்தெரிந்தசெழுந்தமிழ்வாணன்றென்மாறைவெற்பர்
துறந்தாரெனேயென்றுசோருவதேனிந்தத்தொல்லுலகிற்
பிறந்தாரெவர்க்கும்பிரிவெய்துமால்வெய்யபேரமர்க்கட்
புறந்தாழ்கரியகுழற்செய்யவாயையபூங்கொடியே (கசரு)

தலைவிமுன்னிலைப்புறமொழிமொழிதல்

பூவலர்வாவியினீரற்றபோதுற்றபுன்மையல்லாற்
காவலர்காமந்துறக்கிலென்னுங்கடம்பாய்மதுகை
மாவலவாணன்வயற்றஞ்சைவேந்தனைவாழ்த்தல்செய்யா
மேவலர்போலுங்கழற்றுணையாளர்வியனறிவே (கசசு)

பாங்கியொடுபகர்தல்

முலைபார்முயக்கினுமல்லாவிடத்தினுமூரிமுந்நீ
ரலையாரமுதமுநஞ்சமும்போலவணங்கனையாய்
தொலைபாதவின்பமுந்துன்பமுங்காட்டுவர்தூங்கருவி
மலையாசலத்தமிழ்தேர்வாணன்மாறைநம்மன்னவரே (கசஎ)

பாங்கியச்சுறுத்தல்.

பேணற்கரியநின்பெண்மையுநாணமும்பேணியவர்
காணத்தகுமென்றுகாண்பதல்லாற்கழிகாதனெஞ்சு
பூணத்தருகினும்பொற்பல்லவாகுதல்கற்பல்லவால்
யாணர்த்தமிழுடையான்வாணன்மாறையினின்னமுதே (கசஅ)

நீங்கற்கருமைதலைவிநினைந்திரங்கல்.

குன்றாகியபொன்னும்வேழக்குழாமுங்கொடைபுகழ்ந்து
சென்றார்முகக்குஞ்செழுந்தஞ்சைவாணன்றென்மாறைவெற்பி
னன்றுமிறைவற்குநன்றியிலேற்குமுன்னான்முகத்தோ
னொன்றாவிதித்திலனேயுயிர்போலவுடம்பையுமே (கசகூ)

தலைவிக்கவன்வரல்பாங்கிசாற்றல்.

நெஞ்சுகவாய்மலரன்னகண்ணீர்மல்கநின்றவஞ்சொற்
கிஞ்சுகவாய்வஞ்சிகேட்டருணீயுங்கிளைத்தமிழோர்
தஞ்சுகவாய்மொழிநெஞ்சுக—யான்றஞ்சைவாணன்வெற்பின்
மஞ்சுகவார்த்தனவாலவர்தேரின்மணிக்குரலே (கருO)

சிறைப்புறமாகச்செறிப்பறிவுறுத்தல்.

தொடைக்கணியார்தடந்தோளவர்கேளலர்தோகையன்ன
நடைக்கணியாந்தழைகொய்யாருழவருகூட்டத்தெண்ணீர்

படைக்கணியாரமிழ்தஞ்சைவாணன்வரையின்முன்போற்
கடைக்கணியார்கணியார்நம்மைமாலைக்கருங்கணியே (௧௫௧)

முன்னிலைப்புறமொழிமொழிந்தறிவுறுத்தல்

பயில்காளபந்திப்புயலன்னவோதியைப்பைங்கிளிகாள
மயில்காள்சிறிதுமறக்கப்பெறீர்தஞ்சைவாணன்வெற்பிற்
குயில்காளமெங்குமியம்புதண்சோலையிற்கூடியின்ப
மயில்காள்வெங்கதிர்வேலன்பர்சாலவயர்ப்பினுமே (௧௫௨)

முன்னின்றுணர்த்தல்

கானலங்கான்மலர்க்கள்வாய்க்கருங்கணிகட்டுமாயாற்
கூனலஞ்சாய்பொற்றாலுங்காயமாமொமர்கொற்றவயா
மேனலங்காவலுமின்றேயொழிந்தனமேழ்புவிக்குந்
தானலங்காரமன்னன்றஞ்சைவாணன்றமிழ்வெற்பிலே (௧௫௩)

முன்னின்றுணர்த்தியோம்படைசாற்றல்

கனஞ்சாயநகையுடையானெதிர்கன்றினர்தம்
மனஞ்சாயவென்றருள்வாணன்வரோதயன்மாறைவெற்பிற்
சினஞ்சாலும்வேலண்ணலேமறவேமெம்மைமச்செவ்வியிரு
தனஞ்சாயினுமினிநின்னையல்லாதிலைத்தாழ்குழற்கே (௧௫௪)

கிழவோன்றஞ்சம்பெறாதுநெஞ்சொடுகிளத்தல்

ஏலலோய்விழிமாந்தளிர்மேனியரோனலினிக்
காவலரோமனங்காத்தனம்பாங்களியானைசெம்பொ
னூவலரோபெறநல்குங்கைமேகநறுங்குவளை
மாவலரோய்தொடையான்றஞ்சைவாணன்வரையில்வந்தே

ஒருசார்பகற்குறிமுற்றிற்று

பகற்குறியிடையீடு

இறைவனைப்பாங்கிகுறிவரல்விலக்கல்

புனமும்பசுந்தினைச்செங்குரலேந்தும்புகன்றகிள்ளை
யினமுங்குழீஇவந்திணைகொள்ளுமாலிறையார்வளையு
மனமுங்கவர்வெற்பவாணன்றென்மாறைமடப்பிடியு
மணமுந்தொழுநடைபாற்பலகால்வருமன்னையுமே (௧௫௬)

இறைவியைக்குறிவரல்விலக்கல்.

கந்துசுற்றுங்கடன்ஞாலமெல்லாம்புகழ்நரமன்வளர்
சந்துசுற்றுங்கொங்கமங்கையர்வேள்சஞ்சரீகநற
நந்துசுற்றுந்தொங்கல்வாணன்றென்மாறைவரையின்மலர்க்
கொந்துசுற்றுங்குழலாய்செல்லனீடக்குளிர்பொழிற்கே (௧௫௭)

இறைமகளாடிடநோக்கியழுங்கல்

அருவித்தடமுமணிமுத்தயாறுமவனியெங்குந்
திருவித்தியதஞ்சைவாணன்சிலம்புமிச்சிற்றிலும்பே
ரிருவிப்புனமுமின்றென்னினைக்கின்றனவென்னையின்னே
மருவப்பிரிபவர்போலில்லையேமண்ணில்வன்கண்ணரே (கருஅ)

பாங்கியாடிடம்விநித்துக்கொண்டகறல்.

உன்னையராவல்குனல்லவரோயென்றுசாவினங்கண்
மன்னையராமல்வருத்துனைநீ தஞ்சைவாணன்வெற்பி
னென்னைபராணைகொண்டேகுகின்றேனிவையித்தனையும்
பின்னையராதொழிவாயிதனையிதுபெற்றனமே (கருகூ)

பின்றணெடுந்தகைகுறிவயினீடுசென்றிரங்கல்,

மான்காணிகரின்மடமயில்காடஞ்சைவாணன்வெற்பிற்
றேன்காணிமைமென்சிறைக்கிள்ளைகாளென்பெருமரனேய்
தான்காணியகொலிச்சந்தனச்சோலையுத்தன்னையின்றி
யான்காணியகொலெழுந்தருளாததின்றென்னுயிரோ (கசுO)

வறுங்களநாடிமறுகல்

செங்கேழ்விழிக்குமொழிக்கும்பகைதிருப்பாற்கடலும்
பங்கேருகமும்பயந்தனவாயினும்பைங்கிள்ளைகாள்
சங்கேய்தடந்துறைசூழ்தஞ்சைவாணன்றரியலர்போ
லெங்கேயினித்தங்குவாரேனல்காத்திங்கிருந்தவரோ (கசுக)

குறுந்தொடிவாழூர்நோக்கிமதிமயங்கல்

பெறவரிதாலவள்பின்சென்றநெஞ்சமும்பேணலர்க்கு
மறவரிதானன்னவாணன்றென்மாறைவரைப்புனஞ்சூழ்
நறவரிதாழ்முல்லைநாண்மலரோதிநசருமெனக்
குறவரிதாமென்செய்வேனென்றசோருமென்னேருயிரோ [கசுஉ]

பகற்குறியிடையீடுமுற்றிற்று

இரவுக்குறி.

இறையோனிருட்குறிவேண்டல்

கருவிநந்தெண்டிசையுங்கனமாமழைகான்றதுள்ளம்
வெருவிருந்தெம்பதிக்கேதவாணனுதவிடம்விதமாய்
வருவிருந்தென்றும்புரந்தருள்வாணன்றென்மாறையன்னீ
ரொருவிருந்தெங்கனைப்போலெய்துமோகங்குலுங்களுக்கே (கசுங)

பாங்கிநெறியினதருமைகூறல்

மலைமாதுவவ்லவன்வாணன்வரோதயன்மாறைவெற்பிற்
சிலைமாலுருமெங்குந்தீயுமிழாநிற்குஞ்சிங்கமெங்கும்

கொலைமாகரியினைத்தேர்ந்துலாநிற்குங்கொற்றவபொற்
கலைமானுறைபதிநீவருமாறென்கொல்கங்குலிலே (கசுச)

இறையோனெறியினதெளிமைகூறல்

வடிவரிநீள்கண்ணியஞ்சலம்யாந்தஞ்சைவாணன்வெற்பிற்
கொடுவரிகேழற்குழாம்பொருகொல்லையுங்குஞ்சரந்தேர்ந்
தடுவரிதாவுமடுக்கமுஞ்சூர்வழங்காறுமைவாய்க்
கடுவரிநாகந்தவழ்மல்குகல்லளைக்கானமுமே (கசுரு)

பாங்கியவனாட்டணியியல்வினாதல்

பூந்தழையாதுமலைமலர்யாதுபுனையிழையுஞ்
சாந்தமும்யாதுதடம்பொழில்யாதுதரணியின்மேன்
மாந்தரில்வேளன்னவாணன்றென்மாறைவளநகர்சூழ்
தேந்தருசோலைவெற்பாவுங்களுட்டுறைசெல்வியர்க்கே (சசுசு)

கிழவோனவனாட்டணியியல்வினாதல்

எந்நாட்டவரணிகூறியென்பேறிங்கிகல்வடிவேன்
மைந்நாட்டவெண்முத்தவாணகையாய்தஞ்சைவாணன்மென்மே
லுந்நாட்டரிவையராடிடஞ்சாந்தமொளியிழைபூ
மொய்ந்நாட்டழையொடெல்லாமொழியாமன்மொழியெனக்கே.

அவற்குத்தன்னாட்டணியியல்பாங்கிசாற்றல்

வகைகொண்டமாந்தழைகாந்தளம்போதுமருப்பின்முத்தந்
தகைகொண்டசந்தனச்சாந்தணிந்தாடுவர்தஞ்சையர்கோன்
மிகைகொண்டதெவ்வனைவென்கண்டவாணன்வெற்பாவெமதூர்
நகைகொண்டவல்லியன்னாரொல்லிநாகநறுநிழலே. (கசுஅ)

இறைவிக்கிறையோன்குறையறிவுறுத்தல்

புயலேறதிர்தொறும்பொங்குளைமீதெழப்போதகந்தேர்ந்
தியலேறதிருமிருங்கங்குல்வாய்முத்தமீன்றுசங்கம்
வயலேறணைவளருந்தஞ்சைவாணன்வரையிலுண்கண்
கயலேறனையநின்பால்வரல்வேண்டினர்காதலரே. (கசுகூ)

நேராதிறைவிநெஞ்சொடுகிளத்தல்

விடவார்க்கணைவிழிமெல்லியன்மாதனைமேதினியோர்
மடவாரெனுமுனைவாய்மைநெஞ்சேதஞ்சைவாணன்வெற்பிற்
கடவாரணந்திரிகங்குனங்கண்ணன்னகாதலர்முட்
பிடவார்சிறுநெறிவாய்வரல்வேண்டினள்பெண்ணணங்கே (சஎ0)

நேரிழைபாங்கியொடுநேர்ந்துணர்த்தல்.

வெங்குலவாரணமேற்றவர்க்கேநல்கிவேற்றரசர்
தங்குலவாழ்வுதவிர்த்தருள்வாணன்றமிழ்ச்சிலம்பிற்
கங்குலவாவினர்காதலராயிற்களிபயந்த
கொங்குலவாவலர்சூழ்குழலாயெனகொல்கூறுவதே (கஎ௩)

நேர்ந்தமைபாங்கிநெடுந்தகைக்குணர்த்தல்.

பரவாதவண்ணம்பரவியும்பாதம்பணிந்துநெஞ்சங்
கரவாதபொன்னைநின்சரணமாகக்கயிலையென்றே
வரவாதவனஞ்சும்வெண்மாளிகைத்தஞ்சைவாணன்வெற்பா
விரவாதவண்ணமெல்லாமிரந்தேனிவ்விரவிடையே (கஎ௪)

குறியிடைநிறீஇத்தாய்துயிலறிதல்

மாகந்தரியலர்க்கீந்தருள்வாணன்றென்மாறைவெற்பின்
மேகந்தருமின்னிடையன்னமேவிரைநாண்மலர்வேய்
நாகந்தழுவுங்குடம்பையின்வாய்நடுகொளிரவிற்
சோகந்தவிர்விலவாய்த்துயிலாததென்முன்கைகளே (கஎ௫)

இறைவிக்கிறைவன்வரவறிவுறுத்தல்.

கந்தாரநாணுங்கனிந்தசொல்லாய்நங்கடியனைக்கே
வந்தாரவாவினபெருமையினாற்றஞ்சைவாணன்வெற்பிற்
கொந்தாரசோகந்தருஞ்செழும்போதுங்கொழுந்தழையுந்
தந்தாரகலந்தழீஇயகலாதுதணந்தவரோ (கஎசு)

அவட்கொண்டுசேறல்

மின்னேயயிலொடுமின்விளக்காவந்தவெற்பரைநாம்
பொன்னேயெதிர்கொளப்போதுகம்வாபுவியேழினுக்குந்
தன்னேயம்வைத்தருள்சந்திரவாணன்றமிழ்ச்சிலம்பி
னின்னொளியன்மயிலகண்டுயினுகநிழலகத்தே (கஎரு)

குறியுய்த்தகறல்

மந்தாரமன்னகவாணன்றென்மாறைமயிலனையாய்
நந்தாவனப்பொய்கைநான்கொய்குவேன்குழனுணுங்கநுதல்
கொந்தார்தெரியனின்செங்கனிவாயொடுங்கொங்கையொடும்
பைந்தாமரையையுஞ்சேதாம்பலையும்பகைப்பித்ததே (கஎசு)

வண்டுறைதாரோன்வந்தெதிர்ப்படுதல்

மூதிராமுலையிப்பனியந்தாரமுனியவல்ல
கதிராயிரமில்லையேழ்பரித்தேரில்லைக்கர்வல்வெய்யோற்

கெதிராதல்சோமற்கியைவதன்றேநும்மில்யார்திறந்தார்
மதுராபுரித்தமிழ்தேர்வாணன்மாறைவனத்துவந்தே (கஎஎ)

பெருமகளாற்றினதருமைநினைந்திரங்கல்

செழியன்கயலைத்திசைவைத்தவாணன்றென்மாறையென்மேற்
கழியன்புடையநின்கால்கண்களாகக்கராம்பயிலுங்
குழியன்றியும்வெஞ்சுழியொன்றும்யாறுங்குழீஇக்கொடிதாம்
வழியன்பநீயெங்ஙனேவந்தவாறிம்மழையிருளே (கஎஅ

புரவலன்றேற்றல்

வெயிலுந்தரவிந்தமென்மலரன்னமும்விந்தைவெற்றி
மயிலும்பயில்புயன்வாணன்றென்மாறைநின்வாள்விழிபோ
லயிலுங்குயின்மொழிநின்னிடைபோன்மின்னுமாடளிகள்
பயிலுந்தொடைநின்குழல்போலிருளைப்பருகினவே (கஎகூ)

புணர்தல்

சுழிநீரலைகடற்றொல்லுலகேழினுந்தோற்றும்வண்மைக்
கழிநீடுமாடகமேருவின்மீதினுங்காவல்கொண்டு
வழிநீள்புகழ்கொண்டவாணன்றென்மாறைவரையின்மலர்ப்
பொழினீழலும்பரமுதனையாரைப்புணர்ந்தனமே (கஅ0)

புகழ்தல்

மண்ணார்பெரும்புகழ்வாணன்றென்மாறைவரைபயிலுந்
தண்ணாரமுங்கமழ்சார்வருஞ்சாரலிற்சார்ந்துறையும்
பெண்ணாரணங்கன்னநின்முகந்தான்கண்டபின்னுமுண்டோ
கண்ணார்தடங்களின்வாயொடுங்காதகமலங்களே (கஅக)

இறைமகளிறைவனைக்குறிவிலக்கல்

மூரற்கதிர்முத்தவார்முலையாவியின்மூழ்கநனி
வாரற்கநீதஞ்சைவாணன்வெற்பாவயமாவழங்கும்
வேரற்கடியகவலையினூடுவெயிலவற்குஞ்
சாரற்கருமையதாவிருள்கூருமெஞ்சாரலிலே. (கஅஉ)

அவனிறைவியையில்வயின்விடுத்தல்.

மல்லையம்போர்வென்றவாணன்றென்மாறைநின்மாளிகையாந்
தொல்லையம்போருகந்தேடவுங்கூடுந்தொடித்தளிரான்
முல்லையம்போதுமுகையுங்கொய்யாதுமுகிழ்முலையாய்
செல்லையம்பொற்பளிங்கிற்றலம்பாதஞ்சிவப்பிக்கவே. (கஅங)

இறைவியையெய்திப்பாங்கியையுறைகாட்டல்.

முகையாயலராய்முலைக்குநின்வாய்க்குமுன்றமுறையே
பகையாமுளரியுஞ்சேதாம்பலுமிவைபைந்தழுநீர்
வகையார்தொடை—புனைவாணன்றென்மாறையின்மௌவலன்ன
நகையாயவையிவைவநின்குழற்காமுல்லைநாண்மலரோ (கஅச)

இற்கொண்டேகல்.

ஒல்காவிருண்மணந்தொல்கரும்போழ்தினுணர்ந்துநம்மை
நல்காவியல்பன்னைநாடினுநாடுநடந்தருணீ
மல்காவிசூழ்தஞ்சைவாணன்றென்மாறையின்வள்ளையின்மேற்
செல்காவியன்னவிழித்திருவேநின்றிருமனைக்கே. (கஅரு)

பிற்சென்றிறைவனைவரவுவிலக்கல்.

வெம்போர்முருகென்னவேல்வலனேந்திவெறிதிங்ஙனே
வம்போர்நகரொல்லிவாரல்வெற்பாமருவாவரசர்
தம்போர்கடந்ததடம்புயவாணன்றமிழ்த்தஞ்சைநாட்
டம்போருகமல்லவோதிருக்கோயிலணங்கினுக்கே. (கஅசு)

பெருமகன்மயங்கல்

வஞ்சங்கலந்தகலிவென்றவாணன்றென்மாறைவெற்பிற்
றஞ்சங்கலந்தசொற்றையலும்யானுந்தனித்தனியே
நெஞ்சங்கலந்தநிலைமையெல்லாங்கண்டுநீயமுதி
னஞ்சங்கலந்தனையேநனைவார்குழனன்னுதலே (கஅஎ)

தோழிதலைமகடுயர்கிளந்துவிடுத்தல்.

முன்னூரரவுந்தெரியாவிருணெறிமுன்னிநையு
மின்னூர்புனையிழைமின்னனையாளுய்யவேலின்வெம்போர்
மன்னூர்களிறுதிறைகொண்டவாணன்றென்மாறையன்ன
நின்னூரகம்புகுந்தாற்குறிகாட்டுநெடுந்தகையே (கஅஅ)

திருமகட்புணர்ந்தவன்சேறல்

இருங்குன்றனமதிலெம்பதிக்கேகலெளிதுசெம்மை
தருங்குந்தமுலைத்தையனல்லாய்தஞ்சைவாணன்வெற்பிற்
கருங்குஞ்சரவினம்வெண்சிங்கவேறஞ்சுங்கங்குலினெம்
மருங்குஞ்சுடர்விளக்காமடவார்குழைமாணிக்கமே. (கஅகூ)

இரவுக்குறி முற்றிற்று.

இரவுக்குறியிடையீடு.

இறைவிக்கிகுளையிறைவரவுணர்த்தல்.

கயல்வென்றவுண்கண்ணிகாரணமேதுகொல்கைதையங்கா
னயனின்றபுன்னையினன்னமெலாமடலாழியங்கைச்
சயமங்கைதன்பெருமான்றஞ்சைவாணன்றரியலர்போற்
றுயரம்பெருகியிராவொருபோதுந்துயின்றிலவே (௧௱௦)

தான்குறிமருண்டமைதலைவியவட்குணர்த்தல்

பேசத்தருவதொன்றன்றுகண்டாய்பிறிதோர்குறியை
நேசத்தவர்குறியென்றுசென்றியான்குறிநின்றுவந்தேன்
வாசத்தமிழ்புனைதோளுடையான்றஞ்சைவாணனன்னார்
தேசத்தவருமெய்தாவெய்யநோயெய்திச்சேயிழையே (௧௱௧)

பாங்கிதலைவன்றீங்கெடுத்தியம்பல்,

வடியோவெனுங்கண்மடந்தைநல்லாய்தஞ்சைவாணனைவந்
தடியோமெனச்சென்றடையலர்போலயர்கின்றநின்கைத்
தொடியோடமென்பனைத்தோளிணைவாடிர்தொழில்புரிந்த
கொடியோர்துணிந்துசெய்தார்குறியாதகுறிநமக்கே (௧௱௨)

புலர்ந்தவன்போதல்.

தேனுற்றவாகையந்தார்த்தஞ்சைவாணனைச்சேரலர்போன்
மானுற்றபார்வைமயில்பொருட்டாகவழிதெரியாக்
கானுற்றகானற்கனையிருள்வாய்வரக்கற்பித்தநீ
யானுற்றநோய்களெல்லாம்படுவாயினியென்னெஞ்சமே (௧௱௩)

புலர்ந்தபின்வறுங்களந்தலைவிகண்டிரங்கல்

காதகைதண்டலைசூழ்தஞ்சைவாணன்றடந்துறைவாய்
நீதகைகொண்டென்முன்னின்றனையேசெந்நிறக்கனிவாய் [ந்
மேதகுமுள்ளெயிற்றெண்முகைக்கொங்கைவெண்டோட்டுமென்பூ
கேதகையென்னுநல்லாயகொண்கர்மாலைகிடைத்ததென்றே. (௧௱௪)

தலைவிதன்றுணைக்குரைத்தல்-பிறசெய்புட்கவி.

வரலிங்கரியமயங்கிருள்யாமத்துள்வந்திளவேய்
நரலுஞ்சிலம்பர்நவமணியாழிநறவுண்வண்டு
முரலுந்தளையவிழ்மொய்ம்மலர்க்காந்தளஞ்செம்மலர்க்கை
விரலென்றுகொல்செறித்தார்நெறித்தாழ்குழன்மெல்லியலே (௧௱௫)

தலைமகளவலம்பாங்கிதணித்தல்.

பொய்யாதவர்தங்குறிபிழையாரவர்பூண்டவன்பு
மெய்யாதறேறியழுங்கன்மின்னேபுயவெற்பிரண்டான்
மையாழிவையகிலையிட்டவாணன்றென்மாறைவெற்பி
னுய்யானமென்கழுநீர்நறுமாலையுடைத்தல்லவே (கசுசு)

இறைவன்மேற்பாங்கிகுறிபிழைப்பேற்றல்

விம்மூர்துயர்க்கடல்வெள்ளத்துள்ளேயெமைவீழ்வித்துநீ
ரெம்மூரகத்துவரலொழிந்தீரொதிரோற்றதெவ்வர்
தம்மூரைமுப்புரமாக்கியவாணன்றமிழ்த்தஞ்சைபோ
லும்மூர்வரத்துணிந்தேமன்பகூறுமவ்வூரொமக்கே (கசுஎ)

இறைவிமேலிறைவன்குறிபிழைப்பேற்றல்

துறந்தனளாகியம்போருகந்தன்னையித்தொல்வரைமேற்
பிறந்தனளாகும்பெருந்திருமாதெனப்பேதையரிற்
சிறந்தனளாதலிற்செந்தமிழ்வாணன்றென்மாறையன்னன்
மறந்தனளாயினும்யாமொருபோதுமறவலமே (கசுஅ)

அவள்குறிமருண்டமையவளவற்கியம்பல்

தனையாவரும்புகழத்தரும்வாணன்றமிழ்த்தஞ்சைமா
னனையாளவள்குறியாமிதென்றேநினைந்தல்லதொன்று
நினையாவருங்கங்குனின்குறியாவந்துநின்றதுநம்
வினையால்விளைந்ததென்றேவெறிதேயன்பமீண்டனளே (கசுகூ)

அவன்மொழிக்கொடுமைசென்றவளவட்கியம்பல்

பல்லியம்போலுருமேறெங்குமார்ப்பதும்பார்ப்பதின்றி
வல்லியம்போதகம்போர்பயிலகாண்வந்தவாணன்றஞ்சை
யல்லியம்போருகையன்னநின்கேளருளாசையினின்
றெல்லியம்போதுசென்றேனென்றுகேள்வரியம்பினரோ (௨00)

என்பிழைப்பன்றென்றிறைவிநேர்தல்

வியலூரொயிற்புறநொச்சியினூழ்மலர்வீழ்தொறெண்ணி
மயலூர்மனத்தொடுவைகினன்யான்றஞ்சைவாணன்வெற்பர்
புயலூரிருட்கங்குல்வந்தவமேநின்றுபோயினரொன்
றயலூர்நகைக்குமென்னேயென்னபாவங்கொலாக்கினவே (௨0க)

தாய்துஞ்சாமை

ஆழியகன்புவியுள்ளனயாவுமடங்கிநள்ளென்
றூழிமுடிந்தனவோங்கிருள்யாமத்துமோனடையினும்

தாழியினும்போதலர் தஞ்சைவாணன் றரியலர்போற்
ரேழிநம்மன்னை கண்ணே துயில்கோடறு றந்தனவே (௨0௨)

நாய்துஞ்சாமை

தண்ணென்புனல்வையைசூழ்சஞ்சைவாணன் றரியலர்போற்
பெண்ணன்பிறவியும்பேருடைத்தன்றிப்பெரும்பதிநங்
கண்ணென்பவர்வரக்கங்குலின்ஞாளிக்கணங்குரைத்துத்
துண்ணெனக்கடுங்குரல்வாயன்னை துஞ்சினுந்துஞ்சிலவே (௨0௩)

ஊர்துஞ்சாமை

ஓங்கண்ணல்வெம்பகடுந்திவந்தோரையுடன்றுதும்பைத்
தேங்கண்ணிசூடிச்செருவென்றவாணன்றென்மாறைமின்னே
தாங்கண்ணனையர்தமைப்பிரிந்தோநந்தனிமைகண்டோ
நாங்கண்ணுறங்கினுமோவுறங்கார்கண்ணகரவரோ (௨0௪)

காவலர்கடுகுதல்.

புயற்கண்ணியதலைப்பூகமென்பாளைப்புதுமதுநீர்
வயற்கண்ணிறைதஞ்சைவாணன்றென்மாறையில்வஞ்சியன்னாள்
கயற்கண்ணிணையஞ்சிநீர்மல்கக்காவலர்கைப்பறையின்
செயற்கண்ணிணையல்லவோபடுகின்றனதிண்கடிப்பே (௨0௫)

நிலவுவெளிப்படுதல்

தெண்பாற்கதிர்முத்தவெண்ணகையாய்திகிரிக்கிரிசூழ்
மண்பாற்புகழ்வைத்தவாணன்றென்மாறைநம்மன்னர்பொற்றேர்
பண்பாற்பரிக்கும்பரிவருமாறென்பரந்தநிலா
வெண்பாற்கடலில்வையம்பதினுலுமிதக்கின்றவே (௨0௬)

கூகைகுழறுதல்.

நம்பேறுடைமையிருக்கின்றவாகடன்ஞாலத்துள்ளோர்
தம்பேறெனவந்தசந்திரவாணன் றரியலர்போல்
வம்பேறுகொங்கைமயிலியனுமஞ்சமன்றமராங்
கொம்பேறிநள்ளிருள்வாய்க்குழறுநின்றகூகைகளே (௨0௭)

கோழிகுரற்காட்டுதல்,

மன்பதையுய்யவருந்தஞ்சைவாணன்றென்மாறைவெறபர்
கொன்பதிவேல்வலங்கொண்டுவந்தாற்றங்கள்கோனடந்தா
னென்பதுதேறியிடையிருளுனையெழுப்பும்வெம்முட்
பொன்பதிதாள்வளைவாய்ச்செய்யசூட்டுவன்புள்ளினமே (௨0௮)

இரவுக்குறியிடையீடு - முற்றிற்று.

வரைதல்வேட்கை.

தலைமகளைப்பாங்கிபருவரல்வினவல்

விண்டார்பதிகொண்டவேற்படைவாணன்வரைகமழ்பூந்
தண்டாமரைமங்கைதங்கியதஞ்சைநின்றுயர்தம்மோ
டுண்டாகியமுனிவோவன்றியாயத்தொடுற்றதுண்டோ
வண்டார்குழலிசொல்லாய்செல்வதேதுன்மனத்திடையே (௨௦௯)

அருமறைசெவிலியறிந்தமைகூறல்

மாணிக்கமென்கொம்பனொன்சொல்லுகேன்றஞ்சைவாணன்வெற்பர்
பேணிப்புணர்ந்துபிரிந்தபின்றோன்றலும்பேதைமுகம்
பாணித்தலின்றிமதிகண்டுநாணியபங்கயம்போ
னாணிக்கவிழ்ந்ததனாலறிந்தாளன்னைநங்களவே (௨௧௦)

தலைமகன்வருந்தொழிற்கருமைசாற்றல்

ஓவலில்வாயன்னைஞாளியிவ்வூர்கணுறங்கினுமூர்க்
காவலர்காய்வர்நிலாமதிகாலுங்கடுங்குடிஞைச்
சேவலும்வாரணமுந்தஞ்சைவாணனைச்சென்றிறைஞ்சா
மேவலர்போல்வெய்யவாயடையாவென்மெலிவறிந்தே (௨௧௧)

தலைமகனூர்க்குச்செலவொருப்படுதல்.

நம்பானலனுண்டநம்பாதகர்தந்நகர்வினவித்
தம்பாலுடன்சென்றுசார்குவமோதரியாரைவென்று
வம்பார்கழல்புனைவாணன்றென்மாறைவளரும்வஞ்சிக்
கொம்பாகியமருங்குற்கரும்பாமொழிக்கோமளமே (௨௧௨)

பாங்கியிறைவனைப்பழித்தல்

வறியர்புகழ்தஞ்சைவாணன்றென்மாறைமடந்தையன்னா
ளறியாடுயர்முன்னறிந்தவர்தாமதனாலழலின்
பொறியாருயிர்வெம்பணிமாமணியும்புதையிருள்கூர்
நெறியாரருள்பெறநாநடுநாளிடைநீந்துதுமே (௨௧௩)

இறைவியிறையோன்றன்னைநேர்ந்தியற்படமொழிதல்

புணராவிரகமும்போகாவிரவும்புணர்முலைமே
லிணரார்பசப்பும்பிறவுமெல்லாமிருள்கூர்ந்தறல்போல்
வணரார்குழற்பிறைவாணுதலாய்தஞ்சைவாணன்வெற்ப
ருணராதிருப்பதுவேறொன்றமல்லநம்மூழ்வினையே (௨௧௪)

கனவுநலிபுரைத்தல்

இல்லாவருந்துயிலுண்டாயவரும்வந்தெய்திற்கங்குற்
பொல்லாதசேவற்கடுங்குரலார்த்துப்புவிபுரக்கு

மல்லார்புயன்றமிழ்வாணன்றென்மாறைமருவலர்போ
லல்லாமைநெஞ்சந்தமோறநல்லிடையாக்கியதே (உகரு)

கவினழிபுரைத்தல்

வாளினுநீள்விழிவாணுதலாய்தஞ்சைவாணன்றெவ்வி
ஞளினுநாளுநலந்தொலைவேனையாரயில்வேல்
வேளினுமோர்நல்லவெற்பனுநீயுமென்மேனியினுந்
தோளினுநோயறியீரறியாததென்றொல்வினையே (உகசு

தன்றுயர்தலைவற்குணர்த்தல்வேண்டல்

வரைப்பான்மதுரத்தமிழ்தெரிவாணன்றென்மாறைவையைய
நுரைப்பான்முகந்தன்னநுண்டுகிலாயிந்தநோயவர்க்கின்
றுரைப்பாருளரோவுயிரொய்தலாநமக்கூர்திரைசூழ்
தரைப்பால்வளரும்புகழெய்தலாமவர்தங்களுக்கே (உகஎ)

துன்புறுபாங்கிசொல்லெனச்சொல்லல்

ஒல்லெனவேயென்னுறுதுயர்தாமுமுணரும்வண்ணஞ்
சொல்லெனநீயிதுசொல்லியென்பேறன்றுயரமெல்லாம்
வல்லெனவேகொண்டகொங்கையர்வேடஞ்சைவாணன்வெற்பி
லல்லெனவார்குழலாயறியாரல்லரன்பருமே (உகஅ)

அலர்பார்த்துற்றவச்சக்கிளவி

மலருந்தொடைவஞ்சிவஞ்சகமாதருமாரனும்வா
யலருந்தடங்கையலருந்தொடாநிற்பவஞ்சிநெஞ்சம்
பலரும்புகழ்தஞ்சைவாணர்பிரானைப்பணியலர்போற்
புலரும்பெயருங்கண்ணீர்புலராதுபுலரினுமே (உககூ)

ஆறுபார்த்துற்றவச்சக்கிளவி

அரியுங்கரியும்பொருநெறிக்கோர்துணையாயவர்மேற்
சொரியுந்திவலைதுடைக்கவென்றேகுழைதோய்ந்துநஞ்சம்
வரியும்பயில்கண்ணிவாணன்றென்மாறைநம்மன்னர்வந்து
பிரியும்பொழுதெல்லிவாய்வினையேன்மனம்பின்செல்வதே (உஉ0)

காமமிக்ககழிபடர்கிளவி-பிறசெய்யுட்கவி

மாதுற்றமேனிவரையுற்றவில்லிதில்லைநகர்சூழ்
போதுற்றபூம்பொழில்காள்கழிகாளெழிற்புள்ளினங்கா
ளேதுற்றழிதியென்னீர்மன்னுமீர்ந்துறைவற்கிவளோ
தீதுற்றதெற்றுக்கென்னீரிதுவோநன்மைசெப்புமினே (உஉக)

தன்னுட்கையாறெய்திடுகிடுளவி-பிறசெய்யுட்கவி.

விண்டலையாவர்க்கும்வேந்தர்வண்டில்லைமெல்லங்கழிசூழ்
கண்டலையேகரியாக்கன்னிப்புன்னைக்கலந்தகள்வர்
கண்டிலையேவரக்கங்குலெல்லாமங்குல்வாய்விளக்கு
மண்டிலமேபணியாய்தமியேற்கொருவாசகமே (உஉஉ)

நெறிவிலக்குவித்தல்

ஈன்றாளினுமெனக்கன்புடையாய்சென்றிரந்துகொண்டு
சான்றாண்மையன்பர்தமக்குரைநீதஞ்சைகாவலனைத்
தேன்றாழ்வரைதமிழ்சேர்த்தியவாணனைச்சேரலர்க்குந்
தோன்றாவிருங்கங்குனீவருமாறெழிதோன்றலென்றே (உஉங)

குறிவிலக்குவித்தல

வெற்றியவாவியவாணன்பிரான்றஞ்சைவெற்பகத்திற்
பெற்றியசோலைப்பிறங்கிருள்வாரன்மின்பேதையின்னு
முற்றியவேனற்படுகிள்ளையோட்டுமுறைமையளென்
றெற்றியகாதலினலிசைத்தாளன்னையென்றுரையே (உஉச)

வெறிவிலக்குவித்தல்

மின்னுதிடித்தென்னவன்னைகொண்டாள்வெறிவிற்கதமங்கை
மன்னுண்மைமன்னியவாணன்றென்மாறைவரையில்வண்டியா
ழென்னுவசுணமிறைகொள்ளுநாடனெனக்கருளான்
முன்னுளருளியநோய்தணிப்பானின்றுமொய்குழலே் (உஉரு)

பிறவிலக்குவித்தல்

பொருபான்மதியினைப்போன்மருப்பியானையிற்பொன்னெடின்பந்
தருபான்மொழிவஞ்சிசாரவந்தார்தஞ்சைவாணன்வெற்பி
னொருபானொதுமலரொன்னவெந்தீயுலையுற்றசெவ்வே
லிருபான்மருங்கினுங்கொண்டெறிந்தாலொத்ததென்செவிக்கே உஉசு

குரவரைவரைவெதிர்கொள்ளுவித்தல்.

தற்பழியாமலுஞ்சந்திரவாணன்றமிழ்த்தஞ்சைநங்
கற்பழியாமலுக்காரணமாகக்கயல்விழிநின்
சொற்பழியார்நமர்சொல்லுவல்லேசென்றுசொல்லலையே
விற்பழியாம்வழியாநமதாருயிர்க்கேதமுமே (உஉஎ

வரைதல்வேட்கை - முற்றிற்று.

வரைவுகடாதல்

வினவியசெவிலிக்குமறைத்தமைவிளம்பல்

தளராவிளமுலைதாங்குகில்லாதுதளரிடைகண்
வளராதசெங்கங்குல்வாராயெனத்தஞ்சைவாணன்வெற்பா
விளரார்திருநுதலன்னைக்கொர்மாற்றம்விளம்பியுய்ந்தே
னுளராமவர்வலையுட்பட்டுவாழ்வதுணர்ந்தருளே (உஉஅ)

அலரறிவுறுத்தல்.

மணிவரைம்ாளிகைமாறைவரோதயன்வாணன்வெற்பா
பணிமொழியாளென்னுங்கொள்கொம்புமுடிப்படர்ந்தயலா
ரணிமனைதோறுங்கொழுந்துவிட்டம்பலரும்பிமண்மேற்
றணிவிலதாகவிப்போதலர்பூத்ததுன்றண்ணளியே (உஉகூ)

தாயறிவுணர்த்தல்

திரையிற்பவளம்வடவாமுகத்தெழுந்தீக்கொழுந்திற்
கரையிற்படருங்-ற்றுறைநாடகயற்கொடிபொன்
வரையிற்றிகழ்வித்தவாணன்றென்மாறைமலர்ந்தமௌவல்
விரையிற்களவையெல்லாமறிந்தாளன்னைமெய்யுறவே (உங0)

வெறியச்சுறுத்தல்

மையுற்றநீலக்கண்மாமங்கைகோன்றஞ்சைவாணன்வெற்பி
னெய்யுற்றவேலன்பரீதணியாமையினெஞ்சினுள்ளே
யையுற்றயர்வுற்றெம்மன்னையும்யாயுமென்றுரணங்கின்
மெய்யுற்றநோய்தணிப்பான்வெறியாடல்விரும்பினரோ (உஙக)

பிறர்வரைவுணர்த்தல்

வெடிக்கின்றவிப்பியுணித்திலம்பைத்தலைவெம்பகுவாய்த்
துடிக்கின்றதிங்களிற்றோன்றுந்துறைவசெஞ்சொற்புலவோர்
வடிக்கின்றமுத்தமிழ்வாணன்றென்மாறையெம்மான்மருங்கை
யொடிக்கின்றகொங்கைகண்டாலெவர்நெஞ்சுருகாதவரோ. (உஙஉ)

வரைவெதிர்வுணர்த்தல்

குருதிகண்டாலன்னகாந்தளஞ்சாரற்குறிவெறிதே
வ்ருதிகண்டாய்தஞ்சைவாணன்வெற்பாவெங்கண்மாநகர்நீ
சுருதிகண்டாரொடுந்தோன்றிலங்கேளிர்நின்சொல்லிகவார்
பருதிகண்டான்மலராதொழியாகயப்பங்கயமே (உஙங)

வரையுநாளுணர்த்தல்

அலகம்பனகண்ணிவள்கொங்கைமென்சுணங்சாகிவண்டு
பலகம்பலைசெய்யப்பூத்தனவேங்கைபனிவரைமேற்

திலகம்பதித்தெனச்சேல்வைத்தவாணன்றென்மாறைமன்ன
னுலகம்பயில்புகழ்போற்சிலம்பாமதியூர்கொண்டதே (உ௩௪)

அறிவறிவுறுத்தல்

வனநாண்முளரிமுகைவென்றுவாணன்றென்மாறைவெற்பிற்
கனநாணணிந்துபொற்கச்சறவீசிக்கதித்தெழுந்த
தனநாணுநுண்ணிடைத்தைபனல்லாள்பழிசாற்றுவல்யா
னெனநாணிநின்பழிதான்மறைத்தாளன்பவென்னையுமே (உ௩௫)

குறிபெயர்த்திடுதல்

ஊரேரர்பவரிங்குலாவுங்கூடும்வந்தொண்சிலம்பா
வேறேரர்பொதும்பரிற்போய்விளையாடுகவேற்படையான்
மாறேரர்பகைவென்றவாணன்றென்மாறையெம்மன்னுதவப்
பேறேரர்வடிவுகொண்டாலன்னநீயுமென்பேதையுமே (உ௩௬)

பகல்வருவானையிரவுவருகென்றல்

முத்தணிநீலமணித்தகட்டுள்ளெங்குமொய்கொளவே
வைத்தணிசேரவகுத்ததுபோற்றஞ்சைவாணன்வையைப்
பைத்தணிவார்திரைதோய்கருந்தாட்புன்னைப்பாசிலைவெண்
டொத்தணிபூந்துறைவாவருவாயிருடுங்கிடையே (உ௩௭)

இரவுவருவானைப்பகல்வருகென்றல்

இழைவிளையாடுமிளமுலைசாயற்கிடைந்தமஞ்சை
கழைவிளையாடுங்கடிப்புனஞ்சாத்துங்கலையகலா
துழைவிளையாடுமுயர்சிலம்பாவின்னுமுன்பொருட்டான்
மழைவிளையாடுமதிற்றஞ்சைவாணன்மலயத்திலே (உ௩௮)

பகலினுமிரவினும்பயின்றுவருகென்றல்

குரவுங்கணியும்விரவும்வெற்பாவெய்யகுஞ்சரமேல்
வரவுந்தியதெவ்வமாற்றியவாணன்வென்மாறைமின்னு
மரவும்பணியுநுடங்கிடையாற்றலளாற்பகலு
மிரவுங்குறிவயினீவரல்வேண்டுமிவள்பொருட்டே (உ௩௯)

பகலினுமிரவினுமகலிவணென்றல்

தாவாதசெல்வந்தருந்தஞ்சைவாணன்றடஞ்சிலம்பா
நீவாரல்சாரனிலவலராம்பகனீடிருளார்
மாவானிலவுநிலமங்கைவார்குழன்மல்லிகைபோ
லோவாதிரவெறிக்குஞ்சோலைநீழலினுடுவந்தே (உ௪0)

உரவோனொடுமொருங்குலனுமரபும்புகழும்வாய்மையுங்கூறல்

தலத்திற்குமாறைக்குமன்னவன்வாணன்றமிழ்த்தஞ்சைசூழ்
நிலத்திற்குமாமணியாகுநின்னாட்டிற்குநின்பதிக்குங்
குலத்திற்குமாசில்குடிமைக்குஞ்சீர்மைக்குங்கோதின்மெய்ம்மை
நலத்திற்குமாவதன்றால்வரையாதுநடப்பதுவே, (உசக)

ஆறுபார்த்துற்றவச்சங்கூறல்.

புராந்தகர்செஞ்சடைவெண்பிறைபோனுதற்புள்ளிமிழ்பூங்
குராந்தொடைமென்குழற்கொம்பினைவேண்டிக்கொடிமுல்லைநீண்
மராந்தழுவுந்தஞ்சைவாணன்வெற்பாவல்சிதேர்ந்திலஞ்சிக்
கராந்திரிகல்லதர்வாயெல்லிநீவரல்கற்பலவே. (உசஉ)

ஆற்றாத்தன்மை யாற்றக்கூறல்.

கலங்குந்தெளியுங்கனலெழமூச்செறியுங்கண்ணினீர்
மலங்கும்பொலந்தொடிசோரமெய்சோருமறஞ்செய்கொலை
விலங்கும்படிறுசெய்யாக்குன்றநாடவிரைந்தளிப்பா
யலங்குங்கடும்பரித்தேர்வாணன்மாறையணங்கினையே. (உசந)

காவன்மிகவுரைத்தல்.

நஞ்சாரரவந்திரிதருகானடுநாளிரவி
லஞ்சாதுசெங்கையயில்விளக்காவணங்கின்பொருட்டான்
மஞ்சார்மதிற்றஞ்சைவாணன்வெற்பாவரல்வன்சொலன்னை
துஞ்சாள்கடுந்துடிக்கைநகர்காவலர்துஞ்சினுமே. (உசச)

காமமிகவுரைத்தல்.

தென்னாகவண்டமிழ்வாணன்றென்மாறைச்செருந்தியுடன்
புன்னாகமுங்கமழ்பூந்துறைவாசுரர்போற்றமிர்தம்
பின்னாகமுன்வந்தபேதைதன்காமப்பெருங்கடற்கு
நின்னாகமன்றியுண்டோபுணையாவதுநீந்துதற்கே. (உசரு)

கனவுநலிபுரைத்தல்.

மாணாகதெவ்வென்றவாணன்றென்மாறைவளநகர்போற்
பூணாகமெல்லியற்புல்லினையாகவப்பொய்யைமெய்யாப்
பேணாமகிழ்ந்துபெருந்துயிலேற்றவள்பின்னைநின்னைக்
காணாள்கலங்கினளாற்கலங்காமனக்காவலனே. (உசசா)

கவினழிபுரைத்தல்,

ஏரோற்றகொங்கையிளங்கொடிமாந்தளிரோய்ந்தவண்ணங்
காரோற்றகங்குலிற்பீரலர்போன்றதுகாவியுண்கண்

வாரேற்றபைங்கழல்வாணன்றென்மாறையில்வாவியின்கண்
ணீரேற்றசெங்கழுநீர்மலர்போன்றதுநின்பொருட்டே. (உசஎ)

வரைவுகடாதல் - முற்றிற்று.

ஒருவழித்தணத்தல்.

தன்பதிக்ககற்சிதலைவன்சாற்றல்.

திரைகேதகைமணங்கூடுமெம்பாடியிற்சென்றுவந்தியான்
வரைகேன்வருந்துணைவல்லியைநீதஞ்சைவாணன்செவ்வேற்
புரைகேழ்மதர்விழிக்கோங்கரும்பேர்முலைப்பூசல்வண்டு
நிரைகேசவஞ்சியஞ்சேலென்றுதேற்றுதனின்கடனே, (உசஅ)

பாங்கிவிலக்கல்.

பறந்தாங்கிவர்பரித்தேர்கடவேலுன்பதியடைந்தான்
மறந்தாங்கமையவும்வல்லையன்பாதஞ்சைவாணனென்னார்
நிறந்தாங்கிவர்கணைபோலுண்கண்மாமுகினீர்மைகொண்டு
புறந்தாழ்கருங்குழல்வெண்முத்தவாணகைப்பொன்னினையே (உசகூ)

தலைவனீங்கல்வேண்டல்

அறையும்பொறையுமணந்தவெங்கானத்தணங்கையில்வைத்
திறையும்பிரிவதற்கெண்ணுகிலேனெண்ணலார்வரைமேன்
மறையும்படிவென்றசந்திரவாணன்றென்மாறையில்வண்
டுறையுங்குழலிசென்றேவரல்வேண்டுமெம்மூரகத்தே. (உ௫0)

பாங்கிவிடுத்தல்.

இல்லத்துறையுமிவள்பொருட்டானுமக்கியானுமொன்று
சொல்லத்தவிர்கிலன்சூழ்கழலீர்சுடர்தோய்புரிசை
வல்லத்தமர்வென்றவாணன்றென்மாறையில்வந்துவந்து
செல்லத்திருவுளம்வைத்தகல்வீர்நுந்திருநகர்க்கே (உ௫க)

பாங்கிதலைவிக்கவன்செலவுணர்த்தல.

நிலவேய்தரளநிரைத்தன்னவாணகைநீலநிறக்
குலவேய்நிகர்பொற்றொடிநெடுந்தோளிகுறுகிவரச்
செலவேகருதினர்செந்தமிழ்வாணன்செழுங்கமலத்
தலவேதியன்பெறுநாள்பெறறுவாழ்பவன்றஞ்சையிலே (உ௫உ)

தலைவிநெஞ்சொடுபுலத்தல்

குளித்தாரிளங்கொங்கையாவியிலாவிகுளிரப்பநம்மை
யளித்தாரளித்தகலத்தணைத்தாரன்றணங்கின்முன்னே
தெளித்தார்செழுந்தஞ்சைவாணனெனுரினஞ்சிந்தைநைய
வொளித்தாரவரிங்ஙனேநன்றுநன்றிவ்வுலகியலே (உ௫௩)

சென்றோனீடலிற்காமமிக்ககழிபடர்கிளவி

மயிலாடுதண்டலைமாறைவரோதயன்வாணனென்னூர்க்
கெயிலாகியகடற்கானலஞ்சேர்ப்பற்கிடையிருள்யாண்
டுயிலாநிலையொன்றுஞ்சொல்லாய்துணையுடன்சூழ்திரைத்தேன்
பயிலாமலரணைமேற்றுயிலாநிற்றிபாலன்னமே. (உருச)

தலைவியைப்பாங்கியாற்றுவித்தல்

ஆடுகம்வாநம்மகன்றவரூரகலாப்புதுநீர்
பாடுகம்வாபொற்பசலைதந்தார்திறம்பாங்கினெல்லாந்
தேடுகம்வாதஞ்சைவாணனன்னாட்டன்பர்நேர்வழிநாஞ்
சூடுகம்வாகவலாதவர்கானற்றுறைமலரே. (உருரு)

தலைவன்வந்தமைபாங்கியுணர்த்தல்

பண்ணுங்குழலும்பழித்தசொற்பாவைபரியலெல்லா
மண்ணும்புகழ்தஞ்சைவாணனென்னூரெனமைக்குவளைக்
கண்ணுங்கணையிருட்கங்குலுமாரன்கணைகள்பட்ட
புண்ணும்புலரவந்தார்தமதூர்வயிற்போனவரே. (உருசா)

பாங்கிதலைவனொடுநொந்துவினாதல்.

ஒருதலைக்கெய்திபகல்லதர்க்குச்செல்லவோருயிர்த்தா
யிருதலைப்புள்ளினியைந்தநுங்கேண்மையையெண்ணியெம்மூர்
வருதலைக்கொண்கநினைந்திலைவாணன்றென்மாறைவண்டு
பொருதலைக்குங்குழலாளழநீகண்டுபோயபின்னே. (உருஎ)

தலைவன்பாங்கியொடுநொந்துவினாதல்.

ஐவயரவுற்றதன்னவின்னுவிடராற்றியென்போ
லெவ்வாறிருந்திர்நீரெல்வளையீரெதிர்ந்தாரைவென்று
மைவாரணங்கொண்டவாணன்றென்மாறைமருவலர்போ
லொவ்வாவலரையுங்கேட்டிருநீருமொருதனியே. (உருஅ)

தலைவியையாற்றுவித்திருந்தவருமைகூறல்

இவளாருயிர்புரந்தியானிருந்தேன்செக்கரிந்துவன்ன
பவளாடவியிற்பயினித்திலம்பங்கயங்குவியத்
தவளாதவஞ்சொரிதண்டுறைவாதஞ்சைவாணன்றெவ்விற்
றுவளாமலாற்றுவியென்றன்றுநீசொன்னசொன்னினைந்தே. (உருகூ)

ஒருவழித்தணத்தன் முற்றிற்று.

வரைவிடைவைத்துப்பொருள்வயிற்பிரிதல்

என்பொருட்பிரிவுணர்த்தேந்திழைக்கென்றல்

கழைபோல்வளர்நெற்கவின்பெறவாரிகவர்ந்துவரு
மழைபோல்வருகுவன்வன்சுரம்போய்த்தஞ்சைவாணன்வெற்பி

விழைபோலிடையாண்முலைவிலைக்காவனயானையுங்கொண்
டுழைபோலரிநெடுங்கண்மயிலேசென்றுணர்த்திதுவே (உசுO)

நின்பொருட்பிரிவுரைநீயவட்கென்றல்

வசையும்புகழுநின்மேலனவாந்தஞ்சைவாணன்வெற்பா
மிசையுங்கரும்பினில்வேம்புவைத்தாலன்னவேட்கையெல்லாத்
திசையும்பரவுந்திருவனையாடன்றிருவுளத்துக்
கிசையும்படிவல்லையேற்சொல்லிநீபின்னெழுந்தருளே, (உசுக)

நீடேனென்றவனீங்கல்

காலைப்பொழுதுகடும்பரித்தேர்பண்ணிக்கானகம்போய்
மாலைப்பொழுதுவருதுவல்யான்றஞ்சைவாணனன்னாட்
டாலைப்பழனமணிந்தவெம்மூர்நும்மகங்குளிரச்
சோலைப்பயில்குயில்போன்மொழியாயென்றுணிவிதுவே (உசுஉ)

பாங்கிதலைவிக்கவன்செலவுணர்த்தல்

வில்லேய்குறும்புமிறும்புமெவ்வாயும்விராயவெவ்வாய்க்
கல்லேய்கவலைக்கடங்கடந்தார்நமர்காய்ந்தெதிர்ந்தார்
செல்லேய்முரசச்செருவென்றவாணன்றென்மாறையினின்
வல்லேய்முலைவிலைதான்றந்துநாளைமணம்பெறவே. (உசுரு)

தலைவியிரங்கல்

இப்பேருவகையினிப்பிரியேனென்றுமென்முன்சொன்ன
வப்பேருரைபழுதாமென்னவேவரவஞ்சுமந்த
மைப்பேரலைகடல்வையகந்தாங்கியவாணன்றஞ்சைச்
செப்பேரிளங்கொங்கைமங்கைசெப்பாதன்பர்சென்றதுவே. (உசுச)

பாங்கிகொடுஞ்சொற்சொல்லல்

ஆரணத்தானருள்பாரளித்தானடங்காதவரை
வாரணத்தால்வென்றவாணன்றென்மாறைவயங்கொளிசேர்
பூரணத்தார்மதிபோன்முகத்தாயென்புலம்புதிநின்
காரணத்தாலல்லவோபிரிந்தாரின்றுகாதலரே. (உசுரு)

தலைவிகொடுஞ்சொற்சொல்லல்

மண்டேந்திரைவையைசூழ்தஞ்சைவாணற்குவன்புலியுஞ்
செண்டுங்கொடுத்தகல்செம்பியர்போலன்பர்சென்றுழிமுள்
ளிண்டுங்கழையும்பயிலும்வெங்கானியல்கேட்டுமின்னேய்
கண்டுங்கலங்கல்செல்லாதிந்தவூரொற்கழறனன்றே. (உசுசு)

வருகுவர்மீண்டெனப்பாங்கிவலித்தல்

தேர்த்தானைவாணன்றென்மாறைமின்னேயஞ்சல்செம்புருக்கி
வார்த்தாலனையவழிநெடும்பாலைமடப்பெடைநோய்
பார்த்தாதவந்தணிபாதவமின்மையிற்பைஞ்சிறகாற்
போர்த்தாருமஞ்ஞைகண்டும்போவரோநம்புரவலரே. (உசுஎ)

பருவங்கண்டுபெருமகள்புலம்பல்

மிகவும்பரந்தகரியகண்ணீர்செங்கைவெள்வளைபோ
லுகவுந்துறந்தவருன்னலரர்லுறைகார்பொழிய
மகவுந்துணையுங்கலைதழுவுந்தஞ்சைவாணன்வெற்பி
னகவும்பெடைமயிலுந்தமியேனெங்ஙனாற்றுவலே (உசுஅ)

இருளைவம்பென்றல்

தனஞ்சேர்ந்தவஞ்சிநின்சாயல்கண்டஞ்சித்தனித்தனிபோய்
வனஞ்சேர்ந்தயர்ந்தம்யில்களெல்லாந்தஞ்சைவாணன்வெற்பிற்
கனஞ்சேர்ந்தலர்துளிகாலுமுன்னேவம்புகாலுமென்று
வினஞ்சேர்ந்தகவினநாந்தனிவாடியிருத்தல்கண்டே. (உசுகு)

இறைமகண்மறுத்தல்

வாவித்தகையன்னமேதஞ்சைவாணன்வரையகத்தென்
பாவித்தனிநெஞ்சுபார்த்தஞ்சுமேகண்பயின்றகண்ணூர்
தூவித்தளைமயில்கோபங்கொள்ளாவரத்தோன்றியைச்சேர்ந்
தாவித்தகந்தளரும்மணிகாலுமராவென்னவே. (உஎ0)

அவர்தூதாகிவந்தடைந்ததிப்பொழுதெனத்துணைவிசாற்றல்

இன்னேவருவர்நின்காதலரேதிலரேங்கவினிக்
கொன்னேயிரங்கிவருந்தல்கண்டாய்கொற்றநேமிவிந்தை
மன்னேயெனவந்தவாணன்றென்மாறைவரவுணர்த்த
முன்னேநடந்தனகாண்கடுங்காலமுகிலினமே. (உஎக)

தலைமகளாற்றல்

இன்புற்றகாலத்திருவர்க்குமொன்றுயிரொன்றுசொன்னா
ரன்புற்றகாதலராதலினாலகன்றொனநாந்
துன்புற்றகாலத்தவருமுறாரல்லர்தோழிசொல்லும்
வன்புற்றகாரளிக்குந்தஞ்சைவாணன்றென்மாறையிலே. (உஎஉ)

அவனவட்புலம்பல்-பிறசெய்யுட்கவி

விழிகுழியும்படிதேர்வழிபார்த்தணைவீழ்ந்துவண்டு
கொழுதிமிருங்குழல்சோரக்கிடந்துருடங்கையின்மே

லொழுகியவஞ்சனவெள்ளத்துணங்குமணங்கமுன்சென்
றெழுகெனுநெஞ்சமென்னேயவரோவெனிலென்சொல்லுமே. (௨௭௩)

பாகனொடுசொல்லல்

வன்மாமுடுகவலவதிண்டேரினிவாணன்றஞ்சைக்
கென்மாலுறுநெஞ்சின்முன்செலநாகிளவேறுபுல்லிப்
பொன்மாமணியும்பிரிந்திருந்தாரும்புலம்புமன்றிற்
சென்மாலையந்திகண்டாற்றரியாளென்றிருந்திழையே. (௨௭௪)

மேகத்தொடுசொல்லல்

வேண்டும்பொருளைத்தரும்பொருட்போய்முற்றிமீண்டவென்றேர்
தூண்டும்பரிமுன்றுனைமுகில்காள்சென்றுசொல்லுமிந்து
தீண்டுங்கொடிமதில்சூழ்தஞ்சைவாணனைச்சேரலர்போ
லீண்டும்பசலைமெய்போர்த்திருப்பார்தமக்கென்வரவே (௨௭௫)

பாங்கிவலம்புரிகேட்டவன்வரவறிவுறுத்தல்

பொருகின்றசெங்கயல்போல்விழியாய்பண்டுபோயநின்கைக்
குருகின்றணிந்திறைகொள்வதுகாண்கநங்கொண்கர்பொற்றேர்
தருகின்றசங்கந்தருவன்னவாணன்றமிழ்த்தஞ்சைவாய்
வருகின்றதென்றுமுன்னேயோகைகூறும்வலம்புரியே. (௨௭௬)

வலம்புரிகிழத்தி வாழ்த்தல்

மால்வண்டெனமன்னிவாணன்றென்மாறைமன்னன்புகழே
போல்வண்டமிழ்மன்னர்போற்றவிளங்குகபொன்கொழிக்குங்
கால்வண்டலாவயற்சாமல்குமல்லிசைக்கான்முகையின்
மேல்வண்டிருந்ததுபோற்கருமாமுகவெண்சங்கமே. (௨௭௭)

தலைவன்வந்துழிப்பாங்கி நினைத்தமைவினவல்

நினையீர்பொருட்குப்பிரிந்தயனாட்டுழிநின்றுழிவே
ளனையீர்நினைந்துமறிதிர்கொல்லோவஞ்சொலாலறிவோர்
வனையீரிதழ்க்கண்ணிவாணன்றென்மாறைவையவாழ்த்தலர்போ
லனையீரிதழ்க்கண்வைகாவெவ்வநோயுற்றநவ்வியையே. (௨௭௮)

தலைவனினைத்தமைசெப்பல்

கானெடுங்குன்றங்கடந்துசென்றேனொருகாலுமைதோய்
மானெடுங்கண்ணிமறந்தறியேன்வண்மைவாணன்றஞ்சை
நீனெடும்பெண்ணைக்குரும்பையுஞ்சூதுநெருங்குகொங்கைத்
தேனெடுங்கண்ணிமென்பூங்குழன்மாதர்திருமுகமே. (௨௭௯)

பாங்கிதலைவியையாற்றுவித்திருந்தமைகூறல்

உயராமலகத்தருங்கனிநீர்நசைக்குஞ்சுரம்போய்
வியராமலில்லினைவிடுத்தகன்றாளைமென்பூஞ்சிலம்பா
வயராமலஞ்சலென்றாற்றுவித்தேனிவ்வவனியெல்லா
மயராமல்வந்தபிரான்றஞ்சைவாணன்றென்மாறையிலே; (௨௮௦)

வரைவிடைவைத்துப்பொருள்வயிற்பிரிதன் முற்றிற்று

வரைவுமலிவு

காதலன்முலைவிலைவிடுத்தமைபாங்கிகாதலிக்குணர்த்தல்

தொலைவிலையாகியபல்பொருள்காதலர்சூதமர்நின்
முலைவிலையாகமுகந்தளித்தார்முனைவேந்தர்தம்மைத்
தலைவிலையாகத்திறைகொண்டவாணன்றமிழ்த்தஞ்சைநீ
யுலைவிலையாகுகபொன்வண்ணமாறுகவொண்ணுதலே. (௧௮௧)

காதலிநற்றாயுள்ளமகிழ்ச்சியுள்ளல்

கயமாமலரெனுங்கண்ணியையவண்டெனுங்காளைபல்புள்
ளியமாமணம்புணரீர்ந்துறைநாடனெதிர்ந்தவர்மேல்
வயமாநடத்திடவாணன்றென்மாறைவருகுவரோ
னயமாமணவணிகண்டியாயுமின்புறுநம்மினுமே. (௨௮௨)

பாங்கிதமர்வரைவெதிர்ந்தமைதலைவிக்குணர்த்தல்

மணிப்பாலிகைமுத்தம்வைத்தாங்கடம்பலர்வார்திரைதூ
யணிப்பாய்துவலையரும்புந்துறைவர்க்கணியெதிர்ந்து
பணிப்பாசிழையல்குல்வெண்ணகைபாய்நமர்பாரநின்றோய்
தணிப்பான்முரசறைந்தார்தஞ்சைவாணன்றமிழ்நிலத்தே. (௨௮௩)

தலைமகளுவகையாற்றாதுளத்தொடுகிளத்தல்

சோகாகுலமெய்தல்காண்டுநெஞ்சேநந்துறைவனொடு
நீகானுடன்பள்ளிநீள்வங்கமேறிநிலம்புரக்கு
மாகாவிரியன்னவாணன்றென்மாறைமன்னன்பகையு
மேகாவிருட்கங்குலாங்கடற்காலையெனுங்கரையே. (௨௮௪)

தலைவனைப்பாங்கிவாழ்த்தல்

மாரிடஞ்சுங்கொடைவாணன்றென்மாறையில்வாழிவண்டார்
வேரியந்தொங்கல்விரைக்கமழ்மார்பவிடாதவம்பற்
சேரியம்பொய்கைத்துறையலர்வாடநுஞ்செவ்விமணந்
தூரியஞ்சங்கதிரக்காட்டுநீயன்றுசூட்டலரோ (௨௮௫)

தலைவிமணம்பொருட்டாகவணங்கைப்பராநிலைகாட்டல்

உரவிப்பெருங்கலித்துன்பங்கள்போய்முதலூழியின்பம்
வரவிப்படிதன்னைவாழ்வித்தவாணன்றென்மாறையன்னாள்

புரவிப்புனைநெடுந்தேரண்ணலேநின்பொருட்டணங்கைப்
பரவிப்பரவிநின்றேவரம்வேண்டுதல்பார்த்தருளே. (உஅ௬)

பராநிலைகண்டுதலைமகன்மகிழ்தல்

இவ்வித்தகமிவட்கெய்தியதெவ்வண்ணமெவ்வுலகும்
வவ்வித்திகழ்புகழ்வாணன்றென்மாறைமணம்பொருட்டா
ணவ்வித்தொகையினனுமென்னேக்கநறைபுகையாச்
செவ்வித்தகைமலர்தூய்த்தெய்வம்வாழ்த்துந்திருத்தகவே (உஅ௭)

வரைவுமலிவுமுற்றிற்று.

அறத்தொடுநிற்றல்

கையறுதோழிகண்ணீர் துடைத்தல்.

அயிரார்திரைவந்துன்வண்டலம்பாவையழித்தனவோ
செயிராதவன்னைசெயிர்த்தனளோசெறிநாரைதிண்போர்
வயிராநரலும்வயற்றஞ்சைவாணன்றென்மாறையிலென்
னுயிராகியதையனீகலுழ்வானெனுளங்குழைந்தே. (உஅ௮)

தலைமகள்கலுழ்தற்காரணங்கூறல்

தாரணிகொண்டவிருதோளொருவர்தனித்துழியென்
வாரணிகொங்கைமணந்துசென்றார்தஞ்சைவாணனன்னார்
தேரணிவென்றசெழும்புகர்வேல்விழித்தேனினஞ்சூழ்
காரணிமென்குழலாயதுவேகலுழ்காரணமே. (உஅ௯)

தலைவன்றெய்வங்காட்டித்தெளிப்பத்தெளிந்தமைகூறல்

துதித்தேனணங்கொடுசூளுமுற்றேனென்றசொல்லைமெய்யா
மதித்தேனயர்ந்துமதியிலியேன்றஞ்சைவாணன்வையை
நதித்தேனினம்புணர்மாதர்கண்போலநகைக்குநெய்தற்
பொதித்தேனுகர்ந்தகலுங்கழிக்கானற்புலம்பர்வந்தே. (உ௯0)

இறைவிதலைவனிகந்தமையியம்பல்

வரியோலவண்டலைதண்டலைசூழ்தஞ்சைவாணன்வண்மைக
குரியோனுயர்வையையொண்டுறைவஃயுரவோர்தெளித்துங்
கரியோர்பிறரில்லையென்றகன்றாரினிக்காரிகையாய்
பெரியோர்மொழிபிறழாவொன்றுதேறுதல்பேதைமையே. (உ௯௧)

பாங்கியியற்பழித்தல்

மழவேதுறந்துமறந்தவர்போற்றஞ்சைவாணன்வென்றி
முழவேயமுந்நீர்முழங்கிருங்கானன்முழுதுலகுந்
தொழவேதகுந்தெய்வநோக்கிச்செல்லேனென்றுசொல்லியுநீ
யழவேதுறந்தனரானல்லர்நல்லரவ்வாடவரே. (உ௯உ)

தலைமகளியற்படமொழிதல்

மாக்புயன்மண்ணில்வந்தனவாணன்றென்மாறைமுந்நீர்
நாகப்புகர்ச்செய்யபுள்ளிபைங்கான்ஞெண்டுநாகிளந்தண்
பூகக்குளிர்நிழற்பேடையொடாடும்புலம்பரின்று
ராகக்கருதினல்லாயினியாரினியாருளரோ (உகங)

தெய்வம்பொறைகொளச்செல்குவமென்றல்

மாதங்கநல்குங்கைவாணன்றென்மாறைவையத்துறைவ
ரோதம்பய்ந்திலரொங்கட்குநீயெம்மிகந்ததனாற்
கோதம்படாதிகொடுந்தெய்வமேயென்றுகூர்பலிதூய்ப்
பாதம்பரவநல்லாயிருவேமும்படர்குவமே. (உகச)

இல்வயிற்செறித்தமையியம்பல்

தன்போலுலகம்புரக்கின்றவாணன்றமிழ்த்தஞ்சையார்
மன்போலெவர்க்குநீவழங்கியுண்ணுதவர்வைத்திழக்கும்
பொன்போலிறுகப்பொதிந்துகொண்டாளன்னைபூவையென்மேல்
வன்போதியமடவாரலர்தூற்றியவாறுசண்டே. (உகரு)

செவிலிகனையிருளவன்வரக்கண்டமைகூறல்

வெங்கார்முகவெம்புருவமின்னேயன்னைமேலொருநா
ளெங்காதலரிருளெய்தல்கண்டாளிந்தவேழுலகு
மங்காமல்வநதருள்வாணன்றென்மாறைவண்டானமஞ்சச்
சங்காழிகொண்டெறியுங்கண்டல்வேலியந்தண்டுறைக்கே. உகசா

எறிவளைவேற்றுமைக்கேதுவினவல்

பொன்னுற்றகொங்கையுமுத்துற்றகண்ணுமிப்போதுகண்டேன்
பன்னுற்றசொல்லுமின்பாலுங்கொள்ளாழ்பதினுலுகு
மன்னுற்றவண்புகழ்வாணன்றென்மாறையென்மானனையாட்
கென்னுற்றதென்றறியேன்புனங்காவலிருந்தபின்னே. (உகஎ)

பாங்கிவெறிவிலக்கல்

அறியாமையினென்றுகேட்கலுற்றேனும்மையாவதொன்றுங்
குறியாமறியுயிர்கொள்ளவென்றோகுருதிப்பலிகூர்
வெறியாலிவளுயிர்மீட்கவென்றோவென்றிவேல்வலத்தீர்
சிறியார்மனையில்வந்தீர்தஞ்சைவாணன்சிலம்பினின்றே (உகஅ)

வெறிவிலக்கியவழிசெவிலிபாங்கியைவினுதல்

மண்குன்றவந்தகலியினைமாற்றியவாணன்றஞ்சை
யொண்குன்றமங்கையர்முன்னர்மின்னேயுமையாண்மகனைப்

பண்குன்றவென்றசொல்வள்ளிதன்கோனைப்பைந்தாரயிலால்
வெண்குன்றெறிந்தசெவ்வேளையிவ்வாறென்விளம்பியதே (உகூகூ)

பூத்தருபுணர்ச்சியாலறத்தொடுநிற்றல்

போருறைதீக்கணைபோலுநின்கண்கண்டுபோதவஞ்சி
நீருறைநீலமுநீயுநண்பாகென் றுநின்மகட்கோர்
தாருறைதோளவர்தந்தனர்வாணன்றமிழ்த்தஞ்சைசூழ்
காருறைசோலையில்யாம்விளையாடியகாலையிலே (௩00)

புனறருபுணர்ச்சியாலறத்தொடுநிற்றல்

ஒளிதோற்றியசொல்லலுன்மகளோதிக்குடைந்தகொண்டல்
பொழிதோற்றிரளுந்திவந்தசெந்நீருந்திப்பொற்பினுக்கோர்
சுழிதோற்றிடும்பகைதீர்க்கின்றபோதொருதோன்றலுமவ்
வழிதோற்றிவந்தெடுத்தான்றஞ்சைவாணன்றென்வையையிலே. ௩0க

களிறுதருபுணர்ச்சியாலறத்தொடுநிற்றல்.

மண்ணலையாமல்வளர்க்கின்றவாணன்றென்மாறைவெற்பி
லண்ணலையாயிழைபாகனென் றஞ்சினமஞ்சனந்தோய்
கண்ணலைநீரிடப்பாகமுமேல்வந்தகைக்களிற்றின்
புண்ணலைநீர்வலப்பாகமுந்தோயப்பொருதவன்றே (௩0உ)

தலைமகள்வேற்றுமைகண்டுநற்றாய்செவிலியைவினவுதல்

தண்டார்தழுவியவேலண்ணல்வாணன்றென்றஞ்சைவெற்பில்
வண்டார்குழலிதன்வண்ணமுங்கண்ணும்வடிவுமுன்னாட்
கண்டாரறியும்படியனவேயல்லகாரணமொன்
றுண்டாலுயிரனையாயயிராமலுரையெனக்கே (௩0௩)

செவிலிநற்றாய்க்குமுன்னிலைமொழியாலறத்தொடுநிற்றல்

மலைவந்ததோவெனும்வாரணவாணன்றென்மாறைமதிச்
சிலைவந்ததோவெனுநன்னுதலாயொருசெல்வரிங்கோர்
கலைவந்ததோவெனவந்துவினவிநங்காரிகைக்கு
முலைவந்ததோவில்லையோவென்னுநாளின்முயங்கினரோ (௩0௪)

அறத்தொடுநிற்றல் முற்றிற்று.

உடன்போக்கு

பாங்கிதலைவற்குடன்போக்குணர்த்தல்

மைந்நீர்நெடுங்கண்மடந்தையுடன்றஞ்சைவாணன்வெற்பா
செந்நீர்விழவணிநின்னகர்க்கேகொண்டுசேர்ந்தருண்மற்
றிந்நீர்மைபல்லதொராறுமின்றாலிங்கெம்மையொன்றுன்
முந்நீருலகுங்கொள்ளார்விலையாகமுலையினுக்கே (௩0௫)

தலைவனுடன்போக்குமறுத்தல்

பாரோமுலைவிலையென்பர்நின்கேளிரென்பல்கிளைவா
ளாரோவணியதன்றெண்டொடியாய்விந்தையுண்கண்களோ
தாரோவளரும்புயன்றஞ்சைவாணன்றரியலர்போல்
யாரோதனிநடப்பாரருங்கானமிவளுடனே (௩0௬)

பாங்கிதலைவனையுடன்படுத்தல்

சுருளேய்குழலுஞ்சுணங்கேய்முலையுஞ்சுமந்துகற்புப்
பொருளேயெனச்சுரம்போதுமப்போதுபுகழ்வெயிலான்
மருளேய்கலியிருண்மாற்றியவாணன்றெனமாறையினின்
னருளேயொழியவுண்டோநிழலாவதணங்கினுக்கே (௩0௭)

தலைவன்போக்குடன்படுதல்

நஞ்சோவழலோவெனுஞ்சுரமோசெல்லநாடியவென்
னெஞ்சோகொடியதுநேரிழையாய்நிழன்மாமதியோ
மஞ்சோதவழ்மதில்சூழ்தஞ்சைவாணன்வரையில்வம்
பஞ்சோவனிச்சங்கொலோவெனுஞ்சீறடிப்பைந்தொடிக்கே (௩0௮)

பாங்கிதலைவிக்குடன்போக்குணர்த்தல்.

பாலன்னபாயற்பசையெனுஞ்சீறடிபட்டிருவும்
வேலன்னகூர்ங்கன்மிகுக்குங்கொலென்றனர்மேதினிக்கு
மாலன்னவாணன்றென்மாறைநன்னாட்டுவயலுகளுஞ்
சேலன்னநீள்விழியாய்தெரியாதன்பர்சிந்தனையே (௩0௯)

தலைவிநாணழிவிரங்கல்

மறவாணவேலங்கைவாணனைமாறையர்மன்னனைத்தம்
முறவாகவெண்ணியுறாதவர்போலுயிரோம்பியென்றுந்
துறவாதநாணந்துறப்பதுவேண்டலிற்றொல்லுலகிற
பிறவாதொழிகைநன்றேயொருகாலமும்பெண்பிறப்பே. (௩௧0)

கற்பின்மேம்பாடுபாங்கிகழறல்

செந்நாண்மலரிற்றிருவன்னகோலத்தெரிவையர்க்கு
மெய்ந்நாணுயிரினுமிக்கதென்றால்விரவாவரசர்
தந்நாண்முறைமைதவிர்த்தருள்வாணன்றமிழ்த்தஞ்சைநாட்
டந்நாணமுமடவாய்கற்புநோக்கவழகிதன்றே. ௩௧௧

தலைவியொருப்பட்டெழுதல்

பலரோசுமந்தவுரைகளுந்தாயர்தம்பார்வைகளுஞ்
சிலரோசுமந்துதிரியவல்லார்செய்யசெண்பகநாண்

மலரோசுமந்தவயற்றஞ்சைவாணனைவாழ்த்தலர்போ
லலரோசுமந்துசுமந்திந்தவூர்நின்றழுங்குகவே. (ருகஉ)

பாங்கிசுரத்தியல்புரைத்துழித்தலைமகள்சொல்லல்

செல்லிற்கொடியகளிற்றண்ணல்வாணன்றென்மாறைமன்னன்
வில்லிற்கொடியபுருவமின்னேயென்விளம்புதிநீ
சொல்லிற்கொடியநம்மன்னையைப்போல்பவர்சூழ்ந்திருக்கு
மில்லிற்கொடியகொல்லோசெல்லுநாட்டவ்விருஞ்சுரமே (ருகரு)

பாங்கிகையடைகொடுத்தல்-பிறசெய்யுட்கவி

பறந்திருந்தும்பர்பதைப்பப்படரும்புரங்கரப்பச்
சிறந்தெரியாடிதென்றில்லையன்னுடிறத்துச்சிலம்பா
வறந்திருந்துன்னருளும்பிறிதாயினருமறையின்
றிறந்திரிந்தார்கலியும்முற்றும்வற்றுமிச்சேணிலத்தே (ருகசு)

பாங்கிவைகிருள்விடுத்தல்

பொழிநானமன்றலம்பூங்குழனீங்கள்புணர்ந்துசெல்லும்
வழிநாடிநும்பின்வருகுவல்யான்றஞ்சைவாணன்வையைச்
சுழிநாணுமுந்திநின்றோல்கிளைக்கேற்பனசொல்லியின்று
மொழிநாவடங்கமொழிந்தயலாரைமுகங்கவிழ்த்தே (ருகரு)

தலைமகளைத்தலைமகன்சுரத்துய்த்தல்

தளிபோற்கொடைபயில்சந்திரவாணன்றமிழ்த்தஞ்சையா
னளிபோற்குளிர்ந்தவிளமரக்காவுமவன்புகழி
ஞெளிபோல்விளங்கியவெண்மணல்யாருமுவந்துகண்டு
நளிபோதவிழ்குழலாய்மெல்லமெல்லநடந்தருளே. (ருகசு)

தலைமகன்தலைமகளசைவறிந்திருத்தல்

வரமாமைவேற்படைவாணன்றென்மாறைவணங்கலர்கள்
புரமானவல்லழல்பொங்குவெங்கானிற்பொருந்தியகூ
ரரமானகல்லுன்னடிமலராற்றலவாதலினுஞ்
சுரமாறுமெல்லைநல்லாயிருப்பாமிந்தச்சோலையிலே. (ருகஎ)

உவந்தலர்சூட்டியுண்மகிழ்ந்துரைத்தல்

அடிமலர்போற்றவும்போற்றியன்பாலிவளாய்முடிக்கியான்
கடிமலர்சூட்டவுங்காட்டியதாற்கள்வர்காய்ந்தெறியுந்
துடிமலர்சீர்க்கெதிர்கூகைகயிரட்டுஞ்சுரத்திடையோர்
வடிமலர்வேற்படையான்வாணன்மாறையென்மாதவமே. (ருகஅ)

கண்டோரயிர்த்தல்

சையத்திரள்புயன்சந்திரவாணன்றனிபுரக்கும்
வையத்துறைகின்றமானிடரோவன்றிவானவரோ
னையப்படுமழல்வெஞ்சுரத்தூடுநடந்தவரென்
றையப்படுவதல்லாலுண்மைசாலவறிவரிதே (ருககூ)

கண்டோர்காதலின்விலக்கல்

மாலுந்திருவுமெனவருவீர்தஞ்சைவாணன்றெவ்வூர்
போலுஞ்சுரமினிப்போகவொண்ணுதுபொருப்படைந்தா
ளுலும்புரவியருக்கனிக்கங்குலடற்கடமான்
பாலுந்தசையுமுண்டேதங்குவீரெங்கள்பாடியிலே. (ருஉ0)

கண்டோர்தன்பதியணிமைசாற்றல்

தொடங்கும்பிறைநுதற்றோகையுநீயுமுன்றோன்றுகின்ற
கடங்குன்றிரண்டுங்கடந்துசென்றாற்கமலத்தடமுங்
கிடங்கும்புரிசையுஞ்சூழ்ந்தெதிர்தோன்றுங்கிளைத்தபைந்தார்த்
தடங்குங்குமநெடுந்தோள்வாணன்மாறையுநதஞ்சையுமே. (ருஉக)

தலைவன்றன்பதியடைந்தமைதலைவிக்குணர்த்தல்

சந்தனந்தோய்ந்துதயங்குமுத்தாரந்தரித்துவிம்மு
நந்தனந்தாங்கிநடுங்கிடைபோலநடந்திங்ஙனே
நொந்தனங்காலென்றுநோவல்பொன்னேயொருநோயுமின்றி
வந்தனங்காணிதுகாண்வாணன்மாறைவளநகரோ. (ருஉரு)

உடன்போக்கு முற்றிற்று.

கற்பொடுபுணர்ந்தகவ்வை

செவிலிபாங்கியை வினுதல்

நலம்புனையாயமுநீயுநற்றாயொடுநானுநற்பொற்
சிலம்புயர்சோலையுஞ்சிற்றிலும்பேரிலுந்தெண்டிரைமேல்
வலம்புரியூர்வயல்சூழ்தஞ்சைவாணனைவாழ்த்தலர்போற்
புலம்புறமாதரெங்கேமகளேதனிப்போயினளே. (ருருரு.)

பாங்கிசெவிலிக்குணர்த்தல்

வெறுத்தாரொறுத்துரைமேலுநங்கேளிர்விழைதலின்றி
மறுத்தாரவற்குமணமதனுற்றஞ்சைவாணர்பிரான்
கறுத்தார்புரத்துநடந்தனள்காளைபின்காமர்கற்பாற்
பொறுத்தாளழற்சுரந்தன்னையன்னுய்நின்பொலங்கொடியே. (ருருச)

செவிலிதேற்றுவோர்க்கெதிரழிந்துமொழிதல்

மாறுவளவயல்சூழ்தஞ்சைவாணன்றென்மாறையென்க
ணூறுவருந்துயராற்றுகின்றீரறிவேகொளுத்தி

பூறுவனகடிந்தென்முலையூறமிர் தூட்டியின்சொற்
கூறுவளர்த்ததற்கோவென்னைநீத்ததென்கோல்வளையே. (௩௨௬)

செவிலிதன்னறிவின்மைதன்னைநொந்துரைத்தல்

வழியாவரும்பெருநீர்த்தஞ்சைவாணனைவாழ்த்தலர்போற்
கழியாதவன்புடைக்காளைபின்னாளைக்கலந்துகொண்டல்
பொழியாதவெஞ்சுரம்போகுவல்யானென்றுபோங்குறிப்பா
லொழியாதென்முன்புசொன்னாள்பேதையேனென்மறையோர்ந்திலனே

செவிலிதெய்வம்வாழ்த்தல்

இணங்கிப்புவனத்தெவருமில்லாவென்னிளங்கொடியா
லுணங்கிக்கழிதலொழியவென்பால்வரவுன்னையன்பால்
வணங்கிபபலமுறைவாழ்த்துகின்றேன்றஞ்சைவாணன்றெவ்வை
யணங்கித்திரள்புயத்தான்மலயாசலத்தாரணங்கே. (௩௨௭)

செவிலிநற்றாய்க்கறத்தொடுநிற்றல்

சகநல்கவந்தருள்சந்திரவாணன்றென்றஞ்சைநல்லாய்
முகநல்கிநல்கமுலைகொடுத்தாரின்முத்தங்கொடுத்தார்
மிகநல்லரொன்பதுமன்பதைதேரவிடலைபின்னே
மகநல்குமந்தியங்கானடந்தாளுன்மடந்தையின்றே. (௩௨௮)

நற்றாய்பாங்கிதன்னொடுபுலம்பல்

முன்னேயிதனைமொழிந்தனையேனுந்தைமுந்தைமணம்
பின்னேய்குழலிபெருளல்லளேபிறழாதெவர்க்குந்
தன்னேயம்வைத்தருளுந்தஞ்சைவாணன்றமிழ்ச்சிலம்பிற்
பொன்னேயனையநலலாயவமேசுரம்போக்கினையே (௩௨௯)

அதுகேட்டபாங்கியழுங்கல்கண்டுநற்றாய்புலம்பல்

இல்லுங்கழங்காடிடங்களுநோக்கியிரங்கலவம்பும்
வல்லும்பொருங்கொங்கைமங்கைநல்லாய்தஞ்சைவாணனொன்னார்
புல்லுந்துணைவியர்போல்வினையேன்பெற்றபூவையன்னாள்
செல்லுஞ்சுரத்தழலன்றன்கண்ணீரொற்றெறிகின்றதே (௩௩0)

நற்றாய்பாங்கியர்தம்மொடுபுலம்பல்

நேயம்புனைதுணையாகவெங்கானகநீந்தலெண்ணி
யாயம்புலம்பவகன்றனளோசல்லகங்குழைய
மாயம்புகலொருகாலைபின்வாணன்றென்மாறையன்னீர்
சேயம்புயமலர்போலடிநோவவென்சில்வளையே. (௩௩க)

நற்றாயயலார்தம்மொடுபுலம்பல்

மேனாள்வரங்கிடந்தென்போல்வருந்திமிகவுமெய்ந்நொந்
தீனாதவர் துன்பமெய்துவரோவிமையோருலகந்
தானாணைநீமதிற்றஞ்சைவாணன்றமிழ்ச்சிலம்பின்
மானார்விழியனையாள்விளையாடியவண்டல்கண்டே. (௩௩௨)

நற்றாய்தலைமகள்பயிலிடந்தம்மொடுபுலம்பல்.

செயலைத்தநவின்றிருநிழலேபெருஞ்சிற்றில்லமே
வயலைக்கொடிநொச்சிமண்டபமேதஞ்சைவாணனென்றா
ரியலைத்தனித்தனிதந்தனளோநமக்கின்றிதன்றோ
கயலைப்பொருதகண்ணாண்மேலும்வாழ்விக்குங்கட்டளையே. (௩௩௩)

நிமித்தம்போற்றல்

வடியேய்புகர்முகவாள்வலவாணன்றென்மாறையுள்யா
ணடியேதொழுந்தெய்வமாகநிற்பேணியரும்பலியிப்
படியேதருகுவலென்றுமின்னேயிப்பதியுவகைக்
கொடியேவரக்கரைநீகொடியேன்பெற்றகொம்பினையே. (௩௩௪)

சுரந்தணிவித்தல்

வெஞ்சுரநாடுவியன்சுரலோகமும்வெங்கடுங்கா
னஞ்சுரதாருவனங்களுமாகவகிற்புகைபோன்
மஞ்சுரவாடகமாமதில்சூழ்தஞ்சைவாணன்வெற்பிற்
பஞ்சுரமாகுமொழிச்சுருளோதியென்பைந்தொடிக்கே. (௩௩௫)

தன்மகண்மென்மைத்தன்மைக்கிரங்கல்-பிறசெய்யுட்கவி

தாமேதமக்கொப்புமற்றில்லவர்தில்லைத்தண்ணனிச்சப்
பூமேன்மிதிக்கிற்பதைத்தடிபொங்குநங்காயெரியுந்
தீமேலயில்போற்செறிபரற்கானிற்சிலம்படிப்பா
யாமேநடக்கவருவினையேன்பெற்றவம்மனைக்கே. (௩௩௬)

இளமைத்தன்மைக்குளமெலிந்திரங்கல்

இரும்பாமனங்கொண்டவாறென்னைநீதன்னையேத்தியென்றும்
வரும்பாவலர்க்கருள்வாணன்றென்மாறைவளவயலிற்
கரும்பார்மொழியாயழலென்றுகண்ணீர்துடைத்தணைத்துன்
னரும்பாமுலைசெய்யவாய்ப்பசும்பாவைக்களிக்குமின்னே. (௨௩௭)

அச்சத்தன்மைக்கச்சமுற்றிரங்கல்

நாண்மாதவிமலர்நாறிருங்கூந்தனடந்தவழிக்
கோண்மாகுமிறுங்கொடுங்குரல்கேட்டொறுங்கூர்ங்கணையால்

வாண்மாமுனைவென்றவாணன்றென்மாறைமணிவளரவேய்த்
தோண்மாவெருவுங்கொல்லோவென்றெனருயிர்சோர்கின்றதே. ௩௫௮

கண்டோரிரக்கம்.

நொந்துங்கலுழ்ந்துந்துணைவியராற்றலர்நோக்கொடின்சொற்
றந்துங்கவையுந்தணந்துசென்றுளனத்தாள்பணியார்
மைந்துங்கதமுங்கடிந்தருள்வாணன்றென்மாறையன்னாள்.
பந்துங்கழங்குமெல்லாங்கண்டுவாடும்பயந்தவளே. (௩௫௯)

செவிலியாற்றுத்தாயைத்தேற்றல்

நன்றேயிதென்றுமுகமுகநோக்கிநகைநகையா
மன்றேயலர்சொல்லுமாதர்முன்னேதஞ்சைவாணன்றொல்சீர்
சென்றேபரந்ததிசைகளெல்லாஞ்சென்றுதேர்ந்தணங்கை
யின்றேதருவனன்னேவருந்தாதிங்கிருந்தருளே. (௩௬௰)

ஆற்றிடைமுக்கோற்பகவரைவினாதல்

ஒருவெண்குடையிருநீழன்முக்கோல்கொண்டொழுக்கத்தினா
லருவெங்களரியைந்தாறுசெல்வீரருளீரொழுபார்
மருவெண்டிசைபுகழ்வாணன்றென்மாறையென்வஞ்சியன்னாள்
பொருவெஞ்சுடரிலைவேலொருகாளைபின்போயினளே. (௩௬௧)

மிக்கோரேதுக்காட்டல்

இயங்கார்வனமென்மகளொருகாளைபின்னேகினளென்
றுயங்காதொழியஃதுலகியல்பாலுலவும்புயறோய்
வயங்காடகமதில்சூழ்தஞ்சைவாணன்மணங்கமழ்தார்ப்
புயங்காதல்கொண்டணைந்தாளயனார்தந்தபூமகளே. (௩௬௨)

செவிலியெயிற்றியொடுபுலம்பல்

செருமகளேயும்புயத்தயலான்பின்செலவிடுத்தேன்
றொருமகளோவென்றுனையயிர்த்தேன்புனையோவியம்போல்
வருமகளேதஞ்சைவாணனொன்னார்தின்னும்வன்சுரத்தோ
ரருமகளேயுனையாயவள்போனவதெனக்கே. (௩௬௩)

செவிலிகுரவொடுபுலம்பல்

இரவேய்குழலியிவ்வேதிலன்பின்செல்லலென்றுசொல்லாக்
குரவேயறவுங்கொடியைகண்டாய்கொடிகோகனகந்
தரவேயெனவந்தசந்திரவாணன்றரியலர்போஞ்
சுரவேயழல்வழியேதனிப்போயவென்றேகையையே. (௩௬௪)

சுவடுகண்டிரங்கல்

தொடுசிலைக்கானவரோடியவேற்றுச்சுவடுவையே
யடுசிலைக்காளையடியவையேயறிந்தோறிய
விடுசிலைப்பார்புரக்குந்தஞ்சைவாணனிசைக்குருகப்
படுசிலைப்பாவைபதமிவையேவண்டுபாடுகவே. (௩௪௫)

செவிலிகலந்துடன்வருவோர்க்கண்டுகேட்டல்

யானகம்போதவருந்தநும்போல்வனப்பெய்திவெய்ய
கானகம்போயினர்கண்டனிரோகற்பகாடவிசூழ்
வானகம்போர்பயில்வானவற்கீந்தருள்வாணன்றஞ்சைத்
தேனகம்போருகமாதனையாளுமொர்செல்வனுமே. (௩௪௬)

அவர்புலம்பதேற்றல்

யான்கண்டவண்ணலுமெண்ணருங்காதலினேகியவென்
மான்கண்டனகண்மயில்கண்டமாதருமாதருமந்
தான்கண்டதண்ணளிச்சந்திரவாணன்றரியலர்போங்
கான்கண்டமெய்குளிரப்பொய்கைசூழ்தஞ்சைகாண்பர்களே. (௩௪௭)

செவிலிபுதல்வியைக்காணாதுகவலைகூர்தல்

நாணினுந்தாரணிகற்புநன்றென்றுநயந்துமுத்தம்
பூணினும்பாரமிதென்னுமென்பொன்னையிப்போதெனக்குச்
சேணினுஞ்சார்புகழ்வாணன்றென்மாறைமன்சேரலனாக்
காணினுங்காணவந்தோவரிதாலிந்தக்கானிடையே. (௩௪௮)

கற்பொடுபுணர்ந்தகவ்வை-முற்றிற்று.

மீட்சி.

தலைவிசேணகன்றமைசெவிலிதாய்க்குணர்த்தல்

இதுபிறசெய்யுட்கவி

ஏடார்மலர்க்குழல்வல்லியையன்னையித்தீவினையே
னுடாவிடமில்லைஞாலத்தகல்வயினன்கமலக்
காடார்பழனக்கழனிநன்னாடுகடந்துதன்னூர்
வாடாவளமனைக்கொண்டுசென்றானொருவள்ளலின்றே (௩௪௯)

தலைவன்றம்மூர்சார்ந்தமைசாற்றல்

நினையாநெனதிர்ப்பட்டநீடிருங்குன்றிதுநீகுடைந்த
சுனையாமதுமலர்ச்சோலைகளாமுவைதுயவண்டன்
மனையாமிவையினிவாணன்றென்மாறையைவாழ்த்தலர்போ
லினையாதெழுந்தருண்மானனையாய்நம்மெழினகர்க்கே (௩௫௦)

தலைவிமுன்செல்வோர்தம்மொடுதன்வரல்
பாங்கியர்க்குணர்த்திவிடுத்தல்

புனைபலரோதிலர்காதலர்தாயர்பொருமையிற்போ
யினைதுயர்யாதொன்றுமின்றிவெங்கானிகந்தியானுமம்பொன்
வனைகழலானும்வருவதெல்லாஞ்சென்றுவாணன்றஞ்சைத்
துனைவுடனேகுகின்றீர்சொல்லுவீரென்றுணைவியர்க்கே. (௩௫௧)

முன்சென்றோர்பாங்கியர்க்குணர்த்தல்

போதலர்ந்தலைமுனியுமெல்லோதிப்புனையிழைதன்
காதலன்பின்வரக்கண்டனம்யாங்கண்டல்வேலிமுந்நீர்
மாதலந்தன்னிருதோள்வைத்தவாணன்றென்மாறைவண்ணைச்
சூதலர்ந்தொல்கவிம்மித்திரண்மாமுலைத்தோகையரே (௩௫௨)

பாங்கியர்கேட்டுநற்றாய்க்குணர்த்தல்

வாளேய்விழிநின்மயிலனையாடஞ்சைவாணன்வெற்பில்
வேளேயனையவிடலையின்னேசுரமீண்டினிநங்
கேளேய்பதிவருமென்னநல்லோர்சொல்லக்கேட்டனமிந்
நாளேயனையநன்னாளுளவோசென்றநாள்களிலே (௩௫௩)

நற்றாய்கேட்டவனுளங்கோள்வேலனைவினாதல்

தென்மாறைநன்னகர்மன்னவன்வாணன்செழுந்தஞ்சைசூழ்
பொன்மாதிரத்துப்புலனுணர்வீர்சுரம்போய்வருவோ
னென்மானையென்மனையிற்றருமோதன்னையீன்றநற்றாய்
தன்மாநகருய்க்குமோசொல்லுவீரொன்றுதானெனக்கே. (௩௫௪)

மீட்சி-முற்றிற்று.

தன்மனைவரைதல்.

நற்றாய்மணனயர்வேட்கையிற்செவிலியைவினாதல்

தாமாகமேவினுநம்மனைக்கேவந்துதண்சிலம்பார்
மாமாதினைமன்ஞ்செய்வதற்கேமருவார்கமலப்
பூமாதுசேழ்வன்புகழ்த்தஞ்சைவாணன்பொருப்பிலினி
யாமாறுயிரனையாய்சொல்வமோவவரன்னையர்க்கே. (௩௫௫)

செவிலிக்குவரைந்தமையுணர்த்தல்

என்னுமிபம்புவதியாய்க்கினிநாமன்னையின்றுதம்மிற்
கொன்னுருநித்திலக்கோதைநம்மாதைக்கொடிநெடுந்தேர்க்
கன்னுடர்மண்கொண்டவாணன்றென்மாறையிற்காதலர்தா
நன்னுண்மணம்புணர்ந்தாரென்றுதூதர்நவின்றனரே. (௩௫௬)

வரைந்தமைசெவிலிநற்றாய்க்குணர்த்தல்

எனைக்கேளிருநின்றியற்றவங்கேமணவின்பமெய்தி
யனைக்கேண்மைநண்ணியவண்ணல்பின்னுகநம்மன்னையின்றிம்

மனைக்கேவருமெனவந்துசொன்னார்தஞ்சைவாணன்வெற்பிற்
சுனைக்கேழ்நனைக்கமழ்நீர்க்குழலாய்சிலதூதரின்னே. (௩௫௭)

தலைவன்பாங்கிக்கியான்வரைந்தமைநுமர்க்கியம்பு
சென்றென்றல்

கோபுரஞ்சோலைகொடிமதின்மாடங்குலாவிமையோர்
மாபுரம்போலுந்தென்மாறைவரோதயன்வாணன்வெற்பி
னீபுரந்தேதந்தமாதையங்கியாம்வரைநீர்மைபொன்செய்
நூபுரஞ்சூழடியாய்சென்றுகூறுநுமர்தமக்கே (௩௫௮)

பாங்கிதானதுமுன்னேசாற்றியதுரைத்தல்

அன்னைக்கியம்பினனண்டகையான்முன்னறிந்துதென்னன்
றன்னைப்பணிந்துகுற்றேவல்செய்யாதுசமர்க்கெழுந்த
மன்னைப்புறங்கண்டவாணன்றென்மாறைவரையிலெங்கள்
பொன்னைப்புணர்ந்துநுங்கேண்முன்னர்நீபொன்புனைந்ததுவே ௩௫௯

தன்மனைவரைதன் முற்றிற்று.

உடன்போக்கிடையீடு,

நீங்குங்கிழத்திபாங்கியர்தமக்குத்தன்செலவுணர்த்திவிடுத்தல்

வளைவேய்மிடைந்தவழிப்படர்வீர்செங்கைவாணன்றஞ்சைத்
தளைவேய்நகையென்றுணைவியர்பாற்சென்றுசாற்றுமின்போர்க்
களைவேளனையவொர்காளைபின்போயினள்காண்பனிநீத்
திளவேனில்வல்லிபெற்றுங்கெவ்வநீத்தெழிலெய்தியன்றே. (௩௬௦)

தலைமகடன்செலவீன்றாட்குணர்த்திவிடுத்தல்

வாயாரநுங்களைவாழ்த்துகின்றேன்றஞ்சைவாணன்வெற்பிற்
சாயாதமாதவத்தாழ்சடையீரன்பர்தம்மொடின்றியான்
சேயாறுதேர்மிசைச்செல்வதெல்லாமெங்கள்சேரியிற்சென்
றியாயாகியகொடியாட்கினிதாகவியம்புமின்னே. (௩௬௧)

நற்றாய்க்கந்தணர்மொழிதல்

மருள்கொண்டசிந்தைமலைகிழவோய்தஞ்சைவாணன்வெற்பில்
வெருள்கொண்டமென்பிணைவென்றகண்ணாள்வென்றுவேல்வலங்கை
யருள்கொண்டநெஞ்சினொரண்ணல்பின்னேயகன்றாளகல்வா
னிருள்கொண்டகொண்டல்செல்லாவரைசூழுமிருஞ்சுரத்தே. (௩௬௨)

நற்றாயறத்தொடுநிற்றலிற்றமர்பின்சேறலைத்தலைவிகண்டு
தலைவற்குணர்த்தல்

உவலைப்பதுக்கைமுரம்புசெல்லாமலுலகமங்கை
தவலைத்தவிர்த்தமிழ்த்தஞ்சைவாணன்றரியலர்போங்

கவலைக்கட்த்துச்சிலைத்திரைகோலிக்கடும்பகழித்
துவலைப்படைக்கடரேன்றல்பொற்றேர்வங்கஞ்சூழ்கின்றதே (ருகரு)

தலைமகளைத்தலைமகன்விடுத்தல்

ஆறலைவெஞ்சிலைக்கானவரோலெண்ணகையம்பொன்றிரு
னூறலையஞ்சலைநுண்ணிடையாய்நுமரோலவர்முன்
சேறலையஞ்சுவல்செல்லல்பைம்பூகச்செழும்பழுக்காய்த்
தாறலைதண்டலைசூழ்தஞ்சைவாணன்றமிழ்வெற்பிலே. (ருகச)

தமருடன்செல்பவளவன்புறநோக்கிக்கவன்றரற்றல்

ஏமானெனவஞ்சுமேற்காத்தலினவ்விரவிபொற்றேர்
வாமானென்வாழ்வனவாகபன்றூட்டஞ்சைவாணனென்னூர்
போமானதரிடத்தென்னையர்தோன்றப்புறங்கொடுத்த
கோமான்மணிநெடுந்தேர்நுகம்பூண்டகுரகதமே (ருகரு)

உடன்போக்கிடையீடு முற்றிற்று.

வரைதல்.

சென்றோன்மீண்டுவந்தந்தணரையுஞ்சான்றோரையு
முன்னிட்டுவரைந்துகொண்டுழிக்கண்டோர்மகிழ்ந்துகூறல்

சேலார்புனல்வையைசூழ்தஞ்சைவாணன்றென்மாறையினம்
வேலானெனப்பிறர்வேட்டவர்யார்மணம்வெண்டுகிலின்
பாலாரமளியும்பாற்கடலானதுபங்கயக்கண்
மாலாயினனிவனுந்திருவாயினண்மாதுமின்றே. (ருகசு)

வரைதன்முற்றிற்று.

இல்வாழ்க்கை.

தலைவன்றலைவிமுன்பாங்கியைப்புகழ்தல்

நின்மேலடுத்தபசலையின்காரணநின்றுணைவி
யென்மேலடுத்தவியல்பினன்றோபெற்றதேழுலகுந்
தன்மேலடுத்தபுகழ்த்தஞ்சைவாணன்றமிழ்க்கிரிநுண்
பொன்மேலடுத்தனபோற்சுணங்கீன்றபுணர்முலையே. (ருகஎ)

தலைவனைப்பாங்கிவாழ்த்தல்

தெரியாடகவிதழ்ப்பூங்கொன்றைவேணியுந்தேவியும்போற்
பிரியாதுறையப்பெறுகுதிராற்பிறைமானுநெற்றிப்
புரியாழ்நிகர்மொழிப்பூவையுநீயும்புணர்ந்தபல்கேழ்
வரியார்சிலையண்ணலேதஞ்சைவாணன்றென்மாறையிலே. (ருகஅ)

பாங்கிதலைவியைவரையுநாளளவும்
வருந்தாதிருந்தமையுரையாயென்றல்

கோங்கநன்மாமுகைக்கொங்கைநல்லாய்மணங்கூடுமெல்லை
யாங்கனமாற்றியிருந்தனைநீயிபமாசயிலந்
தாங்கனமாறத்தலம்புனைவாணன்றமிழ்த்தஞ்சைவாழ்
பூங்கனமார்குழலாரலர்மாலைப்பொறைசுமந்தே (௩௬௯)

பெருமகளுரைத்தல்.

மைதோய்ந்தலர்ந்தமலர்த்தடஞ்சூழ்தஞ்சைவாணனொன்னார்
மெய்தோய்ந்தசெந்நிறவேல்விழியாய்துயர்வெள்ளம்வெற்பர்
கைதோய்ந்தளிப்பவசோகத்தவாய்நிறங்கால்வனவாய்
நெய்தோய்ந்தனதழையேபுணையாக்கொண்டுநீந்தினரோ (௩௭0)

தலைவனைப்பாங்கிவரையுநாளளவுநிலைபெறவாற்றிய
நிலைமைவினாதல்-பிறசெய்யுட்கவி.

வரையுமிந்நாளளவெவ்வாறுநீரெம்மடந்தைமுகை
புரையுமென்கொங்கைபிரிந்திருந்தீர்முன்பொருப்பெடுத்தே
நிரையுமிஞ்ஞாலமுங்காத்தருடானன்பதாகையினீ
டிரையுங்குயிலும்விடாதெழுமோசைசெவிமடுத்தே. (௩௭௧)

மன்றன்மனைவருசெவிலிக்கிளையன்புறவுணர்த்தல்

வளங்கொண்டதஞ்சைவரோதயன்வாணன்றென்மாறையன்று
ளிளங்கொங்கைகொண்டுழுதீரங்கொண்மார்பின்முத்தேற்பவித்தி
விளங்கொண்பிறைநுதல்வேர்தந்துபோகம்விளைத்தன்புசே
ருளங்கொண்டருத்துதலாலன்னையூரனுவப்புறுமே. (௩௭௨)

பாங்கியில்வாழ்க்கைநன்றென்றுசெவிலிக்குரைத்தல்

சினவேய்சுளியுங்களிற்றண்ணல்வாணன்றென்மாறையினம்
மனவேபகலல்குல்வல்லியன்னண்மறையோர்முதலாஞ்
சனவேதனைகெடத்தானங்களீதலிற்சாலவுநன்
றெனவேநடக்கின்றதாலன்னைநாடொறுமில்லறமே. (௩௭௩)

படணமனைச்சென்றுவந்தசெவிலிபொற்றொடிகற்
பியனற்றாய்க்குணர்த்தல்

ஒன்றேநமக்குவந்தெய்தியநன்மையுடனெதிர்ந்தார்
வன்றேலமர்வென்றவாட்படைவாணன்றென்மாறையில்வாழ்
நின்றேகைசற்பினிலைமையெண்ணுதெதிர்நின்றுவென்னிட்
டன்றேவடக்கிருந்தாண்மடப்பாவையருந்ததியே. (௩௭௪)

நன்மனைவாழ்க்கைத்தன்மையுணர்த்தல்

விண்மேலமரர்விரும்பமராவதிவெள்ளமுந்நீர்
மண்மேலடைந்தன்னவாழ்க்கையதானதுவாணன்றஞ்சைப்
பண்மேலளிமுரல்குங்குமத்தோளவர்பங்கயம்போற்
கண்மேலருள்பெற்றுவாழ்மடமாதர்கடிமனையே. (௩௭௫)

செவிலிநற்றாய்க்கிருவர்காதலையுமறிவித்தல்

நனையகத்தல்கியநாண்மலரோதிநயந்துறையு
மனையகத்தல்லிடைவைகுதலாற்றஞ்சைவாணனொன்னார்
வினையகத்தல்குதல்செல்லுவரோனுமவ்வேந்தர்போற்றேர்
முனையகத்தல்கல்செல்லாதொருநாளுமுகிழ்நகையே. (௩௭௬)

இல்வாழ்க்கைமுற்றிற்று.

பரத்தையிற்பிரிவு.

காதலன்பிரிவுழிக்கண்டோர்புலவிக்
கேதுவிதாமவ்விறைவிக்கென்றல்

மாறையர்காவலன்வாணன்றென்றஞ்சையில்வானுதற்கிவ்
வாறையர்காரணமாகுமென்றேகொங்கையானையுடன்
சாறையர்வீதியரிப்பறையார்ப்பத்தயங்குகுழற்
சூறையர்சூறைகொள்வான்வயலூரனைச்சூழ்ந்தனரோ. (௩௭௭)

தனித்துழியிறைவிதுனித்தழுதிரங்கல்

வன்போதணிதொங்கல்வாணன்றென்மாறைமகிழ்நர்நம்மே
லன்போடுநன்னெஞ்சறிவறைபோகவழலுள்வெந்த
பொன்போனிறங்கொண்டிரவுங்கண்ணீரும்புலர்வதுபார்த்
தென்போலவரிங்ஙனேயிமையாமலிருப்பவரோ. (௩௭௮)

ஈங்கிதுவென்னெனப்பாங்கிவினாதல்

எம்மாதிரமும்புரவலர்தேடியிரந்துழல்வோர்
தம்மாதுபரந்தணித்தருள்வாணன்றமிழ்த்தஞ்சைவாழ்
நம்மாவியன்னவர்நாடோறுநாடொறுநல்கவுநீ
விம்மாவருந்துவதென்பிரிந்தாரின்விளங்கிழையே. (௩௭௯)

இறைமகன்புறத்தொழுக்கிறைமகளுணர்த்தல்

தாராகநல்கினர்காரிகையாய்தஞ்சைவாணன்றனைச்
சேராதவொன்னத்தீவினையேனையச்செங்கண்வன்கட்
காராகழனிக்கரும்பினஞ்சாயக்கதழ்ந்துசெந்நெ
லாராதயலிற்பஞ்சாயாருமூரரயலவர்க்கே. (௩௮0)

தலைவியைப்பாங்கிகழறல்

புனையலங்காரநங்கற்பியல்போற்றியும்போற்றருஞ்சீர்
மனையறம்பாவித்தும்வாழ்வதல்லாற்றஞ்சைவாணன்ற
டனையவண்டார்குழலாரணங்கேநமக்கன்பரிந்நா
ளினையவொன்றூர்வமில்லாவுரையாடலியல்பல்லவே. (௩௮௧)

தலைவிசெவ்வணியணிந்து சேடியைவிடுப்புழியவ்
வணியுழையர்கண்டழுங்கிக்கூறல்

வேளான்மரபுவிளக்கியவாணன்மின்னார்கழல்சூழ்
தாளான்வளங்கெழுதஞ்சையன்னீர்சங்கந்தந்தநன்னீர்
தோளாமணியன்னதொல்குலவேளாடையிற்றோன்றியபூ
வாளாவலர்தொடுப்பார்க்செங்கணைவந்துவாய்த்ததுவே. (௩௮௨)

பரத்தையர்கண்டுபழித்தல்

படியொன்றுசாலியனையவர்சேரிப்படர்பவளக்
கொடியொன்றுநீல்மலர்ந்ததுகாட்டக்கொடியவெம்போர்
வடியொன்றுகூரிலைவேல்வல்லவாணன்றென்மாறையிற்பொற்
றொடியொன்றுதோண்படவார்சேரிவாய்வந்துதோன்றியதே. (௩௮௩)

பரத்தையாற்றலைவியனோக்கிவிநித்தலிற்றலைவன்வரவு
கண்டுவந்துவாயில்கண்மொழிதல்

வாருந்துபச்சிளநீர்முலையார்மதன்வாணன்றஞ்சை
யாருந்தொழத்தகுமெய்ப்பெருமாட்டிதனைவலிநற்
சேரும்பரத்தையர்சேரியிலேசென்றசேடியைக்கண்
டுருந்திரைப்புனலூரன்வந்தானின்றலகியற்கே. (௩௮௪)

தலைமகன்வரவுபாங்கிதலைவிக்குணர்த்தல்

தள்ளாவளவயல்சூழ்தஞ்சைவாணன்றரியலர்போ
லுள்ளாதுனைப்பண்டகன்றனராயினுமுள்ளியிப்போ
தெள்ளாதுவந்துன்கடையினின்றார்நம்மிறைவர்குற்றங்
கொள்ளாதெதிர்கொள்வதேகுணமாவதுகோமளமே. (௩௮௫)

தலைவனைத்தலைவியெதிர்கொண்டுபணிதல்

மழிவிற்பெருநலமன்னுவதாந்தஞ்சைவாணன்வெற்ப
ரொருவிற்பசலையுருக்குவதாநமக்கூடலெவ்வா
றிருவிற்புருவவிளங்கொடியேயெய்துமெய்தலில்லாத்
திருவிற்புனைநறுந்தார்வரைமார்பர்திருமுனின்றே. (௩௮௬)

புணர்ச்சியின்மகிழ்தல்

மன்னவர்காமநெடுங்கடல்வாணன்றென்மாறையன்ன
டொன்னலம்வார்முலைமத்தந்தழீஇத்தடந்தோளிணையாம்

பன்னகநாணிற்கடைந்திதழ்வார்திரைப்பட்டநன்னீ
ரின்னமிழ்தார்ந்திமையோரமையாவின்பமெய்தினரே. (௩௮௭)

வெள்ளணியணிந்துவிடுத்துழித்தலைமகன்வாயில்வேண்டல்

என்பாற்றுறையைநினைந்துமருண்டெதிர்கொள்ளவல்லே
தன்பார்புலவிதணிசென்றுநீதஞ்சைவாணன்வைய
மன்பாற்பரவும்புகழுடையானருளேயனையா
யுன்பாற்புலவியுறாள்வண்ணவார்குழலொண்ணுதலே. (௩௮௮)

தலைவிநெய்யாடியதிகுளைசாற்றல்

மலர்புரையேர்கொண்டவாட்கணெங்கோமங்கைவாணன்றஞ்சைப்
பலர்புகழ்பாலற்பயந்துநெய்யாடினள்பாங்கெவர்க்கு
மலர்புரைநீடொளியாடியுட்பாவையன்னாட்குளநீர்
புலர்புனலூரவென்னோதிருவுள்ளமிப்போதுனக்கே. (௩௮௯)

தலைவன்றன்மனத்துவகைகூர்தல்

மையணிவேல்விழிவாணுதல்கூர்ந்ததுவாணன்றஞ்சைக்
கொய்யணிநாண்மலர்க்கொம்பரன்னாள்குழவிப்பயந்து
நெய்யணிமேனியிலையவிபூண்டநிலையறிந்தே
கையணிவால்வளையைக்கண்டநாளினுங்காதன்மையே. (௩௯௦)

தலைவிக்கவன்வரல்பாங்கிசாற்றல்

ஏரார்புதல்வன்பிறந்தனன்வாழியவென்னுமுன்னே
வாரார்வளமனைவந்துநின்றார்கங்குல்வாணன்றஞ்சை
நீராவிநீலநெடுங்கண்மின்னேநின்னைநீப்பதல்லாற்
றேராதொழிகுவரோபெரியோர்தஞ்சிறுவனையே. (௩௯௧)

தலைவியுணர்ந்துதலைவனோடுபுலத்தல்

வயங்கேழுலகும்புரக்கின்றவாணன்றென்மாறையன்ன
நயங்கேழ்பெருவளநல்குநல்லூரநயந்துநண்ணி
முயங்கேல்சிறுவற்பயந்தவென்மேனியின்முத்துவடந்
தயங்கேரகமுழுதும்பழுதாமதுதானினக்கே. (௩௯௨)

தலைவிபாணனைமறுத்தல்

தலையாகியதன்மையூரற்குவாணன்றமிழ்த்தஞ்சைசூழ்
மலையாகியமதில்வையையநன்னாட்டெங்கைமான்படுக்குந்
தலையாகுநின்னிசைக்கண்ணிக்கொண்டேதிரிகின்றதின்னிப்
புலையாகடக்கவெம்மிற்போய்போகபுறங்கடையே (௩௯௩)

வாயின்மறுக்கப்பட்ட பாணன்கூறல்

நினக்கேதருநின்னெடும்புனலூரனுநீயுமவன்
றனக்கேதகுவைதமிழ்த்தஞ்சைவாணன்றடங்கிரிசூழ்
புனக்கேகயமன்னநின்னைப்போற்றிப்புகன்றசொன்று
மெனக்கேதகுமிலைகயாலெம்பிராட்டியெறிந்தகல்லே, (ருகூச)

விறலிவாயின்மறுத்தல்

வண்புனலூர்வையைசூழ்தஞ்சைவாணனைவாழ்த்தலர்போற்
கண்புனலூருமென்காதல்கண்டே நின்கடைத்தலைக்கே
தண்புனலூரன்வந்தானென்றுசாற்றினைதானமுறப்
பண்புனலூர்களெல்லாம்பாடியேற்றுண்ணும்பாண்மகளே. (ருகூரு)

விருந்தொடுவந்துழிப்பொறுத்தல்கண்டிறையோன்மகிழ்தல்

பரவேயெதிர்ந்தநமக்குவிருந்தின்றுபோலவென்றும்
வரவேபுணர்ந்தநம்மாதவர்வாழியவாணன்றஞ்சைக்
குரவேய்சுருமுகிற்கொந்தளபாரங்குரும்பைகொங்கை
யரவேய்நுடங்கிடையாள்விழியூர்சிவப்பாற்றற்கே. (ருகூசா)

விருந்துகண்டொளித்தவூடல்வெளிப்படநோக்கிச்
சீறேலென்றவள்சீறடிதொழுதல்

தெரியோர்பொருட்டன்றுசேர்வின்றியூடல்செயிர்த்தவர்க்குச்
சரியோர்தெளித்தென்னகாரணங்காட்டுவர்காணுண்டுதேன்
வரியோர்தொடைப்புயன்வாணன்றென்மாறைமலர்த்திருவே
பெரியோர்பொறுப்பரன்றேசிறியோர்கள்பிழைத்தனவே. (ருகூஎ)

இஃதெங்கையர்காணினன்றன்றென்றல்

எண்போனநெஞ்சமுநீருமென்பாதமிசைநஞ்சுதனுங்
கண்போலுமெங்கையர்காணினன்றேகயன்மாதிரத்துத்
திண்போதகந்தொறுந்திட்டியவாணன்செழுந்தஞ்சைசூழ்
வண்போதளவிபரீர்வையைநாட்டுறைமன்னவரே. (ருகூஅ)

அங்கவர்யாரையுமறியேனென்றல்-பிறசெய்யுட்கவி

மன்னும்புலவினையமாற்றியுந்தேற்றியும்வல்லவண்ண
மின்னுந்தெளிந்திலையென்னேயென்னேயென்செய்கேனிதற்கு
முன்னம்படிந்துமுழுகுநன்னீர்க்கங்கைமுன்னுரையு
மன்னம்படியுங்கொல்லோவுவராழியிலாரணங்கே. (ருகூகூ)

காமக்கிழத்தியைக்கண்டமைபகர்தல்

போயேதெருவிற்றனிவிளையாடும்புதல்வற்புல்ல
நீயேதிலையல்லைநின்மகனோயிவனீயுமவன்

றுமேயவருகெனச்சேயன்னவாணன்றமிழ்த்தஞ்சைமா
னேயனநிற்றலானறிந்தேன்றன்னையெங்கையென்றே. (௪௦௦)

தலைவியைப்பாங்கிதணித்தல்

மாவாரணமன்னவாணன்றென்மாறைநம்மன்னர்நின்னைப்
பாவாய்ப்பணியவும்பார்க்கிலைநீயிடப்பாகமங்கை
தாவாதசங்கரன்கங்கைதன்கொங்கைதழீஇயிதழிப்
பூவார்சடைமுடிமேல்வைத்தபோதும்பொறுத்தனளே. (௪௦௧)

தலைமகள்புலவிதணியாளாகத்தலைமகனுடல்

தழங்கார்புனல்வயல்சூழ்தஞ்சைவாணன்றனதருள்போற்
பழங்காதலெண்ணலைபதனெஞ்சேயிவள்பண்டுபைம்பொற்
கழங்காடிடமுங்கடிமலர்க்காவுங்கடந்துபுள்ளும்
வழங்காவழிநமக்கோர்துணையாய்வந்தமானல்லளே. (௪௦௨)

பாங்கியன்பிலைகொடியையெனத்தலைவனையிகழ்தல்

மைந்நாண்மலர்த்தொடைவாணன்றென்மாறையெம்மன்னவருந்
தந்நாண்முயங்கியமிழ்தெனவார்ந்தனிரார்வமுற்று
முந்நாண்மதிவட்டமென்முலைமாதைமுனிந்துநஞ்சென்
றிந்நாண்மிகவுவர்த்தீர்புலவாநிற்றிரெங்களையே. (௪௦௩)

ஆயிழைமைந்தனுமாற்றாமையும்வாயில்களாக
வரவெதிர்கோடல்

வெள்ளம்பரந்தன்னவேட்கைசென்றுழிமிகப்பெரியோ
ருள்ளஞ்சிறியவர்மேற்செல்வரோவொளிர்கோமளஞ்செய்
வள்ளங்கமலமலர்த்தஞ்சைவாணன்றென்மாறையன்னப்
புள்ளாம்புனல்வயலூரபுன்காமம்புகல்வதன்றே (௪௦௪)

மணந்தவன்போயபின்வந்தபாங்கியோ
டிணங்கியமைந்தனையினிதிற்புகழ்தல்

இருமையிலேயும்பயன்களெல்லாந்தன்னையீன்றநமக்
கொருமையிலேவந்துறத்தகைந்தானமைந்தனொண்சுடர்போல்
வருமையிலேகொண்டுமாதடிந்தானன்னவாணன்றஞ்சைத்
திருமயிலேயனையாய்புனலூரனைத்தேருடனே. (௪௦௫)

தலைவிதலைவனைப்புகழ்தல்.

கொண்டானிற்றுன்னியகேளிர்மற்றில்லைக்குறிப்பினென்று
தண்டாதவர்சொன்னசால்புகண்டேன்றலமேழ்புரக்கும்
வண்டார்மலர்ப்புயனவாணன்றென்மாறைமகிழ்நர்முன்னா
ளுண்டாகியபழங்கேண்மையினாளுமொழிந்திலரோ (௪௦௬)

பாங்கிமனைவியைப்புகழ்தல்

சிறந்தார்புகழ்தருந்திம்புனலூரன்செய்தீமையெல்லா
மறந்தாரவமெய்திவணங்குதலாலிவள்வாணன்றஞ்சை
நிறந்தாரகையன்னநித்திலம்போலுநெடுங்குலத்திற்
பிறந்தார்நிறைந்தகற்போர்வடிவேபெற்றபெற்றியளே. (சoஎ)

பரத்தையிற்பிரிவு-முற்றிற்று.

ஓதற்பிரிவு

கல்விக்குப்பிரிவு தலைமகனுணர்ந்த
தோழிதலைமகட்குணர்த்தல்

மல்வித்தகங்கொண்டதோளுடையான்றஞ்சைவாணன்றொல்சீர்
நல்வித்தகன்புவிநாவில்வைத்தோன்வையைநாடனையாய்
கல்வித்தடங்கடனீந்தியகாதலர்கற்றவர்முன்
சொல்வித்தவென்றழலார்சுரம்போகத்துணிந்தனரே. (சoஅ)

தலைமகள்கார்ப்பருவங்கண்டுபுலம்பல்

யாணர்க்குழன்மொழியென்செய்குவேன்கல்வியெல்லையெல்லாங்
காணப்பிரிந்தவர்காண்கிலராற்கடன்மேய்ந்துதஞ்சை
வாணர்க்கெதிர்ந்தவர்மங்கையர்போலுமென்வல்லுயிரி
னூணற்பமென்னவெண்ணுவருமேகமுருமுடனே. (சoக)

தலைமகளைப்பாங்கியாற்றுவித்தல்

காதற்கயம்படிந்தன்னொடுகாமக்கனிநுகரா
தோதற்கசன்றவுணர்வுடையோருடைநீருலக
மாதர்க்கமைந்தருள்வாணன்றெண்மாறைவரக்கடவா
ராதற்கணங்கனையாய்புயலேதுவறிந்தருளே (சகo)

ஓதற்பிரிவு-முற்றிற்று.

காவற்பிரிவு.

தோழிதலைவன்காவற்பிரிவுணர்த்தல்.

விண்காவல்கொண்டதிலோத்தமைதான்முதன்மெல்லியலார்
கண்காவல்கொண்டருள்காரிகைகாவலர்கார்க்கடல்சூழ்
மண்காவல்கொண்டமனத்தினராயினர்வாணன்றஞ்சைப்
பண்காவல்கொண்டமொழிச்செய்யவாயிதழ்ப்பைங்கிளியே (சகக)

தலைமகள்கூதிர்ப்பருவங்கண்டுவருந்தல்.

மன்னுயிர்காவலன்வாணன்றெண்மாறையில்வந்தளியா
ரென்னுயிர்காவலரோந்திழையாயிதயம்புலர்த்திக்

கொன்னுயிர்வாடைக்கொடும்பனிநீரிற்குளிர்குழைத்துப்
பின்னுயிராமலென்மேற்பூசுநாளுமென்பேசுவதே (௪௧௨)

தோழியாற்றுவித்தல்.

வரற்காலமென்றென்றெனப்பலகூடல்வளைத்துதிரம்
விரற்காலவின்றுமெலியன்மின்னேசென்றுமேதினிகாத்
தரற்காலகுஞ்சரமஞ்சமஞ்சூர்ந்துறைவீசுகின்ற
சரற்காலம்வந்தடைந்தார்தஞ்சைவாணன்றமிழ்வெற்பரே (௪௧௩)

காவற்பிரிவு-முற்றிற்று.

தூதிற்பிரிவு.

தலைமகனுணர்ந்ததோழிதலைமகட்குணர்த்தல்.

தூதாகவன்பர்செலத்துணிந்தாரெனநஞ்சொற்புலவோர்
மாதாகவன்பசிதீர்த்தருள்வாணன்றென்மாறையிந்து
மீதாகவம்புகிடந்தனபோலுங்கண்மெல்லியலிப்
போதாகவம்புகல்வோரிகலார்தம்புரம்புகவே (௪௧௪)

தலைவிமுன்பனிப்பருவங்கண்டுவருந்தல்.

நலிகின்றவண்புகழ்வாணன்றென்மாறையனையவாழ்த்தலர்போன்
மெலிகின்றசிந்தையுமேனியுங்கொண்டுவிளர்ப்பெனும்பேர்
பொலிகின்றகஞ்சுகம்போர்த்திருந்தேனைப்புரந்தருளார்
நலிகின்றமுன்பனிநாளினண்ணார்முனைநண்ணினரே (௪௧௫)

தோழியாற்றுவித்தல்.

சுற்றுங்குழலின்பிணிவிடுப்பான்வந்துதோன்றினர்பார்
முற்றும்பொழிகின்றமுன்பனிநாண்முகிலுங்கடலும்
வற்றும்பருவத்துமண்புரப்பான்றஞ்சைவாணனொன்னார்
செற்றும்படையின்வெம்போர்தணிப்பானன்றுசென்றவரே (௪௧௬)

தூதிற்பிரிவு-முற்றிற்று.

துணைவயிற்பிரிவு,

துணைவயிற்பிரிந்தமைதோழிதலைமகட்குணர்த்தல்

நண்பானமன்னர்க்கிடர்தணிப்பானெண்ணிநல்லுதவிப்
பண்பானமன்னர்படர்தலுற்றார்பனிநீர்பொழிபுந்
தண்பானலங்கொடையம்புயவாணன்றமிழ்த்தஞ்சைவாழ்
வெண்பானலங்கொள்செவ்வாயன்னமேயன்னமென்னடையே. ௪௧௭

தலைமகள்பின்பனிப்பருவங்கண்டுவருந்தல்.

இன்னற்படுகின்றவென்னையெண்ணார்தமக்கின்றுணையா
மன்னற்குதவிபிரிந்தநங்காதலர்வாணன்றஞ்சைக்

ஒன்னாற்கடிமையறிவதல்லாற்பகல்காண்பரிதாம்
பின்னாற்கனையிருள்கூர்துன்பமேவியபின்பனியே. (௬௧௮)

தோழியாற்றுவித்தல்

வடுக்கண்டனையகண்மங்கைநல்லாய்தஞ்சைவாணன்வெற்பி
னடுக்கவருகுளிரவசைகின்றவாடையகன்றவர்க்கு
நடுக்கஞ்செய்பின்பனிநாளின்வந்தாரமர்நண்பனுற்ற
விடுக்கண்களையவென்றேயகன்காணமிகந்தவரே. (௬௧௯)

. துணைவயிற்பிரிவு- முற்றிற்று.

பொருள்வயிற்பிரிவு

பொருள்வயிற்பிரிவுதலைமகனாலுணர்ந்த
தோழிதலைமகட்குணர்த்தல்

மஞ்சைப்புனைமதின்மாறைவரோதயன்வாணர்பிரான்
றஞ்சைப்பதியண்ணலெண்ணலர்போற்றனிநாமிருக்க
நெஞ்சைப்பொருள்வயின்வைத்துநங்கேள்வர்நலனிண்மதியின்
பிஞ்சைப்புரைநுதலாய்பிரிவானின்றுபேசினரே (௬௨௦)

தலைவி யிளவேனிற்பருவங்கண்டுபுலம்பல்

நங்கணிரங்கவரும்பொருடேடநடந்தவன்பர்
செங்கணிருங்குயிலார்ப்பதுகேட்கிலர்செந்தமிழோர்
தங்கணிடும்பைதவிர்த்தருள்வாணன்றென்றஞ்சைவஞ்சி
இங்கணிவந்ததுபோற்கவினூர்முகத்தேமொழியே (௬௨௧)

தலைவியைத்தோழியாற்றுவித்தல்

வார்த்தனபாரமடமயிலேகுயின்மாருதமாந்
தேர்த்தனிவீரன்றிருநாளும்வந்ததுசேர்மின்சென்றீர்
கார்த்தடமேருவெனும்புயவாணன்றஞ்சாபுரிமின்
முர்த்ததுகேட்டுவந்தார்பொருடேடவகன்றவரே (௬௨௨)

பொருள்வயிற்பிரிவு-முற்றிற்று.

தலைமகன்றலைமகளதுருவுவெளிப்பாடுகண்டு சொல்லியது

மைக்குஞ்சரமிரையாற்றஞ்சைவாணன்மருவலரைக்
கைக்குங்களங்கெழுபாசறையூடுகயலும்வில்லு
மொய்க்குஞ்சுடரிளவம்புலிதானுமுயங்கியெல்லாத்
திக்குந்தொழவருமேகருளோலைத்திருமுகமே, (௬௨௩)

பாசறைமுற்றிமீண்டூர்வயின்வந்ததலைவன்
பாகற்குச் சொல்லியது

மால்கொண்டவாரணவாணன்றென்மாறைவலவநண்ணார்
கால்கொண்டவாளமர்க்கையகல்பாசறைக்கைவயின்முட்

கோல்கொண்டவாறுநின்னேவல்கொண்டியானிக்கொடிநெடுந்தேர்
மேல்கொண்டவாறுநம்மூர்வந்தவாறும்வியப்பெனக்கே. (சஉச)

தலைமகளோடிருந்ததலைமகன்கார்ப்பருவங்கண்டு
மகிழ்ந்துசொல்லியது

கொத்தலரோதியங்சொம்பரன்றுள்பொங்குகொங்கைவிம்ம
முத்தலராகமுயங்கினம்யாமுழுநீர்விழிபோன்
மைத்தலர்நீலமலர்வயல்சூழ்தஞ்சைவாணன்வண்மைக்
கைத்தலமானவினிப்பொழிவாழியகார்முகிலே. (சஉரு)

தஞ்சைவாணன்கோவை

முற்றிற்று.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
க	உ0	ளைகயிலடக்கி	ளைகயினடக்கி
சா	ச	கூதிரின்றி	கூதிரின்று
கூ	ஙக	ஷு,	ஷு;
கரு	கச	மாய்	மாய
கஞ	உச	புலப்டு	புலப்படு
உஉ	உக	நிலை	நில
உச	உரு	லையினுடை	லையினையுடை
உஎ	கரு	யோர்க்கு	யோற்கு
உஅ	உக	டலைவர்க்	டலைவற்
ஙஉ	உஉ	வடிவங்	வடிவுங்
ஙங	உஅ	களவிற்	களவுக்
ஙரு	கசா	பிறவறி	பிரிவறி
,,	கஅ	வித்ததும்	வித்தலும்
ஙசா	உ	சொல்லும்	சொலலும்
,,	ங	ங்கலொடு	கலொடு
,,	,,	சொல்லும்	சொலலும்
சகூ	உங	றைவில	றவில
,,	ங0	பபருவரல்	பருவரல்
ரு0	உச	மாற்றுக்	மாற்றுத்
சாங	உரு	கவன்றுற்	கவன்றாற்
சாசா	ங	கற்பி	கற்பிய
எஉ	ஙக	கூற்றுமு	கூற்றுங்கேட்
எங	கூ	ணர்ற்று	போலரயுணர்ற்று
எசா	சா	உள்ளறை	உளளுறை
அங	உஉ	பொருங்	பெருங்
அஎ	உஅ	கொல்லெலா	கொல்லோ
அஅ	கஅ	சோ	சேர்
,,	உரு	பேர்	போ
கூ0	உங	யிந்த	யிந்தச்
கூங	உகூ	மாணின	மாணிள

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
கூரு	க0	வியா	வியர்
,,	௬௪	மென்	மேன்
க0௩	உ௬	யநீா	நீயா
க0௫	கக	கூறு	கூரு
,,	உஉ	ஆழத்	ஆழ்ந்
க0௬	உ௯	ளிருட்	ளிருட்
க0௮	எ	தகைகு	தகைக்கு
	௯	காரன	காரண
	க௫	மின்	யின்
	௫0	கெரங்	சொங்
	௬௪	கர்வல்	காவல்
ககஉ	உ௪	காண்	கான்
கக௬	க௫	வாணன்	வாணர்
	உ௯	மலுக்	மலுங்
கக௮	க௮	யிருடு	பீருஞ
	உ0	மஞ்ஞச	மஞ்ஞை
	உ௯	வென்	றென்
கஉக	உ௫	ஐவய	ஐவாய
	உ௮	வன்ன	வன்னப்
கஉ௫	௬	தாலு	தாலு
கஉஎ	௫0	மீட்	மீட்க
கஉ௯	உ௯	மெம்	மெய்
க௫உ	கஎ	தேர	தேற